முதல் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 56

சுடர் 32 கதிர் 337 ஐப்பசி 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 29 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

அருந்ததி
இணைய திருமண சேவை
FREE Registration Available
conditions apply
www.arunthathee.com
+94 777 16 45 24
021 49 27 527 | 011 40 63 282

பொலிஸில் உயர் பதவியிலிருந்த

## அதிகாரி பிஸ்ரலின் 45 ரவைகள் மாயம்

விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய உயர் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி ரவைகளில் 45 மாயமாகியமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



காங்கேசன்துறை பிரிவில் கடமையாற்றிய உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரின் கைத்துப்பாக்கிக் குண்டுகளே இவ்வாறு மாயமாகி உள்ளன. அந்த அதிகாரி அடுத்த மாதம் ஓய்வுபெற்றுச் செல்கிறார். ஓய்வை முன்னிட்டு அவர் தன்னிடம் இருந்த பொலிஸ் திணைக்களப் பொருள்களைக் காங்கேசன் >> 53



பனை, தென்னை மரங்களில் இருந்து

## கள் இறக்க வருகிறது தடை

வடக்கில் மட்டும் 12,000 குடும்பங்களுக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29
பனை, தென்னை மரங்களில் இருந்து கள் இறக்குவதற்கு தடை விதிக்கும் சட்டத் திருத்தம் ஒன்றை அறிவித்திருக்கிறது அரசு. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 20ஆம் திகதி விடுக்கப்பட்டிருக்கிறது. உத்தேச புதிய சட்டத்தின்படி கித்துள் மரம் தவிர்ந்த வேறு எந்தவொரு மரத்தில் இருந்தும் கள் சீவுவதோ, எடுப்பதோ, இறக்குவதோ தடை செய்யப்படுகிறது.
இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் வடக்கில் மட்டும் சீவல் தொழிலை நம்பியிருக்கும் 12 ஆயிரம் குடும்பங்கள் >> 53

# ஆட்சியைப் பிடிக்க மகிந்த விசமத்தனம்



சாடுகிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 29
ஆட்சியைப் பிடிக்க மகிந்தவும் அவரது அணியினரும் புதிய அரசமைப்புத் தொடர்பிலும், வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை தொடர்பாகவும் விசமத்தனமான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். இதற்கு வலுச்சேர்ப்பது போல் எமது தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவித்தார்.
இடைக்கால அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம், எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை 9 மணியிலிருந்து 4 மணி >> 53

## அறக்கட்டளையின் கீழ் சைட்டம் இயங்கலாம்!

முன்வைக்கப்பட்ட யோசனை மீது அரசு தீவிர பரிசீலனை

கொழும்பு, ஒக். 29
தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவனத்தை (சைட்டம்) அறக்கட்டளையின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனமொன்றுக்குக் கையளிக்க அரசு தீர்மானித்துள்ளது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சைட்டம் நிறுவனம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. சைட்டம் நிறுவனம் தொடர்பில் >> 53

## நிலைமாறு கால நீதி நடவடிக்கை ஒரு சமூகத்துக்கு மட்டுமானதல்ல

ஜப்பானிய நிபுணர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29
நிலைமாறு கால நீதி ஒரு சமூகத்துக்கு மாத்திரம் உரியது அல்ல. இந்தத் தெளிவுபடுத்தல் எல்லாச் சமூகங்களுக்கும் அவசியமாகும் என்று ஜப்பானிய வழக்குத் தொடுநர் கலாநிதி நுகுசி தெரிவித்தார்.
இலங்கை அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக ஜப்பானிய வழக்குத் தொடு >> 53

## இராணுவ வாகனம் மோதி குடும்பத் தலைவர் இறப்பு

இணுவிலில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 29
இணுவிலில் இராணுவ வாகனம் மோதியதில் இளம் குடும்பத் தலைவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் >> 53

அரியாலைப் படுகொலை விசாரணை

## கொழும்பிலிருந்து வந்தது தனிக் குழு

சந்தேகநபர் இன்று கைதாகலாம்



சந்தேகிக் கப்படும் ஆட்டோ

யாழ்ப்பாணம், ஒக். 29
அரியாலையில் இளைஞன் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக கொழும்பிலிருந்து தனியான குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸ் குழு ஒன்று நேற்று வந்து சேர்ந்தது. உடனடியாகவே யாழ். பொலிஸாரி >> 53

ஸ்பெய்ன் நாட்டிலிருந்து

## கட்டலோனியா பிரிவதற்கு கொழும்பு அவசர எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 29
ஸ்பெய்ன் நாட்டின் ஒரு மாநிலமான கட்டலோனியா ஸ்பெய்னில் இருந்து பிரிந்து தனிநாடாகப் போவதாக விடுத்த விடுதலை அறிவிப்பை கொழும்பு அரசு அவசர அவசரமாக நிராகரித்துள்ளது.
ஸ்பெய்னின் தன்னாட்சிப் பிராந்தியமாக இருக்கிறது கட்டலோனியா. அதன் சட்டமன்றம் நேற்றுமுன்தினம் தன்னை விடுதலை பெற்ற தனி நாடாக அறிவித்தது. முன்னதாக ஸ்பெய்ன் அரசின் எதிர்ப்பையும் மீறி விடுதலை வேண்டுமா இல்லையா என்று தனது மக்களிடம் கட்டலோனியா பொது வாக்கெடுப்பு நடத்தியது. அதில் மிகப் பெரும்பான்மையானவர்கள் விடுதலைக்கு ஆதரவாக வாக்களித்தனர். எனினும் அந்த வாக்கெடுப்புச் செல்லுபடியற்றது >> 53

see more news in newuthayan.com

## மலேரியா நுளம்பை அழிக்கும் பணி உடன் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணத்தில் வல்வெட்டித்துறையிலும், முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பிலும் கூட மலேரியா நுளம்புகள் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.
வடக்கில் காணப்படும் மலேரியா நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கை திங்கட்கிழமை உடனடியாக ஆரம்பிக்கப்படஉள்ளதாகவும் அதிகாரிகள் தெரி >> 53






# கூட்டு எதிரணியுடன் சேர்ந்து தேர்தலில் சு.கட்சி வெல்லும்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

ஹற்றன், ஒக்.29
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பெரும் வெற்றியீட்டுவதற்காக கூட்டு எதிரணியையும் இணைத்துச் செயற்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர.

வட்டகொடை, மடக்கும்புரவில் வெலிகல வாவி சீரமைக்கப்பட்டு நேற்று மீன் குஞ்சுகள் விடப்பட்டன. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பில் நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தத் திட்டமும் இல்லை. வடக்கு, கிழக்கை இணைப்பதோ அல்லது பௌத்த சமயத்தின் முன்னுரிமையை இல்லாமல் செய்தல் போன்ற எந்த நடவடிக்கையும் புதிய அரசமைப்பில் உள்ளக்கப்படவில்லை.

நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் ஒருமித்த சமானான வாழ்க்கை முறையை முன்னெடுக்க வேண்டும். அதற்கமைவாகப் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதற்கு அப்பால் அரசமைப்பு அமையுமானால் அதற்கு எதிராக வாக்களிக்கவும் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ம)







## லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று இலவச மருத்துவ முகாம்

மட்டக்களப்பு,ஒக்.29
மட்டக்களப்பு நூற்றாண்டு நட்சத்திரங்கள் லயன்ஸ் கழகம், ஹோமாகம லயன்ஸ் கழகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. மட்டக்களப்பு நூற்றாண்டு நட்சத்திரங்கள் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் இரா.பஞ்சாமிர்தம் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவமுகாமின் ஆரம்ப நிகழ்வில் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் அசேல கருணாரட்ன உட்பட லயன்ஸ் கழகங்களின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இலவசமாக மூக்கு கண்ணாடிகள், இலவசமாக சகல நோய்களுக்குமான மருந்துகள், சர்க்கரை நோய்க்கான சிகிச்சைகள், பெண்களுக்கான மார்புப் புற்றுநோய்ப் பரிசோதனை, சிறுவர்கள் மற்றும் வளர்ந்தோருக்கான பற் சிகிச்சை, குடும்பநலம் மற்றும் குடும்பத் திட்டமிடல், சத்துணவு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற பல்வேறு சுகாதார மற்றும் ஆரோக்கிய சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிப்பெண்கள் 25பேருக்கான போசணை உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மாமாங்கேஸ்வரர் வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த மருத்துவமுகாமில் 12 கிராமங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்துகொண்டு சிகிச்சைகளையும் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். இந்த நிகழ்வில் வவுணதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு சேமிப்பு புத்தகங்களும் வழங்கப்பட்டன. (ந.ரி4)





## கமக்கார அமைப்புக்களை வலுப்படுத்தும் நிகழ்வு

வவுனியா,ஒக்.29
வவுனியா மாவட்ட கமக்காரர் அமைப்புக்களை வலுப்படுத்தலும் எதிர்காலத் திட்டங்களை இனங்காணலும் எனும் நிகழ்வு வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா மாவட்ட கமக்காரர் ஒழுங்கமைப்புகளின் அதிகாரசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கமக்கார அமைப்புக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்கால திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரை யாடப்பட்டது.

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார், விவசாய விரிவாக்கத்தின் உதவி ஆணையாளர் மற்றும் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ந-ரி4)

## ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

அம்பாறை,ஒக்.29
பொத்துவில் பிரதேசத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு ஆளுநரிடம் கேட்டுக் கொண்டமைக்கு அமைய உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் நேற்றுத் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச ஆளுநர் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளார் என தெரிவித்தார். பொத்துவிலில் இருந்து இடமாற்றம் செய்து அனுப்பப்பட்டவர்களுக்குப் பதிலாக மாற்றீடு ஆசிரியர்கள் வழங்க வேண்டியது வலயக்கல்வி அலுவலகத்தின் பொறுப்பு. இதற்கான நடவடிக்கைகளை ஆளுநர் மற்றும் கல்விஅமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேசியுள்ளேன். அதற்கான தீர்வு மிகவிரைவில் கிடைக்கும் - என்றார். (ந.ரி4)





மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் கல்விக் கண்காட்சியும் சிறுவர் சந்தை நிகழ்வும் நேற்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக சங்கானை வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.நொபேட் உதயகுமாரும் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் ஏ.பேரின்பநாயகமும் வலி.தெற்கு கலாசார உத்தியோகத்தர் திருமதி ரி. செல்வகுமாரும் ஜிற் பூற்சிற்றி முகாமையாளர் எம்.ஞானசீலனும் கலந்துகொண்டனர். (ந.ரி4)

உங்கள்
பிரதேசங்களில்
நடக்கும்
நிகழ்வுகளை
உலகறியச் செய்ய
எமக்கு அனுப்புங்கள்



உதயன்
DIGITAL
newuthayan.com
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555



## தோல்நோய்ப் பரிசோதனைகள்



தென்மராட்சி. ஒக். 29
பொதுமக்களுக்கான இலவச தோல்நோய்ப் பரிசோதனைகள் நேற்று கொடிகாமம் தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றன.

சுகாதாரத் திணைக்கள தொழுநோய்த் தடை இயக்கத்தின் ஏற்பாட்டில் கொடிகாமம்தெற்கு கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்தப் பரிசோதனை நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இதில் மாவட்ட தொற்றாநோய் கட்டுப்பாட்டு மருத்துவர் சிவகணேசன் பங்குபற்றி சிகிச்சைகளை மேற்கொண்டார். கொடிகாமம் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தொழுநோய் கட்டுப்பாட்டு சுகாதாரக்கல்வி கருத்தமர்வை நடத்தினார்.

(ற-ரி2, 9)

## முன்பள்ளிகளின் ஆக்கப்பொருள் கண்காட்சி

தென்மராட்சி.ஒக்.29
தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி மாணவர்களால் ஆக்கப்பட்ட பொருள்களின் வலய நிலைக் காட்சிப்படுத்தல் நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது சாவகச்சேரி, கைதடி, வரணி, கொடிகாமம், மிருசுவில், கச்சாய், நாவற்குளி, மீசாலை, மட்டுவில் ஆகிய 9 குடும்ப முன்பள்ளிகளைச் சேர்ந்த 85 முன்பள்ளிக ளின் சிறார்கள், பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஆகியோரால் ஆக்கப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந. சர்வேஸ்வரன் கலந்துகொண்டார். சாவகச்சேரி இளம் தொழிலதிபர் த.ஜெயந்தன், தென்மராட்சிக் கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன், மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை அதிபர் கா.கந்தசாமி ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காட்சிப்படுத்தல் நிகழ்வில் சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்கள் வலய நிலை காட்சிப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்தன. வலய நிலை காட்சிப்படுத்தலில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் மாவட்ட நிலை காட்சிப்படுத்தலுக்கு கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி2, 9)

# மயக்கமருந்து விசிறி நகை, பணம் கொள்ளை

### புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தில் நேற்று கைவரிசை





முல்லைத்தீவு, ஒக்.29
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. பரந்தன் வீதி, முதலாம் வட்டாரத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது.

"கொள்ளையர்கள் வந்ததோ, பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதோ எமக்குத் தெரியாது. காலையில் கண்விழிக்க முடியவில்லை. தொண்டை வறண்டிருந்தது. எனது இடுப்புப் பட்டி அவிழ்க்கப்பட்டிருந்தது. மயக்க மருந்து விசிறப்பட்டுள்ளது என்றே நினைக்கின்றோம்." என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

வர்த்தகரின் வீடு புதிதாக அமைக்கப்படுகின்றது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கதவுகள் பூட்டியிருந்த நிலையில் கழிவறையில் கண்ணாடியன்னல் பொருத்துவற்கு இருந்த துவாரத்தின் வழியாக கொள்ளையர்கள் நுழைந்துள்ளனர். அதற்கான தடயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணம், வீட்டில் உறங்கிய பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த சங்கிலி, தோடு, அலுமாரியில் இருந்த அட்டியல் என அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ற-21.ரி2.ரி3)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

காங்கேசன்துறை.ஒக்.29
காங்கேசன்துறைவீமன்காமம் பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 4 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ரி2, 26)



## அமிர்தாம்பிகை வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு



சாவகச்சேரி. ஒக்.29
சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றன.

வித்தியாலய முதலவர் திருமதி ச.தாமகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.மனோரஞ்சிதன் கலந்து கொண்டார்.

நிகழ்வில், வர்த்தகர் சி.சிவயோகன், ஓய்வுநிலை நூலகர் ந.சுந்தரலிங்கம், வித்தியாலய முன்னாள் அதிபர் நா.அருட்சோதி, மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அதிபர் கு.ரவீந்திரா ஆகியோரும் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கான பரிசில்களை விருந்தி னர்கள் வழங்கினர்.

மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ற-ரி2, 9)

## துன்னாலையில் ஒருவர் கைது

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுக் காலை ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். கடந்த ஜூலை 9 ஆம் திகதி துன்னாலைப் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

அதையடுத்து அங்கு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது பலர் கைதுசெய்யப்பட்டனர்.

(ற-ரி2,26)

### நோயாளர் நலன் கருதி

# ஊன்றுகோலுடன் மருத்துவமனை வந்த மருத்துவர்

யாழ்ப்பாணம் ஒக்.29
மருத்துவ நிபுணரின் ஆலோசனையை மீறி அவசர நோயாளர்கள் இருவரின் நலன்கருதி ஊன்றுகோலுடன் மருத்துவமனைக்கு வந்து ஊன்றுகோலுடன் நின்று இரு சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதுடன் விடுதியில் உள்ளசத்திர சிகிச்சை நோயாளர்களையும் பார்வையிட்டார் இளம் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர்.


இந்த சம்பவம் மந்திகை ஆதார மருத்துவமனையில் நேற்று இடம்பெற்றது என நோயாளர்கள் தெரிவித்தனர். இவரின் சேவையை நோயாளர்களும் பொதுமக்களும் பாராட்டியுள்ளனர்

இரு தினங்களுக்கு முன்னர் சத்திர சிகிச்சை நிபுணருக்கு வீட்டுப்படியில் தடுக்கி வீழ்ந்து காலில் பாத எலும்பு உடைவு ஏற்பட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உரிய சிகிச்சை வழங்கிய மருத்துவ நிபுணர் இவரை ஒரு வாரத்திற்கு எழுந்து நடமாடாமல் ஓய்வில் இருக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வடமராட்சிப் பகுதியில் கத்திக்குத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களை அவசர சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மருத்துவமனையால் மேற்கொள்ளப்பட்டன. ஊன்றுகோலுடன் அங்கு வந்த சத்திர சகிச்சை நிபுணர் இரு நோயாளர்களுக்கும் ஊன்றுகோலுடன்நின்று சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ளார். அதன் பின்னர் ஊன்றுகோலுடன் தனது விடுதிக்குச் சென்று அங்கு தங்கியுள்ள நோயாளர்களை யும் பார்வையிட்டார் எனவும் நோயாளர்கள் தெரிவித்தனர்.

மருத்துவர்களின் சேவைகள் தொடர்பாக குறைகூறும் மக்கள் இவ்வாறான மருத்துவ நிபுணரின் சேவையை அவசியம் பாராட்ட வேண்டும் என்றும் தெரிவித்தனர். (ற-ரி2, 9)



# வடக்கு - கிழக்கு இணைய எதிர்ப்பு

## திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை.ஒக்.29
திருகோணமலையில் கிழக்கு மக்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு இணைப்பு மற்றும் புதிய அரசியல் அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
மு.ப 10.45 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் மு.ப 11.45 மணியளவில் முடிவுற்றது எனவும் 80க்கும் மேற்பட்டோர் பல்வேறுபட்ட கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மக்கள் சங்கத்தின் தலைவருமான ஜயந்த விஜேசேகர கிழக்கு மக்கள் வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.
(ற-ரி5)

# ஹற்றனில் மண்சரிவு: போக்குவரத்துத் தடை



ஹற்றன்.ஒக்.29
நோட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல்ரீ குடாமஸ்கெலியா குறுக்கு வீதியில் ஏற்பட்ட மண்சரிவால் அந்தப்பகுதிக்கான போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
ஹற்றன் காசல்ரீ தோட்டப்பகுதியிலேயே நேற்று அதிகாலை மண்சரிவு ஏற்பட்டது.
மண்சரிவால் மேமலை மற்றும் குடாமஸ்கெலியாப் ப்குதிக்கான போக்குவரத்துப் பாதிப்படைந்துள்ளதுடன் காசல்ரீ தோட்டத்தைச் சேர்ந்த 150 குடும்பங்கள் போக்குவரத்து மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# மட்டு. பாலத்துக்கு அருகில் விபத்து



மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள பாலத்துக்கு அருகில், மோட்டார் சைக்கிள் மீது தனியார் பேருந்து மோதி, நேற்று விபத்துக்குள்ளானது.
மஞ்சள் கடவையில் பாதசாரிகள் கடக்க முற்பட்ட போது, பிரதான வீதியில் வந்த லொறி நிறுத்தப்பட்டதை யடுத்து, அதன் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்தது.
அதனை பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
மோட்டார் சைக்கிளில் பயணித்த 30 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் காயங்களுக்குள்ளாகி, மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-ரி5)

# வவுனியாவில் மாணவர்களுக்கு சைக்கிள்கள் கையளிப்பு

வவுனியா.ஒக்.29
வவுனியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு நேற்றுத் தமிழ் விருட்சம் அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது.
கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் வசதியற்ற மாணவர்களுக்கு செரெண்டிப் சிறுவர் இல்லத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பிரேமராஜ்ஜால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.
செரெண்டிப் சிறுவர் இல்லத்தால் துணுக்காய் தென்னியன் அ. த. க பாடசாலைக்கும், பூவரசன்குளம் கிராமத் துக்கும் குழாய்க்கிணறுகளும் அமைத்துக்கொடுக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜோர்ஜ், ஆசிரியர் பிரசாந்த் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
(ற-ரி5)





# யன்னல் உடைத்துத் திருட்டு

பதுளை.ஒக்.29
மூடப்பட்டிருந்த வீட்டின் யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் வீட்டின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. ஊவாபரனகமைப் பகுதியின் இம்பிலியாமட என்ற இடத்தில் ஆயுள்வேத வைத்தியசாலையின் மருத்துவரொருவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றது.
இந்த ஆயுள்வேத வைத்தியசாலை மருத்துவரும் அவரது மனைவியும் வீட்டைப் பூட்டிவிட்டு வெலிமடை நகருக்கு சென்றிருந்த வேளையில் திருடர்கள் அந்த வீட்டின் யன்னலை உடைத்து உட்புகுந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற.ரி4)


# இந்தியா பயணமானார் மகிந்த



கொழும்பு.ஒக்.29
முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச இந்தியா பயணமானார். மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு அவர் நேற்று இந்தியா சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட் டது.
அவருடன் ஜி.எல். பீரிஸும் சென்றுள்ளார். பன்னாட்டு பௌத்த கலாசார சம்மேளனம் மகராஷ்டிரா மாநிலத்தில் நடத்தவுள்ள பௌத்த கலாசார மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே இவர்கள் இந்தியா சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# சீரமைக்கப்பட்ட குளம் நேற்றுத் திறப்பு

ஹற்றன்.ஒக்.29
தலவாக்கலை வட்டகொடை மெதகும்புர தோட்டத்தில் சீரமைக்கப்பட்ட குளத்தை சிறி லங்கா சுதந்திர கட்சியின் செயலாளரும் விவசாய அமைச்சருமாகிய துமிந்த திசாநாயக்க மற்றும் அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் நேற்றுத் திறந்தனர்.
மத்தியமாகாண விவசாய அமைச்சின் 100 லட்சம் ரூபா நிதியில் சீரமைக்கப் பட்ட குளம் மத்திய மாகாண விவசாய அமைச்சர் மருதபாண்டி ராமேஸ்வரன் தலைமையில் மக்கள் பாவனைக்குத் திறக்கப்பட்டது. இந்தக் குளத்தில் இரண்டாயிரம் மீன்குஞ்சுகள் விடப்பட்டன குளத்து நீரினூடாக மெதகும்புத் தோட்ட கிராமத்தைச் சேர்ந்த 3ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நன்மையடையவுள்ளனர் எனவும் இந்த நிகழ்வில் மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
(ற.ரி4)





# துப்பாக்கி ரவைகள் வவுனியாவில் மீட்பு

வவுனியா.ஒக்.29
வவுனியா மருதநிலம் கல்நாட்டினகுளம் பகுதியில் நேற்று வெடிபொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன,
வவுனியா மருதநிலப் பகுதியில் பூங்காவுக்கு வேலைக்குச் சென்ற நபர் ஒருவர் நிலத்தைக் கொத்திய போது துப்பாக்கி ரவைகள் இருப்பதை அவதானித்தார்.
அவர் சிதம்பரபுரம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 250க்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் ரியூப்பால் சுற்றப்பட்ட நிலையில் மீட்டனர். இவை தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்தியவை என சந்தேகிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# வேம்படி தொழிற் சந்தையில் 76 பேர் பொலிஸில் இணைவு

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று இடம் பெற்ற தொழிற் சந்தையில் பலர் கலந்துகொண்டு பயன்



பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. நேற்றுமட்டும் அங்கு 76பேர் பொலிஸில் இணைவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் தொழிற் சந்தை இடம்பெற்றது. இதில் பல நிறுவனங்கள். அமைப்புக்கள் பங்கு பற்றியிருந்தன.
தொழில் வாய்ப்பைத் தேடுபவர்கள் மட்டுமன்றி அது சார்ந்த அமைப்புக்கள், பயிற்சி மையங்களும் பங்கு கொண்டிருந்தன.
குறித்த ஒருநாள் தொழிற் சந்தையில் 44 நிறுவனங்கள் பங்கு கொண்டிருந்தன. அதில் ஒன்று இலங்கைப் பொலிஸ் திணைக்களம்.
இவ்வாறு கலந்து கொண்ட பொலிஸ் திணைக்களத்தினர் தமது திணைக்களத்தில் உள்ள பதவி வெற்றிடங்கள் மற்றும் அதற்கான சம்பள விவரங்களைத் தெரிவித்தனர். இதன்போது வேலை வாய்ப்பை நாடிவந்த இளையோரில் 76பேர் பொலிஸில் இணைந்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தனர்.
வடக்கில் தமிழ் பொலிஸாருக்குப் பெரும் பற்றாக்குறை நிலவிவருகிறது. ஆண் பொலிஸாருக்கும் மேலாக பெண் பொலிஸாருக்கும் அதிக வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே இன்னும் உள்ளன. இந்த நிலையில் பொலிஸில் இணையுமாறு பொலிஸ் உயர் அதிகாரிகளும், வடக்கு முதலமைச்சரும்கூட அண்மையில் கோரியிருந்தனர்.

(4-101)

**USA GREEN CARD VISA LOTTERY 2019**

அமெரிக்க Green Card Visa விண்ணப்பிப்பதில் 15 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2019ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு, சுய முகவரியிட்ட தபாலுறையை Bristolvisa, 8-3-4, Bristol Street, Colombo 01 என்னும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
Bristol Cyber Café என்ற பெயரில் இயங்கிவந்த எமது நிறுவனம் BRISTOLVISA என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. Reg.W/A 44843
0112 393 919 / 077 427 6579 www.bristolvisa.com

**வேலையாள்கள் தேவை**

- Technical Officer NCT Civil Engineeiring / Quantity Surveying (Minimum 2Year Experience)
- Technical Assistant (Minimum 1Year Experience)
- Driver (சாரதி)

தொடர்புகளுக்கு : 076 310 1597
மின்னஞ்சல்: beststarcon@hotmail.com

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கிளிநொச்சி மகா வித்தியாலய ஆசிரியரான
**திரு.மகாதேவன் வினோகாந்தன்**
(Dip in Phy.Edu)
அவர்கள் கல்வி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரியருக்கான "குரு பிரதீபா பிரபா" விருதினை 23.10.2017 அன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் பெற்றதையிட்டு அவரை மன மகிழ்ச்சியுடன் வாழ்த்தி மகிழ்கின்றோம்.



பிள்ளைகள் - அஸ்விகா, அகர்சன்(உரும்பிராய்)
மருமக்கள் - விசாலினி(உரும்பிராய்), அனிஷா, அஞ்சனா (ஆஸ்திரேலியா)
பெறாமகன் - நிதீஸ் (ஆஸ்திரேலியா)
மற்றும் குடும்பத்தினர்.
கோப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு.

**உடல் எடை குறைய வேண்டுமா?**

- உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா?
- உடல் எடை, வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை கூடிப் பல்வேறு நோயால் அவதிப்படுகிறீர்களா?

கவலை வேண்டாம்! உடல் எடையை மிக இலகுவாகக் குறைக்க முடியும்.
அற்புத ஆயுள்வேத ஔடதம் (விலை 3500, 9000, 18,000)
டொனிக், குளிசை, கிறீம், பால்மா. மேலும்,

**உடல் எடை கூட**

- உடல் எடை கூட
- கணச்சூடு நீங்க
- மார்பு கூட்ட
- ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற
- எதைச் செய்தாலும் எடை கூடுகிறதேயில்லை என்கிறவர்களுக்கு

**உடல் எடை கூட்டும் ஆயுள்வேத ஔடதம். பாவித்துப் பலனடையுங்கள். (விலை 3500/-, 6000/-, 24000/-)**

**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**

- நீளமாக முடி வளர
- இளநரை. தலையிடி. பேன். பொடுகுத் தொல்லை நீங்க
- முடி அற்ற இடங்களில் புதிதாக முடி முளைக்க
- புளுவெட்டு. அரிப்பு தலையில் நீங்க

(பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி, வல்லாரை, மருதாணி, நெல்லி, வெட்டிவேர், கருவேப்பிலை மற்றும் பல மூலிகைகள்) சேர்த்துக் காய்ச்சிய ஆயுள்வேத எண்ணெய் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

077 210 6155
பதிவு இல: 16168
221,நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை**

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress - இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

**British Way® English Academy**

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ | காலி | மாத்தறை | அநுராதபுரம் | நகேகொட | கம்பஹா | யாழ்ப்பாணம்
நீர்கொழும்பு | கண்டி | குருநாகல் | கிரிபத்கொட | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய

**இரண்டு மாத காலப் பயிற்சி** 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

14, November, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**வார இறுதி வகுப்புகள்** 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**IELTS** சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**KIDS' Class** Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

British Way® English Academy
Contact (Jaffna Branch) : 021 300 55 55
நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

# இரண்டு நாள்கள் வயிற்றோட்டத்தால்: சிறுமி உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஒக். 29

வயிற்றோட்டம் காரணமாக மூன்று வயதுச் சிறுமி பரிதாபகரமாக நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கல்வளை வீதி சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிறிதரன் அபிசினி (வயது 3) என்ற சிறுமியே உயிரிழந்தார்.

சிறுமிக்கு நேற்றுமுன்தினம் காய்ச்சலுடன் வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. பெற்றோர் அவருக்குத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தனர். வயிற்றோட்டம் குறையவில்லை. நேற்று அதிகாலை சண்டிலிப்பாய் மருத்துவமனைக்குக் கொண்டுசென்றனர். பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் சிகிச்சை பயனளிக்கவில்லை. சிறுமி இறந்தார்.

போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-8-ரி1)

# 100 மதுப் போத்தல்களுடன் முள்ளியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.29

அரச முத்திரை பதிக்கப்பட்ட 250 மில்லிலீற்றர் அளவுடைய 100 மதுபானப் போத்தல்களுடன் நேற்றுமுன்தினம் இரவு நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் கொடிகாமம் வீதி முள்ளிச் சந்தியில் இடம்பெற்றது என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். நெல்லியடிப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போதே மதுப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. முள்ளிப் பகுதியிலிருந்து வறணி நோக்கிக் கொண்டு செல்லப்பட்டபோது அவை மீட்கப்பட்டன.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (21,ரி2, 26)

## கணக்காளர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண் கணக்காளர் ஒருவர் தேவை.
முன் அனுபவம் தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
- 077 978 5717

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
செல்வி **ச.லாவண்யா**
அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்துரை சத்தியசீலன்**

அவர்களின் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**உத்தியோகத்தர்கள்.**
**உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவு சங்கம்,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

**அன்ரன் யூட் றொபின்**

**(மக்கள் வங்கி தலைமை காரியாலயம், யாழ்ப்பாணம்)**



தோற்றம் 16.12.1971 மறைவு 28.10.2017

கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும், பாண்டியன் தாழ்வை வதிவிடமாகவும் கொண்ட அன்ரன் யூட் றொபின் நேற்று (28.10.2017) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேஷ்பீற்றர் - மேரி மெற்றலின்ராணி தம்பதியரின் அன்புமகனும் அனற்மறீடா (ஆசிரியை சென். பெனடிக்ற் பாடசாலை) வின் அன்புக்கணவரும் வளன்விஷோக்கின் (சென் ஜோன்ஸ் வித்தியாலயம்) அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 13/1, சென் ஏன்ட்ஸ் லேன், சுண்டுக்குளி. 021 222 9855**

**தகவல்: குடும்பத்தினர்.**

### கற்றாக் சிகிச்சையை அடுத்து பக்ரீரியா தொற்றால்

# பாதிக்கப்பட்டுள்ள 9 பேரில் ஐவருக்குப் பார்வை இழப்பு

### வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு சீல்

யாழ்ப்பாணம், ஒக். 29

'கற்றாக்' கண் சிகிச்சையின்போது ஒரே நாளில் பாதிக்கப்பட்ட 9 பேரில் ஐவர் தமது பார்வையை இழந்துள்ளனர் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. அவர்களில் ஒருவருக்கு சிகிச்சையளிக்கப்பட்ட கண் அகற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே இவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்ட வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சைப் பகுதியின் செயற்பாடுகள் அதிகாரிகளால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

கண் சிகிச்சை நிபுணர் மலரவனால் யாழ்ப்பாணம், திருநெல்வேலி நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட கற்றாக் சிகிச்சையின் போது 9 பேருக்குப் பாதிப்பு ஏற்பட்டது. அவர்களில் 5 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்.

கொழும்புக்கு அனுப்பப்பட்ட 5 பேரில் 4 பேருக்கு பார்வை கிடைப்பது 99 வீதம் சாத்தியமில்லை என்று அங்கு சிகிச்சையளித்த கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் கூறியுள்ளனர். மற்றொருவருக்கு நோய் நிலை காரணமாக ஒரு கண் சத்திரசிகிச்சை மூலமாக முற்றாகவே நேற்று அகற்றப்பட்டுவிட்டது.

கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை சத்திரசிகிச்சை மேற்கொண்ட 9 பேருக்கே இந்தப் பாதிப்பு ஏற்பட்டது. கொழும்புக்கு மாற்றப்பட்டவர்களில் 4 பேருக்கு கடந்த வியாழக்கிழமை மீண்டும் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் அவர்களது நிலைமை பரிசோதிக்கப்பட்டபோது பார்வை திரும்பக் கிடைப்பது 99 வீதம் சாத்தியமில்லை என்று சத்திரசிகிச்சை மருத்து நிபுணர்கள் கூறினர் என்று அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

சுன்னாகம் வங்கி வீதியைச் சேர்ந்த ஏரம்பமூர்த்தி பூவலிங்கம் (வயது - 57) என்பவரின் நிலைமை மோசமாகக் காணப்பட்டதால் அவரது கண் முழுமையாக அகற்றப்பட்டது. அந்தக் கண் தொடர்ந்தும் இருந்தால் மூளைக்கு அதனால் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்தே அகற்றப்பட்டதாக உறவினர்கள் கூறினர்.

"எனது தந்தையாருக்கு கண் அழுத்தம் உள்ளதால் அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்குத் தாமதிக்கவேண்டியிருந்ததாக மருத்துவ நிபுணர்கள் கூறினர். அவரது கண்ணில் ஏற்பட்ட பாதிப்பு - பக்ரீரியா தொற்று ஆபத்தானதாகக் காணப்பட்டது. பக்ரீரியா தொற்று கண்ணில் மட்டுமன்றி குருதியிலும் பரவியுள்ளது. அதனால் கண்ணைச் சத்திரசிகிச்சை மூலமாக அகற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. அப்படி அகற்றாவிட்டால் தொற்று ஆப்த்தானதாக மாறிவிடும் என்று மருத்துவர்கள் கூறினர். அதனால் அப்பாவின் இடது கண் இன்று (நேற்று) மதியம் சத்திர சிகிச்சை மூலமாக அகற்றப்பட்டது" என்று பூவலிங்கத்தின் மகன் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

தவிர, அங்கு பார்வைகிடைப்பதற்கு 99 வீதம் சாத்தியமில்லை என்று கூறப்பட்டவர்களில் 3 பேர் இன்று அவர்களது இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர். ஒருவர் கொழும்பிலேயே தொடர்ந்தும் தங்கியிருந்த சிகிச்சை பெறுவார்.

கண்ணில் கற்றாக் சத்திர சிகிச்சையின்போது 9 பேருக்குக் கண்ணில் பாதிப்பு ஏற்பட்டநிலையில், குறித்த சத்திரசிகிச்சை இடம்பெற்ற திருநெல்வேயிலுள்ள நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவ நிலையத்திலுள்ள சத்திரசிகிச்சைப் பிரிவு சீல் வைத்து மூடப்பட்டது.

கொழும்பு சுகாதார அமைச்சும் இது தொடர்பில் கவனம் செலுத்தி ஆராயவென குழு ஒன்றை அனுப்பவுள்ளதாக வடக்கு சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில், வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் அறிவுறுத்தலின்படி யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் குறித்த சத்திர சிகிச்சைப் பிரிவை நேற்றுமுன்தினம் சீல் வைத்து மூடினர்.

"ஆரம்ப விசாரணைகளை அடுத்து கொழும்பிலிருந்து கிடைத்த அறிவுறுத்தலின் படி தற்காலிகமாக சத்திரசிகிச்சைக்கூடம் மூடப்பட்டுள்ளது. முழுமையான விசாரணைகளின் முடிவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்" என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையின் கருத்தைப் பெறமுடியவில்லை. நோயாளிகளுக்குப் பார்வையிழப்பு ஏற்பட்டுள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்க கண் சிகிச்சை நிபுணர் மலரவனும் மறுத்துவிட்டார். (உ-4,106)

## காணி விற்பனைக்கு

நல்லூர் குறுக்கு வீதியில் 4 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 076 697 2287

## வீடு வாடகைக்கு

ஆடியபாதம் றோட், திருநெல்வேலி, கேணியடி வைரவர் கோயிலுக்கு அருகில் வீடுவாடகைக்குண்டு.- 077 844 9687

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கு அருகில் பலாலி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு - 076 697 2287

## கார் உடன் விற்பனைக்கு

மிகநல்லநிலையிலுள்ள Daihatsu Japan Car, Original Paint, AC, Power Break, Petrol, 20 km\L
தொடர்பு . 077 030 3834

## English Classes

Grade 6 to G.C.E. O/L and Spoken English
தொடர்பு-077 379 0471

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள பிறின்டஸ் மற்றும் போன் சொப்புக்கு வேலைக்கு பெண் வேலையாள்கள்தேவை. - 077 365 2050

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவபீடத்துக்கு அருகில் 2 3/4 பரப்புக்காணி, 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு
தொடர்பு - 076 697 2287

Certificate in

## Child and Adolescent Psychology

உளவியல் அறிவு : புரிந்துகொள்வதற்கும், வழிகாட்டலுக்குமான கருவி




CCH
Centre for Children's Happiness

Centre for Children's Happiness (GTE) Ltd.
No. 15, Kachcheri Nallur Road, Jaffna.
No. 8, Ratnakara Place, Dehiwala.
077 111 3747, 011 332 0371
cchforchildren@gmail.com www.cchaid.org

# வடமராட்சியின் நிறைமதி விழா

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சிகல்விவலயம் நடத்தும் நிறைமதி விழா பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கேட்போர் அரங்கில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமாரும், மதிப்புறுவிருந்தினராக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸூம் கலந்துகொள்வர். (4-108)

# உலக விவசாய ஆய்வு மாநாடு அடுத்த மாதம் கிளிநொச்சியில்

## உலர் வலய விவசாயம் தொடர்பானது

66 ஆராய்ச்சிக் கட்டுரைகளுடனான உலர் வலய விவசாயம் தொடர்பான 3ஆவது பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் மற்றும் 2ஆம் திகதிகளில் அறிவியல் நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
மாறிவரும் காலத்தின் தேவை கருதி "நீடித்த நிலைபேறுகையான விவசாய உற்பத்தித் திறனை நோக்கிய புதுமைகள்" (Innovation towards sustainable agricultural productivity) எனும் தொனிப் பொருளில் இந்த ஆராய்ச்சி மாநாடு இடம்பெறவுள்ளது.
முதலாம் திகதி காலை 8.30க்கு ஆரம்பமாகும் தொடக்க நிகழ்வுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கே. மணிவண்ணன், பேராதனைப்பல்கலைக்கழத்தின் பேராசிரியர்களான பிரதீப சில்வா, ஜீவிகா வீர ஹேவா, ரெரன்ஸ் மதுஜித், சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கலாநிதி மித்திகா விதானகே ஆகியோர் வருகை தரவுள்ளனர். அவர்களின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.
இரண்டாம் நாள் நிகழ்வில் அமெரிக்கப் பல்கலைக்கழகம், நைஜீரியாவைச் சேர்ந்த பேராசிரியர் ஜோன். E. லியோனாட், UNICEF செயற்றிட்ட அலுவலர் சுதர்மன் ஆகியோர் வருகை தந்து சிறப்பிக்கவுள்ளதோடு சிறப்புரை களையும் ஆற்றவுள்ளனர்.
ஆறு அமர்வுகளாக இடம்பெறவிருக்கும் இந்த ஆராய்ச்சி மாநாட்டில் ஒவ்வொரு அமர்விலும் பிரத்தியேக மான உபதலைப்புக்களின் கீழ் ஆராய்ச்சியாளர்கள் தம் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர். அந்த வகையில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களிடமிருந்து மொத்தமாக 66 ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்த அரங்கில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என விழா ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர். காலநிலை மாற்றமும் விவசாயமும், மண் நீர் மற்றும் சூழல் முகாமைத்துவம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பம், கால்நடை வளர்ப்பும் மீன்பிடி மற்றும் நீரியல் வளர்ப்பும், பயிர்ப்பாதுகாப்பும் உயிர்தொழில்நுட்பமும், மீள்காடாக்கமும் பயிருற்பத்தியும், விவசாயப் பொருளியல் விவசாய இயந்திரவியலும், அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பமும் நீர்ப்பாசன முகாமைத்துவமும் போன்ற உப தலைப்புக்களின் கீழ் ஆறு அமர்வுகளும் இடம்பெறவுள்ளன.
இதில் இலங்கையின் பிற பாகங்களிலிருந்தும், பன்நாடுகளிலிருந்தும் பேராசிரியர்கள், துறைசார் வல்லுநர்கள், புலமையாளர்கள், இளம் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன் தலைமையில் இடம்பெற உள்ள இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும், முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வ ரனும் கலந்து கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
"ஆய்வரங்கின் ஆறு அமர்வுகளின் மூலமாக வடக்குமாகணத்தின் அபிவிருத்தியிலும் எமது சமூகத்தின் மேம்பாட்டுக்கும் குறிப்பாக விவசாயம் சார்ந்த பொருளாதாரத்தை கொண்டுள்ள எமது பிரதேசத்துக்கும் பெரும்பணி ஆற்ற வேண்டிய கடப்பாடு விவசாய பீடத்துக்குள்ளது. அந்த வகையில் இத்தகைய பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடுகள் இனி வரும் காலங்களில் இடம்பெறப் போகும் அபிவிருத்திக்கான அடித்தளமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆராய்ச்சியாளர்கள், துறைசார் வல்லுநர்கள், பேராசிரியர்கள், விவசாயத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், அரச அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவிருக்கும் இந்த ஆராய்ச்சி மாநாட்டில் எமது பிரதேசத்தின் விவசாயிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் என்போரின் ஆதரவும் பங்கேற்றலும் கிடைக்கின்ற பட்சத்தில் இந்த ஆராய்ச்சி மாநாட்டை ஏற்பாடு செய்ததன் நோக்கம் முழுமையடையும்" என யாழ்ப்பாணப்பல்கலைக் கழக விவசாய பீடத்தினர் தெரிவித்தனர்.
(21)

*யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின்*

## சுவாமி விபுலானந்தர் நினைவரங்கம்



யாழ்ப்பாணம், ஒக்.29
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த 'சுவாமி விபுலானந்தர் நினைவரங்கம்' நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை ஆதீனக் கலாமண்டபத்தில் இடம்பெற்றது.
தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் இரா.செல்வவடிவேலும் வாழ்த்துரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் ஆற்றினர்.
'தமிழியல் வளர்ச்சியில் ஈழத்து அறிஞர்களின் வகிபாகம்' என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த அரங்கத்தில் சுவாமி விபுலானந்தர் என்ற பொருளில் தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க.இரகுபரனும் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை என்ற பொருளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி சி.பத்மராஜாவும் வண. தனிநாயகம் அடிகள் என்ற பொருளில் தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுநிலை பேராயர் அதிவண. கலாநிதி சு. ஜெபநேசன் அடிகளாரும் பேராசிரியர் க.. கணபதிப்பிள்ளை என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்ஷ்மி இராசநாயகமும் கருத்துரை வழங்கினர். தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் ச.லலீசன் நன்றியுரையாற்றினார். நிகழ்வில் கட்டுரை வழங்கிய பேராளர்கள் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸினால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர். (21)

## குரு பிரதீபா பிரபா விருது பெற்ற அதிபர், ஆசிரியர்கள் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29
வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் 260 க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கும், பணிபுரியும் 60 க்கும் மேற்பட்ட அதிபர்களுக்கும் குரு பிரதீபா பிரபா விருது அரசினால் வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர்.
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.உதயகுமார் தலைமையில் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸ் உட்பட பலரும் அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உட்பட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பலரும் அதில் கலந்து கொண்டனர். (4108)



## கால்நடைகளால் பயிர்கள் அழிவு

யாழ்ப்பாணம், ஒக்.29
பெரும்போக நெற்பயிர்ச் செய்கை ஆரம்பித்துள்ள நிலையில் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில், கால்நடைகள் பயிர்களை அழித்துவருவதாக அந்தப் பகுதி விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.
வலிகாமம் கிழக்குப் பிரதேசத்துக்குட்பட்ட கோப்பாய் ,நீர்வேலி தரவை வயல் நிலங்கள் சீர் செய்யப்பட்டு அங்கு நெல் விதைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. இந்த நிலையில் சிலர் வளர்ப்புக் கால்நடைகளை மேய்ச்சலுக்காக அவிட்டு விடுகின்றனர். அவை விவசாய நிலங்களில் பயிரிட்டுள்ள பயிர்களை மேய்ந்தும், அழித்தும் வருகின்றன . ஏற்கனவே கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு விவசாய சம்மேளனங்கள் அறிவித்தும் கூட அதையும் பொருட்படுத்தாது சிலர் வளர்ப்பு கால்நடைகளை மேய்ச்சலுக்காக அவிட்டு விடுவது கவலைக்குரியது. எனவே உரியவர்கள் இதனைக் கவனத்திற் கொண்டு தமது கால்நடைகளை நெல் அறுவடை செய்யும் வரைக்கும் கட்டி வளர்க்க வேண்டும் என்றனர்.
(21,17)

## யாழ். பெண்கள் அபிவிருத்தி மையத்தின் தொழில்நிலையம்திறந்துவைக்கப்பட்டது



யாழ்ப்பாணம், ஒக்.29
யாழ்ப்பாணப் பெண்கள் அபிவிருத்தி மையத்தின் தையல் மற்றும் விற்பனை நிலையம் முஸ்லிம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வை அதன் செயலாளர் ரமீஸ் பாதுசா தொகுத்து வழங்கினார். வரவேற்புரையையும் அமைப்பின் அறிமுகவுரையையும் அமைப்பின் தலைவர் ஜனாபா சியானா நியாஸ் வழங்கினார். மேற்படி திறப்பு விழா நிகழ்வில் விருந்தினராகக் கலந்து சிறப்பித்த வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் சிறப்புரையாற்றினார்.
நிகழ்வில் வாழ்வாதார சுய தொழில் ஊக்குவிப்புத் தொகையாக ஒரு பயனாளிக்கு 20ஆயிரம் ரூபாய் வீதம் 10 பயனாளிகளுக்கு 2 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது. இந்த நிதி குறித்த அமைப்புக்கு கடந்த 23 ஆம் திகதி வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.
அமைப்பின் உறுப்பினர்களினால் தயாரிக்கப்பட்ட ஆடைகள், பைகள், மற்றும் பல பொருள்கள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன.
திறப்பு விழாவில் வடக்குமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின், ஜனாப் எம். எம். எம். நிபாஹிர், மூத்த ஊடகவியலாளர் கலாபூசணம் எம். எல். லாபிர், இணையும் கரங்கள் சனசமூக நிலையத் தலைவர் ஏ. சி. ஹஸ்ஸான், சோனகத்தெரு தெற்கு முதியோர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், அயல் கிராம மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணப் பெண்கள் அபிவிருத்தி மையத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (21)

## கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்கு வடக்கைச் சேர்ந்த மாணவிகளுக்கும் தடுப்பூசி

*வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் தகவல்*

யாழ்ப்பாணம்.ஒக்.29
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவிகளுக்கு கருப்பை கழுத்துப் புற்று நோய்த் தடுப்பு ஊசி தற்போது போடப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொழும்பு சுகாதார அமைச்சின் சிறப்பு வேலைத்திட்டமாக இந்தத் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு ஏற்படும் புற்று நோய்களில், கருப்பை கழுத்துப் புற்று நோய் 10 வீதத்திலும் அதிகமாக உள்ளது. ஆகவே இதனைத் தடுப்பதற்கு கொழும்பு சுகாதார அமைச்சின் தேசிய வேலைத் திட்டமாகத் தற்போது குருநாகல், கம்பகா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தடுப்பூசி ஏற்றப்படுகிறது. இதனை சிலர் தவறாகப் புரிந்து கொண்டு, கருத்தடை ஊசிகள் ஏற்றப்படுவதாக வதந்தி பரப்புகின்றனர். இந்த வதந்திகளில் எந்த விதமான உண்மையும் இல்லை. இலங்கையில் வருடம் ஒன்றுக்கு 900 பேர் வரையில் இந்தப் புற்று நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.
ஆகவே எமது மாகாணத்திலும் உள்ள பாடசாலை மணவிகளுக்குத் தற்போது இந்த ஊசி ஏற்றப் பட்டு வருகின்றது. வடக்கு மாகாணத்தில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும். ஊசி ஏற்றப்படும் வயதுப் பிரிவினர் மாற்றப் படாமல் இருப்பதற்காக 10 வயது என்ற எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஊசி போடுவது தொடர்பாக யாரும் அச்சம் கொள்ளத்தேவையில்லை - என்றார்.
(21,ரி)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சிறப்பு அதிரடிப்படை முகாம் கழிவுகள் குழாய் மூலம் பண்ணைக் கடலுக்குள்

## அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை என மக்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.29
யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப்படை முகாமின் கழிவுகள் நேரடியாகவே தனியான குழாய் வழியாகப் பண்ணைக் கடலுக்குள் செலுத்தப்படுவது தொடர்பில் எவருமே கண்டுகொள்ளவில்லை யென அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
அதிரடிப்படை முகாமின் கழிவுகள் அதன் அருகே உள்ள ஒரு வெற்று நிலப்பரப்புக்குள் தொட்டி கட்டப்பட்டு விடப்பட்டு அதனூடாக நேரடியாகவே தனியான குழாய் வழியாகப் பண்ணைக் கடலுக்குள் செலுத்தப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. மிகவும் இரகசியமான முறையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.
முகாமின் கழிவுகள் அனைத்தும் நிலத்துக்குக் கீழான குழாய் மூலம் மதகு வழியாகக் கொண்டுவரப்பட்டு கடலினுள் செலுத்தப்படுகிறது. அதிலிருந்து எழும் துர்நாற்றம் சகித்துக்கொள்ள முடியாதளவு உள்ளது. மலக் கழிவுகளும் இதன் மூலம் அகற்றப்படுகின்றதா எனக் கருதுமளவுக்கு அந்தக் கழிவுகளில் இருந்து பெரும் துர்நாற்றம் எழுகின்றது.
"இதனால் அந்தக் கடற்கரைப் பிரதேசம் மாசடைவது மட்டுமன்றி கடலுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனை அண்டிய பகுதியின் ஊடாகவும் தொழிலாளர்கள் கடலுக்குச் செல்கின்றனர். அவர்களுக்குத் தோல் நோய்கள் தொற்றும் அபாயமும் ஏற்படுமோ என அஞ்சத்தோன்றுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய சுகாதாரத் திணைக்களம் மற்றும் கடற்றொழில் திணைக்களம் என்பனவும் இதே பண்ணைப் பகுதியிலேயே அமைந்துள்ளன.



ஆனால் இதனை மட்டும் கண்டுகொள்ள மாட்டார்கள்" என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் சுகாதார அதிகாரிகள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாநகர சபையினர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "இவ்வாறு கழிவுகளை கடலுக்குள் செலுத்துவது தொடர்பில் இதுவரை எந்த தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை. தற்போது சுட்டிக்காட்டப்படுவதால் அது தொடர்பில் உடன் ஆராயப்படும்" என்றனர். (21,101)

## கந்தசஷ்டி உற்சவ காலத்தின்போது செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி

யாழ்ப்பாணம், ஒக்.29
யாழ்ப்பாண மாவட்டத்தில் செவ்விளநீருக்குத் திடீரெனப் பெரும் பற்றாக்குறையும் கிராக்கியும் நிலவியது. கந்தசஷ்டி உற்சவ காலத்தில் இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டது என கூறப்பட்டது. செவ்விளநீரின் பற்றாக்குறையால் அதன் விலையும் அதிகரித்தே காணப்பட்டது. இளநீர் ஒன்று 120ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டது. யாழ்ப்பாண நகரிலும், நல்லூர் ஆலயச் சுற்றாடலிலும் கூடுதலான வியாபாரிகள் செவ்விளநீரை எடுத்து வந்து விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்தனர். அதனை விட தெற்கில் இருந்தும் வாகனம் மூலம் அதிகளவிலான செவ்விளநீர் எடுத்துவரப்பட்டிருந்தது. எனினும் விலை அதிகரித்தே காணப்பட்டது. இது நுகர்வோரிடத்தில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. (21,17)



## குடும்பத் தலைவரை காணவில்லையென பொலிஸில் முறைப்பாடு

மன்னார், ஒக்.29
மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் கடந்த 25ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளார் என அவரது மனைவியால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
ஆண்டாங்குளம் சந்தியில் சிகை அலங்கரிப்பு நிலையத்தை நடத்தி வரும் சன் நீக்கிலாஸ் (குணபால்) என்பவரே காணாமற் போயுள்ளார் என அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
குடும்பத் தலைவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 0768400798, மற்றும் 0767480357 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. (21,56)

## கொழும்பில் இடம்பெறும் தேசிய சகவாழ்வு மாநாட்டுக்கு யாழில் இருந்து 102 பிரதிநிதிகள் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29
சகவாழ்வுச் சங்கத்தின் தேசிய மாநாடு நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 102 பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்கின்றனர். தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சினால் மாநாடு நடத்தப்படுகின்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றலுடன் மாநாடு நடைபெற இருக்கின்றது. கிராம அலுவலர் பிரிவு வாரியாகச் செயற்படும் சகவாழ்வுச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்குப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 102 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏற்பாடுகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் பிரதேச செயலகங்களினால் செய்யப்பட்டுள்ளன. (21, 11)

## விபத்துக்களைத் தடுக்க ஏ-9 வீதிக்குப் பதிலாக முறிகண்டி -பரந்தன் வீதி வரை மாற்றுப்பாதை

கிளிநொச்சி மாவட்டத்தில் நகரின் மத்தியில் ஏற்படும் நெருக்கடியைக் குறைப்பதோடு விபத்துக்களையும் தவிர்க்கும் நோக்கில் ஏ-9 வீதிக்குப் பதிலாக முறிகண்டியில் இருந்து பரந்தன் வீதிவரையில் மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம் பெருந் தெருக்கள் போக்குவரத்து அமைச்சால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என மாவட்டச் செயலாளர் சு. அருமைநாயகம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள வீதிகள் போதிய அகலமாகவுள்ளபோதும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களுக்கான போக்குவரத்து மார்க்கமாகவும் உள்ளது. இதனால் அதிக வாகனப் பாவனை நேரங்களில் ஏற்படும் வாகன நெருக்கடியைக் குறைப்பதோடு விபத்துக்களையும் தவிர்க்கும் நோக்கில் ஏ-9 வீதிக்குப் பதிலாக முறிகண்டியில் இருந்து பரந்தன் வீதி வரை மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம் ஒன்றை முன்வைத்திருந்தோம். குறித்த மாற்றுத்திட்டத்துக்கு அமைய முறிகண்டியை அண்மித்த பகுதியில் இருந்து அறிவியல்நகர், பாரதிபுரம், உதய நகர், கனகபுரம், கிளிநொச்சி, ஊடாகப் பரந்தன் வரைக்கும். நவீன வசதிகள் கொண்ட ஒரு மாற்று வீதியை அமைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இதன் மூலம் குறித்த திட்டம் மட்டும் நிறைவேறுவது மட்டுமன்றி இந்த வீதி அமையும் பகுதிகளும் அபிவிருத்தியடையும். அந்தப் பகுதிகளின் கிராம நிலங்களின் விலை மதிப்பும் உயரும். அத்தோடு வர்த்தக வியாபார நிலையங்களுடன் தொழில் வாய்ப்புக்களும் அதிகரிக்கும்.
இதன்அடிப்படையில் 12 கிலோமீற்றர் வீதிக்கும் சுமார் 400 மில்லியன் ரூபா செலவில் மாற்று வீதி அமைக்கத் திட்டமிடப்பட்டது. திட்டம் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்படும் திட்டம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக 2018இல் முன்னெடுக்கும் வகையில் தற்போது பணிகள் இடம்பெறுகின்றன - என்றார். (21,101)

## 50 வீத மானியத்துக்கு இம்முறையும் விதை உருளைக்கிழங்கை வழங்குக

### யாழ்ப்பாணச் செய்கையாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.29
காலபோக உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடவுள்ள செய்கையாளர்களுக்கு இந்த முறையும் ஐம்பது வீத மானிய விலையில் விதை உருளைக் கிழங்கைப் பெற்றுத்தருமாறு மாவட்ட உருளைக்கிழங்குஉற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்தச் சமாசம் மேலும் தெரிவித்ததாவது; கடந்த போகத்தின் போது செய்கையாளர்களுக்கு ஐம்பது வீத மானியத்தால் விதை உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டன .மானிய விலையில் அவை வழங்கப்பட்டதால் கூடுதலான விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டனர். இதை ஊக்குவிக்கும் பொருட்டு இம்முறையும் காலபோகச் செய்கைக்கு அரசு மானிய விலையில் விதை உருளைக்கிழங்கைப் பெற்றுத் தரவேண்டும் என்றனர். மாவட்ட விவசாயத் திணைக்களம் மற்றும் அரச அதிபர் ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன . அடுத்த நவம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் குடாநாட்டில் இந்தக் காலபோக உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் ஈடுபடவுள்ளனர். அதற்குத் தற்போது தயாராகி வருகின்றனர். ஐம்பது வீத மானியவிலையில் இம்முறை விதை உருளைக்கிழங்கு வழங்கப்படாது விட்டால் குறைவான செய்கையாளர்களே செய்கையில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (21,17)

## சொத்து விவரங்களை வெளியிட தேர்தல்கள் ஆணைக்குழு மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29
தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரத்தை வழங்குமாறு தேர்தல் திணைக்களத்திடம் ஊடகவியலாளரால் கோரப்பட்ட விண்ணப்பத்துக்கு அமைய குறித்த விவரங்களை வழங்க முடியாது என தேர்தல்கள் செயலக அதிகாரி பதிலளித்துள்ளார்.
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் கீழ் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள 7 நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், வெகுமதி ஆசனத்துக்குரிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினரதுமான 8 நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய விவரங்களும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஊடாகக் கோரப்பட்டது. அது யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் உத்தியோகத்தர் ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்கப்பட்டது.
இவ்வாறு கோரப்பட்ட விவரம் 2016ஆம் ஆண்டின் தகவல் அறியும் சட்டத்தின் 26இல் பிரிவு 2இன் பிரகாரம் தனிமனித விவரம் என்பதன் அடிப்படையில் வழங்க முடியாது எனதேர்தல்கள் ஆணைக் குழு பதிலளித்துள்ளது என தேர்தல்கள் செயலக அதிகாரி தெரிவித்துள்ளார். (21,101)

# அரசமைப்பை ஏன் எதிர்க்கிறார்கள்?

## விளக்கம் கொடுக்கிறார் லக்ஸ்மன் கிரியெல்ல

ஐ.தே.க அரசமைப்பைக் கொண்டுவந்தமையால்தான் எதிர்க்கின்றார்கள். இவ்வாறு அந்தக் கட்சியின் மையக் குழு உறுப்பினரும், அமைச்சரும், சபை முதல்வருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புக்கு மகாநாயக்க தேரர்கள் எதிர்ப்பில்லை. தேரர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாகச் சொல்வது முற்றிலும் தவறானது. ஒரு சில பிக்குகள் தெரிவிக்கும் கருத்துக்கு தேரர்கள் பொறுப்பில்லை.

தற்போதைய அரசமைப்பையும் ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டு வருகின்றது. இதனாலேயே சிலர் புதிய அரசமைப்பு முயற்சியை எதிர்க்கின்றனர் - என்றார். (5.31)



# வரி அறவீட்டால் கடன் சுமையைப் போக்க முடியாது

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஒக். 29

18வயதுக்கு மேற்பட்டோரிடமிருந்து வரி அறவிடும் முறையினை அறிமுகம் செய்வதால் நாட்டின் கடன் சுமையை நீக்கிவிட முடியாது என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் 252 அரசசேவை நிறுவனங்கள் காணப்படுகின்றன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிறிலங்கன் எயார் லயன்ஸ், துறைமுக அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியன அவற்றின் முன்னிலையில் உள்ள ஐந்து கட்டமைப்புக்களாகின்றன.

இந்த நிறுவனங்கள் இலாபத்தினை ஈட்டுகின்றன என்று நீங்கள் கருதுகின்றீர்களா? இவை இலாபத்தினை ஈட்டுவதில்லை. இவை இழப்பிலேயே இயங்குகின்றன. இழப்பில் இயங்கும் நிறுவனங்களை விற்பனை செய்ய முற்பட்டாலும் அதனை வாங்குவதற்குவதற்கு யாரும் முன்வருவதில்லை.

சில நிறுவனங்களை எடுத்துப்பார்த்தால் அந்த நிறுவனங்களின் தலைவர்கள் ஆட்சியாளர்களுடன் ஒரே வகுப்பில் படித்தவர்களாக இருப்பார்கள். நிறைவேற்று அதிகாரிகளைப் பார்த்தால் அவர்களின் சொந்தக்காரர்கள். இவர்களுக்குத் தகுதிகள் இருந்தாலும் கூட அந்தந்த துறைகளுக்குப் பொருத்தமானவர்களா என்ற பிரச்சினையொன்று உள்ளதல்லவா? இவ்வாறான நிலமைகளினால் அதன் பிரதிபலிப்பு யார்மீது வருகின்றது. நெருக்கடிகள் யாருக்கு ஏற்படுகின்றது என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். இதன் காரணமாகத்தான் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியின் பின்னர் 18 வயதைக் கடந்த அனைவர்களுக்கும் வரிதொடர்பிலான கோப்பு ஒன்றை ஆரம்பிக்கவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

கடன்களை உரிய முறையில் நிருவகிக்கவில்லை. இதனால் கடன்கள் மலைகளாகி விட்டன. நாட்டுக்கு வழங்கப்படும் கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்குக் கால அவகாசம் காணப்படுகின்றது. அந்தக் கால அவகாசமானது எமக்கு காணப்படும் சலுகைக்காலமாகும். சலுகைக்காலம் நிறைவடைந்ததும் கடன் தொகையை ஒட்டுமொத்தமாக செலுத்தவேண்டிய நிலமை ஏற்படும்.

எமது நாட்டின் துறைசார்ந்த புத்திஜீவிகள், வாண்மையாளர்கள் உரிய பதவிகளில் அமர்த்தப்பட்டிருப்பார்களேயானால் எந்தவொரு அரச நிறுவனமும் இழப்பில் இயங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

இந்தக் கருத்தை முன்வைப்பதில் நான் அச்சமடையவில்லை. நான் கூறுவதே யதார்த்தமான விடயமாக விருக்கின்றது. அவ்வாறிருக்கையில் வரி அறவீடுகளைச் செய்வதனாலோ அல்லது மேலும் கடன்களைப் பெற்றுக்கொள்வதனாலேயோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை எட்ட முடியாது என்பதை உறுதியாகக் கூற விரும்புகின்றேன் -என்றார். (5.31)








# அமெரிக்கப் போர்க் கப்பல்கள் கொழும்பில்

கொழும்பு, ஒக். 29

அமெரிக்கக் கடற்படையின் யுஎஸ் எஸ் நிமிட்ஸ் வானூர்தி தாங்கிய போர்க்கப்பலுக்கு அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் நேற்றுமுன் தினம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்கக்கடற்படையின்11ஆவது வானூர்தி தாங்கிய தாக்குதல் குழுவைச் சேர்ந்த, யுஎஸ்எஸ் நிமிட்ஸ் வானூர்தி தாங்கிய கப்பல் தலைமையில், அதிவேகப் போர்க்கப்பலான யுஎஸ்எஸ் பிரின்சிரோன், நாசகாரிக் கப்பல்களான, யுஎஸ் எஸ் ஹவார்ட், யுஎஸ்எஸ் சூப், யுஎஸ்எஸ் பின்க்னி, யுஎஸ்எஸ் கிட் ஆகியன கொழும்பை நேற்று வந்தடைந்தன.

இவை கொழும்பு நோக்கி வந்து கொண்டிருக்கும்போதே, அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் யுஎஸ்எஸ் நிமிட்ஸ் வானூர்தி தாங்கிய போர்க்கப்பலுக்கு அமெரிக்கக் கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தரையிறங்கிய, அமெரிக்க கடற்படையின் சீ ஹோக் உலங்கு வானூர்தி மூலம், அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், அமைச்சர் மகிந்த சமரசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, அயலுறவுத்துறைச் செயலர் பிரசாத் காரியவசம், கூட்டுப்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகளும், சில ஊடகவியலாளர்களும், யுஎஸ்எஸ் நிமிட்ஸ் வானூர்தி தாங்கிய போர்க்கப்பலுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

யுஎஸ்எஸ் நிமிட்ஸ் வானூர்தி தாங்கிப் போர்க்கப்பலில், வானூர்திகள், உலங்குவானுர்திகள் தரையிறக்கப்படுவது, அதன் நாளாந்தப் பணிகள், செயற்பாடுகள், பாதுகாப்பு வசதிகள் குறித்து இவர்களுக்கு அமெரிக்க அதிகாரிகளால் விபரித்துக் கூறப்பட்டுள்ளது. (5)

# குண்டுபோட்டாலும் அரசமைப்பை நாம் கொண்டுவந்தே தீருவோம்

## சுதந்திரக் கட்சி திட்டவட்டம்

தமிழ் மக்களுக்கான தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பை நாங்கள் கொண்டு வந்தே தீருவோம். கமால் குணரட்னவினதும் விமல் வீரவன்சவினதும் அச்சுறுத்தலுக்கு நாங்கள் ஒருபோதும் பயப்படமாட்டோம். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கு ஆதரவு தெரிவிப்பவர்களைக் கொல்லவேண்டும் என்று முன்னாள் இராணுவ அதிகாரி கமால் குணரட்ன தெரிவித்துள்ளமை தொடர்பிலும் நாடாளுமன்றத்துக்குக் குண்டு வைக்கப்படும் என்று விமல் வீரவன்ச தெரிவித்துள்ளமை தொடர்பாகவும் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள ஒருமித்த நாடு என்ற பதத்துக்குச் சுதந்திரக்கட்சி எதிர்ப்பு வெளியிடவில்லை. ஒரு சிலவிடயங்களில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். தேர்தல் முறை மாற்றப்படவேண்டும். அதிகாரப்பகிர்வு செய்யப்படவேண்டும். அரச தலைவர் முறைமையானது மாற்றப்படக்கூடாது. அரசதலைவர் முறைமை நீடிக்கவேண்டியது அவசியமாகும். இதுதொடர்பில் எமது கட்சி மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றது.

எம்மைப் பொறுத்தவரையில் அரசியல் மற்றும் மொழி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் தமிழ் மக்களுக்கு அநீதி காணப்படுகின்றது. அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படவேண்டும். அரசமைப்பில் காணப்படுகின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். நாம் அதற்காகவே குரல் கொடுக்கின்றோம். எவ்வாறெனினும் தற்போதைய இறுதிச் சந்தர்ப்பத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டுவிடவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

நாடாளுமன்றத்தின் மீது குண்டு வீசுவதாக விமல் வீரவன்சவும், அரசமைப்பை ஆதரிப்பவர்களைக் கொல்லவேண்டும் என்று இராணுவ அதிகாரி கமால் குணரட்னவும் தெரிவித்திருக்கின்றார்கள். கமால் குணரட்னவுக்கும் விமல் வீரவன்சவுக்கும் ஒன்றைக் கூற விரும்புகின்றோம். அதாவது இவர்களுக்கு அஞ்சி அரசமைப்புச் செயற்பாடுகளிலிருந்து நாங்கள் பின்னோக்கிச் செல்ல மாட்டோம்.

இவர்கள் இருவருக்கும் அச்சமடைந்து அரசமைப்பு உருவாக்கும் செயற்பாடுகளை நிறுத்தமாட்டோம். நாங்கள் அரசமைப்பை உருவாக்கியே தீருவோம். கமல் குணரட்னவுக்கும் விமல் வீரவன்ச்வுக்கும் பயந்து புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளை நிறுத்தி விடுவோம் என்று யாரும் எதிர்பார்க்கமுடியாது. நாம் அரசமைப்பை கொண்டுவந்தே தீருவோம். என்பதை ஆணித்தரமாகத் தெரிவிக்கின்றோம் - என்றார். (5)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2018

**கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2017 நவம்பர் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்**

**1. பாவனைபொருள்கள் காகிதாதிகள்**
- 1.1 எழுதுபொருள்கள் காகிதாதிகள்.
- 1.2 வெட்டும் கருவிகளும் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
- 1.3 சுகாதாரசேவைவழங்கல் தும்புதடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், ஹார்ப்பிக், விம் முதலியன.
- 1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

**2. புத்தகம், புத்தகம் கட்டுதல்,அச்சிடுதல்.**
- 2.1 அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் முத்திரைகள், திகதிமுத்திரைகள்.
- 2.2 புத்தகங்கள், பருவவெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
- 2.3 புத்தகங்களையும், பருவவெளியீடுகளையும் கோர்த்தல்.

**3. தளபாடங்கள் அலுவலக இயந்திரங்கள்**
- 3.1 அலுவலகதளபாடம் - மரம் உருக்கு–கணனிமேசை, கதிரைகள்.
- 3.2 அலுவலக உபகரணங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).
- 3.3 தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்புசாதனங்களும்.

**4. கட்டடபொருள்கள் மற்றும் கருவிகள்**
- 4.1 சகலவகையான கட்டட நிர்மாணபொருள்கள்.
  - a. பெயின்டுகள் வாணிஸ்,தொடர்பானபொருட்கள்.
  - b. கட்டடப் பொருள்கள் (மணல் செங்கல், உலோகம், சுண்ணாம்பு, கூரைசார்ந்த பொருள்கள் முதலியன).
  - c. இயந்திரகருவிகளும் உதிரிப்பாகங்களும்.
  - d. பைப்புகள், பைப் இணைப்புகள்.
  - e. மரங்கள் - தீராந்தி, பனைமரம், சலாகைகள்.
  - f. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
  - g. அலுமினியம் பொருத்துகள், மட்பாண்டப் பொருள்கள் கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்.
  - h. குளியலறை பொருத்துகள், சுவர், தரைமாபிள்கள்.

**5. மின்னியல் பொருள்கள்**
மின்சாரசாதனம் உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்களும்.

**6. ஆய்வு கூட பொருள்கள்/சாதனங்கள்.**
- 6.1 ஆய்வு கூடச் சாதனங்கள்
- 6.2 ஆய்வு கூட இரசயனபொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7. வாகனபராமரிப்பு**
- 7.1 டயர் ரியுப்புகள், பற்றரிகள்.
- 7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
- 7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
- 7.4 மோட்டார் வாகனஉள்ளகவேலைகள்.
- 7.5 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.
- 7.6 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)

**8. பொதுசேவைகள் வழங்கல்கள்**
- 8.1 ஆயுர்வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவவழங்கல்களும்
- 8.2 விளையாட்டு மற்றும் நலன்புரிபொருள்கள்.
- 8.3 புடவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
- 8.4 தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள். இயற்கை உரம்.பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.
- 8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதி பண்ணும் இயந்திரங்கள், தொலைநகல, கணனி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு , யந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
- 8.6 உருக்கு, மரத் தளபாட திருத்தவேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
- 8.7 கதிரைகள் பின்னுதல்.
- 8.8 உடைகள் கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
- 8.9 உடைகளைச்சலவைசெய்தல்.
- 8.10 சுத்திகரிப்புசேவைவழங்கல்.
- 8.11 பாதுகாப்புசேவைவழங்கல்.

**9. எந்திரவியல் சேவைகள்**
- 9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
- 9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், திருத்துதல் மற்றும் மீள முறுக்குதல் (Rewind) உட்பட
- 9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
- 9.4 குளிரூட்டி, வாகனகுளிரூட்டிதிருத்துதல்.
- 9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டிடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்.
- 9.6 மின்சார இணைப்பு வேலைகள்.
- 9.7 நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்தவேலைகள்.
- 9.8 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும், பொருத்தலும்.
- 9.9 கட்டிடங்கள்/கட்டிடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திரசா தனங்களுக்கான) உசாத்துணைசேவைகள்.
- 9.10 மின்சாரஉசாத்துணைசேவைகள்.
- 9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் /பொருத்துதல் / தச்சுவேலை.
- 9.12 ஏந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
- 9.13 கறையான் /பீடைகள் ஒழிப்புவேலைகள்.
- 9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார்,திறன் சாராஇமற்றும் காவலாளிகள்.
- 9.15 பராமரிப்பு வேலைக்கான கணிய அளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தல்

**10. மின்னனுபொருள்கள்.**
- 10.1 கணனிமற்றும் கணனி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருள்கள்.
- 10.2 தகவல் தொழில்நுட்பவன்பொருள் மென்பொருள்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
- 10.3 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும, சேவைகளும் பராமரிப்புகளும்.
- 10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்கதொலை பேசிகளும் வழங்கல்.
- 10.5 கணனி வலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

## பதிவு தொடர்பான நிபந்தனைகள்

**01.** வழங்குநர்களாக பதிவுசெய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2018" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
♦ பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** எனமுகவரியிடல் வேண்டும்.

**02** ஒவ்வொரு வழங்கல் / சேவைகளிற்கும் தனித் தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேணடும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 2,000/= பெறுமதியான- காசுக் கட்டளை **நிதியாளர்,' யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்** எனும் பெயரிற்கு பெறப்பட்டு யாழ். தபாற் கந்தோரில் மாற்றக் கூடியதாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**03** விலைமனுக்கள் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

**04** கோரப்படும் போது விலை மனுக்களை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரியநேரத்திற்கு பொருட்கள் /சேவைகளை வழங்கதவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள் /சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

**05** விண்ணப்பதாரர் யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாகத்தில் வேலைகளை செய்ய அம்மாவட்டத்திலுள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபார பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

**06** விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலைசெய்யும் சகல எந்திரவியலாளர்,கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.7 இற்குமட்டும்) தருக.

**07** சேவைகளை/ வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்கவேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு உதவிநிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்புகொள்ளவும். தொ.பே.இல.** 0212226519.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
### வழங்குனர்கள் மற்றும் சேவையாளர்களைபதிவுசெய்தல் - 2018

**01. தனிப்பட்டதகவல்கள்**
- 1.1 முழுப்பெயர் :......................................................
- 1.2 தே.அ.அ.இல:......................................................
  (தேசியஅடையாளஅட்டையில் உள்ளபடி)
- 1.3 விலாசம்:......................................................
- 1.4 நிரந்தர தொலைபேசி இல:........................கைத் தொலைபேசி இல:........................
  தொலைநகல்:........................................

**02. வியாபாரதகவல்கள்**
- 2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:......................................................
- 2.2 பதிவு இல:......................................................
- 2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:......................................................
- 2.4 விலாசம்:......................................................
- 2.5 நிரந்தர தொலைபேசி இல:........................கைத்தொலை பேசிஇல:........................
  தொலைநகல்......................................................
- 2.6 மின்னஞ்சல் முகவரி:......................................................
- 2.7 மாவட்டம்:......................................................
- 2.8 பிரதேசசெயலர் பிரிவு:......................................................

**குறிப்பு:** வியாபார பதிவு சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
இணைக்கப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**03. மேலதிக விவரங்கள்**
- 3.1 வங்கியாளரின் பெயர :......................................................
- 3.2 கிடைக்கக்கூடியகடன் வசதிகள் :......................................................
- 3.3 ICTAD பதிவு இல ......................................................
  (எந்திரவியல் சேவை 9.3 இற்குமட்டும்.) ICTADபதிவு இல்லாதுவிடின் ரூபா 200.000.00 (இருநூறுஆயிரம் மட்டும்) இக்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவார்.

**04. வழங்கல் சேவைகளுக்கானவிவரங்கள்.**

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

**05. வழங்கப்படும் பொருள்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்**
நான்/நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/ இணங்குகின்றோம்.

கையொப்பம் :........................................ திகதி:........................
பெயர் :........................................

**தென்னம்பிள்ளை விற்பனைக்கு**

எம்மிடம் நல்லினத்
தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

**077 659 2044**

**வினியோகஸ்தர் தேவை**

இலங்கையில் பிரபல F.M.T.G நிறுவ-
னத்துக்கு கிளிநொச்சி, வவுனியா,
மன்னார் ஆகிய இடங்களுக்கு பிரதான
வினியோகஸ்தர்கள் தேவை.

**077 771 6664, 077 977 2174**

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் தென்னம்
தோட்டத்தில் வேலை செய்வதற்கு
வேலையாள் தேவை. சம்பளம்
நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**075 589 2794**

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1972
உத்தரம் 2ஆம் பாதம் 4இல் செவ்வாய்
அரச உத்தியோகம் புரியும்
மணமகளுக்கு மணமகனைத்
தேடுகின்றோம்.

**077 225 3084 (Viber)**

**வீடு விற்பனைக்கு**

தாவடியில் 4 பரப்பு காணியுடன் 5 அறைகள்
கொண்ட வீடும் பெரிய களஞ்சியசாலையும்
தனிக்கிணறும் விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

தொடர்பு : 077 248 5570

**தேவை**

பிலியந்தலையில் இயங்கும் இரும்பு
தொழிற்சாலைக்கு தொழிலாளர்கள் தேவை.
சம்பளம் 37500/- ரூபாய் + (Incentive)
உணவு தங்குமிடம் இலவசம். கிராம
சேவகர் சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், தேசிய
அடையாள அட்டையுடன் தொடர்பு
கொள்ளவும்.

**071 348 9084, 078 299 5265**

**திருமணசேவை**

உள்நாடு

Rc ஆண் 87 (ENG) 85.89 (Bank), T.O (82.85) RC பெண் 90(Bank) 90.89, 92 (பட்டதாரி), HINDU ஆண் Dr.Eng, ACC, Bank, Teacher (85,90,82,88,89) பெண் Dr, Eng, Bank, Teacher (86, 89, 88, 85, 92)

வெளிநாடு

ஆண் France(83, 85, 80) UK (83, 89, 80, 79) Aust(79,86,87,88)

பெண் 84(U.K) UK வீசா இல்லாதவர்கள் தொடர்பு கொள்ளவும்

**உங்கள் வீட்டு வரன்கள் எதுவாயினும் நாம் காளி அம்மன் துணையுடன் உடன் தேடித் தருகின்றோம்.**

தொடர்பு: **077 604 0920** (Viber) / **077 946 4287**

தலைமை அலுவலகம் - வவுனியா
கிளை - கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கொழும்பு

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் | சில்வர்
10.30 / 1.30 / 4.30 / 7.30 வெள்ளி/சனி 10.00 PM




10.30 / 1.30 / 4.30 / 7.30 வெள்ளி/சனி 10.00 PM

விசாரணை ☎ 021- 2227712

facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**வேலையாள்கள் தேவை**

சமையல் வேலைக்கும், தேநீர்கடை
நடத்துவதற்கும் வேலையாள்கள்
தேவை.

**077 741 2713/ 077 306 6615**

**முகவர்/ வினியோகஸ்தர் தேவை**

சகல மாவட்டங்களிலும் போத்தலில் அடைக்
கப்பட்ட குடிநீர் மொத்தமாக பெற்றுக்
கொள்ளவதற்கு முகவர் / வினியோகஸ்தர்கள்
தேவை. (19l உட்பட)
19l போத்தல் குடிநீர் வீடுகளுக்கும்
வினியோகம் செய்யப்படும்.

**077 553 4437**

**உடனடி வேலைவாய்ப்பு**

வெள்ளப்புலி தும்புத் தொழிற்சாலைக்கு
ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
சம்பளம்
ஆண் - 30.000/-, பெண் - 27.000/-
வழங்கப்படும். தங்குமிடம், உணவு
இலவசம். **(சகல மாவட்டங்களில் இருந்தும்
எதிர்பார்க்கப்டுகின்றது.**

**071 865 2509**

**கடை வாடகைக்கு**

கஸ்தூரியார் வீதி, இல.137
(நகரமத்தி) நீளம் **115x13**

**077 351 8131**

**வீடு தேவை**

4 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு
(நகரின் அண்மையில்
விரும்பத்தக்கது)

077 351 8131

**வீடு வாடகைக்கு**

யாழ் சுண்டுக்குளிப் பகுதியை அண்மித்த
இடத்தில் அதி சொகுசு, நவீன முறையில்
அமைக்கப்பட்ட ஆடம்பர வீடு வாடகைக்கு
உண்டு. வாகன தரிப்பிடம் உண்டு. Foreign
NGOs மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**077 135 0082**

**நாகபூஷணி திருமணசேவை (நல்லூர்)**

உள்நாட்டு, வெளிநாட்டு, அரச,
தனியார்துறை, மணமக்கள் ஜாத
கங்களை உடன் மிகப் பொருத்த
மாகத் தரப்படும்.

**021 222 9306, 077 138 7596**

**வாகனம் வாடகைக்கு/
விற்பனைக்கு**

டிமோ வட்டா வாகனம் NP
DAE XXXX வாடகைக்கு
/ விற்பனைக்கு உண்டு.

**076 946 6317**

**Peacock Rest House**

யாழ் திருநெல்வேலிக்கு அண்மையில் புதிய மாபிள் இடப்பட்ட A/C Non A/C அறைகள், குறுங்கால நீண்ட கால முறையிலும் குடும்பமாக தங்கக்கூடிய புதிய பங்களா TV, A/C, தளபாடம் இடப்பட்ட வீடு. சுபகாரியங்கள் மற்றும் விடுமுறையினை சிறப்பாக கொண்டாட உகந்தது.

**077 810 5102/ 077 301 3659**

**அமெரிக்க வீஸா லொத்தர்**

**இன்ரநெற்/ஆங்கிலம் தெரியாதவர்க்கு சேவை**

அமெரிக்காவில் நேர்மையாக குடியேறுங்கள் அரிய சந்தர்ப்பம். 15ஆவது வருட சேவை.

**விண்ணப்பத்திற்கு**
ரூ15/-முத்திரையுடன் எழுதவும்
Get Form By Email: bbsnetting@gmail.com

**BBSNETTING,
3/14,PINWATTA ROAD
DEHIWALA.**

**யாழ்ப்பாணத்தில் விண்ணப்பத்திற்கு**
உமா ஸ்ரோர்ஸ், 378, கே.கே.எஸ் வீதி
(வண்.சிவன் கோவில் முன்பாக).

www.bbsnetting.com

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்து நாடு
பூராகவும் விற்பனை செய்யும் பிரபல நிறுவனமொன்
றின் வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் பிர
தேசத்திற்கு விற்பனையினை மேம்படுத்துவதற்கு விற்
பனை பிரதிநிதிகள் தேவை. க.பொ.த. சாதாரண
தரத்துடன் விற்பனை அனுபவம் உள்ளவராகவும் 20
தொடக்கம் 45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல்
வேண்டும். சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள்
வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்
கோவையினை acc.lighting@gmail.com
மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

077 109 5769

**மருந்து இல்லா, மருந்து வைத்தியம்**

பலகாலம் பலவிதமான வைத்தியர்கள் செய்தும்
நோய்கள் குணமாகாமல் இருந்தால் என்னை
அணுகவும் எல்லா வகையான நோயாளரும்
தொடர்பு கொள்ளலாம்.

Dr.R.Sivaguranathan (Ayur)
No.54, 33rd Lane
Wellawatte Ph - 077 730 1669
ஞாயிறு, திங்கட்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில்
சந்திக்கலாம்.


# தெற்கு பாதாள உலகக் குழுவுடன் வடக்கு எம்.பி.சிக்கு தொடர்பாம்!

## சிங்கள ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, ஒக். 29

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணி வரும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் உள்ளிட்ட இரண்டு அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேல் மாகாண உள்ளூராட்சி மன்றமொன்றின் முன்னாள் உறுப்பினர் மற்றும் வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் ஆகியோர் தொடர்பாகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பு பேணுவதாகவும், நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முயற்சிப்பதாகவும் இந்த அரசியல்வாதிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு அரசியல்வாதிகள் தொடர்பிலும் திட்டமிட்ட குற்றச் செயல் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (5)

# சாவகச்சேரி நகரில் மறைகாணி பொருத்தத் திட்டம்

சாவகச்சேரி வணிகர் மன்றத்தால் மறைகாணி (சிசிரிவி) நகரப் பகுதியில் பொருத்தப்படவுள்ளது. பொதுமக்கள் மற்றும் வணிகர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு மறைகாணி பொருத்தப்படவுள்ளது. திருட்டுக்களைத் தடுக்க உதவியாக இருக்கும் என்று வணிகர் மன்றத்தினர் தெரிவித்தனர்.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தில் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனால் ஒதுக்கப்பட்ட நிதியில் மறைகாணி பொருத்த மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (5,9)


**நாய்க்குட்டி விற்பனைக்கு**

6 மாதங்கள் நிரம்பிய
டோமன் ஆண் நாய்க்குட்டி
விற்பனைக்குண்டு.

077 236 7494

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி உடையார் ஒழுங்கை இல.10/1 உள்ள 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பளவும் பிரித்து தரப்படும். தொடர்புகளுக்கு:

**+1 604 600 7075/Call Viber
or Whatsapp 076 993 7223**

**வாடகைக்கு**

வெள்ளவத்தையில் படிக்கும்/பணிபுரியும்
பெண்களுக்கு அறை வாடகைக்குண்டு.

**078 8 033 642**


**REQUEST FOR EXPRESSION OF INTEREST
MINISTRY OF MEGAPOLIS & WESTERN DEVELOPMENT
WORLD BANK FUNDED STRATEGIC
CITIES DEVELOPMENT PROJECT
(Credit. No. 5800–LK)**

**CONSULTANCY SERVICES FOR DESIGN AND CONSTRUCTION SUPERVISION SERVICES FOR THE ADAPTIVE RE-USE AND CONSERVATION OF THE OLD KACHCHERI BUILDING, ASSOCIATED LANDSCAPE, LIGHTING & PUBLIC SPACE DESIGN.**

**CONTRACT NO: SCDP/WB/JF/CS/13**

1.0 The Government of Sri Lanka has received financing from World Bank towards the cost of Strategic Cities Development Project (SCDP)implemented under the Ministry of Megapolis & Western Development. As per the need for the selected development interventions for Jaffna City, Ministry of Megapolis & Western Development intends to procure Consultancy services for design and construction supervision services for the adaptive re-use and conservation of the old kachcheri building, Jaffna including associated landscape, lighting & public space design.

2.0 The scope of the Consultancy Services is to provide design, construction supervision and contract administration services for the adaptive re-use and conservation (Heritage restoration)of the old kachcheri building, Jaffna including associated landscape, lighting & public space design. Act as "the engineer" to the works contracts to ensure the high-quality construction within the specified time and cost.

3.0 The scope of the civil work contract comprises of Rehabilitation (Heritage Resto ration) of old Kachcheri Jaffna.

4.0 Ministry of Megapolis & Western Development invites eligible local/ International Consultants with proven experience in design, construction supervision and contract administration expertise in all aspects of above referred assignment.

5.0 Interested Consultants must provide information indicating that they are qualified to perform the services and should submit: (a) company profiles, qualifications of board of members, brochures, etc. (b)List of similar projects completed over the last five years, along with the size of the associate consultancy contracts in man month and US Dollars equivalent terms (with contact details of the client). (c) audited financial accounts for last five years, (d) availability of other resources and new technology etc.

6.0 Consultants may associate to enhance their qualifications. Please note that a firm / organization is allowed to participate in only one proposal as a sole consultant, joint venture partner or a sub –consultant.

7.0 A Consultant will be selected byfollowing Quality andCost Based Selection (QCBS) method in accordance with the procedures set out in the World Bank's Guidelines: Selection and Employment of Consultants by World Bank Borrowers 2011 Edition.

8.0 Interested Consultants may obtain further information from Consultant, Strategic Cities Development Project Tel: 0094-11-2887320-22, Facsimile: 0094-11-2868188, E-mail: consultscdp@gmail.com only on working days between 0900 – 1530 hrs.

9.0 Expression of Interest must be delivered in duplicate to the address given below no later than1500 hrs.(Local time) on November 28, 2017.

**Project Director,
Strategic Cities Development Project,
Ministry of Megapolis & Western Development,
4th Floor, Sethsiripaya Stage 1, Battaramulla.**

## டெங்குக்கு ஏதுவான சூழல் 12பேருக்கு தண்டம்

தென்மராட்சி, ஒக். 29

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய குடம்பிகள் காணப்பட்ட வீட்டின் உரிமையாளர்கள் 12 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் நேற்றுமுன்தினம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் கடந்த 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் 5 கிராம அலுவலர் பிரிவுகளில் டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனை நடத்தப்பட்டது. டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த 53 பேருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் 11 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் மறுநாள் புதன்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகரால் 19 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அனைவரும் எச்சரிக்கை செய்யப்பட்டு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. வழக்குகள் பதிவு செய்யப்பட்ட 53 பேரில் மேலும் 12 பேருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் 12 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். எஞ்சியுள்ள 11 பேருக்கான வழக்குகள் அடுத்த வாரம் விசாரணைக்கு எடுக்கப்படும். (5,9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (28.10.2017) சனிக்கிழமை மாகாண சபையால்
வழங்கப்பட்ட நல்லாசிரியர்
"குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெறும்
வ/ மதியாமடு விவேகானந்த
வித்தியாலயத்தைச் சேர்ந்த
**திருமதி தயாநிதி மதனரூபன் (BA)**
**(பிரதி அதிபர்)**
அவர்களை மென்மேலும் பட்டங்கள் பல பெற்று
பார்போற்ற சீருஞ் சிறப்புடன் பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**நண்பர்கள்.**

## மாபெரும் அழகுக்கலை கல்விசார் பயிற்சிப் பட்டறை

யாழ். அழகுக்கலை நிபுணர்கள் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கையின் புகழ்பெற்ற அழகுக்களை நிபுணர் **திருமதி S. சூரியபிரதீபா** அவர்களால் மாபெரும் அழகுக்கலை கல்விசார் பயிற்சிப்பட்டறை நடைபெறவிருக்கின்றது.

**இடம் : T.C.T. மண்டபம், நாவலர் றோட், யாழ்ப்பாணம்**
**திகதி : 04.11.2017 சனிக்கிழமை**
**நேரம் : காலை 9.00 - மாலை 4.00** (மதிய உணவு வழங்கப்படும்)

Workshop out line
Electro Therapy Facial , Galvanic & High Frequency Facial
04.11.2017 (Saturday) at 9.00 a.m.
on T.C.T Hall, Navalar Road, Jaffna.

Enterence Ticket 950/=



PROGRAME CONDUCTED BY :
S.Suriyapiradeeba
GDCC (Germany) · PGDBTPD (U.K & India)
Clinical Cosmotologist
Lecturer Adviser Consultant
CEO & Founder of High looks International
& Devine lotus holistic beauty Solutions



**சான்றிதழ் வழங்கப்படும்**

நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்
**Mrs. B.Suganthini -077 271 8318**
**Board of Member.JDBA**
**(Luckshana Beauty salon)**

**Jaffna District Beautician Association**
**Precident: Mrs.N.Vithya (077 771 2604)**
**(Nivithira Beauty Parlour & Training Academy)**

## TRADE FINANCE & INVESTMENTS PLC

**பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு - கிளிநொச்சிக் கிளையில்**

| MODEL | RE.NOG | CHASSIS NO | CONDITION |
|---|---|---|---|
| Apache | NP BEI - 09XX | MD634KE49G2HO5382 | Running |
| Honda -hornet | NP BEK-44XX | ME4KC231EG8050512 | Running |
| Hunk | NP BFA- 30XX | MBLKC13ERGGL00072 | Running |
| Glamour | NP BDT- 71XX | MBLJA06ANGGB03242 | Running |
| Tvs - Metroplus | NP BER-19XX | MD625CF11G1A01556 | Running |
| Fz s | NP BEG-12XX | ME1RG0728G0230774 | Running |
| Honda - cb trigger | NP BDN-07XX | ME4KC192LF8029200 | Running |
| Pulsar | NP BET-71XX | MD2A11CZ0GWG41767 | Running |
| Pulsar | NP BEM-55XX | MD2A82DZ7FCE38603 | Running |
| Pulsar | NP BFA-60XX | MD2A11CZ8HWM41492 | Running |
| Pulsar | NP BEG-23XX | MD2A11CZ5GWF47982 | Running |
| Pulsar | NP BDN-39XX | MD2A11CZ3GWA43818 | Running |
| Pulsar | NP BEG-54XX | MD2A11CZ6GWF47604 | Running |
| Deluxe | NP BFE-04XX | MBLHA11AZH9B00158 | Running |
| Deluxe | NP BDZ-04XX | MBLHA11AZG9F00599 | Running |
| Deluxe | NP BDU-74XX | MBLHA11AZG9B01458 | Running |
| Deluxe | NP BCV-16XX | MBLHA11AZF9H01583 | Running |
| Deluxe | NP BEV-18XX | MBLHA11AZG9L03704 | Running |
| Deluxe | NP BCT-82XX | MBLHA11AZF9H03012 | Running |
| Hero -dawn | NP BDI-85XX | MBLHA11EYF9G00258 | Running |
| Activa | NP BDX-86XX | ME4JF486DG8034166 | Running |
| Dash | NP BDP-73XX | MBLJF16EUGGB01153 | Running |
| Dash | NP BCV-58XX | MBLJFW183GGK01371 | Running |
| Dash | NP BET-46XX | MBLJFW186GGL02193 | Running |

வேலைநாள்களில் கிளிநொச்சிக் கிளையில் பார்வையிடலாம். 08.30AM - 05.00PM பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களினையும் பெற்றுக்கொள்ளலாம். நிபந்தனைக்குட்பட்டது.

மேலதிக விவரங்களுக்கு:- **077 166 1648, 077 109 2236, 021 228 0110, 077 212 5848**

## சிறுநீரகம் தேவை

30 வயதுடைய பெண் ஒருவருக்கு O+ Positive, O- Negative சிறு நீரகம் உடனடியாகத் தேவைப்படுகின்றது.

**077 212 5528**

## திருமண சேவை

www.thaalee.com என்பது website இல் இயங்கும் ஒரு திருமண சேவை. இந்த website இல் பல்லாயிரக்கணக்கான Unmarried, Divorce, Widow, nullified போன்றவர்களுடைய படங்கள், ஜாதகங்கள் மற்றும் முழுமையான விவரங்கள் உண்டு. இதில் ஆண்கள், பெண்கள், உள்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்களும் உண்டு. ஆகவே திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது www.thaalee.com என்பதைப் பார்த்து நீங்கள் விரும்புபவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். மேலும் நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ளவும் முடியும். நீங்கள் எங்கும் போகாமல் வீட்டில் இருந்து கொண்டு திருமணத்தை முடித்துக் கொள்ள முடியும்.

விவரங்களுக்கு - **S.Sarma,** **Phone - 077 539 3728, Viber - 077 829 7351**

## மணப்பெண் தேவை

தெல்லிப்பளை, இந்து, 1984, புனர்பூசம், O/L Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண்தேவை - சுண்டுக்குழி, இந்து, 1965, மூலம், CIMA, Accountant, Canada Citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - அளவெட்டி, இந்து, 1978, திருவாதிரை, AAt, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

மானிப்பாய், இந்து, 1979, உத்திரட்டாதி, B.Com, US Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை - காரைநகர், இந்து, 1964, பூசம், Executive, Singapore Citizen, Divorce மாப்பிளைக்கு பெண் தேவை.

திருநெல்வேலி, இந்து, 1961, பூரம், Managing Director மிகவும் செல்வந்தரான, Swiss Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

**Phone: 077 539 3728 Viber : 077 829 7351**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புத்தூர் கிழக்கு புத்தூரைச்
சேர்ந்த
**உயர்திரு.வேலுப்பிள்ளை**
**சிவசுப்பிரமணியம் J.P**
(பிரசித்த நொத்தாரிசு)
அவர்கள் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி
**திரு. எம்.இளஞ்செழியன்**
முன்னிலையில் **"அகில இலங்கை**
**சமாதான நீதிவானாக "**
சத்தியப் பிரமாணம் செய்து
கொண்டமையை பெருமையுடன்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இவர் வாழ்வில் பல சிறப்புக்களை மேலும் பெற வேண்டும் என்றும் இவருடைய சேவை எல்லா மக்களையும் சென்றடைய வேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புத்தூர் கிழக்கு,**
**புத்தூர்.**

**பாராட்டி வாழ்த்துவோர்**
**உறவினர்கள்.**

## வரம் தரும் பத்திநாச்சி மலர் வெளியீட்டு விழா அழைப்பு

காலம்:- 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பி.ப.3.00 மணி - பி.ப. 6.30 மணிவரை
இடம் :- பத்திநாச்சி ஆலய மண்டபம், நக்காதெரு, யாழ்ப்பாணம்.

**தலைமையுரையும் மலர் வெளியீட்டுரையும்**
**பிரம்மஸ்ரீ ம.ஜெயராம சர்மா**
**(முன்னாள் கல்வி இயக்குநர், ஆஸ்திரேலியா)**

**வெளியிடுபவர் ஆலய ஸ்தானிககுரு**
**பிரம்ம ஸ்ரீ சோ.கேதீஸ்வரசர்மா**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

## வேலையாள்கள் தேவை

வத்தளையில் அலுமினிய பிற்றிங் வேலைக்கும், வெல்டிங் வேலைக்கும் அனுபவமுள்ள வேலையாள்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.

- **சம்பளம் - 1800 - 2400 வரை**
- **தங்குமிடம், சாப்பாடு கொடுக்கப்படும்.**
- **விஷேடமான கொடுப்பனவுகள் உண்டு.**
- **உதவியாளர்களும் தேவை.**

**077 706 5127, 077 122 0647**

# மரண அறிவித்தல்கள்



தோற்றம் 24 . 04 . 1944

மறைவு 27 . 10 . 2017

## திருமதி கணேசம்மா சிவப்பிரகாசம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், யாழ்.தட்டாதெரு, திருகோண மலை, உவர்மலை, ஸ்பெல்ஷன் அடைவீதி 54/5 இனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசம்மா சிவப்பிரகாசம் 27.10.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்ற திரு.திருமதி சின்னப்பு தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னப்பு சிவப் பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும் பாலகிருஷ்ணன் (தொழில்நுட்பக்கல்லூரி - திருகோண மலை) யின் அன்புத் தாயாரும், சசிகலாவின் மாமியாரும், சுப்பிரமணியம் (ஓய்வுநிலை செயலாளர் - வடக்கு, கிழக்கு மாகாணசபை), காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, தணிகாசலம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - வவுனியா), மற்றும் செல்வநாயகி (கொழும்பு), நவமணி (கொழும்பு), தெய்வேந்திரராஜா (லண்டன்), ஆனந்தராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திவாகர், பிரணவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லமான உவர்மலை, திருகோணமலையில் இடம்பெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.54/5, ஸ்பெல்ஷன், அடைவீதி,**
**உவர்மலை, திருகோணமலை.**
**HP - 077 703 2622**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**சி.பாலகிருஸ்ணன் (சிறி)**

**026 222 2018**



தோற்றம் 1947 . 01 . 30

மறைவு 2017 . 10 . 27

## திருமதி பரமேஸ்வரி வசந்தராசா

அச்சுவேலி தெற்கு நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி பரமேஸ்வரி வசந்தராசா 27.10.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அசுபதி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ் சென்ற அரியம் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் வசந்தராசாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் சிவம் மற்றும் இரத்தினம், தங்கரத்தி னம், சிவராசா, வனிதாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவி, சந்திரா, சறோ, சிவலிங்கம், தனவதி, சுலோச்சனாதேவி, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனி யும் வசந்தி, வினோஜன், கோபிறாஜ், சஞ்சீவ்ராஜ், றொசான், றொக்சனா, நவீதன் ஆகி யோரின் பெரியதாயும் றெஜிக்குமார் வர்ஷணா, கிருஷன் ஆகியோரின் பாசமிகு அத் தையும் கீதாமி, யஸ்விந், மேகாஸ்வனன், மேகாஸ்வனா, வருண் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கி ரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாவற்காடு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 476 8298 - வசந்தராசா (கணவன்)**
**077 905 0281 - றெஜி / 077 230 5062 - மாம்பழம்**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராஜேஸ்வரி கமலநாதன்



தோற்றம் 19.01.1952 மறைவு 27.10.2017

இணுவில் மேற்கு, வட்டுவினியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி கமல நாதன் 27.10.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் கமலநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற காசிப்பிள்ளை - திலகவதி தம்பதி களின் அன்பு மகளும், நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மரு மகளும், வித்தகி, தேசிகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தமிழ்வாணன், கணேஸ்வரி ஆகியோரின் மாமியா ரும், மானசி, மேகவி, கிருத்திகன், கிருதி யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கமலேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், தில்லை நாதன், அமிர்தாம்பிகை, அமிர்தகௌரி, சிவசிதம்பரம், ஸ்ரீரங்கநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கி ழமை பிற்பகல் ஒருமணியளவில் நடைபெற்று காரைக்கால் இந்து மயா னத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## திருமதி பாக்கியலட்சுமி வைத்திலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமா கவும் வதிவிடமாகவும் கொண்ட திரு மதி பாக்கியலட்சுமி வைத்திலிங்கம் 27.10.2017 வெள்ளிக்கிழமை இறை பதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வ.வைத்திலிங்கத்தின் அன்பு மனை வியும் காலஞ்சென்ற நாகலட்சுமி (சற் குணதேவி), சந்திரசேகரம் (இத் தாலி), குலசேகரம் (கனடா), குருமூர்த்தி (சுவிற்சர்லாந்து), லோ.ஞான சுந்தரி காலஞ்சென்ற பா.சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்புத் தாயா ரும் காலஞ்சென்ற இ.சந்திரசேகரம் மற்றும் சிவராணி, சிவாஜினி, உத யகுமாரி, ச.லோகேந்திரன் காலஞ்சென்ற ற.பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2017) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் புதுவீதி, கொக்குவில் மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## திருமதி திலகவதி அருளானந்தன்

**(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி)**



சங்கானையைப் பிறப்பிட மாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி அரு ளானந்தன் (27.10.2017) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவேல் அருளானந்தனின் அன்புமனைவியும் காலஞ் சென்றவர்களான ஆனந்தர் - நீலாயதாட்ஷி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வர்களான வீரவேல் - சிவயோகவல்லி தம்பதியரின் அன்பு மரு மகளும் கஜனுதன் (சுதன் I Wintel Networks Jaffna), அனோஜா ஆகியோரின் அன்புத்தாயும் சுமங்கலா (இலங்கை வங்கி, கிளிநொச்சி) வின் அன்புமாமியும் காலஞ்சென்ற கோபா லகிருஷ்ணன் மற்றும் சத்தியவதி, நாகலக் ஷ்மி, விக்னேஸ வரன், ஞானேஷ்வரி, குமுதினி ஆகியோரின் அன்புச்சகோதரி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வாள்மதி,**
**வல்லைவீதி, சங்கானை.**
**077 833 8993, 021225 0971**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## ஓட்டோ விபத்தில் சாரதி படுகாயம்

சாவகச்சேரி ஒக். 29

சாலை வளைவில் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ அருகிலுள்ள மதிலுடன் மோதியதில் சாரதி தலையில் படுகாயமடைந்தார். ஓட்டோவும் சேதமடைந்தது. இந்த விபத்து சிவன் கோவில் சாலைச் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த திருநாவுக்கரசு திருக்குமார் (வயது - 42) என்பவரே காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-9)

## புலமைப் பரிசில் பரீட்சை சென்.பற்றிக்ஸ் கல்லூரி

ஜெரின் ஜேசுராஜா ஜோஷின் கிறிஸ்டோ185, செல்வேந்திரன் டினுஷன் 175, தரம பூர்த்தி கவின் 173, அன்டன் ஞானச்சந்திரன் ஐடோன் சேரன் 172, கயன்ஜெஷின் 170, சிவகுமார் ஜாக்ஸன் 170, செல்வபாலசிங்கம் தேனுஜன்169, எட்வர்ட் ஹென்றி பிரவீந்169, ஜுடே சோன் சக்திஜீவன் மொரிஜன் 169, அல்பிரெட் டேவிட் 168, தேவானந்த் தர்மிஜன் 168, ஜோன் கெனடி அமல்தாஸ்164, ஜெகந்தன் பவனீதன்164, நிதர்ஷன் ப்ரீந்த் 163, ஸ்ரீதர் கஜானன் 163, தயாபரன் தமிழ்கீரன்160, அன்றெவ் க்ராஸின் ஜோன் கலிஸ்டோன் 159, மதனகுமார் பூவேந்தன்159, றிச்மன்ட்ஸ்டென் 158, ஜெயதாஸ் மதுரிகேஷ்158, ரெஸ்லேன் நோபேர்ட் ஹீமோர்ஸ் 158, ஜோய்குமார் நிலன்157, பிராங்க் றெஜிலியஸ் பீட்டர் சன்156.



**அரசமைப்பு விவாதம்**

# மகிந்த அணியின் எதிர்ப்புக்காக நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 28

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கைமீது நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது. இதன்போது நாடாளுமன்றுக்கு வெளியில் மகிந்த அணி கறுப்புக்கொடிப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகப் புலனாய்வுத் துறை அரச உயர்மட்டத்துக்கு தகவல் வழங்கியுள்ளது.

இதனால் நாடாளுமன்ற வளாகத்தைச் சுற்றிப் பாதுகாப்பைப் பலப்படுத்த தீர்மானித்துள்ளது. பாதுகாப்பு அரண்களை அமைக்கவும் முடிவெடுத்துள்ளது.


புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் அனைத்தையும் அரசு உடனடியாகக் கைவிடவேண்டும் என்பதுடன், அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கையையும் கைவிடவேண்டுமென மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் சங்கசபா கூட்டாக இணைந்து அறிவித்தமையை அடுத்து அரசமைப்பு விவகாரம் சர்ச்சைக்குரியதாக மாறியது.

நாட்டின் முக்கிய பௌத்த பீடங்கள், பௌத்த அமைப்புகள், இலங்கை சட்டதரணிகள் சங்கம் என்று நாளுக்குநாள் எதிர்ப்புகள் வலுப்பெற்று வருகின்றன. இதனைத் தீவிர அரசியல் மயப்படுத்தும் முயற்சியில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான மகிந்த அணி ஈடுபட்டுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்திலும், நாடாளுமன்றிலும் நாளை மறுதினம் முதல் கறுப்புக்கொடிப் போராட்டத்தை நடத்த மகிந்த அணியினர் திட்டமிட்டுள்ளனர். ஆர்ப்பாட்டங்களைத் தடுக்கும் வகையில் அரசு பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (5)







# ஒரு மகத்தான இடம் உங்கள் சேவையை நாடுகிறது

தொழில் செய்வதற்கு இலங்கையில் மிகச்சிறந்த இடமென உலகளாவிய Great Place to Work® Index மூலம் அங்கீகரிக்கப்பட்ட மாபெரும் சிங்கர் நிறுவனம் அனைவராலும் விரும்பி நாடப்படும் தொழிலிடமாகும். நம்பிக்கையான தரச்சிறப்பின் பாரம்பரியத்தைத் 165 ஆண்டுகளாக முன்னெடுத்துச் செல்லும் சிங்கர் நிறுவனம், அதன் ஊழியர்கள் மத்தியிலும் நம்பிக்கை எனும் கலாசாரத்தை விதைத்துள்ளது. சிங்கர், சிசில், சொனி, சம்சுங், ஹுவாவி, ஹித்தாச்சி, பிலிப்ஸ், பெக்கோ ஆகிய பிரபல வர்த்தகப் பெயர்களிலான சாதனங்களை எமது ஊழியர்கள் பெருமையுடன் விநியோகிக்கின்றனர்.

தொழிற்றுறையின் அதிசிறந்த தகவல் தொழில்நுட்பஅமைப்புக்கள் முதல் சூழல்நலமான உற்பத்தி வசதிகள் வரை, சகல விடயங்களிலும் நாம் புதுமை நாட்டம், நிலைபெறு தன்மை என்பவற்றால் உந்தப்படுகிறோம். எமது விற்பனை மற்றும் சேவை வலையமைப்பே நாட்டில் மிகப் பெரியது. அதன் மூலம் இலட்சோபலட்சம் இலங்கை மக்கள் சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.எமது 423 விற்பனை நிலையங்களும் 19 நாடளாவிய சேவை நிலையங்களும் 22 சிங்கர் ஃபினான்ஸ் கிளைகளும் நாடெங்குமுள்ள ஊழியர்களை ஒருங்கிணைத்துள்ளன. சிங்கர், இலங்கையிலுள்ள பத்து தலைசிறந்த நிறுவனப் பிரஜைகளில் ஒன்றாகவும் இலங்கையின் முதன்மை வர்த்தகப் பெயராகவும் விளங்குகின்றது.

**கிளை முகாமையாளர்கள் - வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணம்**
(Singer Plus/SISIL World Showrooms)

இப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் தத்தமது கிளைகளில் அன்றாட நடவடிக்கைகளின் திட்டமிடல், ஏற்பாடு மற்றும் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பார்கள். நாம் தேடுபவர்கள் 30 முதல் 40 வயதிற்கு இடைப்பட்டவர்களாகவும் தொழில் முனைவுகளில் ஆர்வம் உடையவர்களாகவும் வாடகைக் கொள்வனவு, பொருள் தொகுதிகளின் பதிவேடுகளைப் பேணுதல், வாடிக்கையாளர் சேவை கட்புலனாகும் வணிகம், சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் சிறந்த அறிவுடையவர்களாகவும் இருக்க வேண்டும். இப் பதவியில் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு, ஊழியர்களை முகாமைத்துவம் செய்யும் சிறந்த ஆற்றல் அவர்களுக்கு இருப்பது அவசியம்.

மாதாந்த விற்பனை இலக்குகளை அடைதல், கண்டிப்பான பண மீட்பு விகிதத்தைப் பேணுதல், பதிவேடுகளை முகாமைத்துவம் செய்தல், உற்சாகமான ஊழியர் அணியை வழிநடத்துதல் ஆகிய பொறுப்புக்கள் இப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் தமது நிதி வலிமையை நிரூபிக்கும் வகையில் ரு.150,000/- ஐ பிணைப் பணமாக வழங்க வேண்டியிருக்கும். விற்பனை நிலையமொன்றின் சகல விற்பனை மற்றும் நிர்வாக விடயங்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு விரிவான பயிற்சி வழங்கப்படும். பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் தரகுப்பணம் உட்பட ஆறு இலக்க மாதாந்தச் சம்பளத்தை எதிர்பார்க்கலாம்.


**கிளைகளின் விரிவாக்கம் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படுவதால் நாடளாவிய ரீதியில் வெற்றிடங்கள் உள்ளன.**

சிங்கர் நிறுவனம் சகலருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கும் நிறுவனமாகும். ஆகவே, மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட ஆண்-பெண் இருபாலாரும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். தயவுசெய்து உங்கள் சுயவிபரக் கோவை, உறவினர் அல்லாத 2 நடுவர்களின் தொடர்பு விபரங்கள் ஆகியவற்றை அடுத்த 7 தினங்களுக்குள் எமக்குக் கிடைக்கத்தக்கதாக, கீழ்க்காணும் தபால் முகவரிக்கு அல்லது **hr@singersl.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயக் கட்டத்தில் குறிப்பிடவும்.

**உதவி முகாமையாளர் - ஆட்சேர்ப்பு மற்றும் அமைப்புக்கள்**
**சிங்கர் ஸ்ரீலங்கா பி.எல்.சி. | 80, நவம் மாவத்தை, கொழும்பு 02.**

GREAT PLACE TO WORK Best Companies to work for 2017 Sri Lanka

SINGER
Trusted Excellence



ashok STEEL
நீடித்த வலிமை

# அசோக் TMT

**அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்**

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு,
பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும்,
ஸசந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த
அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க
15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரு.105,000 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS
375

## முதலாம் திகதி முதல் தொடருந்து பொதி சேவைக் கட்டணம் அதிகரிப்பு

தொடருந்து மூலம் பொருள்களை அனுப்பும் சேவைக்கு அறவிடப்பட்டு வந்த கட்டணம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் 50 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.
இதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக தொடருந்து திணைக்களத்தின் வணிக முகாமையாளர் என்.ஜே. இதிபாலகே தெரிவித்தார்.
2008ஆம் ஆண்டிலிருந்து தொடருந்து மூலம் பொருள்களை அனுப்பும் சேவைக்கு அறவிடப்பட்டு வந்த கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் தொடருந்துக் கட்டண திருத்தத்துக்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை எனவும் தொடருந்து திணைக்களம் தெரிவித்தது. (5)



## துவாயுடன் வந்த இளைஞனால் பரபரப்பு!

கொழும்பு, ஒக். 29
நுகேகொடயில் துவாய் மாத்திரம் அணிந்து பேருந்தில் பயணிக்க முற்பட்ட இளைஞனால் பரபரப்பு நிலை ஏற்பட்டது.
மக்கள் அதிகமாக கூடியிருந்த சந்தர்ப்பத்தில் கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த பேருந்தில் அவர் ஏறியுள்ளார்.
பேருந்துக்குள் மேலும் சில இளைஞர்களுடன் இந்த நபருக்கு வாய்த் தகராறு ஏற்பட்டுள்ளது. துவாய் மாத்திரம் அணிந்து வந்தமையால் அந்த நபரை பேருந்தில் இருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.
பெண்கள் மற்றும் சிறுவர்கள் பேருந்தில் இருப்பதால் பேருந்தை விட்டு வெளியேறுமாறு அந்த நபருக்கு இளைஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
தான் விரும்பியதைப் போன்று வீதியில் செல்வதற்கான உரிமை தனக்கு உள்ளதாகவும், உடம்பின் மேல் பகுதியில் மாத்திரம் ஆடை இல்லாமல் செல்வதால் யாருக்கும் பாதிப்பு ஏற்படப்போவதில்லை என்று துவாய் அணிந்த நபர் குறிப்பிட்டுள்ளார்.
தனது உடல் அழகானதென்பதால் மூடி மறைத்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் வாதிட்டுள்ளார். எப்படியிருப்பினும் கடுமையான எதிர்ப்பின் பின்னர் அவர் பேருந்தில் இருந்து இறங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (5)









# இணையத்தளத்திலும், சமூகவலைத்தளத்திலும் வெளியாகும் தகவல்களில் 90% போலியானவை

## அரச தலைவர் மைத்திரிபால கட்டாரில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 29

எமது நாடு தொடர்பில் இணையத்தளங்களிலும், சமூகவலைத் தளங்களிலும் பிரசுரிக்கப்படும் தகவல்களில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானவை போலியானவை என்பதை நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கட்டாருக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அரச தலைவர், அங்கு பணிபுரியும் இலங்கையர்களுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நீங்கள் எமது தாய் நாட்டிலிருந்து சுமார் நான்கரை மணித்தியாலத் தூரத்தில் உள்ளீர்கள். உங்களுக்கு இலங்கை பற்றிய தகவல்கள் தொடர்ச்சியாக கிடைத்துக் கொண்டிருக்கும். நான்கரை மணித்தியாலத் தூரத்தில் இருந்த போதும் நீங்கள் செய்யும் தொழில்களில் உள்ள கஷ்டங்கள் மற்றும் ஓய்வின்மை காரணமாகத் தாய்நாட்டைப் பற்றிய சரியான தகவல்கள் கிடைக்காது இருக்க முடியும். வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் பெரும்பாலும் இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் வாயிலாகவே தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். நீங்கள் இணையத்தளங்களினூடாக அல்லது சமூக வலைத் தளங்களின் வாயிலாகப் பார்க்கின்ற இலங்கையைப் பார்க்கிலும் எமது நாடு வேறுபட்டது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இவற்றில் பிரசுரிக்கப்படும் தகவல்களில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானவை போலியானவை என்பதை நான் தெளிவாக கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இலங்கையின் அரசியல் நிலை நிர்வாகம் அரசினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் குறித்தும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் குறித்தும் மிகவும் திட்டமிட்ட முறையில் பொய்யான விடயங்கள் பரப்புரை செய்யப்படுகின்றன. நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுதந்திரம், மக்களாட்சி, ஊடகச் சுதந்திரம் என்பன எவ்வளவு தூரம் பொறுப்புடன் அனுபவிக்கப் படுகிறது என்பது பிரச்சினையாகும் என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது.

நாட்டுக்கு வெளியேயுள்ள இலங்கையர்கள் பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தமது இணையத்தளங்கள், முகநூல்கள் ஊடாகப் பொய்யான விடயங்களைப் பரப்புகின்றனர். இதற்கு அவர்களுக்கு இடமளித்திருப்பது சனநாயக சுதந்திரமாகும். புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் மனிதனின் நன்மைக்காகவே உருவாக்கப்பட்டுள்ளன. சில நேரங்களில் தொழில்நுட்பத்தைப் பிழையான வழியில் பயன்படுத்துகின்றவர்கள் குறித்து நீங்கள் அறிவீர்கள். ஒருவர் மீது சேறு பூச வேண்டும் என்றால் முகநூலின் வாயிலாக ஒழுக்கப்பண்பாடுகளில்இருந்துவிலகிச்செயற் படுகின்றவர்கள் குறித்து நீங்கள் அறிவீர்கள். நாட்டைத் துண்டாடுகிறார்கள், நாட்டைப் பிளவுபடுத்துகிறார்கள், பௌத்த சமயத்தை இல்லாதொழிக்கிறார்கள், இராணுவ முகாம்களை அகற்றுகிறார்கள், வடக்கைத் தாரைவார்க்கிறார்கள் போன்ற விடயங்களை இணையத்தளங்களின் ஊடாக நீங்கள் காணக்கூடும்.

ஒரு சிறு பிரிவினர் நாட்டின் சுதந்திரத்தைப் பிழையாகப் பயன்படுத்தி தொழில்நுட்பத்தின் ஊடாக நாட்டைப் பற்றியும் நாட்டின் நடவடிக்கை குறித்தும் நாட்டின் உள்ளேயும் வெளியேயும் பிழையான தகவல்களைப் பரப்பி வருகின்றனர் - என்றார். (5)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இனவாதத்தை சாகடிப்போம்

"புதிய அரசமைப்பை ஆதரிப்பவர்கள் கொல்லப்பட வேண்டும்" என்று இலங்கை இராணுவ வன்னிக் கட்டளைபீடத்தின் முன்னாள் தளபதியாகத் திகழ்ந்த ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்திருக்கிறார்.

இது நான்கு சுவர்களுக்குள் நண்பர்களுடனான அளவளாவுதலின்போது கூறப்பட்ட கருத்தல்ல. மாறாக, கம்பஹாவில் நடைபெற்ற மக்கள் பங்கேற்ற ஒரு பொதுநிகழ்வின்போது விடுக்கப்பட்ட பகிரங்க அறிவித்தல் ஈன்பது சுட்டிக்காட்டத் தக்கது.

கமால் குணரத்ன தெரிவித்த கருத்தை வெறுமனே கடும்போக்காளரொருவரின் உளறல் என எடுத்துக்கொள்ளக்கூடாது. "நாடாளுமன்றத்திற்கு குண்டு வீசியேனும் புதிய அரசமைப்பைத் தடுத்துநிறுத்துவோம்" என விமல் வீரவன்ஸ கூறிய சில தினங்களுக்குள்ளாகவே கமால் குணரத்னவின் கருத்து வெளியாகியுள்ளது.

இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு எவ்விதமான பிரச்சினையும் இல்லை. பெரும்பான்மையினரான சிங்களவர்களுக்கு இல்லாத பிரச்சினை சிறுபான்மையினருக்கு என்ன இருக்கின்றது என்றெல்லாம் தனது துவேஷப் பேச்சின்போது கமால் குணரத்ன கொட்டித் தீர்த்திருக்கின்றார்; இனவாதத் தீயைக் கக்கியிருக்கின்றார்.

தனக்கு எவ்விதமான அரசியல் எதிர்பார்ப்பும் கிடையாது. நாட்டை நேசிக்கின்றவன் என்ற வகையில் நாட்டைக் காட்டிக்கொடுக்கும், நாட்டைத் துண்டாகக் கூறுபோட விளைகின்றவர்கள் கொல்லப்படவேண்டும் எனவும், அவர்களது சடலங்களை மயானபூமிக்குக் கொண்டுசெல்லும்போது நிலத்திலிருந்து ஆறு அங்குல உயரத்திற்கு மேற்படாமல் கொண்டுசென்று அவமரியாதையைக் காண்பிக்கவேண்டும் எனவும் கமால் குணரத்ன தனது உரையின்போது கூறியிருந்தார்.

கமால் குணரத்னவுக்கு ஒருவேளை நேரடியாக அரசியலில் குதிக்கும் எண்ணம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர் இணைந்திருக்கின்ற மகிந்த கூட்டணி, உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துமாறு சவால் விடுத்துக்கொண்டே பரப்புரைகளை முடுக்கி விட்டுள்ளது. இனவாதத் தீயையே மகிந்தவின் அடிவருடிகள் கக்கத்தொடங்கியுள்ளனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை தன்னகத்தே உள்ளதாக தம்பட்டமடித்துக்கொள்ளும் கூட்டு அரசுதான் இருக்கின்ற இடமே தெரியாதமாதிரி தலையைக் கீழே போட்டிருக்க, சுமார் 50 ஆசனங்களையே வைத்துக்கொண்டிருக்கும் மகிந்த தரப்பு காட்டுக்கூச்சலிட்டு ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கின்றது. ஆரம்பத்திலேயே கொட்டத்தை அடக்காமல் வளரவிட்டு விட்டு, இன்று செய்வதறியாமல் நிற்கின்ற அரசானது, இனி மேலேனும் காத்திரமான வகையில் பரப்புரைகளை முன்னெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இனவாதத்தீயைப் பரப்புகின்ற, கிளப்பிவிடுகின்ற துவேஷப் பேச்சுக்கள், வெறுப்புப் பேச்சுக்கள், குரோதப் பேச்சுக்கள் விடயத்தின் பாரதூரத்தை உணர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். 2014 ஆம் ஆண்டில் அளுத்கம கலவரத்துக்கு முன்பாக பொதுபலசேனா அமைப்பின் ஞானசார தேரர் பேசிய துவேசப் பேச்சு கலவரத்துக்கு இட்டுச் சென்று 'உயிர்களைக் காவு கொண்டு' பலகோடிக்கணக்கான சொத்திழப்புக்கும் வித்திட்டிருந்ததை மறந்துவிட முடியாது. அந்தவகையில், தற்போது கமால் குணரத்ன போன்றவர்களது துவேசப் பேச்சுகள் விடயத்தில் உரிய தருணத்தில் நடவடிக்கை எடுக்கத்தவறினால் நிலைமை கட்டுப்படுத்த முடியாத அளவுக்குச் சென்றுவிடும் என்பதை எச்சரித்து வைக்கின்றோம்.

தேர்தல் பரப்புரைகளின்போது துவேசப் பேச்சு பேசாதவர்களை விடவும் துவேசப் பேச்சு பேசுகின்றவர்களுக்கான வெற்றிவாய்ப்பு மும்மடங்கு அதிகமென கடந்தாண்டு இந்தியாவிலுள்ள முன்னணி சஞ்சிகையொன்று நடத்திய ஆய்வின்போது கண்டறியப்பட்டிருந்தது என்பதையும் அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கடும்போக்காளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால், சிங்களமக்களின் ஆதரவு குறைந்துவிடும் என்றெண்ணி இந்த அரசு நீதியை நடைமுறைப்படுத்தத் தவறினால் இழக்கப்போவது நீதியைமட்டுமல்ல, மாறாக, தேர்தல் வெற்றியையுமே என்பதை நினைவில் நிறுத்திச் செயற்பட வேண்டும்.

# சாதகமான மாற்றத்தை வெளிப்படுத்துவார்களா தென்பகுதி அரசியல்வாதிகள்?

இந்துமதி

தென்பகுதி அரசியல்வாதிகளிடம் அச்சம் கலந்த மாற்றமொன்று உருவாகி வருவதை அவதானிக்க முடிகின்றது. நாடு பிளவுபட்டுப் போய்விடுமோ என்ற சந்தேகமும் இவர்களது மனங்களில் காணப்படுகின்றது.

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் நாடு முழுவதும் இடம்பெற்று வருகின்றன. இதன் மூலமாக தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடுமெனத் தமிழர்கள் நினைக்கின்றனர். இதனால் அதன் உருவாக்கத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டு இருப்பதுதான் இந்த நாட்டின் பலவீனமாகக் கருதப்படுகின்றது. அனைத்து இனத்தவர்களுக்கும் அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலமாக நாட்டின் ஐக்கியத்தைப் பேணிப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அதிகாரப்பகிர்வை உள்ளூராட்சி சபைகளில் இருந்து ஆரம்பிக்க முடியும்.



## தென்பகுதியிலிருந்து வெளிவரும் அரசமைப்புக் குறித்த சாதகமான கருத்துக்கள்

இந்த நிலையில் அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாகத் தென் பகுதியிலிருந்து சாதகமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த மக்கள் விடுதலை முன்னணி தனது சுருதியை மாற்றிக்கொண்டுள்ளது. தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டேயாக வேண்டுமென அது வலியுறுத்திக் கூறி வருகின்றது. லக்ஸ்மன் கிரியெல்ல, தயாசிறி ஜயசேகர போன்ற முக்கியமான அமைச்சர்களும் புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாகவும், அதிகாரப் பகிர்வின் அவசியம் குறித்தும் சாதகமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அதிகாரப்பகிர்வே தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரே தீர்வு எனவும், இதுதான் அதற்கான கடைசிச் சந்தர்ப்பம் எனவும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர அடித்துக் கூறியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. இனரீதியாக நாடு பிளவுபடுவதைவிட, நாட்டின் அரச தலைவராகவோ அல்லது தலைமை அமைச்சராகவோ தமிழர் ஒருவர் பதவியை வகிப்பது மேலானது என கோத்தபாய தலைமையிலான எலிய அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது. புதிய அரசமைப்பின் உருவாக்கத்துக்கு எதிரான தீவிரமான பரப்புரைகளில் ஈடுபட்டுள்ள இந்த அமைப்பு தமிழர் ஒருவர் நாட்டின் உயர்பதவியில் அமர முடியுமெனக் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது.

## தமிழர்கள் குறித்து சிங்களவர்கள் மத்தியில் அச்ச உணர்வு

இன்று தமிழர்கள் உலகின் பலநாடுகளில் பரந்துவாழ்கின்றனர். இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள தமிழ் நாட்டில் ஏராளமான தமிழர்கள் உள்ளனர். இவர்கள் இலங்கைத்தமிழர்களுக்கு இன்னல் எற்படும் போதெல்லாம் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர், ஆனால் எமக்கென உள்ளது இந்த ஒரே நாடுதான். இதைவிட்டால் வேறு கதியே இல்லை, இந்த நாடு பிளவுபடுமாயின் தமிழர்கள் தமது இனத்தவர்களின் உதவியுடன் எம்மை அழித்து விடுவார்கள் என்ற அச்ச உணர்வு சிங்கள மக்களின் மனங்களில் வேரூன்றிப் போய்க் காணப்படுகின்றது. இனவாத அரசியல்வாதிகள் இதற்கு நீரூற்றி வளர்த்து வருகின்றனர். தற்போது புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான பீதியும் கிளப்பிவிடப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் எதையும் எளிதில் நம்பிவிடக்கூடிய இயல்பு படைத்தவர்கள். இனவாதக் கருத்துக்கள் இவர்களது மனங்களில் நீண்ட காலமாகவே விதைக்கப்பட்டுவருகின்றன. இதன் காரணமாகவே சிறுபான்மை இனத்தவர்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு இவர்கள் தூண்டிவிடப்படுகின்றனர். இனக் கலவரங்கள் இந்த நாட்டில் அடிக்கடி இடம் பெறுவதற்கும் இதுவே காரணமாகும். ஆனால் இவர்களை நல்வழிப்படுத்திச் செல்லக்கூடிய வலிமை படைத்த தலைவர்கள் தெற்கில் இன்னமும் தோன்றவில்லையென்பது வருத்தத்துக்குரியது.

## அடிப்படை வாதக் கருத்துக்களால் உசுப்பேற்றப்படும் நாட்டு மக்கள்

அடிப்படைவாதச் செயற்பாடுகள் மூலமாக வடக்கில் சம்பந்தனையும், சுமந்திரனையும் விட சி.வி.விக்னேஸ்வரன் பிரபலம் பெற்று விளங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடிப்படைவாதக் கருத்துக்கள் மக்களை உணர்ச்சி வசப்படுத்தி உசுப்பேத்தி விடுகின்றன. இதனால் மக்கள் மூளைச் சலவைக்கு உள்ளாகும் நிலையும் உருவாகி வருகின்றது. சிந்திக்கும் திறனை இழந்த மக்கள் தமது மனம் போகின்ற விதத்தில் நடக்கவே முற்படுவார்கள். இது முழு நாட்டினதும் ஐக்கியத்தைப் பாதித்து விடும். எனவேதான் மக்கள் தலைவர்களாகக் கணிக்கப்படுகின்றவர்கள், நடுநிலையான கருத்துக்களை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனால் தேர்தல் வெற்றிகளை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்படும் இந்த நாட்டு அரசியலில் இதையெல்லாம் எதிர்பார்க்க முடியாது.

மகிந்த ராஜபக்ச தரப்பினர் ஆட்சியைக் கைப்பற்றி விடவேண்டும் என்பதில் மட்டுமே அக்கறை காட்டிச் செயற்பட்டு வருகின்றனர். இதற்காக எதைச் செய்வதற்கும் அவர்கள் தயாராக இருக்கின்றனர். புதிய அரசமைப்பினால் ஏற்படப்போகும் சாதகபாதகங்களை ஆராய்ந்து பார்க்காமல் அதற்கு எதிர்ப்புக் காட்டுவதிலேயே அவர்கள் குறியாக இருக்கின்றனர். அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக நினைத்துக்கொண்டு இவர்கள் செய்கின்ற காரியங்கள் முழு நாடடுக்கும் கெடுதலை ஏற்படுத்தி விடப்போகின்றன.

அரச தலைவரும், தலைமை அமைச்சரும் அரசமைப்பின் நிறைவேற்றத்துக்குத் தமது முழு ஆதரவையும் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் தமது நிலைப்பாட்டிலிருந்து மாறிவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடையே காணப்படுகின்றது.

இந்தநிலையில் பெரும்பான்மையினத் தலைவர்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டும். இந்த ஆதரவு வெறும் வார்த்தைகளில் மட்டுமே அமையாது செயலிலும் காண்பிக்கப்பட வேண்டும். செய்வார்களா?



# நாடு பிளவுபடுவதற்கு அரசமைப்பு காரணமாகலாம்

சேரலாதன்

நாடு பிளவுபட்டு விடுமெனத் தெற்கில் பலராலும் எதிர்வு கூறப்பட்டு வருகின்றது. பெரும்பான்மை இனத்தவர்களில் ஒரு தரப்பினர் புதிய அரசமைப்பை எதிர்ப்பதற்கும் இதுவே முதன்மைக் காரணமாகிவிட்டது. நாட்டைப் பிளவுபடுத்துகின்ற முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் தேசத் துரோகிகளாகவே கருதப்பட வேண்டியவர்கள். இவர்களுக்குச் சாவுத்தண்டனை வழங்கப்பட வேண்டும். இவர்களின் இறுதிக்கிரியைகள்கூட உரிய வகையில் நடத்தப்படக் கூடாது. இவ்வாறு ஓய்வுபெற்ற இராணுவ உயர் அதிகாரியான கமல் குணரட்ன தெரிவித்துள்ளார். அவர் நாட்டைப் பிளவுபடுத்துகின்ற முயற்சியென புதிய அரசமைப்பின் உருவாக்கத்தையே குறிப்பிட்டார் என்பதை எவராலும் சுலபமாகப் புரிந்த கொள்ள முடியும்.

**பிளவுபடாத நாட்டை வலியுறுத்தும் புதிய அரசமைப்பு**

புதிய அரசமைப்பின் உருவாக்கத்துக்கும், நாடு பிளவுபடுவதற்கும் என்ன தொடர்பு உள்ளதென்று புரியவில்லை. புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையில், இலங்கை பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத ஒரே நாடாக இருத்தல் வேண்டும், நாட்டைக் கூறு போடுவதைத் தடுக்கும் பொருட்டு புதிய அரசமைப்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும், என்றெல்லாம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நிலையில் புதிய அரசமைப்பு நிறைவேறி விட்டால் நாடு பிளவு பட்டுவிடுமெனத் தெரிவிக்கப்படுவது எந்த வகையில் நியாயமானது என்பது புரியவில்லை. மூவின மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் இனக் கலவரங்களால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்தான்.

நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் தமது மொழியையும், கலாசாரத்தையும் தமது கண்களாகப் போற்றி வருகின்றனர். தமது தாய்மொழிக்கு ஊறு விளைவிக்கின்ற எந்தவொரு நடவடிக்கைகளையும் இவர்கள் ஏற்றுக்கொண்டதில்லை. 1958 ஆம் ஆண்டிலிந்து 2009 ஆம் ஆண்டு வரை இவர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனக்குரோத நடவடிக்கைகள் காரணமாக பல ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. தமிழர்களும் இந்த நாட்டு மக்கள்தான் என்ற எண்ணம், மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை.

**சேர்ந்து வாழ இயலாதென நம்பியதாலேயே தனிநாட்டுக் கோரிக்கை**

இந்த நாட்டில் இனியும் பெரும்பான்மை, சிறுபான்மை இனத்தவர்கள் சேர்ந்து வாழமுடியாது என்ற எண்ணம் வலுப்பெற்றதன் காரணமாகவே தமக்கெனத் தனியானதொரு நாடு வேண்டும் என்ற எண்ணம் தமிழர்களிடத்தில் வலுப்பெற்றது.

இதன் காரணமாகவே நீண்டதொரு ஆயுதப்போராட்டமும் இடம்பெற்றது. அதில் அழிவுகளுக்கும் குறைவிருக்கவில்லை. போர் ஓய்ந்த பின்னரும் அவர்களின் வாழ்வில் விடிவு கிடைக்கவில்லை. ஏமாற்றம்தான் மிஞ்சியது.

புதிய அரமைப்பின் உருவாக்கத்தின் பின்னராவது தமக்கு விடிவு காலம் பிறக்குமென்ற நம்பிக்கையுடன் அவர்கள் காத்திருக்கின்றனர். தற்போது அவர்கள் தனிநாடு கேட்கவில்லை. பிரிந்து வாழவும் நினைக்க வில்லை.

இந்த வேளையில் இனவாதிகள் ஒன்றை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். தமிழர்கள் இந்த நாட்டில் அநாதைகள் போன்று வாழவில்லை. சுமார் 11 கோடி தமிழர்கள் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள். இலங்கைக்கு மிக அருகில் தமிழ்நாடு உள்ளது. அங்கு வாழுகின்ற ஏழுகோடி மக்கள் ஈழத்தமிழரின் கண்ணீரைத் துடைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். நாடுகள் வெவ்வேறாக இருந்தாலும் இவர்கள் இனத்தால் ஒன்றுபட்டவர்கள். இதுகூட பெரும்பான்மையின மக்களிடையே அச்சத்தைத் தோற்றுவித்திருக்கலாம். ஆனால் , இத்தகைய அச்சம் தேவையில்லாத ஒன்றாகும்.

இந்திய உபகண்டத்தில் வெள்ளையர்கள் நிலைகொண்டிருந்த போது இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையில் மதரீதியான மோதல்கள் அடிக்கடி இடம்பெற்று வந்துள்ளன. இதில் இரண்டு பகுதியினருக்கும் பெரும் அழிவுகள் ஏற்பட்டுவந்தன. மகாத்மாகாந்தி போன்றவர்களால்கூட இதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் முஸ்லிம்களுக்கு ஆதரவாகப் பேசினார் எனக் கூறி இந்துமத வெறியன் ஒருத்தன் மகாத்மாகாந்தியைக் சுட்டுக்கொன்ற வரலாறும் உண்டு. அந்நியரின் ஆட்சியின் போது இந்திய முஸ்லிம்களின் தன்னிகரில்லாத தலைவராக முகம்மது அலி ஜின்னா விளங்கினார். ஒன்றுபட்ட இந்தியாவில் முஸ்லிம்கள் இனியும் சேர்ந்து வாழ முடியாது என்பதை உணர்ந்து கொண்ட அவர், இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பதாகவே பாகிஸ்தான் என்ற தனி நாட்டை அந்நியரிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டார். இந்தியத் தலைவர்களால் இதனைத் தடுக்க முடியவில்லை.

இலங்கையிலும் தமிழர்கள் இனியும் சேர்ந்து வாழ முடியாது என்பதற்காகவே பிரபாகரன் தனி நாடு கேட்டுப் போராடினார். அதிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்தது. ஆனால் அருகில் உள்ள இந்தியாவால் கூட இந்த நியாயத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

**பன்னாட்டுச் சமூகத்தின் கழுகுப் பார்வைக்குள் இலங்கை அரசு**

இலங்கையைப் பொறுத்தவரையில் பன்னாட்டுச் சமூகத்தின் கழுகுப்பார்வைக்குள் அதன் செயற்பாடுகள் அடங்கிப் போய்க்கிடக்கின்றன. நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலில் இருந்து அதனால் இனியும் விலகியிருக்க முடியாது. போர் இடம் பெற்றபோது தமிழர்கள் அனைவருமே பயங்கரவாதிகள் என்ற அபிப்பிராயம் உலகநாடுகளுக்கிடையே காணப்பட்டது. ஆனால் போர் ஓய்ந்து எட்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் தமிழர் பக்கத்தின் நியா யங்கள் பன்னாட்டுத் தரப்புகளால் உணரப்பட்டு வருகின்றன. உரிமைகளை இழந்ததொரு இனமாக அவர்கள் வாழ்ந்து வருவதும், அவர்களது துயரங்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன.

புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாது மேன்மேலும் அவர்கள் ஏமாற்றப்படுவார்களாயின், அதன் விளைவுகள் வேறுவிதமாக அமைந்துவிடக்கூடும். சில வேளை 1947 இல் இந்தியாவுக்கு நேர்ந்த கதிகூட இலங்கைக்கும் நேர்ந்து விடக்கூடும். புதிய அரசமைப்பு நிறைவேற்றம் தவற நேருமானால், வேறுவிதத்தில் நாடு பிளவுபடுவதற்கு அதுவொரு காரணமாக அமைந்து விடவும் கூடும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### சிகை அலங்கரிப்பு நிலையங்களை ஞாயிறுகளில் மூடாதீர்கள்

யாழ். குடாநாட்டில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்படுவதால், குறிப்பாக பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் இடையூறுகளை எதிர்நோக்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சிகை ஒப்பனையாளர் சங்கம் ஆரம்பம் தொட்டு மிகவும் இறுக்கமான கட்டுக்கோப்புடன் இயங்கிவருவது பாராட்டத்தக்க விடயம். இருந்தும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறந்து வேறு ஒரு வார நாளொன்றில் சங்க சட்ட திட்டங்களுக்கு அமைவாக மூடினால் மேற்படி பள்ளி மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மிகவும் பயன் அடைவார்கள். இவ்விடயம் தொடர்பாக அடுத்துவரும் கூட்டங்களில் தலைவர் சகல அங்கத்தவர்களுடனும் கலந்துரையாடி சகலருக்கும் பயன் தரத்தக்க வகையில் செயற்பட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுத்தால் சங்கத்தின் சேவை மேலும் உயர்வடையும். சகலரும் பயன் அடைவார்கள். போர்க் காலத்திலும் சரி, தற்போதைய சூழலிலும் சரி குடாநாட்டில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களை மிகவும் இறுக்கமான முறையில் கட்டுக்கோப்புடன் வழிநடத்திவரும் சங்க நிர்வாகத்தினர் பாராட்டுக்குரியவர்கள் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமேயில்லை. எனவே இவ்விடயம் தொடர்பாக மீள்பரிசீலனை மேற்கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறந்தால் அதனால் பொதுமக்கள் தரப்பினர் பயனடைவர் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்

தென்மராட்சி மைந்தன்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன் நித்திய சுகம் 342
உடலே கோயில்

பைஷல் இஸ்மாயில்

# சிறுநீரகம்

## உயிர் காக்கும் உடலியல் பேறான அங்கத்தவன்

### சிறுநீரகப் பாதிப்பில் இருந்து விடுபடுவதற்கான வழிகாட்டுதல்

இன்றைய காலகட்டத்தில் இலங்கையின் பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் ஒன்றாக சிறுநீரகப் பாதிப்பு விளங்குகிறது. குறிப்பாக,வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களும் இவற்றின் அருகாகவுள்ள புத்தளம், வவுனியா, குருநாகல் ஆகிய மாவட்டங்களின் சில பிரதேசங்களும் உள்ளடங்கலாக நாட்டின் ஏனைய சில பிரதேசங்களுக்கும் இப்பாதிப்பு பரம்பலடைந்துள்ளது.

**சிறுநீரக நோய்**

உயிராபத்து மிக்க சிறுநீரக நோய்ப் பாதிப்பு முன்னொரு போதுமே ஏற்படாத அளவுக்கு ஏற்பட்டிருப்பது பல்வேறு தரப்பினரதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.இந்த நோய்ப் பாதிப்புக்கான காரணம் என்ன..?, அதனை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம் என்பது பற்றி பல்வேறு மட்டங்களிலும் ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான சூழலில் இந்தப் பாதிப்புத் தொடர்பில் ஆயுர்வேத மற்றும் சித்த வைத்திய முறைமைகளின் பார்வை எவ்வாறானது என்பது குறித்து அறிந்திருப்பது பயன்மிக்கதாகும்.


**உயிர் காக்கும் அவயவம்**

மனித உடலானது, பல்வேறு அவயவங்களைக் கொண்டது. அவை ஒவ்வொன்றும் அவற்றுக்குரிய பணிகளை மிகச் சிறந்த முறையிலே செய்து கொண்டிருக்கின்றன. அவ்வாறான உறுப்புகளில் ஒன்று தான் சிறுநீரகம். இது மனிதனுக்கு மிக முக்கியமான உடல் அவயவமாகும்.மனித உயிரைக் காக்கும் மிக முக்கிய பணியைச் செய்து வருகின்றது. இந்த அவயவம் இன்றி எவரும் உயிர் வாழ முடியாது. அதில் ஏற்படும் பாதிப்புகள் உயிருக்கே ஆபத்தாக அமைந்து விடுகின்றன.

**பணி**

இத்தகு முதன்மைத்துவம் வாய்ந்த சிறுநீரகமானது, மனித உடலில் சேருகின்ற கழிவுப் பொருள்களை வெளியேற்றும் முக்கிய பணியைச் செய்கிறது. அதாவது குருதியில் சேரும் கழிவுப் பொருள்களில் பெரும்பாலானவை பலவித இரசாயன மாற்றங்களுக்கு உள்ளாகி சிறுநீர் ஊடாகவே வெளியேற்றப்படுகின்றன.


குருதியைச் சுத்திகரிப்பதன் ஊடாக இப்பணியை மேற்கொள்ளும் சிறுநீரகம், மனித உடலுக்கு புத்துணர்வை அளிக்கின்றது. அத்தோடு குருதி அழுத்தம் போன்ற பாதிப்புகளை




கட்டுப்படுத்தக் கூடிய பண்பையும் சிறுநீரகம் கொண்டுள்ளது. மனிதன் பிறப்பிலேயே இரண்டு சிறுநீரகங்களைக் கொண்டுள்ளான். அவை மனிதனின் அடிவயிற்றுக்கு பின்புறமாக முள்ளந்தண்டுக்கு அருகாக இரு பக்கங்களிலும் அமைந்திருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் சுமார் 150 கிராம் நிறையைக் கொண்டவையாக இருக்கும்.

**குருதிச் சுற்றோட்டமும் சிறுநீரக இயங்கு நிலையும்**

இச்சிறுநீரகத்தை குருதி 'ரீனல் தமனி' ஊடாக அடைகின்றது. குருதித் தமனி பல கிளைகளாக நுண்ணிய குருதிக்குழாய்களைக் கொண்டுள்ளது. இவற்றின் ஊடாக சிறுநீரகத்தை அடையும் குருதி சுத்திகரிக்கப்பட்டு அதிலுள்ள கழிவுப்பொருள்கள் சிறுநீர் ஊடாக வெளியேற்றப்படுவதோடு, தூய்மைப்படுத்தப்பட்ட குருதி மீண்டும் 'ரீனல் சிறைகள்' மூலம் உடலுக்கு வழங்கப்படுகின்றன. இது எப்போதும் இடம்பெறும் நிகழ்வாகும்.




இப்பணியின் நிமித்தம் சிறுநீரகத்திலுள்ள 'நெப்ரோன்கள்' முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன. இந்த நெப்ரோன்கள் உரோமத்தை விட மிகவும் நுண்ணிய குழாய்களாக காணப்படும்.ஒவ்வொரு சிறுநீரகமும் ஒரு மில்லியன் நெப்ரோன்களைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு மனித உயிர் வாழ்வுக்கு தேவையான நெப்ரோன்கள் உடலில் இரு மடங்கு காணப்படவும் செய்கின்றன. அதன் பயனாகத் தான் ஒரு சிறுநீரகம் செயலிழந்தாலும் மற்றொரு சிறுநீரகத்தின் உதவியோடு மனிதனால் உயிர் வாழ முடிகிறது.

இந்த நெப்ரோன்கள்தான் குருதியில் காணப்படும். மனித உடலுக்கு ஒவ்வாத இரசாயனக் கழிவுகளை வெளியேற்றவும், உடலுக்குத் தேவையான இரசாயனப் பொருள்களை உடலில் சேர்க்கவும் துணைபுரிகின்றது.

**நோய்க்கான மூல காரணிகள்**

இவ்வாறு மகத்துவம் மிக்க பணியில் ஈடுபட்டிருக்கும் சிறுநீரகம் பாதிக்கப்படுவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. இதற்கு பல காரணங்கள் துணைபுரிவதாகக் கூறப்படுகின்றது. எனினும் உகப்பற்ற இரசாயனங்கள் தான் சிறுநீரகப் பாதிப்புக்கு அடிப்படைக் காரணமாக இருக்க முடியும். என்றாலும் நாட்பட்ட சிறுநீரகப் பாதிப்புக்கு தண்ணீர்தான் காரணமெனை வலுவான ஆதாரமூலங்கள் கூறப்படுகின்றன. ஆனால் இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் காலாகாலமாக இப்பிரதேசம் சார்ந்த நிலக்கீழ் நீரைத்தான் பருகி வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் இவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுக்காத போதும் இப்போது சிறுநீரகப் பதிப்புக்கு மக்கள் உட்படுவதற்கான காரணம் என்ன என்பதை ஒரு தரம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அந்தவகையில் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற போர்வையில் விவசாய நிலங்களுக்கு அண்மைக் காலமாகப் பாவிக்கப்படும் இரசாயனப் பசளைகளும், கிருமிநாசினிகளும், களைகொல்லிகளும் தான் இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்பதில் ஐயமில்லை. பசளை, கிருமிநாசினி, களைகொல்லி என்ற போர்வையில் நச்சுப் பொருள்களை உண்ணவும், பருகவும் செய்திருக்கின்றன பல்தேசியக் கம்பனிகள்.

இந்த நடவடிக்கையின் ஊடே கம்பனிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் நன்மை அடைந்து வருகின்றன. அதாவது பசளை, களைகொல்லி, கிருமிநாசினி என்பவற்றின் மூலம் நேரடியாக இலாபம் ஈட்டுவது போன்று அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவென மருந்துகளை உற்பத்தி செய்தும் அந்த நிறுவனங்களே நன்மை அடைந்து வருகின்றன. இந்த உண்மையை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், வண்டுகள், பூச்சிகள், களைகளை கட்டுப்படுத்தவுமென அளவுக்கு அதிகமாக நச்சு இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதன் விளைவாக அவை உடனடி நன்மைகளை அளித்த போதிலும், எமது நிலக்கீழ் நீரில் கலந்துகொண்டுள்ள அந்த நச்சுப் பதார்த்தங்கள் நாம் பருகும் குடிதண்ணீரையும் பாதித்துள்ளன. இதுதான் சிறுநீரக நோய்ப் பாதிப்புக்கான முதன்மைக் காரணி என்பதில் ஐயமில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இலகுவான காரியமல்ல. அதற்குப் பல தசாப்தங்கள் தேவைப்படலாம். அத்தோடு இரசாயனப் பதார்த்தங்களைப் பாவித்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களிலும் அவற்றின் செறிவு அதிகம் இருக்கவே செய்யும்.

> மனித உடலானது, பல்வேறு அவயவங்களைக் கொண்டது. அவை ஒவ்வொன்றும் அவற்றுக்குரிய பணிகளை மிகச் சிறந்த முறையிலே செய்து கொண்டிருக்கின்றன. அவ்வாறான உறுப்புகளில் ஒன்று தான் சிறுநீரகம். இது மனிதனுக்கு மிக முக்கியமான உடல் அவயவமாகும்.மனித உயிரைக் காக்கும் மிக முக்கிய பணியைச் செய்து வருகின்றது. இந்த அவயவம் இன்றி எவரும் உயிர் வாழ முடியாது. அதில் ஏற்படும் பாதிப்புகள் உயிருக்கே ஆபத்தாக அமைந்து விடுகின்றன.

**இயற்கை விவசாயமே பாதுகாப்பு**

ஆக,இரசாயனப் பசளைகளதும், நச்சுக் கிருமிநாசினிகளதும், களைகொல்லிகளினதும் உண்மை முகத்தை அறிந்து கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்கவென எமது மூதாதையர் பயன்படுத்திய முறைமைகள் குறித்து அதிக கரிசனை கொள்ள வேண்டும்.அப்போது தான் இயற்கைப் பொருள்களைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும்.இச் செயல் நிலையே உடலாரோக்கியத்தை பேணுவதற்கு உதவும். குறிப்பாக, சிறுநீரகங்களுக்கு சிறந்த பாதுகாப்பினை வழங்கும்.


29.10.2017
சூரியகாந்தி
உதயன்

கவனத்துக்கு உள்ளாகியுள்ளது எஸ்.ரி.எவ். 24





34
கழுத்தறுக்கும் கந்துவட்டி






கால்பந்தாட்ட உலகக் கிண்ணம் 23
ஐ.எஸ்ஸின் இலக்கு

27



# கேரளத்து ஜிமிக்கி கம்மலும் கஞ்சாவும்



" வலைத்தளங்களில் வரவேற்பைப் பெற்ற ஜிமிக்கி கம்மலைத் தந்த கேரளா மறுபுறத்தில் கஞ்சாவையும் தருவது வேதனைக்குரியது. இதன் மூலம் ஈழத் தமிழர் மத்தியில் இந்தியா பற்றி இருக்கும் மதிப்பு எதிர்காலத்தில் இல்லாது போய்விடும் "

கட்டுரை

முருகேசு சச்சிதானந்தன்

இந்தியாவின் கேரள மாநிலம் பல துறைகளில் பிரசித்தமானது. கேரள மக்கள் உலகெங்கும் சிதறி வாழ்கின்றனர். பல்வேறு துறைகளிலும் தமக்கெனத் தனியான முத்திரையைப் பதித்தவர்கள் இவர்கள். இந்தக் கேரளம் தொடர்பில் கஞ்சாப்பொதிகள், கேரள டயறிஸ் என்ற நூல் வெளியிட்டமை, ஜிமிக்கி கம்மல் என்ற பாடலுக்கு இளம் கேரளப் பெண்கள் ஆடிய நடனம் என்பன யாழ்ப்பாணத்தில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளன.

2015ஆம் ஆண்டுக்குப் பின்பான காலத்தில் போதைவஸ்து கடத்தலுக்கான மையமாக யாழ்ப்பாணம் மாற்றப்பட்டுள்ளது. இதன் அமைவிடம் காரணமாக மத்திய அமெரிக்கப் பகுதிகளை ஒத்த வகையில் யாழ்ப்பாணம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மிகச் சுலபமாகப் பணம் உழைக்கக்கூடிய இந்தக் கடத்தல் வியாபாரத்தில் இளைஞர்கள் பலர் இரகசியமாக ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு இடையிலான கடத்தல் போட்டிகள், காட்டிக் கொடுப்புக்கள் என்பன வன்முறைகளாகவும், கொலைகளாகவும் இன்றைய தமிழ்ச் சமூகத்துக்குள் தலையெடுக்கத் தொடங்கியிருக்கின்றன.

போதைவஸ்துக் கடத்தலில் கேரளக் கஞ்சா பாகிஸ்தானிலிருந்து கடத்தப்படும் ஹெரோயின், கொக்ஹெயின் போன்றன முக்கிய இடம் பிடிக்கின்றன. இந்தக் கடத்தலுக்கு ஏற்றவாறு வடமாகாணத்தின் கிழக்குக் கரையும், புத்தளம் கற்பிட்டி வரையான மேற்குக் கரையோரமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கடற்பரப்பில் மீன்பிடிப்ப தற்காகக் காத்திருந்த பலர் தற்போது போதைவஸ்துக்கடத்தல் கப்பல்களுக்காகக் காத்து நிற்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தக் கடற்பரப்பு மிக நீண்டகாலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் கண்காணிப்பில் இருந்தது. பன்னாடுகளிலிருந்து கனரக ஆயுதங்களை இறக்குவதற்கு அவர்களுக்குப் பயன்பட்ட கடல் இன்று போதைவஸ்துகளைக் கடத்தும் தளமாக மாற்றப்பட்டுள்ளது.

### இந்தியர்கள் எல்லை தாண்டுவதன் பின்னணி

தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வரும் மீன்பிடிக் கப்பல்கள் இந்தக் கடத்தல் வியாபாரத்தில் கொடி கட்டிப் பறக்கின்றன 30 வருடகாலப் போருக்கு முகம் கொடுத்த வடபகுதி மீனவர்கள் தமக்குச் சொந்தமான கடலில் நிம்மதியாக மீன்பிடிக்க முடியாத நிலை இதன் மூலம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எல்லை தாண்டிய மீன் பிடி விடயத்தில் இந்திய மீனவர்களுக்குப் பல்வேறுபட்ட தடைகள் போடப்பட்டபோதிலும், அவர்கள் வலிந்து இலங்கைக் கரைகளுக்கு வருவதென்பது மீன்பிடிப்பதற்கு அல்ல என்பது தெளிவாகிறது. மீன்பிடிக் கப்பல்களையும், கூலியாள்களையும் வைத்திருக்கும் சம்மாட்டிமார் மீன்பிடிப்பதைவிட போதைவஸ்து கடத்துவதிலேயே அதிகம் கவனம் செலுத்தி வருகின்றனர்.
போதைவஸ்து வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. கேரளக் கஞ்சா என்பது கேரள மாநிலத்துக்குரிய சிறப்பு உற்பத்தி என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இந்தக் கஞ்சாவைக் கேரளத்துக்குள் விற்று அதிக பணம் தேடமுடியாத நிலையிலேயே கடல் மார்க்கமாக இலங்கையின் வடபகுதிக் கடற்கரைகளுக்குள் தள்ளிவிடுகின்றனர்.
இந்தப் போதைவஸ்து விற்பனை மூலம் இந்தியாவால் பல கோடி ரூபா அந்நியச் செலாவணியைத் தேடிக்கொள்ள முடிகிறது. அதனால் தான் அரசியல்வாதிகள் பலரும் இந்த வியாபாரத்தில் தமது தொண்டர்களைத் தள்ளி வருகின்றனர்.

### ஊடுருவலின் ஆரம்ப காலம்

1987 – 90 காலப்பகுதியில் இந்திய இராணுவம் வடகிழக்கில் நிலைகொண்டிருந்த வேளையிலேயே முதன் முதலாக ஹெரோயின் யாழ்ப்பாணத்துக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இந்தப் போதைப்பொருள் விற்கும் நபர்கள் மீது ஈவிரக்கம் காட்டாது விடுதலைப் புலிகள் வேட்டையாடினர். யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு எதிரில், பல்கலைக்கழக விடுதி ஒழுங்கையில் வைத்து 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் 5 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவனுடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகள் அவரைச் சுட்டனர். அவர் இறந்துவிட அந்தச் சிறுவன் (பேரனாக இருக்கலாம்) அருகில் இருந்து அழுதுகொண்டிருந்தது பலராலும் மறக்கமுடியாத ஒரு நிகழ்வு அது. ஆனால் அதன் பின்னணி இந்தக் கேரளக் கஞ்சாவே. இவ்வாறு தான் புலிகள் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

### கஞ்சா தொடர்பில் அவதானம் தேவை

'கனபீஸ்' அல்லது 'மரியுவானா' என்று அழைக்கப்படுகின்ற கஞ்சா ஒரு இயற்கைப் போதைப்பொருள். இது புகைத்தல், ஆவி பிடித்தல், உணவுடன் சேர்த்து உண்ணுதல், கோப்பி போன்ற பானங்களுடன் கலந்து குடித்தல் எனப் பல்வேறு மார்க்கமாக உடலுக்குள் செலுத்தப்படுகின்றது. உடலுக்குள் புகுந்ததும் போதையான புதுவித உணர்ச்சியைக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. கஞ்சாவைப் புகைப்பதன் மூலம் ஒரு நிமிடத்தில் போதையை உடலுக்குள் செலுத்த முடியும். உணவுடன் சேர்த்து உற்கொண்டால், 30தொடக்கம் 60நிமிடங்களில் போதையை அனுபவிக்க முடியும். இவ்வாறு பெறப்படும் போதை 2தொடக்கம் 6மணி நேரம் வரை உடலைப் போதையில் வைத்திருக்கும். கஞ்சா போதைப்பொருள்களின் தாக்கம் நினைவாற்றலைக் குறைக்கும். வாயை உலரவைக்கும். உற்சாகத்தைக் குறைத்து, உடலைப் பலவீனப்படுத்தும், கண்கள் சிவப்பாக மாறும். எரிச்சல், கவலை, மற்றவர்களின் மீது சந்தேகப்படுதல், சிறு சிறு களவுகள் போன்ற பல தாழ்வுச் சிக்கல்கள் ஏற்படும். இவ்வாறான அறிகுறிகள் ஒருவரிடம் காணப்பட்டால், அவர் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

### கஞ்சாவின் நகர்வும் கவனப்படவேண்டியவர்களும்

கஞ்சா பாவிக்கும் ஒருவர் காலப்போக்கில் நிரந்தரமாகப் போதைக்கு அடிமையாகிவிட வாய்ப்புண்டு. போதைப்பொருள் கடத்தும் மையங்களாக ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட சில இடங்களைக் குறிப்பிடலாம்.

★ கற்பிட்டி – உச்சிமுனித்தீவு 8 கிலோ கிராம் கேரளக் கஞ்சா பிடிக்கப்பட்டது.

★ சங்குப்பிட்டி – 248 கிலோ கிராம் கேரளக் கஞ்சா பிடிக்கப்பட்டது.

★ காங்கேசன்துறை கடற்பரப்பு – 140 கிலோ கிராம் கஞ்சாவுடன் 2017.01.12 அன்று இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

★ கொடிகாமம் – 8 கிலோ கிராம் கேரளக் கஞ்சா சிக்கியது.

★ தெல்லிப்பளை துர்க்காபுரம் – 73 கிலோ கிராம் கேரளக் கஞ்சா பிடிபட்டது.

★ காங்கேசன்துறை கடற்பரப்பில் – 153 கிலோ கிராம் கேரளக் கஞ்சா பொதி செய்த நிலையில் மிதந்து வந்தது.

★ அச்சுவேலி – வளலாயில் 90 கிலோ கிராம் கேரளக் கஞ்சா அகப்பட்டது.

இவ்வாறு பல இடங்களிலும் 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரை கைப்பற்றப்பட்ட போதைவஸ்து 29 கிலோ ஹெரோயின் (1 கிலோ அண்ணளவாக ஒரு கோடி ரூபா பெறுமதியுடையது).
ஆயிரத்து 466 கிலோ கேரளக்கஞ்சா (இதில் 193 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்). இதிலுள்ள கேள்வி என்னவென்றால், இவ்வாறு கைப்பற்றப்படும் போதைப்பொருள், கடத்தப்படும் போதைப்பொருளின் எத்தனை வீதம் என்பதே. யாழ்ப்பாணத்தில் ஒதுக்குப்புறமான இடங்கள், மக்கள் நடமாட்டம் குறைந்த இடங்கள், கோயில் தேர்முட்டிப் பகுதி, வாசிகசாலைகள், மக்கள் வசிக்காத வீடுகள் எனப் பல இடங்களைப் போதைவஸ்து கடத்துவோர் அதைக் கைமாற்றிக் கொள்ளும் இடமாகப் பயன்படுத்துகின்றனர். இதுவிடயத்தில் உள்ளூர்த் தலைவர்கள், கோவில் தர்மகர்த்தா சபையினர் நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்.

### யாழ்ப்பாண 'ஆளுநர்கள்'! இதுபற்றி அலட்டிக்கொள்வதில்லை

கஞ்சா கேரளத்தில் எங்கு உற்பத்தி செய்யப்படுகிறது? அவை எவ்வாறு பொதிசெய்யப்படுகின்றன? அவை எவ்வாறு பாதுகாப்பாக இந்தியத்தென் கடற்கரைகளுக்குக் கொண்டுவ்ரப்படுகின்றன? எவ்வாறு இலங்கைக் கடல் எல்லைக்குள் இவை கொண்டு வரப்படுகின்றன? இந்தியக் கடற்படை இது விடயத்தில் எத்தகைய ஒத்துழைப்பை வழங்குகிறது? வடபகுதிக்குள் இவற்றைத் தள்ளிவிடுவதன் நோக்கம் என்ன? என்பவற்றை ஆராய்ந்தால், யாழ்ப்பாணத்தில் 2 ஆளுநர்கள் உள்ளார்கள். அதாவது இலங்கை அரசின் ஆளுநர் மற்றும் இந்தியத் துணைத் தூதுவர் ஆகியோரே இவர்கள். ஆனால், இவர்கள் கஞ்சாவைக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இந்தியா என்ற பிம்பம் மகாத்மா காந்தி, திருவள்ளுவர், ஔவையார், பாரதியார், அப்துல்கலாம் போன்றவர்களுக்குச் சிலை வைத்து மதிப்பளிக்கும் யாழ்ப்பாணத்துக்கு வன்முறையைத் தூண்டும் தமிழ்த் திரைப்படங்களும், குடும்பங்களைப் பிரிக்கும் தொலைக்காட்சித் தொடர்களும், ஒரு சமூகத்தையே அழிக்கும் கேரளக் கஞ்சாவும், ஈழத் தமிழர்களுக்கு அவசியம் தானா?
கேரளாவைக் கஞ்சாவுடன் சம்பந்தப்படுத்தி இணையத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் அதிக செய்திகள் வெளிவருகின்ற போதிலும், இந்தியத் தூதுவர் கேரளா எங்கோ துருவப் பிரதேச நாடு என்ற எண்ணத்தில் அது பற்றி வாய்திறப்பதேயில்லை. கேரளாவைக் கஞ்சா என்ற பெயரில் மலினப்படுத்தக்கூடாது என்றோ, இந்தியாவிலிருந்து கஞ்சா கடத்தப்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம் என்றோ தடுத்ததாக இல்லை.

### இளைஞர்கள் திசை திருப்பப்படுகிறார்கள்

கேரளா என்பது இந்திய நிலம். இந்திய மத்திய அரசு யாழ்ப்பாணத்தில் தனது தூதரகம் ஒன்றைத்திறந்து அதன் துணைத் தூதுவராக தமிழர் ஒருவரை நியமித்திருக்கிறது. இது விடயத்தில் சிவசேனா போன்ற அமைப்புக்கள், நல்லை ஆதீனத் தலைவர் ஏனைய கோயில் தலைவர்கள் இந்தியத் தூதர கத்துக்கு அறிவிக்க முடியும்.
கேரளத்திலிருந்து வரும் ஒருவர் இந்தியாவுக்குச் சொந்தமானவர் என்கிறோம். அங்கிருந்து வரும் கஞ்சாவை மட்டும் தெரியாது என்று கூறிவிட முடியுமா என்ன? தற்போதைய தமிழ்ச் சமூகத்தின் இந்தச் சீரழிவுக்கு இந்தியாவும் பொறுப்பேற்க வேண்டும்.
ஒரு நாட்டுக்குள் இன்னோர் நாட்டின் ஊடுருவல் எந்த வடிவத்தில் ஏற்பட்டாலும் குறிப்பிட்ட நாட்டுத் தூதரகத்தைக் கேட்பது அல்லது தூதரகத்துக்கு முன்னால் நீதிகேட்டுப் போராடுவது போன்ற விடயங்கள் நியாயமானவையே.
போரால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகம் மீண்டும் வீறுகொண்டு எழ முடியாத அளவுக்கு இங்குள்ள இளைஞர்களை உருவாக்க வேண்டும் என்ற மறைமுகமான ஏற்பாடாக இது இருக்க வாய்ப்புண்டு. அதேவேளை, சிங்கள மக்களையும்கூட இது பாதிப்புக்கு உள்ளாக்குவதால் முழு இலங்கையையும் அழிக்கும் ஓர் ஏற்பாடா என்றுகூட எண்ணத் தோன்று கிறது.

**போரால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகம் மீண்டும் வீறுகொண்டு எழ முடியாத அளவுக்கு இங்குள்ள இளைஞர்களை உருவாக்க வேண்டும் என்ற மறைமுகமான ஏற்பாடாக இது இருக்க வாய்ப்புண்டு. அதேவேளை, சிங்கள மக்களையும்கூட இது பாதிப்பிற்குள்ளாக்குவதால் முழு இலங்கையையும் அழிக்கும் ஓர் ஏற்பாடா என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.**



### இந்தியாவின் மதிப்பு இந்தியர்களின் கையில்

வடக்கிற்கான தொடருந்துச் சேவையை ஒழுங்கு செய்த இந்தியா தற்போது பெரிய கலாசார மண்டபம் ஒன்றை யாழ்ப்பாண நூலகத்துக்கு அருகில் அமைத்து வரும் இந்தியா, அரசியலிலும் ஆன்மீகத்திலும் மதிப்பான தலைவர்களை யாழ்ப்பாணத்துக்கு அறிமுகம் செய்த இந்தியா (மகாத்மா காந்தி வருகை தந்த இடங்களை இன்றும் புனிதமாக யாழ்ப்பாணத்தில் பேணி வருகின்றனர்), எதிர்காலத்தில் இந்தியா என்றால் கேரளக் கஞ்சா என இளம் சந்ததியினர் நினைவுகூரும் நிலைக்கு வந்து விடப்போகிறது.
'கேரளக் கஞ்சா கடலால் கொண்டுவரப்பட்டு ஆடம்பர வாகனங்களிலும், பயணிகள் பஸ்களிலும் வேறுபல வகையிலும் இலங்கையின் தென்பகுதிக்கு கடத்தப்படுகிறது' என்று கூறுவதை விடுத்து, கேரளாவில் கஞ்சா உற்பத்தி செய்யும் மையங்களை அழிப்பதையும், கேரள எல்லைகளைத் தாண்டி கஞ்சா கடத்தப்படுவதையும் மிகப்பெரிய படைபலமும், ஏனைய நவீன வசதிகளும் கொண்ட இந்தியாவால் தடுக்க முடியவில்லை என்றால், மிகச் சிறிய மக்கள் கூட்டமான இலங்கைத் தமிழர்களால் என்ன செய்ய முடியும்? வலைத்தளங்களில் வரவேற்பைப் பெற்ற ஜிமிக்கி கம்மலைத் தந்த கேரளா மறுபுறத்தில் கஞ்சாவையும் தருவது வேதனைக்குரியது.
இதன்மூலம் ஈழத்தமிழர் மத்தியில் இந்தியா பற்றி இருக்கும் மதிப்பு எதிர்காலத்தில் இல்லாது போய்விடும் என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் ஒருகணம் சிந்திக்கவேண்டும்.






## விடைபெற்றார் பூமிபோல்

தாய்லாந்தின் முன்னாள் மன்னர் அதுல்யதேஜ் பூமிபோலின் உடலம் கடந்த வியாழக்கிழமை அடக்கம் செய்யப்பட்டது. சுமார் 3 இலட்சம் மக்களின் அழுகுரல்களுக்கு மத்தியில் உருக்கமாக அவர் விடை பெற்றுச் சென்றார்.

தாய்லாந்து மன்னர் அதுல்யதேஜ் பூமிபோல் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி உயிரிழந்தார். தனது 18 ஆவது வயதில் மன்னராக ஆட்சிப்பீடம் ஏறிய பூமிபோல் தனது 88 ஆவது வயதில் உயிரிழந்தார். 70 ஆண்டுகள் தாய்லாந்தை ஆண்டார். இவரின் ஆட்சியே அந்த நாட்டின் பொற்காலம் என்று பாராட்டப்பட்டது. தாய்லாந்து மக்களின் அபிமானத்தை வென்ற தலைவராக பூமிபோல் விளங்கினார். பல, மக்கள்நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார். இவரது மறைவுக்கு உலகப் பிரபலங்கள் பலரும் தமது இரங்கலைத் தெரிவித்திருந்தனர். அடுத்த ஒரு வருடத்துக்குத் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. மிகவும் சிறந்த முறையில் அவரின் உடல் பதனப்படுத்தப்பட்டு தலைநகர் பாங்கொக்கில் வைக்கப்பட்டிருந்தது. கடந்த 26ஆம் திகதி உடலம் அடக்கம் செய்யப்பட்டது.

**"விண்ணன் விடைபெற்றான்..."**





## மீண்டும் சோதனை

அணுகுண்டை விடவும் சக்தி வாய்ந்தது என்று கருதப்படும் ஐதரசன் குண்டுச் சோதனையை வடகொரியா மீண்டும் மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அணுகுண்டு என்ற சொல் அரிதிலும் அரிதாகப் பயன்படுத்தப்பட்ட காலம்மாறி அது தற்போது சர்வசாதாரணமாக மாறிவிட்டது. அதிலும் கொரியத் தீபகற்பத்தின் நிலையோ ஆபத்தின் உச்சக்கட்டத்தில் உள்ளது. பன்னாட்டுச் சட்ட திட்டங்களை மீறி தொடர்ந்து பல ஏவுகணைகளை சோதித்து வருகிறது வடகொரியா. அந்த நாடு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும் ஐதரசன் குண்டுச் சோதனைகளையும் கடந்த மாதத்தில் சோதித்திருந்தது. ஐதரசன் குண்டுச் சோதனையின் போது 6.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டது என்றும் சொல்லப்பட்டது. அத்துடன் நின்றுவிடாமல் ஜப்பானின் வான்பரப்புக்கு மேலாக ஏவுகணைச் சோதனைகளையும் நடத்தியது. இது பல அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் மற்றொரு ஐதரசன் குண்டுச் சோதனையை வடகொரியா மேற்கொள்ளவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவைக் கட்டுப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து பல பொருளாதாரத் தடைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. வடகொரியாவின் மூன்று முக்கிய ஏற்றுமதிகளான நிலக்கரி, இரும்பு, கடலுணவு ஆகியன முடக்கப்பட்டுள்ளன. வடகொரியாவுக்கு ஏனைய நாடுகளில் இருந்து செல்லும் பொருள்களும் முடக்கப்பட்டுள்ளன. இதனால் வடகொரியா தனது சோதனைகளைக் கைவிடும் என்பது ஐ.நா. சபையின் திட்டம். ஆனாலும் தொடர்ந்து தனது சோதனைகளை நடத்திவருகிறது வடகொரியா.

**"பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுது..."**






## சிங்கப்பூர் 'பாஸ்போர்ட்'

உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த கடவுச்சீட்டு என்ற பெருமையைச் சிங்கப்பூர் கடவுச்சீட்டு பெறுகிறது. நுழைவிசைவு இல்லாமல் 159 நாடுகளுக்குச் செல்லும் அங்கிகாரம் சிங்கப்பூர் கடவுச்சீட்டுக்கு உள்ளது. இதையடுத்தே சக்திவாய்ந்த கடவுச்சீட்டு என்ற பெருமை அதற்குக் கிடைத்துள்ளது. பன்னாட்டு நிறுவனமொன்று நடத்திய ஆய்விலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டுள்ளது. கடைசி இடத்தில் தற்போது அதிகளவான ஆயுததாரிகளின் தாக்குதல்கள் நடைபெறும் ஆப்கானிஸ்தான் உள்ளது. வெறும் 22 நாடுகளுக்கு மட்டுமே ஆப்கானிஸ்தானின் கடவுச்சீட்டை வைத்துச் சென்று வரமுடியும்.

**"இலங்கை எந்தத் தொங்கல்ல இருக்கோ..."**

## எதிர்கால விமானி



சவூதி அரேபியாவில் 6வயது சிறுவன் வானூர்தியைச்செலுத்தும் காணொலியொன்று காண்பவர்களுக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்து வருகிறது.

சவூதி அரேபியாவில் உள்ள எதிகாட் வானூர்தி நிறுவனத்தில் ஆதம் என்ற 6 வயது சிறுவன் 'ஒரு நாள்' விமானியாகப் பணியாற்றியுள்ளான். வானூர்தியின் செயல்முறை குறித்த அவனது அறிவு அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. விமானி போன்று உடை அணிந்து மற்றொரு விமானியுடன் இணைந்து எதிகாட் வானூர்தி பயிற்சி மையத்தில் உள்ள யு-380 வானூர்தியைச் செலுத்திய காணொலியை இதுவரை சுமார் 25 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பார்த்து ரசித்துள்ளனர்.

**"நாங்கள் நல்லூரில் வாங்கிறதப் பறக்க விடுறதோடையே நிக்கிறம்..."**

### ரவுண்ட் த வேள்ட்

பிரகாஸ்




## 2018 கால்பந்தாட்ட உலகக் கிண்ணம் முக்கிய இலக்கு

ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களை இலக்குவைத்து தமது அரக்கத்தனமான தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திவருகின்றமை அனைவரும் அறிந்ததே. இந்த வரிசையில் அந்த அமைப்பு ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரை தனது முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது என்று தகவல்கள் வந்துள்ளன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இணையத்தளமொன்று கடந்த புதன்கிழமை ஒரு ஒளிப்படமொன்றைவெளியிட்டது. தென்னமெரிக்க நாடான ஆர்ஜென்ரீனாவின் தலைவரும், மிகப்பெரும் கால்பந்தாட்ட ஜாம்பவானுமான மெஸ்ஸியின் கண்ணில் இருந்து குருதி வடிவதுபோன்று அந்த ஒளிப்படம் இருந்தது. "நீங்கள் ஒருபோதும் தோற்கடிக்கப்பட முடியாத அமைப்புக்கு எதிராகப் போராடுகிறீர்கள்" என்ற வாசகமும் அந்தப் போஸ்டரின் கீழ் எழுதப்பட்டிருந்தது. எனவே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரைத் தனது முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை தமக்கு எதிரான நகர்வுகளைத் திசைதிருப்பும் முயற்சியாகவும் இந்த ஒளிப்படத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பயன்படுத்தியிருக்கலாம்.

**"ரஷ்யாவின் தலையில் மிகப்பெரும் சவால்..."**

கட்டுரை

நடராசா லோகதயாளன்





# அரியாலை இளைஞர் சூட்டில் கவனத்துக்குள்ளாகியிருக்கிறது சிறப்பு அதிரடிப் படை!

போர்க் காலத்தில் சாதாரணமாக மலிந்து கிடந்த துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள் அதன் பின்னர் மெல்ல மங்கிப்போயின. வாள்வெட்டுக்குழுக்கள் தலை தூக்குவதாகப் பொலிசாருக்கு எதிராகக் குற்றச்சாட்டு எழுந்தது. அந்தக் குற்றச் சாட்டை மழுங்கடிக்க இரண்டு பல்கலைக்கழக மாணவர்களின் உயிர்கள் கொக்குவிலில் பொலிசாரின் துப்பாக்கிகளால் காவு கொள்ளப்பட்டன. வடமராட்சியில் கள்ள மண் ஏற்றுபவர்களிடம் பொலிசார் கப்பம் வாங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு உச்சம் பெற்றபோது துன்னாலை இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டது.

வித்தியா கொலை வழக்கின் தீர்ப்பை உலகமே எதிர்பார்த்திருந்த வேளையில் நீதிபதி இளஞ்செழியன் மீது துப்பாக்கிச் சூடு இடம் பெற்றது. தற்போது அரசமைப்பு விவாதம் மீதான எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளபோது, மீண்டும் ஒரு துப்பாக்கிச் சூடு அரங்கேறியுள்ளது. அரியாலையில் ஓர் உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளது. வடக்கைத் தொடர்ந்தும் பதற்றத்தில் வைத்திருந்து அரசியல் செய்யும் முயற்சியின் சதியா இது? என்று கேள்விகள் பலவும் எழுந்துள்ளன. ஏனெனில் இலங்கை அரசியலில் புரையோடிப்போயுள்ள சூழ்ச்சிகள், தந்திரங்கள் இன்றுவரை அகலவே இல்லை.

**படைகள் எவ்வழியோ அரசு அவ்வழி**

தமிழ் மக்கள் நிம்மதியாகவோ அல்லது நிரந்தரத் தீர்வுடனோ வாழக் கூடாது என்பதில் ஆட்சியேறும் அரசுகள் என்றுமே உறுதியாகவுள்ளன. இந்த விடயத்தில் அவை ஒற்றுமையாகச் செயற்படுகின்றன. காலத்துக்குக் காலம் அரசியல் ரீதியிலோ அல்லது இராணுவ ரீதியிலோ சரி தமிழர் தரப்புக்கு ஒரு படி முன்னேற்றம் ஏற்படுவது தென்பட்டால், அதனை மழுங்கடிப்பதற்காகச் சிங்களதேசம் பூதாகாரமான ஏதாவது ஒரு விடயத்தினைக் கிள்ளிவிடுவது வழமை. அதைக் கனகச்





சிதமாக நிகழ்த்திய பலரே ஆட்சியிலும் நிலைக்கிறார்கள். அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழி என்பர். எமது நாட்டில் படைகள் எவ்வழியோ ஆட்சியாளர்களும் அவ்வழியே என்ற மரபே பின்பற்றப்படுகிறது. அதாவது அரசியல் தீர்வில் தமிழர்களுக்குச் சம உரிமைகள் கிடைக்க கூடாது என்பதில் இணைந்தே சதிசெய்கின்றனர்.

ஏனெனில் வடக்கில் குறிப்பாக 2015 மற்றும் 2016களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாள்வெட்டுக் கலாச்சாரம் தலைதூக்கியது. அப்போது அதனை அடக்க வேண்டிய பொலிசார் கைகட்டி வேடிக்கை பார்த்தனர். அத்தோடு அந்தக் குழுக்களுக்கும் பொலிசாருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

**சூடுகளும் பின்னணியும்**

வாள்வெட்டை அடக்கவேண்டியதேவை எழுந்ததன் விளைவாக 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி இரண்டு பல்கலைக் கழக மாணவர்கள் கொல்லப்பட்டனர். அது நடந்து ஓர் ஆண்டு கடந்து விட்டது. இருந்தும் வாள் வெட்டுக்கும் தீர்வில்லை. சுட்டுப்படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் நீதியில்லை. வாள்வெட்டுப் பேச்சுக்களும் மங்கின. காரணம் அந்தச் சூட்டின் பிரதிபலிப்பே. அடுத்து மணல்கொள்ளை, மணல் தட்டுப்பாடு என்பன பூதாகாரமாகின. சிலரிடம் பொலிசார் கப்பம் பெற்று மணல்கடத்த அனுமதிக்கின்றனர் எனக் குடத்தனை மக்கள் பகிரங்கமாகவே குற்றமும் சாட்டினர். அதன் விளைவாக இந்த ஆண்டின் ஜூலை மாத ஆரம்பத்தில் குடத்தனை இளைஞன் ஒருவர் சுடப்பட்டார். பின்னர் நீதிபதி இளஞ்செழியன் தொடர்புபட்ட அந்தச் சூடு, கடந்த யூலை மாதம் 23ஆம் திகதி நடந்தது. மக்கள் அனைவரின் கவனமும் இதன்பால் மட்டுப்படுத்தப்பட்டது.

தற்போது, கடந்த ஒக்ரோபர் 22ஆம் திகதி அரியாலை-உதயபுரம் பகுதியில் இளைஞர் சுடப்பட்டிருக்கிறார். இது சமகாலத்தில் நடந்துகொண்டிருக்கும் புதிய அரசமைப்பு விமர்சனங்களைக் குறைப்பதற்காக இருக்கலாம் என்றே நம்பப்படுகிறது.

**மண்டைதீவில் தேடுதல்**

அண்மைய சூட்டில் கொல்லப்பட்டவர் பற்றி வெளிவரும் செவிக்கதைகளில் அரச படையினரே இதை மேற்கொண்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இதேநேரம் இங்கு அரசுகள் மாறுகின்றன, தவிர முப்படைகளின் தளபதிகள் மாற்றப்ப்டுகின்றனர், ஆனால் படையினர் மகிந்த காலத்தில் இருந்த படையினரே.

தற்போதும் உள்ளனர். இலங்கையில் தற்போது சுமார் 2இலட்சத்து 50ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் உள்ளனர். இந்தச் சூட்டு விடயத்தில் கடற்படையினரே சந்தேகிக்கப்படுகின்றனர்.

அண்மையில் மண்டைதீவுக் கடற்படை முகாமில் தேடுதல் நடத்தப்பட்டது இதனாலேயே. போர் ஓய்ந்து பணிகள் இல்லாமலிருக்கும் இவர்களை வைத்தே அதிக சதிகள் அரங்கேற்றப்படுகின்றன என்று தற்போது பொதுவெளியில் விசனாங்கள் வெளி வருகின்றன.


**தீர்வுகளில் முரண்போக்கு**

ஆரம்பத்தில் ஒரு அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவர முற்படுகையில் ஒரு தரப்பு பாதயாத்திரை சென்று அதை இல்லாமல் செய்ததும், அதேபோன்று ஒரு தரப்பு தீர்வை முன் வைக்க, மறுதரப்பு அதைக் கிழித்தெறிந்து, தீயிட்ட நிகழ்வுகளும் உள்ளன. இரண்டு பெரும் கட்சிகள், மாறி மாறி எதிர்த்த கட்சிகள் இன்று ஒன்று சேர்ந்து சிறுபான்மை மக்களின் மனதைப் புரிந்து, நல்லதொரு தீர்வை வழங்குவார்களா அல்லது இரண்டு கட்சிகளும் இணைந்து சதுரங்க விளையாட்டு விளையாடி ஒற்றுமையாகச் சண்டை பிடித்து இப்போதும் அதைக் குழப்பிக் கொண்டே இருக்கிறார்களா என்கின்ற சந்தேகம் பலமாகிவிட்டுள்ளது. அரசமைப்புத் தீர்வில் எதாவது கிடைக்குமா எனக்காத்திருக்கும் தமிழர்களைத் திசை திருப்பி, இளையோர்களை ஆத்திரமூட்டி மீண்டும் ஓர் இளைஞர்கள் அழிப்புக்கு வித்திடுகிறார்களோ என்றுகூடச் சந்தேகங்கள் எழாமலில்லை. ஏனெனில் இங்கு நடக்கும் ஒவ்வொரு துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகும் போராட்டம், கதவடைப்பு என இளைஞர்கள், மக்கள் அந்தப் பக்கமே திசை திருப்பப்படுகிறார்கள்.

**சட்டமா அதிபரின் விநோதம்**

இலங்கை அரசியலில் என்ன இடம்பெறுகின்றது என எவருக்குமே விளங்காத நிலைமை காணப்படுவது வழமைதான். நாட்டின் ஜனநாயகம் , மற்றும் பாதுகாப்பு, எவற்றில் எவர் அதிகாரம் கொண்ட முடிவை எடுக்கின்றார் என்பதில் மூடிய ஆட்சியாகவே இந்த ஆட்சி உள்ளது. இங்கே அரச தலைவரை மிஞ்சிய முடிவை எடுக்கும் சட்டமா அதிபர் இவ்வாறு இடம்பெறும் சூட்டுக் கொலைகள் தொடர்பில் வாய் திறப்பதே கிடையாது. அல்லது அதற்குச் சட்ட நடவடிக்கையும் கிடையாது. சாட்சிகளுக்குப் பாதுகாப்பில்லை எனக்கூறி வவுனியாவில் இடம் பெறும் அரசியல் கைதிகளின் வழக்கை அனுராதபுரத்துக்கு மாற்றத்துடிக்கும் சட்டமா அதிபர் இங்கே ஒரு மாகாணத்தின் மக்களே பாதுகாப்பில்லாமல் இருக்கிறார்கள் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார் என்று வினாவினால், பதில் பூச்சியமாகவே உள்ளது.

அண்மைய சூடு ஆரம்பத்தில் மண்டைதீவுக் கடற்படையினர் பக்கம் கவனத்தைத் திருப்பியது. குறித்த சம்பவத்தினை நடத்தியது கடற்படையினர்தான் எனப் பேச்சுக்கள் எழுந்தன. அங்கு தேடுதலும் நடத்தப்பட்டது. இந்தச் சூடு ஒரு முச்சக்கர வண்டியில் சென்று நடாத்தப்பட்டிருக்கிறது. சுட்ட பின்பு ஓடிச் சென்று வெற்றுத் தோட்டாக்களைப் பொறுக்கி எடுத்த பின்பு மீண்டும் அதே முச்சக்கர வண்டியில் ஆயுததாரி தப்பிச் செல்லும் காட்சி துரதிஸ்ட வசமாக அருகில் உள்ள சி.சி.ரி கமராவில் பதிவாகியிருக்கிறது. அந்த முச்சக்கர வண்டியானது பாதுகாப்பு அமைச்சின் பதிவில் உள்ளதாகவும். அது சிறப்பு அதிரடிக் படையினருடையது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆக, இந்தச் சூட்டையும் படைத்தரப்பே மேற்கொண்டுள்ளது என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.



அடுத்த வாரம் முதல்...

நாவற்குழி செல்லையா குமாரசாமி எழுதும்...

'தங்கப்பறவை'

'சிறுவர்களுக்கான நவீனம்'

# செல்லும் வழியின் தூரம்

சிறு வயது முதலே வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்தையும் ஒவ்வொரு சவாலாக எதிர்கொண்டு வாழப் பழகிவிட்ட நான், இன்னும் ஒரு சவாலை எதிர்கொள்ளப்போவதாக உணர்ந்து கொண்டேன். கணவன், பிள்ளையுடன் அவருடைய சொந்த ஊரில் வந்து இறங்கியுள்ளேன்.



25

தொடர்

ப்ரியமதா பயஸ்

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விதமாக அந்தக் காட்டு வீட்டுக்குள் கழிந்தது. இரண்டு நாள்களுக்குப் பின்னர் யாரோ பாவித்த ஒரு முழுச் சட்டை, இரண்டு மேல்சட்டைகள் என்பவற்றை எமக்குக் கொடுத்தார்கள். அவற்றை வாங்கி மாற்று உடையாகப் பயன்படுத்திக் கொண்டேன்.

ஒரு பேசின், ஒரு சோடா, ஒரு சிறிய பானை, ஒரு கரண்டி, ஒரு அப்பிள் இவை சேர்ந்த பொதி ஒன்று ஆயிரம் ரூபாவாக விற்கப்படுகின்றது. வெற்றிலை, பாக்கு, சீனி, தேயிலை, எல்லாமே விற்பனைக்கு வருகின்றன. காலப்போக்கில் 'சதொச சுப்பர் மார்க்கெட்'டும் அங்கே வந்துவிட்டது. ஆனால் எமது தேவைகள் எவையுமே பூர்த்தியாகவில்லை. எதிர்பார்த்த எவையும் அவ்விடத்தில் இருக்கவில்லை. ஒவ்வொரு இடமாக அறிந்தவர்கள், உறவுகள் எவராவது இருக்கின்றனரா? எனத் தேடி அலைந்தேன்.

**நரகமாகக் கழிந்த நாள்கள்**

எமது கூடாரத்துக்கு அருகில் ஒருநாள் இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் என அதிகளவானோர் கூடினர். என்ன நடக்கின்றது என்று எட்டிப்பார்த்தேன். விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர் ஒருவரின் மனைவியும் பிள்ளைகளும் அங்கே அந்தக் கூடாரத்துக்குள் இருந்தனர்.

அதன் பின்னர். அவர்கள் வேறிடம் கொண்டு செல்லப்பட்டதை உணர்ந்தேன். ஆனால், அந்தப் பெண்ணை நான் காணவில்லை. வெளியே நின்று வேடிக்கை பார்க்க எனக்கு மனம் வரவில்லை. அங்கு குழுமி வேடிக்கை பார்த்தவர்கள் அது புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் குடும்பம் என்றும், இன்னும் சிலர் வேறு ஒரு தளபதியின் குடும்பம் என்றும் பேசிக்கொண்டனர். எதையும் பொருட்படுத்தும் மனநிலை எனக்கு இருக்கவில்லை.

மூன்று மாதங்கள் நரகமாகக் கழிந்தன. பாதி நாள்கள் நோய்க்கு இலக்காகிப் படுக்கையில் கிடந்தேன். மீதி நாள்களை முடிந்தவரைச் சமாளித்தேன். கொடிய நொடிகளாகக் கடந்த அந்த வாழ்க்கையை இன்னொருமுறை வாழ்வதெனில் இந்த உயிர் தூசானது. அவ்வளவு இன்னல் நிறைந்த வாழ்க்கை அது.

**மரத்தால் விழுந்தவர்களை மிதித்த மாடுகள்**

வங்கிகள், நிறுவனங்கள் எவையும் எம்மை விட்டு வைக்கவில்லை. எல்லாமே எமது அடைப்பிடம் நோக்கிப் படையெடுத்தன. இழந்தும், துவண்டும் வந்த எங்களிடம் முஸ்லிம் வியாபாரிகள் கொள்ளை இலாபத்துக்குப் பொருள்களை விற்றனர். சிங்கள வியாபாரிகளும் அவர்களுக்குச் சளைக்காமல் வியாபாரம் செய்தனர். தமிழ் வியாபாரி ஒருவரைக்கூட அங்கே அனுமதிக்காமையையும் நாம் கவனிக்கத் தவறவில்லை. அமைப்புக்கள், குழுக்கள் என்பன இணைந்து உணவுப்பொட்டலங்களைக் கொண்டுவந்து வழங்கின. யானைப் பசியோடு இருந்த எமக்கு அவை சோளப்பொரிகளாகின. அவ்வப்போது நானும் உணவுக்காக வரிசையில் நிற்பேன். நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு என் இடுப்பில் இருக்கும் குழந்தையைப் பார்த்துப் பாவப்பட்டு ஒரு சோற்றுப்பாசலை என் பக்கம் நோக்கி வீசுவார்கள். பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் அதை ஒரு கையால் ஏந்திப் பிடித்துக் கொள்வேன், வீசுபவன் "ஓ... கொட்டி! நல்லா 'கச்' பிடிக்குது" எனப் பரிகசிப்பான். அவன் சொல்வதைக் கவனிக்காததுபோல் அவ்விடம் விட்டுப் போய்விடுவேன்.

**முகாமிலிருந்து ஊர்காவற்றுறைக்கு...**

ஆயிரம் போராட்டங்களோடு முடிவடையும் என நான் எதிர்பார்த்த வாழ்க்கை இன்னும் ஆயிரம் போராட்டங்களை என்னுள் விதைத்துவிட்டது. 2009செப்டெம்பர் 16ஆம் நாள் நாம் யாழ்ப்பாணத்தின் ஊர்காவற்றுறைக்கு ஏற்றப்பட்டோம் கிட்டத்தட்ட இரண்டு முழு நாள் பயணம். அங்கங்கே சோதனைகள், விசாரணைகள். எல்லாம் தாண்டி அரச அலுவலகம் முன் இறக்கப்பட்டோம். சிறு வயது முதலே வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்தையும் ஒவ்வொரு சவாலாக எதிர்கொண்டு வாழப் பழகிவிட்ட நான், இன்னும் ஒரு சவாலை எதிர்கொள்ளப்போவதாக உணர்ந்து கொண்டேன். கணவன், பிள்ளையுடன் அவருடைய சொந்த ஊரில் வந்து இறங்கியுள்ளேன்.

**இப்போதும் ஒரு இழப்பு**

முற்றிலும் புதிதான சூழல். வாழ்க்கைச் சூழல் மாத்திரமல்ல. எல்லாமே. இவை என்ன மாதிரியான சவாலை ஏற்படுத்தப்போகின்றன என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

எந்தவிதமான உதவிகளும் இல்லாமலும், வசதி வாய்ப்புக்கள் அற்று, உடற்பலம் நலிந்து வெறும் மனோ பலத்துடன் ஊர்காவற்றுறையில் கால் பதித்தோம். எதிர்காலம் நல்லபடியாக அமையும். மனமொத்த தம்பதிகளாக இருவரும் வாழ்வோம் என்ற என்னுடைய இனிய நினைவுகளை அந்த இழப்பு அப்படியே புரட்டிப் போட்டது. நான் செல்லும் வழியின் தூரம்... இன்னும் எப்படியாக இருக்கப்போகின்றது என்னும் ஆதங்கமும் என்னுள் எழுந்தது.

(நிறைவு)

## உன்னைத் தேடுகிறேன்...

*யாருமற்ற என்
இரவுகள்
மறு நொடியில் கலைந்து
போகும் என் கனவுகளில்
நான் உனக்காகக்
காத்திருப்பதின் கனதியால்
என் சாவுக்காக
சந்தடியற்ற என்
நாள்களை எண்ணிக்
கொண்டிருக்கிறேன்.*

*என் இறப்புப் பற்றிய
பயம் எனக்கில்லை
அது சுமையானதுமல்ல
நீ இல்லாதபோது
உன் காதல்
முத்தம்
பரிசம்
அரவணைப்பு
அனைத்துக்காகவும்
ஏங்கும் அநாதைக்
குழந்தை தான்
எனதுள்ளம்.*



*ஏனோ தெரியவில்லை
உன்னுடனான
காதல்
தினம் தினம்
சித்திரவதை செய்கிறது
நீ இல்லை
கண் மூடித் துயிலும்
நொடிகளில் மட்டும்
உன் விம்பம்
அதுவும் கானல் நீர்போல
கலைந்து போகின்றது.*

*நிரந்தரமின்றி
நான் உன்னைப்
பிரியவில்லை
நீ என் அருகிலும்
இல்லை
ஆனால்,
உன்னை நேசிக்கிறேன்
அதனால்
உன்னைத் தேடுகிறேன்.*

கவிதைகள்

எஸ்.தர்சி

## தேடிக் கொண்டே இருக்கிறேன்

அவன் நினைவுகளால்
நான் அழிந்துபோனாலும்
அவன் நினைவுகள் என்றும்
எனை விட்டு அழியவில்லை

இன்று வரைநான்
தேடிக் கொண்டே இருக்கிறேன்
அவன் போட்டுச் சென்ற
காதல் பூட்டின் சாவியை...



# கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.

## தொகுப்பு

தி.இராஜநாயகி

**அருட்திரு மேரி பஸ்ரியன் அடிகளார், 5.1.1985, அன்று அவருடைய 33ஆவது வயதில், 'மூவிராசாக்கள்' விழாவன்று இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை கவிஞர் நாவண்ணண் அவர்கள் 'தீபங்கள் எரிகின்றன' என்ற தலைப்பில் நூலாக்கினார். 1988ஆம் ஆண்டு மாசி மாதம் வெளியிடப்பட்ட அந்த நூலினது சிறு பகுதி இங்கே தரப்படுகிறது.**



அருட்திரு மேரி பஸ்ரியன்

கிறிஸ்துமஸ்வந்துசென்றது. புத்தாண்டும் பிறந்தது. அன்று தை மாதம் மூன்றாம் திகதி மாதத்தின் முதல் வியாழன். கடலில் இருந்து கடற்படை சுட்டது. வங்காலை மக்கள் பதறியடித்துக்கொண்டு ஆலயத்தை நோக்கி வந்தனர். பஸ்ரியனோ அஞ்சா நெஞ்சினராகக் கடற்கரையை நோக்கிச் சென்றார். கடற்படையினருடன் பேசினார். "எல்லை தாண்டிக் கடலில் பிரவேசிக்க வேண்டாம் என்று உங்கள் மக்களை எச்சரியுங்கள்" என்று அவர்கள் அவரிடம் கூறினார்.

அன்று மாலை, ஆராதனையின்போது அவர் நிகழ்த்திய மறை உரையில், "நேவி சுட்டபோது மக்கள் கோவிலைத்தேடி ஓடி வந்தார்கள். ஆராதனைக்கு மணி அடிக்கும் போதோ எல்லோரும் சந்திகளில் நிற்கின்றார்கள்! உங்கள் விசுவாசம் எங்கே? இறைபக்தி எங்கே? ஆண்டவர் வீதியிலே வலம் வந்து கொண்டிருக்கிறார். யாரை முதலில் சந்திப்பார்ரோ தெரியாது" என்று கூறினார்.

நான்காம் திகதி மாலை பல்வேறு காரணங்களினால் தன்னோடு மனஸ்தாபமாய் இருந்த இளைஞர் மன்றங்களை அழைத்து அவர்களிடம் மன்னிப்புக்கேரி சமாதானம் செய்துகொண்டார். அவர்களும் சுவாமியிடம் மன்னிப்புக் கோரினர். அவரோடு சமாதானமாகினர். இவையெல்லாம் பஸ்ரியன் சமாதானத்தில் நித்திய இளைப்பாற்றி பெறுவதற்காகச் செய்துகொண்ட முன் ஆயத்தங்கள்.

ஐந்தாம் திகதி பகல் 11.30 மணியளவில் யாழ். ஆயர் இல்லத்துக்கு வங்காலை உப தபால் அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டார். பஸ்ரியரினது அன்புக்குரிய வஸ்தியாம்பிள்ளை அடிகளாரே அப்பொழுது ஆயரில்லத்திலிருந்து பேசினார். இருவரும் ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். மறுநாள் பகல் தான் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும், பிற்பகல் தனக்குக் கார் தேவைப்படும் எனவே தனது மாமனாருடைய மக்களிடம்கூறி அதனை ஆயத்த நிலையில் வைத்திருக்கக்கும்படி அறிவிக்கக் கேட்டுக்கொண்டு விடை பெற்றார். தன்னை உருவாக்குவதில் முக்கிய பங்கு கொண்டிருந்த தன் அபிமானத்துக்கும் அன்புக்குமுரிய வஸ்தியாம்பிள்ளை அடிகளாரிடம் இறுதியாக அவர் பெற்றுக் கொண்ட பிரியா விடையே அதுவாகும்.

நாதனுடைய (மைக்கல் நாதன் குரூஸ்) தந்தையார் அன்று பஸ்ரியனை வந்து சந்தித்தார். கஷ்ட நிலையில் உள்ள நாதனுடையகுடும்பத்துக்கு ஏதோ தன்னால் முடிந்ததைச் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே நாதனை யாழ். மறைக்கல்வி நிலையத்தால் அளிக்கப்படவிருக்கும் மறையாசிரியர்களுககான மூன்றுமாதப் பயிற்சி வகுப்பில் அழைத்துச் சென்று சேர்த்துவிடத் திட்டமிட்டிருந்தார்.

"நீங்கள் நாதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நாளைக்கு நான்போகும்போது நாதனை என்னோடு கூட்டிச் சென்று நல்ல இடத்தில் சேர்த்து விடுகிறேன்" என்று நாதனுடைய தந்தைக்கு வாக்களித்துத் தைரியம் கூறினார்.

ஆலய வளவுக்குள் இளைஞர்கள் நடமாடிக் கொண்டேயிருந்தனர். ஆலய வளவினைப் பொறுத்தவரை இது ஒன்றும் புதுமையான நிகழ்வு அல்ல. பகலென்ன இரவென்ன மக்கள் நடமாடிக் கொண்டேயிருப்பர். சிலர் காற்றோட்டத்துக்காக ஆலயத்தின் வராந்தாவில் படுத்துறங்குவர். தீவிரவத இளைஞர்கள் அன்று அங்கு கூடினர் என்பது அரசாங்கத்தின் வாதம். அப்படி அன்று அவர்கள் தான் வந்திருந்தால்கூட அது ஒன்றும் அசாதாரணமானது அல்ல. அதனைத் தடுக்கும் வலிமை அன்று பாதுகாப்புப் படையினரிடமே இல்லாதபோது பஸ்ரியனால் எப்படி முடியும்?

ஐந்தாம் திகதி சனிக்கிழமை இரவு. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளை நடு இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. மறுநாள் பௌர்ணமி தினம் முழு நிலவு வானத்தில் ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தது. மறுநாள் ஞாயிறு திருப்பலிக்கு வேண்டிய உரையை ஆயத்தம் செய்ய பின்னர் பஸ்ரியன் படுக்கைக்குச் செல்கின்றார்.

பஸ்ரியனது அறைக்கு வெளியே அழகு நாதன், சமையல் காரர் மயில்வாகனம், உதவியாளர் ரவி ஆகியோர் படுத்துக் கிடக்கின்றனர்.

ஊரே உறங்கியவேளை... இயம வாகனங்கள் போன்று மன்னார் நானாட்டன் வீதியால் வங்காலையை நோக்கி இராணுவ வண்டிகள் வந்துகொண்டிருக்கின்றன.

தொலைவில் பிரதான வீதியில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு இராணுவத்தினர் பரபரப்பாக ஓடிவந்து ஆலயம், பாடசாலை, சேமக்காலை, கன்னியர்மடம் உட்படச் சுற்றி வளைக்கின்றனர். முதலில் சேமக்காலைப் பக்கம் துப்பாக்கி வேட்டுக்கள் வெடிக்கும் ஓசை அந்த நடு இரவு அமைதியைக் கிழித்துக்கொண்டு எழுந்தது.



ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வங்காலைக் கிராமமே திடுக்கிட்டு எழுந்தது. பஸ்ரியனும் எழுந்தார். அவரது அறை வராந்தாவில் கிடந்த அந்த நால்வரும் எழுந்து பஸ்ரியனின் அறைக்கு ஓடி வந்தனர். துப்பாக்கி வெடி தொடர்ந்துகொண்டே இருந்தது.

"பாதர், பாதர்" பதறிய குரலில் யாரோ கதவை இடிக்கும் சத்தம் கேட்கவே கதவைத் திறக்கின்றார் பஸ்ரியன். அங்கே...

பாடசாலைக்கு அருகில் வசிக்கும் அதிரியான் சோசை ஆசிரியரின் குடும்பமே குமுமி நின்றது. துப்பாக்கிச் சத்தத்துக்கு அஞ்சி ஆலயத்துக்கு அடைக்கலம் தேடி வந்திருக்கிறார்கள் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

"இப்ப என்ன செய்யிறது மாஸ்ரர்?"

"வெடிச் சத்தம் கிட்டடியில் வந்துகொண்டிருக்கு கோவில் கதவைத் திறந்து விடுங்கோ பாதர்"

சக்கிறிஸ்துக்குள் படுத்திருக்கும் சக்கிறிஸ்திப் பொறுப்பாளர் எமிலியான் குரூசைத் தட்டி எழுப்பி ஆலயத்தின் கதவைத் திறந்து விடும்படி கூறுகின்றார் பஸ்ரியன். ஆலயக் கதவு திறந்து விடப்படுகின்றது. அதிரியான் சோசை ஆசிரியர் குடும்பம் கோவிலுக்குள் சென்றதும் கதவு பூட்டப்படுகிறது. பீடத்துக்கு அண்மித்த பகுதியில் அவர்கள் நிற்கின்றார்கள். இப்பொழுது துப்பாக்கி வெடிச்சத்தம் பரவலாக ஆலயத்தைச் சுற்றி எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அறை வீட்டினுள் நிற்கும் பஸ்ரியனுக்கோ, மற்றவர்களுக்கோ, கோவிலுள் இருக்கும் ஆசிரியர் குடும்பத்துக்கோ, கோவில் பரிபாலகருக்கோ வெளியே என்ன நடக்கின்றது என்பதைக் கண்டுகொள்ள முடியவில்லை.

கோவிலின் வலப்பக்கமாக இருக்கும் கன்னியர் மடத்துக்குள்ளும் ஒரே பதட்டம். அண்மைக் காலங்களில் நடந்துவரும் அசம்பாவிதங்களினால் வீடுகளில் இரவில் படுக்க அஞ்சி கன்னியர் மடத்தில் சென்று சில பெண்கள் படுத்து வந்தனர். கன்னியர் மடத்துள் இருந்தவர்களுக்கும் வெளியே நடப்பது என்னவென்று தெரியவில்லை. ஆனால் இராணுவம் சுற்றி வளைத்துச் சுடுகின்றார்கள் என்பது மட்டும் புரிந்தது.

பஸ்ரியனும் ஏனைய நால்வரும் அவரது படுக்கை அறைக்குள் நெஞ்சு பதை பதைக்க நிங்கின்றனர். பங்குமனையின் பின் வராந்தாவில் 'பூட்ஸ்' கால் ஒலிகள் தட தட வென்று கேட்கின்றன. ஆம், பங்குமனையின் பின் பக்கமுள்ள சிறிய படலையூடாக இராணுவத்தினர் நுழைந்து பின் வராந்தாவில் ஏறிவிட்டனர்.

சற்று நேரத்தில் "பாதர்" என்று அந்தப் புதிய குரல் அழைத்தது. பஸ்ரியன் அப்பொழுதே மரணத்தை எதிர்கொள்ளத் தயாராகி விட்டார். வங்காலை மக்களின் கருத்துப்படி அவர் நினைத்திருந்தால் தப்பித்து ஓடியிருக்க முடியும். சேமக்காலைப் பக்கம் துப்பாக்கி வெட்டொலி கேட்டபொழுதே அதற்கு அவருக்குச் சர்ந்தர்ப்பம் இருந்து. இராணுவம் அவர் மீது குறி வைத்திருக்கிறது என்பதை ஏற்கனவே அறிந்திருக்குமவர். அதிரியான் சோசை ஆசிரியருக்கு மறைந்து கொள்ள இடம் கொடுத்த அவர், நினைத்திருந்தால் தானும் தன்னைக் காப்பாற்றியிருக்க முடியும். அப்படி அவர் தப்பிப் போயிருந்தால், அவர் பயங்கரவாதிதான் என்ற பட்டத்தை அரசும், இராணுவமும் ஆதாரத்துடன் கூற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அடுத்தடுத்து அவர் காணாமல் போனதைத் தொடர்ந்து அவரைத் தேடுதல் எனும் பெயரில் வாங்காலைக் கிராமத்தையே துவம்சம் செய்திருப்பார்கள். பலரின் நலனுக்காக தான் ஒருவன் பலியாவது நன்று என எண்ணினார் போலும்.

தொடர்ந்து அதே குரல் "பாதர், பாதர்" என அழைத்தது. இரவு உடையுடன் நின்ற அவர் தனது வெள்ளை அங்கியை அணிந்து, இடையில் பட்டியைக் கட்டிக்கொண்டார். கையில் தனது செப மாலையை எடுத்துக் கொண்டார்.

கூட நின்றவர்கள் அவரைப்போக வேண்டாம் என்று தடுத்தனர். மற்றவர்களை வெளியே வரவேண்டாம் என்று கூறிய அவர், அறையின் கதவைத் திறந்து நடு ஹோலுக்கள் பிரவேசிக்கின்றார்.



நாவண்ணன்

அங்கே...

அவரை அழைத்த குரலுக்கு உரியவன் மட்டுமன்று இன்னும் சிலரும் பின் வராந்தாவுக்கும் ஹோலுக்கும் இடையில் உள்ள கதவின் இரண்டு பக்கங்களிலும் உள்ள ஜன்னல்களுக்கு ஊடாகத் துப்பாக்கிகளை நீட்டிப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் கண்களிலே கொடிய கொலைவெறி தாண்டவமாடிக்கொண்டு நிற்கிறது. அவர்களது நோக்கத்தை அறிந்துகொண்ட அவர் செபமாலை தொங்கும் கைகளை உயர்த்திக்கொண்டே கெஞ்சும் தொனியில்,

"பிளீஸ்... பிளீஸ்..." என்கிறார்.

அவரது கெஞ்சுதல் மொழிகளுக்கு அந்தக் கொலைஞர் பதில் கூறவில்லை. அவர்களில் ஒருவனது கையில் இருந்த தானியங்கித் துப்பாக்கியே பதில் சொன்னது.

"பட்... பட்... பட்..."

துப்பாக்கி வெடிச்சத்தம் ஒலிக்கு முன்னரே அழகுவும் நாதனும் நடு அறைக்குச் சுவாமியிடம் ஓடுகின்றனர்.

'ஐயோ அம்மா...!' இது பஸ்ரியன் எழுப்பிய அவலக்குரல்.

மீண்டும், "பட்... பட்.. பட்..."

"ஐயோ அம்மா...!"

இது பஸ்ரியனது இறுதிக் குரல்...

குழந்தை பஸ்ரியன் முதலில் அழைத்த மழலைக்குரல் 'அம்மா' குரு பஸ்ரியன் அன்று இறுதியாக அழைத்த குரலும் 'அம்மா'

"அம்மா" என்று அவர் அழைத்த அந்த அவலக் குரல்தான் - அந்திமக் குரல்தான் ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் அமெரிக்காவில் இருந்து அன்னையின் உதரத்தை, உதிரத்தை அலுக்கியது.

பஸ்ரியனைத் தொடர்ந்து அவரை நோக்கி ஓடிய நாதனும், அழகனும் நடுக் ஹோலில் சரிந்துவிழுகின்றனர். அவர்கள்கீழேவிழுந்த பின்னரும் தரையில் கிடந்த அந்த உடல்களை நோக்கி துப்பாக்கிச் சன்ன மழை பொழிந்து கொண்டே இருக்கிறது. அறையின் உட்சுவர், கதவுநிலை, தரை எங்கும் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்துத் துவாரத்தை ஏற்படுத்துகின்றன. தரையிலே பஸ்ரியனுடைய இரத்தம் பெருகித் தேங்குகின்றது. பஸ்ரியன் மக்களுக்காக வாழ்ந்தவர். மக்களை நேசித்து மக்களின் நேசரத்தில் வாழ்ந்தவர். அந்த நேசப் புதல்வர்களில் இருவரான நாதன், அழகு ஆகியோரின் இரத்தங்கள் பெருகித் தமது அன்புத் தந்தையாம் பஸ்ரியனின் இரத்தத்தோடு கலந்து அந்தப் பூமியிலே உறைகின்றன. அது அவர்கள் அவர் மீது கொண்டிருந்த - அவர் அவர்கள் மீது கொண்டிருந்த இரத்த பாசத்தின் அடையாளமா?

இங்கு நடந்த அத்தனை அனர்த்தங் களையும் பஸ்ரியனது அறைக்குள்ளே இருந்த சமையற்காரர் மயில்வாகனமும், உதவியாள் ரவியும் கட்டிலின் கீழே பதுங்கியிருந்து அவதானித்துக்கொண்டிருக்கின்றனர்.

அந்தக் கால நினைவுகள்

மிருசுவில் தமிழ்தாசன்

வாத்தியார் சந்தையிலை கீரைப்புடி என்ன வில விக்கிறாளவை தெரியுமே...? பிடி ரெண்டு சதமாம்...! போன கிழமை ஒண்டரைச் சதத்துக்கு வாங்கின கீரை, நேற்று ரெண்டு சதமாப் போச்சுது. நானும் கேட்கும் மட்டும் கேட்டுப் பார்த்தன். அவள் பாவி குறைக்கமாட்டன் எண்டிட்டாள்."

1




# தோட்ட மண்வெட்டி 90 சதம்

அன்றைய பத்திரிகையை நுனிப்புல் மேய்ந்து விட்டுச் சாய்மனைக் கட்டிலிலே சாவகாசமாகச் சரிந்து கிடந்தார் முருகேசம்பிள்ளை வாத்தியார். தொடர்ந்தும் பத்திரிகையைப் படிப்பதற்கு மனம் ஏனோ ஆர்வப்படவில்லை. காலையில் எழுந்தவுடன் முதல் வேலையாக ஒரு மைல் தூரம் சைக்கிள் வலிந்து வைத்திலிங்கம் தேனீர்க் கடையில் பதினைந்து சதம் கொடுத்து பத்திரிகை வாங்கி வந்து தலையங்கம் முதல் செய்திகள், விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள் வரை அத்தனையையும் வாசித்து முடித்தபின்பு தான் நிஜ வாழ்க்கைக்கு வருவார். அதுவரைக்கும் அவருடன் யாரும் எதுவும் பேச முடியாது. பத்திரிகை படிப்பதில் அத்தனை வெறிகொண்ட வாத்தியார் இன்று அதை அரைகுறையாகப் படித்துவிட்டு அதை அலட்சியமாகக் காற்றிலே கலையவிட்ட நிலையில் மனம் குழம்பிக் காணப்படுவதன் காரணம்தான் என்ன?

"என்னப்பா! நேரம் எட்டரை ஒன்பது மணியாகுது. இன்னும் பசிக்கயில்லையே...? காத்தாலை ஒரு மூக்குப்பேணி ஆட்டுப்பாலைக் குடிச்ச மனிசன் இவ்வளவு நேரமும் ஒண்டும் தின்னாமல் கிடக்குதே! எழும்புங்கோ சாப்பிட"

பென்னம் பெரிய பித்தளைச் சட்டி ஒன்றுக்குள் பழஞ்சோற்றையும், ஒடியல் பிட்டு, மரவள்ளிக் கிழங்குக் கறி கூடவே கொஞ்சக் குரக்கன் பிட்டையும் கலந்து பிசைந்தபடி தலைவாசலுக்குள் நுழைந்தாள் அன்னபூரணம். காலை எட்டு மணிக்கெல்லாம் கையில் பூவரசம் இலையை ஏந்தியபடி அடுக்களைக்குள் புகுந்து பழஞ்சோற்றுப் பானைக்கருகில் குந்திக் கொண்டிருக்கும் வாத்தியார் இன்று பசி தெரியாத நிலையில் மனம் குழம்பிப்போயிருந்ததைக் காண அன்னபூரணத்துக்கு வியப்பாயிருந்தது.

'தடால்' என்னும் ஒலியுடன் வாத்தியாரின் தெருப்படலை திறந்து சாத்திக் கொண்டது. தலையில் சுமந்து வந்த பனங்காய்க் கடகத்தைத் தொப்பெனப் போட்டு அழையா விருந்தாளியாக வந்து வாத்தியாருக்கருகில், தரையில் அமர்ந்து கொண்டான் தம்பிராசா.

• • •

"என்னடாப்பா தம்பிராசா! சந்தைத் தெருவுக்குப் போகேல்லையே?"

பித்தளைச் சட்டியை ஆக்கிரமித்திருந்த ஒடியல் பிட்டையும், மரவள்ளிக் கிழங்கையும் இலாவகமாகப் பிசைந்தபடி கேட்டாள் அன்னபூரணம். பெரு விரலையும் சுட்டுவிரலையும் சேர்த்து எத்தனை பலம் கொண்ட மட்டும் பிசைந்தாலும் எங்கே...! அது நழுவி வழுவிக் கொண்டே சண்டித்தனம் காட்டியது.

"அதையேன் பேசுவான் வாத்தியார் அக்கா! அங்கினேக்கை நாலு தேங்காயைக் கொண்டுபோய் வித்து ஏதேன் கறியைப் புளியை வாங்கலாமெண்டால்... அதுவும் இனிக் கரைச்சல் போலதான் கி க்குது. நல்ல தேங்காய் பத்துச் சதம், பன்ரெண்டு சதம் ண்டு வித்துக் கொண்டு வந்துது. இப்ப புத்தளத்திலையி ந்து லொறியிலை தேங்காய்களைக் கொண்டு வந்து ஏழெ டுச் சதத்துக்கு விக்கத் தொடங்கீற்றாங்கள். இனி பில்லையெண்ட குண்டுத் தேங்காய் எண்டால், எட்டுச் சதம். மிஞ்சிப் போனா ஒம்பது சதம். இதுக்கு மிஞ்சிச் சிவ னை சந்தையில தேங்காய் இல்லை. இந்த லட்சணத்தில ங்கடை ஊர்க்காயை எந்தப் பேயன் வாங்கப் போறான்."

அன்னபூரணம் பிசைந்த சோற்றைப் பித்தளைச் சட்டிக்குள்ளிருந்து துலாவியெடுத்து அந்தப் பழஞ்சோற்றுத் திரணையை முருகேசு வாத்தியாருக்குக் கொடுக்க, அதை மெல்ல மெல்ல நன்னத் தொடங்கினார் வாத்தியார்.

"சிரட்டையுக்கை பிலாக்கொட்டைப் பொரியல் கிடக்குது. கடிச்சுத் தின்னுங்கோ. பச்ச மிளகாயும் கொண்டந்தனான் வேணுமெண்டால் எடுங்கோ"

அடுத்த திரணைச் சோற்றுக்கும் ஆர்வமாகக் கையை நீட்டினார் முருகேசு வாத்தியார். அளவுக்கதிமாகச் சொதியை ஊற்றி விட்டாளோ என்னவோ! அன்னபூரணத்தின் கைவிரல் இடுக்குகளிலிருந்து சொதி சிந்தித் தரையில் வீழ்ந்தது. பதமான, இதமான குழையல். கண் வெட்டாமல் அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தம்பிராசனுக்கு நாவில் நீருறி அதிலிருந்தும் இரண்டு டொட் விழுந்து தெறித்தது. நல்லவேளை வாத்தியாரோ, பொஞ்சாதியோ இதைக் காணவில்லை.

• • •

வாத்தியாருக்குச் சொந்த வயல் உண்டு. எனவே அரிசிக்குப் பஞ்சமில்லை. தினமும் கைக்குத்தரிசிச் சோறு. இரவு தண்ணீரூற்றி வைத்திருந்து விடியப் பழஞ்சோறு சாப்பிடுவதும் வாடிக்கை. தம்பிராசனுக்கு இதற்கெல்லாம் வசதி கிடையாது. தினமும் கடையில் வாங்கி உலையில் போடும் குடும்பம். அதுவும் மிச்சாட், அம்மாப் பச்சை போன்ற மலிவு விலை அரிசிகளையே. அவற்றை ஆக்கிப் பழஞ்சோறு சாப்பிட முடியுமா என்ன? தினமும் பனாட்டும், ஒடியல் பிட்டுடன் தேங்காய்ச் சர்க்கரை சேர்த்து ஏதோ கால் வயிறு, அரை வயிறுதான் வாழ்க்கையென ஓடிக் கொண்டிருந்தது அவனுக்கு.

"தம்பிராசா இந்தா நீயும் ஒரு திரணைப் பழஞ்சோறு தின்னன்ரா"

சம்பிரதாயத்துக்காகக் கேட்டாள் அன்னபூரணம்.

"வேண்டாம் வாத்தியாரக்கா... எனக்குப் பசிக்கயில்லை."

அவனும் சம்பிரதாயத்துக்காகக் கூறினான்.

"வாத்தியார் சந்தையிலை கீரைப்புடி என்ன விலை விக்கிறாளவை தெரியுமே...? பிடி ரெண்டு சதமாம்...! போன கிழமை ஒண்டரைச் சதத்துக்கு வாங்கின கீரை, நேற்று ரெண்டு சதமாப் போச்சுது. நானும் கேட்கும் மட்டும் கேட்டுப் பார்த்தன். அவள் பாவி குறைக்க மாட்டன் என்டிட்டாள்."

தம்பிராசன் கூறிய சந்தை விலைவாசிகளால் இதுவரை நேரமும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த முருகேசு வாத்தியார், காற்றில் கலைந்து சிதறிக் கிடந்த பத்திரிகையை எடுத்து ஒன்றாக்கி நிதானமாக விரித்தார்.

"டேய்...! நீ உதைச் சொல்லுறாய். இந்தா படிக்கிறன் கேள். இனிக் கைக்குத்தரிசி கொத்து அறுபத்தஞ்சு சதமாம்" "ஓ...! கட்டுப்பாட்டு விலைதான். இவ்வளவு நாளும் அம்பத்தெட்டு அறுவது சதம் தானே வித்தது. சரி அது போகட்டும் கூப்பன் மா இருபத்து நாலிலையிருந்து இருபத்து நாலரைச் சதமாம்... அதுவும் ஒரு இறாத்தலுக்கு அரைச்சதம் நட்டம். சீனி விலை தெரியுமோ...? கறுப்புச் சீனி இறாத்தல் முப்பத்தஞ்சாம். வெள்ளைச் சீனி முப்பத்தெட்டுச் சதமாம். அதோடை விட்டாங்களே பாவியள்! மண்ணெண்ணைக்கும் விலைகூட்டிப்போட்டாங்கள். போத்தில் இருபத்து நாலு சதமாம்"

"எடக் கடவுளே! இனி என்னெண்டு சீவிக்கப் போறம்...? கூலி வேலைக்குப் போய் மூண்டு, மூண்டரை உழைச்சு மிச்சாட்டோ என்னவோ அரிசி வாங்கி, கால் ரூபாவுக்கு கூடையோ கீடையோ கறி, புளி எதையாச்சும் பாத்து வங்கிக் கடவுளானை உவன் தறுமனிட்டை நானும் ரெண்டு போத்தில் கள்ளுக் குடிச்சிருவன். இப்ப போற போக்கைப் பாத்தா இனி ஒவ்வொரு நாளும் அஞ்சு ரூபா எண்டாலும் உழைக்காட்டில் சீவியப்பாடு கரைச்சலாத்தான் முடியப்போகுது" கிட்டத்தட்ட ஈனஸ்வரத்தில் முனகினான் தம்பிராசன். அணில் ஏற விட்ட நாயாக இருவரின் முகங்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள் அன்னபூரணம்.

• • •

"கொழும்பிலை நேற்று பாலி மென்ரிலை வரவுசெலவுத் திட்டம் நடந்ததெல்லோ... அதிலைதான் இந்த வெள்ளியடியலெல்லாம் விழுந்திருக்கு. என்ன அரசாங்கம் நடத்துறாங்கள்... எங்கடை சாமான் எல்லாம் மலிவு. அவை தாறதெல்லாம் விலை. எட நாசமறுவாங்கள் தொண்ணூறு சதம் வித்த தோட்ட மம்பட்டியக்கூட ஒரு ரூபா ஆக்கியிருக்கிறாங்கள். இனித் தோட்டக்காரச் சனங்கள் எப்பிடித் தோட்டம் செய்யிறது? தொழிலை விடவேண்டியதுதான்"

வாத்தியார் சொல்லச் சொல்லத் தம்பிராசனுக்குத் தலை சுற்றிக்கொண்டு வந்தது. பனங்காய்க் கடகத்தைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினான். ஒரு மைல் தூரம் நடக்கவேண்டும் அவனுடைய வீட்டுக்கு.

"சே! அந்த மனிசி கேக்கையுக்கை வெக்கத்தைப் பாராமல் ஒரு திரணைப் பழஞ்சோத்தை வாங்கித் திண்டிருக்கலாம். இனி உங்கை போயும் காய்ஞ்ச பினாட்டுக் கிடக்குதோ... இல்லையோ! வெக்கம்... வெக்கம் கண்டறியாத வெக்கம்"

தன்னைத் தானே நொந்தபடி நடந்துகொண்டிருந்தான் தம்பிராசன்.

விலைவாசி ஏறி வாழ்க்கைச் செலவு உயர்ந்து விட்டதற்காக வேறு யாராவது கவலைப்படலாம், ஆனால் முருகேசு வாத்தியாருக்கிருக்கும் செல்வச் செழிப்புக்கு இந்த விலைவாசி அவரைப் பாதிக்கப் போவதில்லை. எனவே அவர் கவலைப்படவும் தேவையில்லை. ஆனால், அவர் கவலைப்பட்டார். தனக்காக அல்ல. பிறருக்காக. இவரைப் போலவே நிறைந்த மனித நேயமும் அன்பும், அறமும் கொண்ட இன்னும் ஏராள மானவர்கள் வாழ்ந்த காலமல்லவா அது.



## சீன அனுபவம்

நடராசா லோகதயாளன்

4

# “தீர்மானிக்கப்பட்ட விலையை அச்சடிப்பது கிடையாது”

உலகில் அதிக மக்கள் தொகையைக்கொண்ட நாடு சீனா. அதன் முக்கிய 4 மாநிலங்களைப் பார்வையிட்டு வெளியேறும் தருணத்தில் எமக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. அதாவது அந்த நாட்டின் 150 கோடி மக்களும் பயன்படுத்திக் கொள்ளும் நீர் எங்கிருந்து வருகின்றது...? என்பதே அந்தச் சந்தேகம். அதற்கான விடையைத் தேடினோம். ஆனால் அவ்வேளை எமக்கு அருகிலிருந்த அந்த நாட்டவர்கள் சிலருக்குக்கூட அதற்கான பதில் தெரிந்திருக்கவில்லை. தமக்கான நீரை, பாதிப்பின்றி சுத்தமானதாக தமது அரசு வழங்கும் என்று தாம் நம்பிக்கை பூண்டிருப்பதாக மட்டுமே அவர்களால் கூறப்பட்டதேயன்றி தமது தேவையைப் பூர்த்தி செய்யும் குழாய்நீர் எங்கிருந்து வருகின்றது என்பதற்கான விடை அவர்களில் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. சீனாவின் எந்தவொரு பகுதியிலும் கிணறுகள் கிடையாது. அவர்கள் தரைக்கீழிருந்து நீரைப் பெறுவதில்லை. அவ்வாறானால் எங்கிருந்து நீரைப் பெறுகின்றனர். தேடியபோது கிடைத்த விடை ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

அதாவது அந்த நாட்டில் உள்ள நீர்நிலைகள், நீர்த் தேக்கங்களில் இருந்து பாவனைக்கான நீர் சுத்திகரிக்கப்பட்டு குழாய் மூலம் நாடு முழுவதும் விநியோகிக்கப்படுகிறது. இவர்களுக்கான குடிநீரானது கடல் நீரைச் சுத்திகரித்து போத்தலில் அடைத்து விற்பனை செய்யப்படுகின்றது.

எமது நாட்டிலும் சீனாவைப் போன்றே நதிகளும், ஆறுகளும் இருக்கின்றன. அவற்றைவிட மேலதிகமாகத் தரைக்கீழ் நீர்வளமும் இருக்கிறது. ஆனால் சுமார் 15 இலட்சம் பேருக்கு மேற்பட்டவர்களுக்கு நிறைவான நீர் கிடைக்காதிருக்கிறது. ஆனால் அதற்காக அரசு இயற்றி வைத்திருக்கும் செயற்றிட்டம் எம்மைப் பிரமிக்க வைத்தது.

அடுத்த தேடுதலை ஆரம்பித்தோம். இத்தனை செயற்றிட்டங்களும் அத்தனை நேர்த்தியாகச் செயற்படுத்தப்படும் இந்த நாட்டில் வெளிநாட்டவர்களுக்கான பொருள்கள் விற்பனை மட்டும் 'விற்பனை' என்பதனைத் தாண்டிப் பெரும் கொள்ளையடிப்பாக மேற்கொள்ளப்படுவதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. உள்ளூர் விற்பனைக்கூடம் முதல், விமான நிலைய விற்பனைக் கூடம் வரையில் இந்த வியாபாரக் கொள்ளை வியாபித்திருக்கிறது.

50 யுவாங் பெறுமதியிலான ஒரு பொருளுக்கு விலை கேட்டால், 350 யுவாங் அல்லது 400 யுவாங் என்கிறார்கள். காரணம், அவர்கள் விற்கும் பல பொருள்களிலும் உற்பதத்தித் திகதி, காலாவதித் திகதி பொறிக்கப்பட்டபோதும், அவற்றின் அதிக பட்ச அல்லது தீர்மானிக்கப்பட்ட விலையை அச்சடிப்பது கிடையாது. இதனால் விற்பனையாளர்கள் தாம் விரும்பிய விலைக்குப் பொருள்களை விற்பனை செய்கிறார்கள். பன்னாட்டுப் பொருளாதார மத்திய நிலையங்களில் பணிபுரியும் ஆண் பணியாளர்கள் முதல் பெண் பணியாளர்கள் வரை அனைவரும் எமது நாட்டு உள்ளூர்ச் சந்தை வியாபாரிகள் போன்றே விற்பனையில் ஈடுபடுகின்றனர். அடிதடிவியாபாரத்துக்கும் அங்கு குறைவிருப்பதில்லை. எமது சீனப் பயணம் 6 நாள்களைத் தாண்டி ஏழாவது நாளைத் தொட்டது. இந்த ஏழு நாள்களுக்குள் முடியுமான வரைக்கும் சீனாவைப் பார்வையிடவும், அந்த நாட்டிலிருக்கும் நல்ல பல விடயங்களையும் கொள்ளை வியாபாரம் போன்ற ஒன்றிரண்டு தகாத விடயங்களையும் கண்டுணர முடிந்தது. இவற்றைக் கண்டுகழித்த எம்மை, சீனாவின் வியப்புக்கள் இன்னும் சில நாள்கள் அங்கு தங்கி ஏனைய இடங்களையும் பிற விடயங்களையும் ஆராய்வதற்குத் தூண்டினாலும் நாக்கு மட்டும் நாட்டை நோக்கியே இழுத்தது. அதாவது. உணவின் கொடுமை எதற்குமே இடம்கொடுக்கவில்லை. எமது பயண வாரத்தின் இறுதி நாளான அன்று மதியம் சீனாவின் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு எமது நாட்டுக்குத் திரும்பினோம். (முடிந்தது)





# மண்

அவதானக் குறிப்புகள்
சில - 8

## கவிதை

கை.சரவணன்

எனதென்றும்
எமதேயானதென்றும் ஆன
எல்லைகளால்
எல்லையற்ற நிலத்து மண்
துண்டங்களாயாகிற்று.

ஒவ்வொரு துண்டமும்
தனக்கென
எதையுமே வேண்டவில்லை
ஆனாலும்
பெயரினால் குறியிடப்பட்டன.

எனக்கென்றிருப்பதை
நான்
எதையும் செய்யலாமென்று
காலமிட்டதொரு
புது வழியை.

பாலையைச்
சோலை செய்தான்.
சோலையை
பாலையாக்கினான்.
மண்
தன் முகமிழந்தது.
இதுவே தொடர்கிறது.
காடுகளுக்குக் குஷ்டரோகம்
பற்றியது.
வயல்களுக்கு என்புருக்கி
தொற்றியது.

ஏப்படியிருந்த மண்
இப்படியாயிற்றே
ஏவ்வாறிவையிவை
இப்படியிப்படி ஆகின என
ஆய்வுகளாலும்
மீந்திருந்த மண்
வதையுண்டு
சிதைவுண்டு போகிறது.



# காணாமல் ஆக்கப்பட்ட என்னவனுக்காக...

## கவிதை

திருமதி மு.சிவநிதி

கனவினிலே உன்னோடும்
காலம் எல்லாம் கண்ணீரோடும்
நினைவினிலே உன் நிழலோடும்
நிஜத்தினிலே ஜடமாகவும்
காத்திருக்கிறேன்
ஏன் தெரியுமா? என்றாவது ஒரு நாள்
நீ வருவாய் என்று நம்பி...

தூங்குகின்றபோது உன் கனவோடும்
தூங்காதபோது உன் நினைவோடும்
வாழும் எனக்கு
தூரத்தில் நின்றாவது ஒரு செய்தி
சொல்லமாட்டாயா...?

துயரத்தைத் துடைக்க
நீ வராவிட்டாலும் என் இறுதி
துக்கத்தைப் பார்க்க
நீ வருவாய்...

கண்கள் திறக்கும் வரைதான்
கனவுகள் நீடிக்கும்
என் கண்கள் மூடும்வரை
உன் நினைவு மாறாது
என் இதயத்தின் வேதனை
என் இறப்பில் புரியும்
நீ வருவாய்... வருவாய் என
வாசலிலே காத்திருக்கிறேன்

காத்திருந்த காலம் எல்லாம்
கனவாகியே போகின்றது
என் வாழ்க்கையில்தான்
உன் ஒளி கிடைக்கவில்லை
என் சாவில் என்றாலும்
உன் கையால்
எனக்கு ஒளியேற்ற
வருவாயா...?

# வால் நட்சத்திரங்கள்



அறிவியல்

தவபாலன் திருநிலவன்

வால்நட்சத்திரம் என்பது வளிமண்டலத்தில் இருக்கும் தூசுகளை அல்லது வாயுக்களை வெளியிடும் பனியினால் ஆன திண்மம் ஆகும். உண்மையில் இவை அழுக்குகளால் ஆக்கப்பட்ட பனிப்பந்துகள் என்கின்றனர் விஞ்ஞானிகள். சமீபகால ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் இந்த வால் நட்நத்திரங்கள், தூசுகள், பனி, காபன்டை ஒக்சைட், அமோனியா, மீதேன் போன்றவற்றினால் உருவாகியிருப்பதாகக் கண்டுபிடித்துள்ளனர். சில ஆராய்ச்சிகளின்படி வால்நட்சத்திரங்களே பூமிக்கு நீரையும் ஏனைய மூலக்கூறுகளையும் கொண்டுவந்து பூமியை உயிர்வாழ்வதற்குரிய இடமாக மாற்றியதாகவும்கூடச் சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

வால் நட்சத்திரங்கள் சூரியனைச் சுற்றிவருகின்றன. ஆனால் பெரும்பாலான வால்நட்சத்திரங்கள் புளுட்டோ கோளுக்கு அப்பால் இருக்கும் 'ஓர்ட்' முகில் எனப்படும் பகுதியிலேயே காணப்படுகின்றன. எப்போதாவதுதான் அவற்றில் ஒரு சில வால்நட்சத்திரங்கள் சூரியமண்டலத்துக்குள் வருகின்றன. இவற்றைச் சில நூற்றாண்டுக்கு ஒரு முறையே மனிதர்களால் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் அந்த விண்ணுலக நிகழ்ச்சியை யாரும் எளிதில் மறக்கமாட்டார்கள்.

### பௌதீக இயல்புகள்

ஒரு திண்ம மையப்பகுதியை இந்த வால் நட்சத்திரங்கள் கொண்டிருக்கும். இது பனி மற்றும் தூசுக்களால் ஆக்கப்பட்டிருக்கும். நாசா மேற்கொண்ட ஆராய்ச்சியின்படி இவற்றில் உறைந்திருக்கின்ற நீர், பனிக்கட்டியாகவும் மற்றைய அமோனியா காபன்டைஒக்சைட் மற்றும் மீதேன் ஆகியவையும் உறைந்தே காணப்படுகின்றன. இதன் மையப்பகுதி கல்லாக (திண்மாக) இருக்கும் என்கின்றனர்.

வால் நட்சத்திரங்கள் சூரியனை நெருங்கும்போது சூரியனின் வெப்பத்தால் அவற்றிலிருக்கும் பனிக்கட்டிகள் உருகி வாயுவாகும். இந்த வாயு முகில் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும். இதை 'கோமா' என அழைப்பர். சூரியனில் இருந்து வரும் அலைக்கற்றைகள் தூசு மூலக்கூறுகளைக் கோமாவில் இருந்து தள்ளும். இதன்போது வால் போன்ற ஒரு தோற்றம் உருவாகும். இதுவே வால் நட்சத்திரம் போன்ற தோற்றத்தை எமக்கு அளிக்கிறது.

உண்மையில் எரிகற்களும் வால் நட்சத்திரங்களும் சிலநேரங்களில் ஒரே மாதிரியான தோற்றப்பாட்டை ஏற்படுத்தும். இதன்போது சில தருணங்களில் விஞ்ஞானிகள்கூட எரி கற்கைளை வால் நட்சத்திரங்கள் என்றும் அடையாளம் கண்டுள்ளனர். குழம்பிப் போய் இருக்கின்றனர்.

ஆனால் தொடர் அவதானிப்பின் மூலம் வால் நட்சத்திரத்தையும் எரிகற்களையும் இலகுவாக இனம் காணலாம். வால் நட்சத்திரங்கள் சூரியனை அண்மித்துக் கோமாவாக மாறினால் அதன்பின்பு அவற்றை நாம் வெற்றுக் கண்களாலேயே அவதானிக்கமுடியும். இதற்குக்காரணம் கோமா அல்லது வால் பகுதியில் சூரிய ஒளிபட்டுத்தெறிப்பதே ஆகும். ஆனால் பெரும்பாலா்ன வால் நட்சத்திரங்கள் மிகச்சிறியவையாக்வே இருக்கும். இவற்றைத் தொலைக்காட்டிகள் இல்லாமல் அவதானிக்கமுடியாது. வால் நட்சத்திரங்களின் அளவு பொதுவாக 10 மைல்கள் நீளமாக இருக்கும். ஆனால் அவை கோமாக்களாக மாறும் பொழுது 1.6 மில்லியன் கிலோமீற்றர்கள் வரையில் நீளமாக இருக்கும். அவற்றின் வால் 100 மில்லியன் மைல்கள் நீளமாக இருக்கும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

### சுற்றுப்பாதை

வால்நட்சத்திரங்கள் சூரியனைச் சுற்றி வர குறைந்தது 200 வருடங்கள் எடுக்கும் என்கின்றனர் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள். சில வால்நட்சத்திரங்கள் சூரியக்குடும்பத்துக்கு அப்பால் இருப்பதால், அவை சூரியனைச் சுற்றிவருவதில்லை என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். குறுகிய கால வால் நட்சத்திரங்கள் வட்டவடிலான பனித் திண்மத்தால் உருவானவை. இவை நெப்டியூனில் இருந்து ஏனைய கோள்களின் ஈர்ப்பு சக்தியால் உள்ளிழுக்கப்படுகின்றன. ஆனால் நீண்ட கால வால்நட்சத்திரங்கள் ஓர்ட் முகில்களில் இருந்து விலகி அவற்றைக் கடக்கும் நட்சத்திரங்களின் ஈர்ப்பு விசையினால் ஈர்க்கப்படுகின்றன. சில வால் நட்சத்திரங்கள் சூரியனுக்குள் வீழ்ந்தோ அல்லது சூரியனுக்கு மிக அருகில் சென்றோ அழிவடைந்துவிடுகின்றன. இத்தகைய வால் நட்சத்திரங்கள் 'சன் கிறேசேர்ஸ்' என அழைக்கப்படுகின்றன. சில ஆராய்ச்சிகளின் அடிப்படையில் வால்நட்சத்திரங்களால் பூமிக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக்கூடக் கண்டறியப்பட்டுள்ளது.

வால் நட்சத்திரங்கள் என்பவை வானில் நீண்ட வாலைக் கொண்டதாகக் காட்சியளிக்கும் நட்சத்திரங்களாகும். சாதாரண நட்சத்திரங்களில் இருந்து தாம் கொண்டுள்ள வால்போன்ற தோற்றத்தால் இவை வித்தியாசப்படுகின்றன. இது சூரியத் தொகுதியிலுள்ள பனிக்கட்டியாலான சிறிய பொருளாகும். இது சூரியனை நெருங்கும்போதும் கடக்கும்போதும் சூடாகி தான் கொண்டுள்ள வளிமங்களை வெளியிடும். இது கண்ணுக்குப் புலப்படும் வளிமண்டலத்தை உருவாக்குகிறது. நீண்டு காணப்படும் இதுவே வால்போன்று தோற்றமளிக்கிறது. இந்த நிகழ்வு சூரியக் கதிர்வீச்சும் சூரியக் காற்றும் வால்வெள்ளியின் உட்கரு மீது செலுத்தும் தாக்கத்தால் ஏற்படுகின்றது.

## சிரிக்க சிந்திக்க

மு.மாசிலாமணி

# கருடா சௌக்கியமா...?


'Who is to bell the dogs?' ஆங்கிலத்திலுள்ள இது 'நாய்களுக்கு மணி கட்டுவது யார்' என அர்த்தப்படுகிறது. தமிழிலே 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என ஒரு முதுமொழி உண்டு. இதை விளக்குவதற்கு ஒரு சிறுகதையும் உண்டு. என்ன குழப்பமாக இருக்கிறதா? விசயம் இதுதான்.

ஒரு ஊரிலே எலிகளின் அட்டகாசம், ஆதிக்கம் அதிகமாக இருந்ததாம். இதை அடக்க அந்த ஊர் மக்கள் ஒரு பூனை வளர்த்துக் கொள்ளத் தீர்மானித்தார்களாம். தீர்மானத்தின்படி பூனையும் வந்து சேர்ந்தது. அந்தப் பூனை எலிகளைத் துவம்சம் செய்யத் தொடங்கியது. நாளடைவில் எலிகளுக்குக் கிலி பிடிக்கத் தொடங்கியது. எலிகள் அனைத்தும் ஒன்றுகூடித் தம்மைத் தற்காத்துக்கொள்வதற்குத் திட்டம் வகுத்தன. தம்மைப் பூனையிடமிருந்து எப்படிக் காத்துக்கொள்வதெனக் கூடி ஆராய்ந்தததில் "பூனையின் கழுத்தில் மணி கட்டிவிடலாம். அதன் கழுத்தில் மணியைக் கட்டிவிட்டால், அது தம்மைப் பிடிக்க வரும்போது மணி அடித்தக் கொள்ளும். அதை எச்சரிக்கையாகக் கொண்டு, தாம் ஓடித் தப்பலாம்" என அருமையான தீர்மானம் ஒன்றுக்கு வந்தன.



ஆனால் இதைச் செயல்படுத்த யார் முன்வருவது? இதுதான் பெரும் கேள்வியாக இருந்ததாம். இதேபோல்தான் யாழ்ப்பாணம் வாழ் மக்களின் நிலையும் உள்ளது. முன்னாள் ஆட்சியாளர்கள் கட்டாக்காலி நாய்களையும் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தி அவைகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்ததனால் தான் நாம் அந்தக் கட்டாக்காலிகளின் அட்டகாசத்தை அடக்க முடியாமல் திண்டாடுகின்றோம். "பூனைக்கு மணி கட்டுவது யார்?" எனும் கேள்விக்கு இன்றும் பதில் கிடைக்காத நிலையில் உள்ளோம். இந்துக்களாகிய நாம் காலையில் எழுந்து, குளித்துத் தூய்மையாகக் கோவில் தரிசிக்க வீதியில் இறங்கினால், முதலில் தரிசிப்பது கட்டாக்காலிகளின் எச்சங்களைத் தான். ஒருவாறு மனதைக் கட்டுப்படுத்தி கோவிலுக்குச் சென்றால், அங்கு வைரவருக்கு வாகனமாக அதுவே நின்று காட்சியளித்தால், நாம் என்ன செய்யலாம்? யாரிடம் முறையிடலாம்? எனப் பல கேள்விகள் எழுகின்றன. பரமசிவன் கழுத்தில் இருந்த பாம்பு, "கருடா சௌக்கியமா...?" எனக் கேட்டதுபோல் வைரவருக்குப் பின்னால் நின்று நாய், "மானிடா how are you?" எனக் கேட்பதுபோல் தோன்றுகிறது. தவிர, கட்டாக்காலிகளைத் தண்டித்தால், சமூகத்திலுள்ள விலங்குகளைக் கொடுமைப்படுத்தினால் தண்டிக்கும் சங்கம் (s.p.c.a.) எம்மீது சட்ட நடவடிக்கை எடுத்தாலும் எடுக்கும் என மனப்பயம் இருக்கிறது. எனவே இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.





# அரசமைப்பு விடயத்தில் செல்வாக்குச் செலுத்தும்

## அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள்

கட்டுரை

வி. அருணாசலம்

இந்து மதத்தில் காணப்பட்ட சில குறைபாடுகளை அல்லது அதிலுள்ள பிற்போக்கான விடயங்களைத் தவிர்த்து உருவானதே பௌத்த மதமாகும். பௌத்தம் ஒரு நெறிமுறையே தவிர, அதை மதமாகக் கூறிவிட முடியாது. மிருகபலி, சாதி ஒடுக்குமுறை ஆகிய இரண்டு விடயங்களையும் கௌதம புத்தர் நிராகரித்திருந்தார். இயல்பான வாழ்க்கை பற்றியதே அவரது கொள்கை. துக்கம், மகிழ்ச்சி ஆகிய இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட ஒரு வாழ்க்கைப் பாதையையே பௌத்த கோட்பாடுகள் முன்வைக்கின்றன.

இந்தியாவில் தோன்றிய ஒரு கொள்கை அல்லது நடைமுறை நிறுவனத் தன்மையுடனான மதமாக மாறியது இலங்கைத் தீவில்தான். இலங்கையில் பௌத்தம் பேணப்பட்டதற்கு புத்தரின் 'புனிதப் பல்' இங்கு இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இங்குள்ள பௌத்த மகத்துவம் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்ற ஏனைய நாடுகளில் இல்லை.

**மகாவம்சம் எனும் அடிப்படைப் பொறி**

உலகில் பௌத்தத்தை ஒரு மதமாகப் பின்பற்றி வரும் நாடுகள் பலவுள்ளன. இலங்கைத்தீவை தனித்துவிடப்பட்ட ஒரு சிங்கள பௌத்த நாடாக யாரும் நினைத்தால், அது தவறானது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் புத்தர் பிறந்ததாக வரலாறு கூறுகிறது. புத்தர் பிறந்த லும்பினியிலோ அல்லது சமாதி அடைந்த குஷிநாரா பகுதியிலோ பௌத்தம் இங்குள்ளதுபோன்று முக்கியத்துவம் பெற்றதாக இல்லை.

கி.மு. 6ஆம் நூற்றாண்டில் புத்தர் பிறந்திருக்கிறார். கி.பி. 6ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்து மகா விகாரையின் தலைமைப் பிக்குவாக இருந்த மகாநாமர் என்பவரால் மகாவம்சம் என்ற நூல் எழுதப்பட்டிருக்கிறது. அது மிகச் சிறந்ததோர் நிறுவனத் தன்மையை இலங்கைப் பௌத்தத்துக்குக் கொடுத்திருக்கிறது. பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்ற ஏனைய நாடுகளில் இத்தகைய நிறுவனத் தன்மை இருப்பதாகவோ, மகாவம்சம் போன்ற மிகப் பழமையான பாளி மொழிப் பதிவொன்று இருப்பதாகவோ சான்றுகள் இல்லை. மகாவம்சத்தில் புத்தர் இலங்கைக்கு மூன்று தடவைகள் வருகை தந்ததாகக் கூறப்படுகிறது. மகியங்கனை, நாகதீப (நயினாதீவு), களனி ஆகிய இடங்களுக்கு அவர் வருகை தந்திருக்கிறார். இதுவே இற்றைவரை இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்தச் சிறப்பான ஏற்பாட்டுக்கு இன்னோர் காரணம் பலர் தாம் பௌத்த துறவிகளாக மாறத் தயாராக இருந்தமையே.

**குடும்பத்தில் ஒருவர் துறவி!**

பொதுவாகச் சிங்கள பௌத்தர்களிடம் தமக்குப் பிறக்கும் மூன்று குழந்தைகளில் ஒன்று நாட்டுக்கும், இன்னொன்று வீட்டுக்கும், இன்னோரு குழந்தை பௌத்த மதத்துக்கும் என்ற உறுதியான நிலைப்பாடு உண்டு. இது காரணமாக இலங்கையில் பௌத்த துறவிகளின் தொகை ஒருபோதும் குறையப்போவதில்லை. இது நடைமுறைச் சாத்தியமான நிறுவனம் என்பதை இதுவரை சிங்கள பௌத்தர்கள் நிரூபித்து வந்துள்ளனர். இதன் பின்னணியிலேயே சிங்களவரின் வரலாறு 2500 ஆண்டுகளையும் கடந்ததாகக் கூறப்படுகிறது. சிங்கள மக்கள் பௌத்த மதத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவமே இந்த நிலைபேறுக்குக் காரணமாகும். ஒரே வீட்டில் ஒருவர் இராணுவ உயர் அதிகாரியாகவும், ஒருவர் பௌத்த துறவியாகவும் மற்றவர் ஆசிரியர் போன்ற தொழில் புரிபவராகவும் காணப்படுகின்றார். தமக்குப் பிறந்த பிள்ளை எந்தத் தொழில் புரிபவராக வாழ்ந்தாலும் 'புத்தே' (மகனே) என்று அழைக்கும் பெற்றோர்கள் பௌத்த துறவியாக மாறிய தமது பிள்ளையை அவ்வாறு அழைப்பதில்லை. பெற்றோர் அந்தப் பிள்ளையை காலில் வீழ்ந்து வணங்குவதும் 'அப்பே சாது' (எங்கள் பௌத்த துறவி) என அழைப்பதுவுமே மரபாக உள்ளது.

**துறவிக்கே உயர் மரியாதை!**

அந்தக் குடும்பத்தில் ஏனைய பிள்ளைகள் எத்தகைய உயர் பதவியை வகித்தாலும் அவர்களை விடத் துறவியாக மாறியவருக்கே அதியுயர் மரியாதை இருக்கும். குடும்ப விடயங்களில்கூட பெற்றோர் முடிவுகளை எடுப்பதில்லை. 'அப்பே சாது' எதைச் சொல்வாரோ என பொறுமையாகக் காத்திருப்பர். அவர் கூறப்போவது கௌதம புத்தர் கூறுகின்ற விடயமெனக் கனம் பண்ணுகின்றனர்.

ஒரு பௌத்த துறவி கதைக்கும்போது அதைக் கேட்டுக்கொண்டிருப்பவர் எழுந்து நிற்பர் அல்லது பிக்குவின் இருக்கைக்கு வெள்ளைத்துணி விரித்து அவரை அமர வைத்துக் காலில் வீழ்ந்து வணங்கிய பின் அவருக்குச் சமமான உயரத்தில் அல்லது அதற்குச் சற்றுப் பதிவான இருக்கையில் அல்லது தரையில் அமர்ந்து அவர் கூறுவதைச் செவிமடுப்பர். இந்த விடயங்களை இந்து பிராமணர்கள் அல்லது ஏனைய சூத்திரருக்கு இருக்கும் உறவுடன் ஒருபோதும் ஒப்பிட்டுவிட முடியாது. தங்கள் பிள்ளையே துறவியாக மாறிவிட்டால் 'ஓம்' 'இல்லை' என்றுகூட பதில் சொல்ல முடியாது. பிக்கு எதைக் கூறினாலும் 'எஹேமாய்' (அப்படியே ஆகட்டும்) என மறுப்பின்றி ஏற்றுக்கொள்வர்.

**தமிழ்நாட்டுத் தமிழர்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்கள்!**

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் பல்லவர் கால பக்தி இயக்கம் தலைதூக்கும் வரை தமிழ்நாட்டில் பௌத்த மதத்தின் செல்வாக்கு இருந்தது. மன்னர்களின் ஆதரவும் தமிழில் நூல்களை வெளியிடும் அளவுக்கும் அதன் செல்வாக்கு காணப்பட்டது. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான பௌத்த நூலான மணிமேகலை தமிழ் மொழியில் எழுந்தது. கி.பி 6ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் பௌத்தர்கள் கொல்லப்பட்டும், பௌத்த மடாலயங்கள் கொளுத்தப்பட்டும் மிகப் பெரிய வெறியாட்டம் நிறைவேறியிருந்தது. இக்காலப் பகுதியிலேயே மகாநாமர் மகாவம்சத்தை எழுதியிருந்தார். இதில் தமிழ்நாட்டுத் தமிழர்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்கள் என்ற கருத்து பல இடங்களில் இழையோடி உள்ளது. இந்த நூல் எழுதப்படுவதற்கு முன்னர் அனுராதபுரத்தில் ஜேதவனாராமய என்ற விகாரையே பிரசித்தி பெற்றிருந்தது. இந்த விகாரை மகாயான பௌத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தது.

**தமிழ்ப் பௌத்தர்களின் முதுசங்கள் கை மாறிப்போயின**

பல்லவர் கால பக்தி இயக்கத்தின் நடவடிக்கைக்குப் பின்னர் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த மகாயான பௌத்தம் அனுராதபுரத்தில் நிராகரிக்கப்பட்டது. அதன்பின்னரே தேரவாத பௌத்தம் மகாவம்சத்தின் ஊடாக வேரூன்றியது. தமிழ்ப் பௌத்தர்கள் தோன்றினர். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகனான சோ. நடராஜன் பௌத்த துறவியாக மாறினார். அவர் 'யாப்பணய தர்மகீர்த்தி தேரர்' எனக் கௌரவிக்கப்பட்டார். இந்த விடயம் பல தமிழருக்குத் தெரியாத செய்தியாக இருக்கலாம். 1970 - 1977 காலப்பகுதிக்குள் கொழும்பில் நடைபெற்ற பௌத்த மாநாடு ஒன்றில் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்ப் பௌத்தர்கள் பலர் சென்று கலந்துகொண்டிருந்த செய்தியும் தமிழ் மக்களுக்குப் புதிய செய்தியாக இருக்கலாம். பல்லவர் கால பக்தி இயக்கத்தின் எழுச்சியுடன் கந்தரோடை, திரியாய், கந்தளாய் புத்த கோயில் களில் பின்பற்றப்பட்டு வந்த தமிழர்கள் பின்பற்றியிருந்த பௌத்தமும் கைவிடப்பட்டது. இதற்குச் சிங்கள மக்கள் காரணமாக இருக்கவில்லை. பௌத்த கோயில்கள் இடிக்கப்பட்டும், பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்கள் துன்புறுத்தப்பட்டும் வந்ததால் அதுவரை பௌத்தத்தை வணங்கி வந்த தமிழ் மக்கள் அந்த வணக்கத்தைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று பௌத்தத்தின் பெயரால் இந்தத் தமிழ் பௌத்த கோயில்கள் சிங்கள பௌத்தர்களின் முதிசமாக மாறிவிட்டன. சிங்களவரே இல்லாத இடத்தில் ஏன் பௌத்த கோயில்கள் கட்டப்படவேண்டும்? என தமிழ்த் தலைவர்கள் கேள்வி எழுப்புவதைப் போல தமிழ் பௌத்தர்கள் இல்லாத இடத்தில் அங்கிருக்கும் புத்தகோயில்கள் எங்களது என்று உரிமை கொண்டாடுகின்ற நிலை தமிழருக்கும் இல்லாது போயிற்று.

**பௌத்தத்துக்குச் சேவை செய்வது முதற்கடமை**

மகாவம்சம் எழுதப்பட்டதன் பின்னர் தேரவாதத்தின் செல்வாக்கு அரசர்களிடம் மேலோங்கியது. அது ஒரு சக்திமிக்க அமைப்பாகவும், சிங்கள பௌத்தத்தைத் தீர்மானிக்கும் அமைப்பாகவும் விளங்கியது. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் பௌத்தமதம் ஒதுக்கப்பட்டதை வைத்து மகாவம்சத்தில் தமிழ்நாட்டுத் தமிழரை விரோதியாகத் துட்டகைமுனுவின் வரலாற்றைக் கூறும்போது வர்ணித்த மகாநாமரின் கருத்து 100 வீதம் சரியானதே என்பது கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இலங்கை மீது சோழர்கள் படையெடுத்து பௌத்தர்களின் பாரம்பரியத் தலைநகரான அனுராதபுரத்தை அழித்ததுடன் புலப்பட்டது. சிங்கள பௌத்தர்களின் மனதில் மகாவம்சம் ஒரு வேதவாக்கு நூல் என்ற அந்தஸ்தையும் பெற்றது.

இலங்கையில் அரசியலுக்கு வருகின்ற எந்தத் தலைவரும் பௌத்த மதத்தவராகவும், பௌத்தத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதும் ஓர் எழுதப்படாத சட்டமாக ஆக்கப்பட்டது. தெலுங்கர்களான பண்டாரநாயக்க, ஜே.ஆர். போன்றவர்களின் மூதாதையர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்களாக மதம் மாறி அரச நலன்களை அனுபவித்தனர். இதே கிறிஸ்தவ குடும்பங்கள் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் கிறிஸ்தவத்திலிருந்து பௌத்தத்துக்கு மாறின.

இன்றுள்ள பௌத்த தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா போன்றவர்களின் பூர்வீகம் தென்னிந்தியக் கோயில்களுடன் தொடர்புபட்டதாகும். இதற்காகவே வருடா வருடம் அவர்கள் தமது குல தெய்வ வணக்கத்துக்காக இந்தியா சென்று வருகின்றனர். தெலுங்கர்களாக இருந்தவர்கள் இந்தியாவிலிருந்து சிங்கள மன்னர் காலத்து திருமண உறவுகள் காரணமாக இலங்கையில் வந்து முக்கிய பிரதானிகளாக மாறியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்ச்சியாகப் பார்த்தால் மகாவம்சத்தில் கூறுவதுபோல சிங்களவர்கள் வட இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பது பிழையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை புலனாகும்.

**சிங்களவர்கள் திருந்தினாலே தீர்வு சாத்தியம்**

சிங்கள பௌத்தத்தில் மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் தீர்ப்புக்களே இறுதித் தீர்ப்பென ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், சிறுபான்மை இனங்களான இந்துக்களும் இஸ்லாமியர்களும் புறக்கணிக்கப்படுவது மிகச் சாதாரணமாகிவிட்டது. இலங்கை அரசமைப்பில் 'பௌத்த மதத்துக்கு முதன்மை மதிப்பு' என்று எழுதப்பட்டுள்ளதே தவிர 'நீங்கள் அரசியல் விடயங்களிலோ, நாட்டை ஆளுகின்ற விடயங்களிலோ கருத்துக்கூற முடியாது' என்று எந்தச் சிங்களத் தலைவர்களும் கருத்து வெளியிட்டு தமது அரசியலை இழந்து விடத் தயாராக இருக்கப்போவதில்லை.

அதனால் தான் 'புதிய அரசமைப்பு ஒருபோதும் வேண்டாம்' என அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் ஒருமித்த குரலில் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்த பௌத்த பீடங்களில் அதியுயர் செல்வாக்கு பெரும்பான்மைச் சிங்கள பௌத்தர்கள் மத்தியிலும், சிங்கள கிறிஸ்தவர்கள் மத்தியிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆக, சிங்களவர் அனைவரும் மத வெறியுடன் அரசியலை அணுகும்வரை சிறுபான்மையினர் இந்த நாட்டில் சமத்துவமாக வாழ முடியாது. தீர்வு சாத்தியப்படாது. ■

> இலங்கை அரசமைப்பில் 'பௌத்த மதத்துக்கு முதன்மை அந்தஸ்து' என்று எழுதப்பட்டுள்ளதே தவிர 'நீங்கள் அரசியல் விடயங்களிலோ, நாட்டை ஆளுகின்ற விடயங்களிலோ கருத்துக்கூற முடியாது' என்று எந்தச் சிங்களத் தலைவர்களும் கருத்து வெளியிட்டு தமது அரசியலை இழந்துவிடத் தயாராக இருக்கப்போவதில்லை. அதனால் தான் 'புதிய அரசமைப்பு ஒருபோதும் வேண்டாம்' என அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் ஒருமித்த குரலில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சிறுகதை

ஹரிஹரன் அஜந்தன்

# ஆனந்தக் கண்ணீரில் அபிஷேகம்



கள்ளச் சிரிப்புடன் "அம்மா…! சரியான தண்ணி விடாயா இருக்குது…" வியர்வை வழிந்துகொண்டிருக்க, என்னைச் சைக்கிளில் ஏத்தியபடி போய்க்கொண்டிருக்கும் அம்மாவிடம் கேட்டேன்.

"இன்டைக்கு அம்மாட்டைக் காசு இல்லையப்பு… நாளைக்குக் காசிருந்தால், பள்ளிக்கூடம் முடியப் பிள்ளைக்கு வாங்கித்தாறன்" இயலாமை அவரின் குரலில் எட்டிப்பார்த்ததை என்னால் உணர முடிந்தது.

ஒரே குருதியல்லவா? அவரை மனம் நோக வைத்துப் பார்க்க எனக்கு மனம் ஒப்பவில்லை. "ஐயோ அம்மா! நான் ஐஸ்கிறீமைக் கேக்கேல்ல. நீங்க முந்தநாள் வாங்கித்தந்தனீங்கள் தானே. நான் திரும்பத் திரும்பக் கேட்பனே? எனக்குத் தண்ணி தான் விடாய்க்குது. சிவன் கோயிலுக்குப் பக்கத்தில இருக்கிற தண்ணிப் பைப் அடியில நிப்பாட்டுங்கோ…"

நான் சமாளிப்பது அம்மாக்குத் தெரியாமலிருக்குமா? ஐஸ்கிறீம் கடை தாண்டிப்போக வாற சிவன் கோயிலடியில சைக்கிளை நிப்பாட்டினார் அம்மா. எனக்குத் தண்ணி விடாய்க்கவில்லை. ஆனாலும், சாட்டுக்குக் கொஞ்சம் குடிச்சிட்டு அம்மாவைக் குடியுங்கோ எண்டுட்டுப் போய்ச் சைக்கிளுக்குப் பக்கத்தில நிண்டன்.

> "நான் 'பாஸ்' பண்ணுவன். சிலநேரம் நான் 'பெயில்' ஆகி விட்டால்… என்ன செய்வியள்?" "நீ பாஸ் பண்ணுவாய் எண்டு எனக்கு நம்பிக்கை இருக்கு. உனக்குத் தான் உன்ர சொந்தக் காரங்களைப் பற்றித் தெரியுமே… நீ 'பெயில்' ஆகிட்டாய் எண்டா அவங்கட முகத்திலை நான் முழிக்க ஏலாது…."

ஒவ்வொரு புதனும் வெள்ளியும் 'ஸ்கூலில' சதுரங்கப் பயிற்சி வகுப்பு நடக்குறது. அது முடிய 'லேட்' ஆகிறதால 'ஸ்கூல்' வானில வரமுடியுறதில்லை. அம்மா தான் வீட்ட இருந்து சைக்கிள்ல வந்து என்னை ஏத்திக்கொண்டு போறவா. உரும்பிராயில இருந்து பொஸ்கோ சுமாரா ஏழு கிலோமீற்றர்கள் இருக்கும். இப்ப ஸ்கொலர்ஷிப் முடிஞ்சதால பரவாயில்லை. ஸ்கொலர்ஷிப்புக்கு முன்னர் ஒவ்வொரு சனிக்கிழமையும் பரீட்சை வகுப்பு நடக்கும். அதுக்கும் அம்மா தான் காலமையில ஏத்திக்கொண்டு வந்து விட்டுட்டு வகுப்பு முடியுற மட்டும் நிண்டு ஏத்திக் கொண்டு போவா. எனக்காக அம்மா சரியாக் கஷ்டப்படுகிறா எண்டு எனக்குத் தெரியும்.

■ ■ ■

"என்ன 'றிசேல்ட்' ஐப் பத்தின யோசனையோ…?" லேஞ்சியால் முகத்தைத் துடைத்தபடி அம்மா கேட்டார். "சீ… சீ.." எண்டபடி சைக்கிளில் ஏறி நான் இருந்திட்டன்.

"அப்பாக்கு இன்டைக்கு வேலையோ அம்மா?"

"அவருக்கு இன்டைக்குப் பகல் வேலையாம். அதாலைதான் விடிய வரேல்ல. வந்திருந்தார் எண்டா உனக்கு ஏதாச்சும் வாங்கிக் குடுக்கச் சொல்லிக் காசு தந்திருப்பார்"

"பரவாயில்லையம்மா…"

அப்பா செக்யூரிட்டிகார்ட். இப்படிப் பின்னேர வகுப்பு இருக்கிற நாளில காசிருந்தா அம்மாட்டக் குடுத்துவிடுவார். எங்கட வீட்ட மோட்டார் சைக்கிள் ஒண்டும் இல்லை. அப்பாட்ட ஒரு 'ஜென்ட்ஸ்' சைக்கிள் இருக்குது. அவர் வேலைக்குப் போய் வாரதால என்னை ஏத்தி, இறக்க முடியுறதில்லை. சித்தி வீட்ட போய், அவான்ர 'லேடிஸ்' சைக்கிளை வாங்கி வந்து அம்மா தான் என்னை ஏத்தி இறக்குவா.

"எப்பயம்மா, 'றிசேல்ட்' வருகுதாம்?"

"இன்னும் நாலைஞ்சு நாளில வந்திடுமாம் எண்டு ஸ்கூல்ல வைச்சு நிரஞ்சன்ர அம்மா சொன்னவா. நீ எத்தனையடா எதிர்பார்க்கிறா"

"அடக்கடவுளே, இதோடை 50,60தரத்துக்கு மேலை கேட்டுட்டியள்"

அக்கா பிரச்சினை நேரம் தான் எக்சாம் எழுதினவள். அவயளுக்கு ரெண்டு தடவை எக்ஸாம் நடந்தது. முதல் தடவை பாஸ் ஆகிட்டாள். பிறகு ரெண்டாவது தடவை மூண்டு மார்க்ஸ் இல்லாமல் பெயில் ஆகிட்டாள். அதாலை அம்மா என்ர றிசேல்ட்டை ஆவலாக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறா.

"நான் 'பாஸ்' பண்ணுவன். சிலநேரம் நான் 'பெயில்' ஆகி விட்டால்… என்ன செய்வியள்?"

"நீ பாஸ் பண்ணுவாய் எண்டு எனக்கு நம்பிக்கை இருக்கு. உனக்குத் தான் உன்ர சொந்தக் காரங்களைப் பற்றித் தெரியுமே… நீ 'பெயில்' ஆகிட்டாய் எண்டா அவங்கட முகத்திலை நான் முழிக்க ஏலாது…."

அம்மாவின் வார்த்தைகளைத் தொடர்ந்து மௌனம் நிலவியது.

"நான் சும்மா தான் கேட்டனான்" எண்டபடி அம்மான்ர முதுகில் சாய்ந்து கொண்டேன்.

என்ர சொந்தக்காரங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி. கொஞ்சப் பேருக்கு எனக்காகக் கஷ்டப்படுற அம்மாவைக் குறைசொல்லுறது தான் வேலை. "ஊரில ஏதாச்சும் ஸ்கூல்ல சேர்த்திருக்கலாம். வேலை மினக்கட்டு ஏத்தி இறக்கிக் கொண்டு திரியுறாய்" எண்டு வெளிப்படையாகவே சிலர் அம்மாவைப் பேசக் கண்டிருக்கிறேன். "இவனெல்லாம் படிச்சு என்னத்தைக் கிழிக்கப் போறான்…" எண்டு என்ர காதில விழும்படியாக்கூடச் சிலர் சொல்லியிருக்கினம். "இப்படியான சொந்தக் காரங்கட கதைக்காகவே நீ கட்டாயம் 'பாஸ்' பண்ணோனும்" எண்டு அடிக்கடி அம்மா சொல்லுவா.

அதே நேரம் என்ர சித்தியும், சித்தப்பாவும் என்னுடைய அப்பா, அம்மாவைப்போலவே, என்னில நல்ல நம்பிக்கை வச்சிருக்கினம். "அஜந்தன்! உனக்குத் தெரியும் தானே? உன்ர அம்மா உனக்காக எப்படியெல்லாம் கஷ்டப்படுறா எண்டு. அவா படுறகஷ்டத்துக்கெல்லாம் நீ பாஸ் பண்ணினால் தான் பலன் கிடைக்கும்" சித்தி அடிக்கடி உற்சாகப்படுத்திக் கொண்டிருப்பார். சித்தப்பாவும் அப்படித்தான் அவர் கதைக்கிற ஒவ்வொரு வார்த்தையும் எனக்குள் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

என்னில் அக்கறையும் நம்பிக்கையும் வைச்சிருக்கிற எல்லோருக்காகவும் நான் 'பாஸ்' பண்ணியே ஆகவேணும் எண்டு மனதுக்குள் எண்ணிக் கொண்டிருக்கையில் வீடு வந்துவிட்டது.

■ ■ ■

உடுப்பு மாத்திக்கொண்டு ரியூசனுக்கு வெளிக்கிட்டன். என்ர ஸ்கூலுக்கு அடுத்தபடியா நான் படிச்ச அந்தத் தனியார் அக்கடமி தான் என்னை எக்ஸாமுக்கு நல்லாத் தயார்ப்படுத்தி அனுப்பினது. ரியூசன் முடிஞ்சு வீட்ட வந்திட்டன்.

என்னவோ தெரியவில்லை இண்டைக்கு என்ர மனதில் முழுக்க றிசேல்டைப் பத்தின எண்ணம் தான் அதிகமா இருக்குது. ஒருபோதும் நான் இப்படிக் குழம்பியது இல்லை.

பொழுது புலர்ந்தது. ஸ்கூல் வான் வந்தது. அதில் ஏறினேன் ஸ்கூல் வந்து சேர்ந்தேன். வகுப்பில் வழமைபோலவே பாடம் நடந்து கொண்டிருந்தது. திடீரென்று பக்கத்து வகுப்பு ரீச்சர் வந்து எங்கட வகுப்பு ரீச்சரைக் கூப்பிட்டு ஏதோ சொன்னார். தரம் ஐந்துக்குக் கற்பிக்கின்ற எல்லா ஆசிரியர்களும் தங்களுக்குள் கதைத்தபடி ஒன்று சேர்ந்து அலுவலகத்துக்குள் போயிட்டினம்.

நிமிடங்கள் கரைந்தோடின.

வகுப்புக்குள் வந்த ரீச்சர் கூறியவார்த்தைகளால் வகுப்பில் திடீர் அமைதி நிலவிற்று. "பிள்ளையள், றிசேல்ட் வந்திட்டுது. நூற்றி நாப்பது மார்க்ஸ் கட் அவுட். மாவட்டத்தில் எங்கடை ஸ்கூல் தான் முதலாவது…" நிலவிய அமைதியை உடைத்து நொருக்கும்படியாக கைதட்டலுடன், கத்தி ஆரவாரம் செய்தோம். ரீச்சர் தொடர்ந்தார். "நீலலோகனும் செந்தில்குமாரனும் தான் மாவட்டத்திலை முதலாவது. 184 மார்க்ஸ்"' கைதட்டல் அதிகரித்தது. "கத்தாமல் இருங்கோ பிள்ளைய்ளே…" மொத்தமா 74பேர்தான் பாஸ் பண்ணியிருக்கிறியள்' என்டபடி கொஞ்சப் பேரின்ர சுட்டிலக்கத்தை வாங்கிக் கொண்டு போனார்.

இப்போது வகுப்பில எல்லோரும் கூடிக் கதைக்கத் தொடங்கி இருந்தொம். "டேய் நான் பாஸ் பண்ணியிருப்பனா? நீ பாஸ் ஆகி இருப்பாயா?" எண்டு ஆளாளுக்கு மாறி மாறிக் கேட்டுக்கொண்டோம். ரீச்சர் திரும்பிவந்தார்.

"ரீச்சர் ஸ்கூல்ல மூன்றாவது யார்…" வகுப்பிலிருந்து ஒருகுரல். "பக்கத்து வகுப்பு நிரஞ்சன். 176 புள்ளிகள்"

"என்னடா எங்களுக்கு 170 மார்க்ஸ் கூட வராதுபோல இருக்கேடா!"

"அடப்போடா. இங்க பாஸ் ஆகி இருப்பமா? இல்லையா? எண்டு ஆளாலுக்குப் பயந்து கொண்டிருக்கிறம். நீ என்னடா என்டா…" நாங்கள் கதைச்சுக்கொண்டிருக்க ரீச்சர்,

43

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அணு ஆயுதங்களற்ற உலகை நோக்கி...



கட்டுரை
பேராசிரியர் கே. ராஜு

கடந்த 10 ஆண்டுகளில் இரண்டாவது முறையாக 'அணு ஆயுதங்களற்ற உலகு' என்ற உன்னத நோக்கத்துக்காக இந்த ஆண்டிலும் நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. எட்டு ஆண்டுகளுக்கு முன் 2009ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமாவுக்கு இந்தப் பரிசு அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும் என்ற பன்னாட்டுப் பரப்புரைக் குழுவுக்கு (இன்ரெர் நெசனல் கம்பைக்ன் ரூ அபோலிஷ் நியுக்ளியர் வெபன்ஸ் - ஐ.சி.ஏ.என்) இந்தப் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது. அணு ஆயுதங்களின் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த அமைப்பு சோர்வின்றிச் செயற்பட்டு வருகிறது.

**அணுவால் கற்ற பாடம்**

1945 ஒகஸ்டில் ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகியில் அமெரிக்கவால் வீசப்பட்ட அணு குண்டுகள் விளைவித்த பேரழிவை, மனித குல வரலாற்றில் குத்தப்பட்ட கரும்புள்ளியை யாரால் மறக்க இயலும்? அன்று குண்டுவீச்சில் உடனடியாக இறந்தவர்கள் பாக்கியசாலிகள். உயிர் பிழைத்தவர்கள் புற்று நோய் வந்து அணுஅணுவாகச் சித்திரவதைப்பட்டு குரூரமாகத் தமது சாவை அடைந்தனர். அங்கே குழந்தைகள் பல ஊனங்களுடன் பிறப்பது இன்று வரை நீடிக்கிறது. இந்த வரலாறு மீண்டும் ஒரு முறைகூட திரும்பக்கூடாது என்ற நற்சிந்தனை உள்ள பல நாடுகள் உலகிலிருந்து அணுஆயுதங்களை முற்றாக ஒழித்துவிட வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டுள்ளன.

**ஆடுகள் கூடிய கூட்டம்**

அணு ஆயுதங்களை ஒழிப்போம் என்ற இந்த அமைப்பின் முன்முயற்சியால் ஐ.நா. பொதுக்குழுவில் அணு ஆயுதங்கள் தடை பற்றிய ஒப்பந்தம் 2017ஆம் ஆண்டு ஜுலை 7ஆம் திகதி அன்று நிறைவேற்றப்பட்டது. 122 நாடுகள் அதற்கு ஆதரவு அளித்தன. நெதர்லாந்து எதிர்த்து வாக்களித்தது. சிங்கப்பூர் வாக்களிக்கவில்லை. முன்னர் அணு ஆயுதங்களை வைத்திருந்து பின்னர் தாமாகவே அவற்றைத் துறந்துவிட்ட தென் அமெரிக்காவும் கஜகஸ்தானும் தீர்மானத்தை ஆதரித்தன. ஈரானும் சவூதி அரேபியாவும் கூட ஆதரித்தன. அணு ஆயுதங்களை வைத்திருக்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகள், 'நேட்டோ' நாடுகள் உட்பட 69 நாடுகள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. 'செம்மறி ஆடுகள் எல்லாம் கூடி எல்லாப் பிராணிகளும் சைவத்துக்கு மாற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றின. அந்தக் கூட்டத்தில் புலிகள், ஓநாய்கள், சிங்கங்கள் எல்லாம் கலந்து கொள்ளவில்லை' என்று ஒரு கதை சொல்வார்களே! உலக நடப்பும் அப்படித்தான் இருந்தது.

**நகைப்புக்குரிய முரண் நிலை**

அணு ஆயுதப்பரவல் தடையை ஆதரிப்போருக்கு இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது பரவசம் அளிக்கும் தருணம்தான். ஆனால் இந்தப் பரவசத்துடன் அவர்கள் நின்றுவிடக் கூடாது. இந்தப்போக்கில் முன்னேற்றம் ஏற்பட அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைக்கத் தேவையான அடுத்தடுத்த நடவடிக்கைகளில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். இல்லையெனில் தடை ஒப்பந்தம் ஒரு தார்மீக வெற்றி என்ற அளவோடு நின்று விடும். அணு ஆயுதம் மனிதர்களுக்கு விளைவிக்கும் துயரங்களைத்



தவிர்க்கவேண்டுமாயின் அவற்றைப் பயன்படுத்துதல் சட்டவிரோதமானது என்று குறிப்பிடக் கோருகிறது இந்த ஒப்பந்தம். 2009இல் ஒபாமாவுக்கு பரிசு அளிக்கப்பட்ட பிறகுதான் அணுஆயுத ஆபத்து அதிகரித்திருக்கிறது என்பது நகைமுரண். பல நாடுகளின் அணுஆயுத பலம் கூடியிருக்கிறது. சதாம் உசைன் மாதிரி ஏமாளியாக இருந்து அமெரிக்காவின் கைகளில் சிக்கி மடிய கிம் ஜோங் உன் தயாராக இல்லை. அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையேயும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயும் பரஸ்பர அச்சுறுத்தல்களும் சவால்களும் இல்லாத நாளே இருப்பதில்லை.

**தற்காப்புக்காக அணு...!**

அணு ஆபத்தை எதிர்நோக்கும் நாடுகள், தற்காப்புக்காகத் தாமும் அணுஆயுதங்களை வைத்திருக்க வேண்டும் என்ற ஆழமான எண்ணத்தில் இருக்கின்றன. உதாரணமாக, இதுபற்றி அறிந்துகொள்வதற்குத் தென்கொரியாவில் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் 60 சதவீத மக்கள் வடகொரியாவிலிருந்து வரும் ஆபத்தை எதிர்கொள்ள தென்கொரியாவும் அணு ஆயுதங்களை வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தனர். அணுஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பாகிஸ்தான், சீனா, வடகொரியா போன்ற நாடுகள் தங்களது அணு ஆயுத பலத்தை நவீனப்படுத்துவதில் முனைகின்றன. இந்தப் போக்குகள் அணுஆயுதத் தடை ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவேண்டும் என விரும்புவோருக்கு சவால்களாக இருக்கின்றன.

'தற்காப்புக்காக' என்று காரணம் சொல்லிக் கொண்டு எல்லையற்ற விதத்தில் நாடுகள் தங்கள் அணுஆயுத் பலத்தை விரிவுபடுத்திக் கொண்டே போகின்றன. இதைத் தடை ஒப்பந்தத்துக்கு ஆதரவானோர் வலிமையாக எதிர்க்க வேண்டும். அணுஆயுதமற்ற நாடுகளுகளின் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைக் குறைக்க உதவும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் அவர்கள் ஊக்குவிக்க வேண்டும். அணுஆயுதங்களைத் தடை செய்ய வேண்டும் என்போருக்கும் தற்காப்புக்காக அணுஆயுதங்களை வைத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்போருக்கும் இடையே உள்ள பொதுத்தளத்தை விரிவுபடுத்திப் பயணிக்க வேண்டிய சவாலான பாதை சமாதான ஆர்வலர்கள் முன் நீண்டு நெடிதாகக் கிடக்கிறது.

## நூல் அறிமுகம்

**நூல்: சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு (கவிதைத் தொகுதி)**
**ஆசிரியர் : விவேகானந்தனூர் சதீஸ்**
**விலை : 300ரூபா**
**வெளியீடு : காவியாலயா வெளியீட்டகம்**



சிறைக்குள் இருந்தவாறு சிங்கள சகோதரர்களுக்கு எதைச் சொல்லலாம்...? உறக்கம் கலைந்த ஒரு விடிகாலைப் பொழுதில் அர்த்தம் பொதிந்த கேள்வி ஒன்றை எனது மனது என்னிடம் கேட்டது. அத்தகவல் விர்ர்ர்... என்று மூளைக்குச் செல்ல, அங்கிருந்து முளைத்த வரிகளை முழு நிர்வாணமாய்த் தந்துள்ளேன். என் வாழ்க்கைத் தரிசனத்தில் ஒரு சிறு பகுதியாக 'சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு' எனும் இந்தக் கவிதைத் தொகுதியைக் கருதலாம். என்னுடைய எழுத்துக்களைப் புசித்துவிட்டு பொன்னாடை போர்த்துவார்கள் என்றோ பூசனங்கள் பூட்டுவார்கள் என்றோ கனவிலும் நினைக்கவில்லை. காரணம், இவை வைர முத்துக்களின் வாசமற்ற வெறும் வலிசுமந்த வார்த்தைகளால் கோர்க்கப்பட்ட கிறுக்கல்கள். கழிவுத் தாளில் கடித உறை செய்து சோற்றுப் பருக்கையில் ஒட்டி, களவாக அனுப்பிய ஆக்கங்களை ஒரு சில பத்திரிகைகள் பிரசுரிக்காது விட்டபோது அதனை நானே உணர்ந்து கொண்டேன். பெரிதளவில் எனக்குப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. அதனால் படிக்க முடியவில்லை. ஆனாலும் இலக்கியச் சுவைஞர்களிடம் கெஞ்சிக் கேட்டுப் பதிவுத் தபாலிலும் என்னைப் பார்க்க வரும் அம்மாவின் மூலமும் அவ்வப்போது சில புத்தகங்கள் கிடைத்தன. அவர்களுக்கு நன்றி. மூத்த, இளைய இலக்கியவாதிகள் பலருக்கு புத்தகங்கள் அனுப்பவிருப்பம் இருந்தும் நான் சிக்கியுள்ள 'பயங்கரவாதத் தடைச்சட்ட' விதியின் காரணத்தால் விலகிச் செல்கிறார்கள். இதில் வேடிக்கை இல்லையென்றே தெரிகிறது. இத் தொகுப்பிலே அடக்கப்பட்டுள்ள அறுபத்து சொச்ச கவிதைகளும் அனைவருக்கும் பிடிக்கும் என்று சொல்லவில்லை. நிச்சயம் சில குற்றம் குறைகள் இருக்கும். ஏனெனில் எனக்கு ஓசை, நயம், பாவம், சொல்லித்தர நானிருந்த சிறையில் யாரும் இருக்கவில்லை. ஆயுள் தண்டனையளிக்கப்பட்ட அரசியல் கைதியாக சதா அதனையே எண்ணி எண்ணி சிதைத்துக் கொள்ளாது. என்னை நானே ஆற்றுப்படுத்த ஆரம்பித்ததின் விளைவுதான் எனது அனுபவ இலக்கியம். (ஆசிரியர் – விவேகானந்தனூர் சதீஸ்)

**நூல்: அதிர்வுகள்**
**ஆசிரியர் : செ.அன்புராசா**
**விலை : 350ரூபா**
**வெளியீடு : அமலமரித் தியாகிகள்**

தொகுப்பு
அயக்கிரீவன்



புனைகதைகளான சிறுகதை, நாவல், இலக்கியங்கள் போன்றே கட்டுரையும் நவீன இலக்கிய வடிவங்களிலொன்று என்பதையோ, வலுவான – வளமான – வடிவமென்பதையோ பலரும் அறிவதில்லை. தமிழ் நாட்டிலே இத்துறை கண்ட வளர்ச்சி ஈழத்தமிழ்ச் சூழலில் இன்னும் ஏற்படவில்லை. எமது கல்லூரிப் பாடநூல்களுக்குக் கட்டுரைகள் தேடுகின்றபோது மு.வரதராசன்(மு.வ) தொடக்கம் தியோடர் பாஸ்கரன் வரை தமிழ்நாட்டு எழுத்தாளர்களை நாடிச் செல்கின்ற நிலையே இன்றுவரை காணப்படுகின்றது. ஈழத்தில் இத்துறை வளராமை எமது சமூகத்தினதும் எழுத்துலகினதும் பின்னடைவு நிலையையே வெளிப்படுத்துகிறது.

ஏனெனில், இன்றைய உலக மயமாக்கல் சூழல், இணையச் செல்வாக்கு, தலைமுறை இடைவெளி, முப்பதாண்டு ஊழிக்காலம், பண்பாட்டு மாற்றங்கள் முதலானவற்றினால் எமது சமூகம் குறிப்பாக இளம் தலைமுறைக்குத் தெரியாத பயணங்களை மேற்கொண்டு வருகிறது! இவர்களுக்கான தேவைகளிலொன்று, உளவியல், சமூகம், அரசியல், சூழலியல், உடல்நலவியல், ஆன்மீகம் முதலான பல்துறைசார்ந்த விடயங்களிலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதாகும்.

இத்தகைய திசை நோக்கி, ஆற்றுப்படுத்த ஏற்றதொரு வடிவமாகக் கட்டுரை இலக்கியம் கைகொடுக்கிறது. இத்தகைய கட்டுரைகள் சுவைபட எழுதப்படுகின்றபோது சிறுகதை, நாவல் முதலானவை ஏற்படுத்துகின்ற ஈர்ப்பினை இத்துறையும் ஏற்படுத்துமென்பது தமிழ்நாட்டிலேற்பட்டுள்ள இத்துறை வளர்ச்சி மெய்ப்பித்துள்ளது. அங்கே நடக்கின்ற புத்தகச் சந்தைகளிலே இத்துறைசார் நூல்கள் அதிகளவு விற்கின்றமை நாமறிந்ததே. எவ்வாறாயினும் ஈழத்தில் வைரநாதன் முதலான மிகச் சிலரும் புலம்பெயர்ந்த நாடுகளில் அ.முத்துலிங்கம் போன்ற சிலருமே இத்துறையில் ஈடுபாட்டுடன் உழைத்து வருகிறார்கள். அண்மைக்காலமாக இவர்களோடு இணைந்துகொண்ட அடிகளார் செ.அன்புராசா அவர்கள் இத்தொகுப்பினூடாகத் தமது எழுத்தாற்றலையும் சமூகப் பொறுப்புணர்வையும் மேலும் உறுதி செய்துள்ளார் என்ற துணிந்து கூறலாம். (பேராசிரியர் . சே.யோகராசா)

# கழுதையின் தந்திரமும் உப்பு வியாபாரியின் தண்டனையும்



ஒரு நாட்டில் உப்பு வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் ஊருக்குள் போக வேண்டும்.

ஒரு நாள் உப்பு வியாபாரி வழக்கம்போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்குச் சென்றான்.

வழியில் உள்ள ஆற்றைக் கடந்தபோது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கிவிட்டன. கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்து விட்டது.

கழுதை தவறி விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை நனைந்து விட்டது. கழுதையை வியாபாரி மெல்லத் தூக்கிவிட்டான். நீரில் மூழ்கியதால் உப்பு மூட்டை நனைந்து ஒரு சில நிமிடத்தில் அது தண்ணீரில் கரைந்து பாதி மூட்டையாகிவிட்டது. எனவே, கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை வெறும் சாக்குப்போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. ஆஹா என்ன ஆச்சரியம் இப்போது கழுதை முதுகில் சுமையே தெரியவில்லை.

கழுதைக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் வியாபாரிக்குப் பெரிய நஷ்டம். உப்பு வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை கூட்டிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாளும் வழக்கம்போல வியாபாரி உப்பு வியாபாரத்துக்கு ஆயத்தமானான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை கழுதைக்குக் கனமாக இருந்தது. கழுதை மெல்ல நடந்து ஆற்றுப் பாலம் அருகே வந்தது. திடீரென அதற்கு முந்தைய நாள் நினைவு வந்தது. எனவே, மெல்லத் தடுமாறுவதுபோல செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது.

அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை நீரில் கரைந்து விட்டது. இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை குறைந்து போய்விட்டது.


கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்தும் இதைச் செய்து வந்தது. இதனால் வியாபாரம் இல்லாமல் வியாபாரிக்குத் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டது. அத்துடன் அவனுக்குக் கழுதையின் தந்திரமும் புரிந்து கொண்டது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான்.

அன்று வியாபாரி கழுதையின் முதுகில் உப்பு மூட்டையை ஏற்றவில்லை. மாறாக, பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூட்டையைக் கழுதையின் முதுகில் ஏற்றினான். வழக்கம்போல அந்தப் பாலத்தின் அருகே வந்ததும் கழுதை எதிர்பாராமல் கால் தடுமாறுவது போல தடுமாறி ஆற்றுக்குள் விழுந்தது.


மூட்டையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. அது நீரில் ஊறிக் கனமாகிவிட்டது. வியாபரி அதை மீளவும் தூக்கிக் கழுதையின் முதுகில் ஏற்றினான். பஞ்சு மூட்டை அதிகமாகக் கனத்தது. கழுதையோ மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது.

தனது ஏமாற்று வேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றிவந்த வியாபாரிக்குத் தெரிந்து விட்டதை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடக்க முடிவெடுத்தது.

**நாம் யாரையும் ஏமாற்றக் கூடாது. அப்படிச் செய்தால், ஒரு நாள் நம் செயல் அவர்களுக்குத் தெரியவரும். அன்று அவமானம் அடைவோம். அதற்கான தண்டனையும் எமக்குக் கிடைக்கும்.**



**அ.தர்சினி பிரியா,**
**தரம் 2,**
**யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்**



**அ.அன்புமாறன்,**
**தரம் 5**
**யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்**

## வழிகாட்டுவோம்






வாசிப்போம் வாசிப்போம் - நாம்
வாழும் காலம் எல்லாம் வாசிப்போம்
வையகத்தில் உயர்வடைய வாசிப்போம்
வைத்தீஸ்வராவில் கல்வியில் உயர வாசிப்போம்

நுண்ணறிவை வாசிப்பால் வளர்த்திட
வேண்டுமென்றே வாசிப்பு வாரத்தை
ஒக்ரோபர் மாதம் முழுவதும்
நினைவூட்டுகின்றோம்



மன அழுத்தம் உங்களுக்கு உண்டா?
மகத்தான மருந்து சொல்வேன் கேளுங்கள் மானிடரே!
நல்ல நல்ல நூல்களைத் தேடி நீங்கள்
நாளுமே வாசிப்பதாலே நாம் வளரலாம் வாழ்வில்

ஆதி காலம் தொட்டு அறிவூட்டும் பல
நூல்களைக் கொண்டது நம் நூலகம்
மாணவர்கள் கல்வியிலே சிறக்க
வைரமாளிகையரின் மனமுவந்த பரிசுதான் நூலகம்
நூலகத்தை நூதானசாலையாக விடாது
நாளும் தேடித் தேடி அறிவை வளர்ப்போம்

**க.நிருந்தன்,**
**வைத்தீஸ்வராக்கல்லூரி.**

## ஜோசப் ஸ்ராலின்



ஜோசப் ஸ்ராலின் என்று அழைக்கப்படுகின்ற இவர் ரஷ்யாவைச் சேர்ந்தவர். ரஷ்யாவின் முதலாவது அரச தலைவர் லெனினின் மறைவுக்குப் பின், அந்த நாட்டின் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் 1922 முதல் 1953ஆம் ஆண்டு வரை தலைவராக விளங்கினார். இதற்கு முந்தைய காலத்தில் சிஸர் நிக்கோலஸ் II என்பவரின் ஆட்சிக்கு எதிராக, ரஷ்யாவில் பல்வேறு குழுக்கள் தோன்றின. சிஸர் நிக்கோலசின் முதலாளித்துவம், தனியார்மயம் மற்றும் முதல் உலகப்போரில் ரஷ்யாவை வலிந்து ஈடுபடுத்தியமை போன்றவை மக்களிடையே பரவலான எதிர்ப்பை உருவாக்கியிருந்தன. சம காலத்தில் புரட்சிக் கருத்துகளைப் பரப்புரை செய்ததற்காக கல்விக் கூடத்திலிருந்து வெளியேறும் சூழ்நிலை ஸ்ராலினுக்கு ஏற்பட்டது. இந்தக் காலத்தில் ஸ்ராலின், ஒரு புரட்சியாளராக, சிஸர் நிக்கோலசுக்கு எதிராகத் தனது முதல் உரையை நிகழ்த்தினார்.

அதன்பின்னர், புரட்சிக்குழுவினருடன் தன்னை இணைத்துக்கொண்ட ஸ்ராலின் சிறையில் அடைக்கப்பட்டார். 1902 முதல் 1913 வரையான கால கட்டத்தில் ஸ்ராலின் பலமுறை சிறைக்குச் சென்றதும், பல தடவைகள் தப்பித்ததும் நடந்தேறின. 1905இல் லெனினை ஸ்ராலின் முதன் முதலில் சந்தித்தார். அப்போது லெனின் அவரை மிகவும் ஊக்கப்படுத்தினார். அதற்குப்பின் பல சமயங்களில் ஸ்ராலின் நடத்தி முடித்த கொள்கைகள் மூலம் போல்ஷ்விக்சின் பொருளாதாரத்தை உயர்த்த உதவியுள்ளார். 1912 இல் லெனினின் கம்யூனிஸ்ட் கட்சியின் இதழொன்றில் செய்தியாசிரியராக நியமனம் செய்யப்பட்டார். அதன்பின், அதே ஆண்டில் மத்திய குழுவில் உறுப்பினராக்கப்பட்டு கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கிய நபராக மாறினார். அவர் செய்தியாசிரியராக பணியாற்றியபோது தாம் எழுதிய முதல் புரட்சிக் கட்டுரையின் முடிவில் ஸ்ராலின் என்னும் புனைபெயரில் கையெழுத்திட்டதன் மூலமாக ஜோசப் ஸ்ராலின் எனும்பெயர் வரலாற்றில் நிலைத்துவிட்டது.

1930களில் இவர் ஏற்படுத்திய அரசியல் தூய்மைப்படுத்தல் கொள்கையின் படி பலர் குற்றச்சாட்டுகளுக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் பல்வேறு காரணங்களைக்காட்டி இவர் படுகொலை செய்ததாகச் சொல்லப்படுகிறது. இதனால் பயங்கரவாதி என்றும் இவர் அழைக்கப்பட்டார்.

Search

# சின்னதா ஓர் அரட்டை

# வந்தார்கள் கொன்றார்கள் சென்றார்கள்

இது ஜூனியர் விகடனில் மதன் எழுதிய 'வந்தார்கள், வென்றார்கள், சென்றார்கள்' என்ற கதை அல்ல. அமைதிப்படை என்று வந்து அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்துவிட்டுச் சென்ற இந்திய இராணுவத்தின் கதை.

கொடுங்கோலன் என்றழைக்கப்பட்ட ஹிட்லர்கூட தன்னுடைய எதிரி நாட்டு மருத்துவமனைகளையோ நூலகத்தையோ தாக்கியது கிடையாது. ஆனால் அமைதிப்படை என்று வந்தவர்கள் யாழ்.மருத்துவமனையைத் தாக்கிப் பல அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றார்கள்.

யாழ். மருத்துமனையில் மட்டும் படுகொலைகள் நிகழ்த்தப்படவில்லை. வல்வையில் நடத்தப்பட்டது. பிரம்படியில் நடத்தப்பட்டது. வடக்குக் கிழக்கு முழுவதும் சுமார் இரண்டரை வருடங்களில் எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். எழுநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் இந்திய இராணுவத்தால் வன்புணரப்பட்டார்கள்.

மக்களைத் தாம் கொன்றமைக்குப் புலிகள் பொதுமக்களுக்குள் இருந்து தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் தான் அவர்கள் இறக்க நேரிட்டது என இந்திய அதிகாரிகள் காரணம் கூறுகின்றனர். அப்படியென்றால் பெண்கள் அவர்களால் வன்புணரப்பட்டமைக்கு என்ன காரணம்? ஏன் இதுவரை ஒரு இராணுவம்கூட இந்த விடயத்தில் தண்டிக்கப்படவில்லை?

அதுமட்டுமன்றி, அமைதிப்படையின் முதல் குண்டு புலிகளைத் தாக்கவில்லை. மாறாக ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தையல்லவா தாக்கியது. 48 மணி நேரத்தில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் இந்திய இராணுவச் சிப்பாய்கள் அமைதிப்படை என்று வந்தார்கள். அந்த அமைதிப்படை துப்பாக்கிகளுடன் மட்டும் வரவில்லை. பீரங்கி, டாங்கி போன்ற கனரக ஆயுதங்களுடனும் அல்லவா வந்தது. வந்தவர்கள் புலிகளை ஆயுதங்களை ஒப்படைக்கும்படி வற்புறுத்தினார்கள். மறுபுறம் புளொட், ரெலோ போன்ற இயக்கங்களுக்கும் ஆயுதங்களை வழங்கிப் புலிகளை அழிக்கும்படி கூறினார்கள். இத்தனையும் இந்திய இராணுவம் செய்தது தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக அல்ல. மாறாக இலங்கை மீதான தனது ஆக்கிரமிப்புக்காகவே. இத்தகைய இந்தியா நல்லதொரு தீர்வைப் பெற்றுத் தரும் என்று இப்போதும் நாம் நம்பிக்கொண்டிருப்பது முட்டாள்தனம் இல்லையா?





# கழுத்தறுத்தது கந்துவட்டி

வந்தாரை வாழவைத்த தமிழகம் இன்று தான் வாழ முடியாமல் தற்கொலை செய்கிறது! அண்மையில் தமிழகத்தில் கந்துவட்டிக் கடன் தொல்லை காரணமாக ஒரு குடும்பமே தீக்குளித்து இறந்துள்ளது. அதைப் பார்த்துக் கொண்டு நின்று படமெடுத்துக் கொண்டிருந்தவர்கள் விமர்சிக்கப்படுமள வுக்கு இதற்குக் காரணமானவர்களோ, அரசோ விமர்சிக்கப்படவில்லை. இதில் கந்துவட்டிக்காரனைத் தண்டிப்பதால் எந்தப் பயனும் இல்லை. மக்களை கடனில் தள்ளிய அரசுகளையே தண்டிக்க வேண்டும். இந்தியாவில் மட்டுமல்ல எமது நாட்டிலும் இந்தக் கொடுமை இருக்கிறது. 'மீற்றர் வட்டி, மாத வட்டி' என்று ஊர்மனைகள் தோறும் அதிக வட்டிக்குப் பணத்தை வாடகைக்கு விடுவோர் இருக்கத்தான் செய்கிறார்கள்.



# முன்னுக்குப் போனால் முட்டும் பின்னுக்கு போனால் உதைக்கும்

"தீர்வு கிடைக்காமல் இருப்பதற்குப் புலிகளே காரணம்" என்று புலிகள் இருக்கும் காலத்தில் கூறிவந்தது இந்தியா. இப்போது "புலிகள் அற்ற நிலையில் புலிகளின் போராட்டம் தோல்வியடைந்தமையால் தீர்வு பெற்றுத் தர முடியவில்லை" என்று கூறுகிறது. வடமாகாணசபை முதல்வரும் மற்றும் உறுப்பினர்களும் தமிழ் மக்களின் உரிமை தொடர்பாக அவ்வப்போது தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றனர். இதனை அவதானித்த இந்தியா அவர்களை அழைத்து டெல்லியில் வைத்து "புலிகளின் போராட்டம் தோல்வியடைந்தமையால் தீர்வு பெறுவதற்கான வாய்ப்பு அரிது என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும்படி" அறிவுறுத்தியுள்ளது.

14 வடமாகாணசபை உறுப்பினர்களும் 5 அதிகாரிகளும் இந்தியா சென்றுள்ளனர். அதில் ஒருவர்கூட "இத்தனை நாளும் தீர்வு பெற்றுத் தருவதாக கூறிவிட்டு இப்போது தீர்வு பெற முடியாது என்று சொல்வது என்ன நியாயம் ?" என்று பதிலுக்கு இந்தியாவிடம் கேட்கவில்லை. தமிழ் மக்களுக்குத் தீர்வு தர முடியாது என்று இலங்கை அரசதலைவரும் தலைமை அமைச்சரும் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுத் தரமுடியாது என்று இந்தியாவும் உறுதியாகக் கூறிவிட்டது. ஆனால் இத்தனை அழிவுக்கும் உதவி புரிந்த இந்தியா தீர்வு பெற்றுத் தரும் என்று இன்னமும் நம்பிக் கொண்டிருப்பவர்களை என்னவென்று சொல்வது?

# "எலக்சனுக்கு தயாராகுறார் போலை"

"பிரபாகரன் எனது தலைவர். மிகவும் ஆளுமை மிக்க தலைவர்" என்றிருக்கிறார் எட்டப்பன் பரம்பரையில் வந்தவர் என்று மக்கள் வசைபாடிக் கொண்டிருக்கும் கருணா அம்மான்.

"பிரபாகரனுக்கு எந்தவித ஆளுமையும் இல்லை. நான் தான் இயக்கத்தின்ர சண்டைகளை வழிநடத்தினேன். சண்டைக்கான ஆலோசனைகளை நான் தான் அவருக்கு வழங்கினேன்" என்று அன்று கூறிய அதே கருணா. "எலக்சனுக்குத் தயாராகுறார் போலை" என்று முகநூலில் மாத்திரமல்ல அவருடைய முகத்துக்கு நேராகவும் கூறுவதற்குப் பின்னிற்கப் போவதில்லை எனக் குவிகின்றன நெட்டிசன்கள்.



அலசல்
மேரிகிறேஸ் வரதராஜன்



# எல்லாம் வல்ல ஆண்டவரே...! இந்தக் கணினியை திருத்துவீராக!

இந்தியாவின் மிகவும் செல்வந்தக் கோயில் என்று பெயர் பெற்றது திருப்பதி. எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் அரசியலில் பதவி ஏற்றதும் முதல் தரிசனம் பெறும் கோயில் இது.

கடந்த வாரம் இந்தக் கோயிலில் உள்ள கணினிகள் யாவும் 'வைரஸ்' தாக்குதலால் பழுதடைந்திருக்கின்றன. "என்னது? எல்லாம் வல்ல ஏழுமலையான் உள்ள இடத்தில் கணினியை வைரஸ் தாக்கிவிட்டதா" என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். இதற்கே ஆச்சரியப்பட்டால் எப்படி? இந்தக் கோயிலில் உள்ள கடவுளே களவு போய்விடக்கூடாது என்று ஆயுதம் ஏந்திய பொலிசாரால் காவல் காக்கப்படுகின்றார் என்பதை அறியும்போது கணினிகள் பழுதடைந்ததில் என்ன ஆச்சரியம் ஏற்படப்போகிறது.

சரி இப்போது விடயத்துக்கு வருவோம். இந்த ஏழுமலையான் மிகவும் 'பவர்புல்' கடவுள் என்றுகூறி இங்கிருந்து மகிந்த மட்டுமன்றி மைத்திரி, ரணில் போன்றவர்களும் அடிக்கடி சென்று வணங்குகிறார்கள்? தமிழ்ப் பகுதியில் உள்ள இந்து கோயில்கள் மீது குண்டு வீசித் தகர்த்தவர்கள் இந்தியா சென்று அதே இந்துக் கடவுள்களை வணங்குவது என்பது கடவுள்களை ஏமாற்றும் செயலா? அல்லது மக்களை ஏமாற்றும் செயலா?



கட்டுரை

ஏ. ஜே. ஞானேந்திரன்

# காலனாக மாறுகின்றது காலநிலை

இயற்கையை இயற்கையாக இருக்கவிடாமல் செயற்கைத் தனங்களைப் புகுத்தி அதனுடன் மல்லுக்கட்ட ஆரம்பித்தால், விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும் என்பதில் சந்தேகமே வேண்டாம். அதைத்தான் நாம் இன்றைக்குக் கண்கூடாகப் பார்க்கிறோம். இனியும் பார்க்கப் போகிறோம்.

மேற்கத்தேய நாடுகளில் காலங்கள் நான்கு என்கிறார்கள். எமக்கோ இரண்டு காலங்கள்தான். மாரி, கோடைகாலத்துக்குள் எல்லாமே உள்ளடக்கம்.

இப்படிப் பிரித்துப் பிரித்துக் காலங்களைச் சொல்லிய அந்தப் பொற்காலம் மலையேறிப் போய்விட்டது என்றே இன்று சொல்லத் தோன்றுகிறது. எல்லாமே பருவம் தப்பி நிகழ்வது சாதாரண நிகழ்வுகளாகி இருக்கின்றன.

இப்படியாகக் காலங்கள் பருவம் தப்பி வருவதுமல்லமால் அவற்றின் வருகையும் ஆக்ரோஷமாக இருக்கிறது. அழிவுகளும் பெரிதாக இருக்கின்றன.

பருவ மாற்றங்கள் பல உயிர்களைப் பலியெடுப்பது அடிக்கடி சம்பவிக்கும் ஒன்றாக மாறி இருக்கின்றது. கடந்த இரண்டு வருட இயற்கை இடர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டு கடந்த இரண்டு ஆண்டுகளையும் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விடுமாற்போல் இயற்கை சினம் கொண்டிருப்பது புரியும். தெற்காசிய நாடுகளில் பெரு வெள்ளம். வட அமெரிக்காவில் சூறா வளியின் பேயாட்டம். ஆபிரிக்காவில் மண் சரிவுகள், பெரு வறட்சி இந்தோனேஷியத் தீவுகளில் சுனாமி அச்சுறுத்தல் என்று உலக நாடுகள் பந்தாடப்பட்டுக்கொண்டிருக்கின்றன.










### நாடுகள் பலவற்றிலும் இயற்கை கோரத்தாண்டவம்

ஆபிரிக்க நாடான சிம்பாவே பெருமழையை எதிர்கொள்ள முடியாமல் திணறியது. போதாக் குறைக்குச் சூறாவளித் தாக்குதல்களும் சேர்ந்து கொண்டன. பல ஆயிரம் பேர் நடுத்தெருவில் நிற்கும் நிலை வந்ததோடு குறைந்த பட்சம் 117பேர் வரையில் பலியாகினார்கள். இங்கு 2016 ஒக்ரோபரிலிருந்து மார்ச் 2017வரை இறந்தவர்கள் தொகை 246க்குக் குறையாது என்கிறார்கள். இந்த வரிசையில் அடுத்து சீனாவைக் குறிப்பிடலாம். இந்த ஆண்டு நடுப் பகுதி வரை மழையும் பெரு வெள்ளமும் 144உயிர்களைக் கொன்றுள்ளன. வேறு பல இயற்கை அனர்த்தங்களும் 70பேர் வரையில் உயிரிழக்கக் காரணமாகியிருக்கின்றன.

தென் அமெரிக்க நாடான பெரு பேரழிவைச் சந்தித்ததும் இங்கு குறிப்பிடப்படக் கூடியது. தொடர்ச்சியான பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு மூலம் அங்கு இயற்கை 150 பேர்களின் உயிர்களுக்கு எமனாகியது. இந்த அனர்த்தம் ஒரு மில்லியன் வரையிலானவர்களைப் பாதித்துள்ளது. இந்த வரிசையில் அடுத்து வருவது ஆப்கானிஸ்தான் . கடந்த பெப்ரவரி மாத முடிவில் , அதன் 22 மாவட்டங்களில் கொட்டிய பெருமளவு பனி, அடை மழை, பேரழிவை ஏற்படுத்தி இருக்கின்றன. ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 239பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். 214 பேர் காயப்பட்டுள்ளார்கள். ஆபிரிக்க நாடான கொங்கோவும் இயற்கையின் தாக்குதலில் வகையாகச் சிக்கிக்கொண்டது. இங்கு ஏற்பட்ட நிலச்சரிவு 174பேர்களின் உயிர்களைப் பறித்தது. 280பிள்ளைகள் பெற்றோர்களை இழந்த அநாதைகள் ஆக்கப்பட்டார்கள். இவ்வாறாக முழு நாடுகளையும் கவனித்த ஐ.நா சபையின் அறிக்கை ஒன்று உணவு , வீடு என்ற அடிப்படைத் தேவைகள் 9 மில்லியன் பேருக்கு தேவைப்படுவதாகக் கணக்கிட்டிருக்கிறது.

### இலங்கையும் இலக்காகியிருந்தது

இலங்கை மக்களையும் இயற்கை விட்டு வைக்கவில்லை. இந்த வருட மே மாத இறுதியில், இலங்கையில் குறிப்பாக இரத்தினபுரியில் பெரு மழையும், அதனால் வெள்ளமும் ஏற்பட்டு 20ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைப் பாதித்தது. இதை விட காலி , நெலுவ , தவலம , நியாகம , பத்தேகம ஆகிய இடங்களில் ஏற்பட்ட வெள்ளமும் பலரைப் பாதித்திருக்கின்றது. "எனக்கு எல்லைகள் இல்லை" என்று சொல்வதுபோல , அமெரிக்காவின் மியாமியில் தொடங்கி , போர்டோரிக்கோ என்ற கரீபியன் தீவு வரை போய் , பின்னர் இலத்தீன் அமெரிக்கா ஊடாகப் பயணித்து, சூறாவளிக்காற்று பல பிரதேசங்களை நாசம் செய்திருக்கின்றது.

### சூறாவளிகளின் வெறியாட்டம்

ஹார்வே , இர்மா , மரியா என்று பெயரிடப்பட்ட சூறாவளிகள் அமெரிக்கா, கரீபியன் தீவுகளில் பெரும் சேதங்களை விளைவித்துள்ளன. போர்டோரிகோவில் 3.4 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பார்பூடா என்ற தீவில் எவருமே இனி வசிக்க முடியாது என்று சொல்லும் அளவுக்குச் சூறாவளித் தாக்கத்தால் தீவு நிர்மூலமாகி இருக்கிறது. பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் ஆகிய தெற்காசிய நாடுகளில் பாய்ந்தோடிய வெள்ளம் 40 மில்லியன் வரையிலானவர்களின் வாழ்க்கையைப் பெரும் துயரத்துக்கு உள்ளாக்கி இருக்கின்றது.

### பச்சை வீட்டு விளைவு

சூழல் மாசுபடுவதால் ஒவ்வொரு வருடமும் 4.2மில்லியன் பேர் தம்முடைய ஆயுள் முடிவடைவதற்கு முன்பாகவே இறக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகிறார்கள். இது பலர் அறியாத சங்கதி. இப்பொழுது தான் கால நிலை பெரியதொரு ஆட்கொல்லியாக மாறி வருவது பலரது கவனத்தையும் ஈர்க்க ஆரம்பித்துள்ளது. அதிகரிக்கும் வெப்பநிலை, அதிக நீராவியைச் சூழலில் வைத்திருக்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதனால் சில இடங்களில் அதிக மழையும், வேறு சில இடங்களில் கடும் வறட்சியையும் உருவாகியிருக்கிறது. அதே சமயம் சில இடங்களில் பெரு மழையும், கடும் வறட்சியும் சேர்ந்தே காணப்படுகின்றன. இதற்கு அமெரிக்க நகரமான கலிபோர்னியாவை நல்லதொரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

பூமிப் பரப்பிலிருந்து வெளியேறும் பசுங்குடில் எனப்படும் பச்சை வீட்டு விளைவு வாயு மனித குலத்துக்கு எமனாக வந்து வாய்த்துள்ளது. இதன் காரணமாக நீராவி, காபனீர் ஒக்சைட், மீதேன், நைதரசன் ஒக்சைட் போன்றவை பூமியின் மேற்பரப்பில் ஒரு படலமாக ஒட்டிக்கொண்டு விடுவதால் மேலிருந்து சூரிய ஒளி ஊடறுத்து பூமிக்குள் வந்தாலும் பூமியிலிருந்து தெறிக்கும் கதிர்களை அண்டவெளிக்குச் சிதற விடாமல் தடுத்து விடுகின்றது. இதுவே கடல் தண்ணீர் சூடாகி, மேலெந்து ஹார்வே , இர்மா , மரியா போன்ற பெயர்களில் சூறாவளிகள் மையம் கொள்ளக் காரணியாகியிருக்கிறது. நீண்ட காலம் தொடரப் போகும் இந்தப் பசுங்குடில் வாயு வெளியேற்றத்தை தடுப்பது இப்போதைக்கு சாத்தியப்படாத ஒன்று. எனவே சூறாவளி எம்மைத் தாக்குவது என்பது இப்போதைக்கு ஓயப்போவதில்லை. இனியும் பெருக்கெடுக்கும் வெள்ளம் அழிவைத் தரக்கூடாது என்பதற்காக மியாமி அதிகாரிகள் , 400 மில்லியன் டொலர் தொகையை ஒதுக்கி, அதற்கான பெரிய திட்டங்களில் இறங்கி இருக்கின்றார்கள் . நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கும், வறிய நாடுகளுக்கும் இது எப்படிச் சாத்தியப்படும் ? இந்த ஆண்டு உலக நாடுகளைத் தாக்குவதில், சுழன்றடிக்கும் சூறாவளிக் காற்றே முன்னின்றுள்ளதைக் கவனித்தாகவேண்டும்.

### ஆசியாவில் அட்டகாசம்

2015ஆம் ஆண்டில் உலக நாடுகளெங்கும் பரவலாக, 150 பொரிய அளவிலான இயற்கை இடர்கள் சம்பவித்துள்ளன. இதில் பலமாகத் தாக்குண்ட கண்டம் ஆசியாதான். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நேபாளத்தை உலுப்பிய பூமியதிர்ச்சி 8ஆயிரத்து எண்ணூறுக்கும் அதிகமானவர்களைக் கொன்றுள்ளதுடன், 9இலட்சம் கட்டடங்களை நிர்மூலமாக்கி இருக்கின்றது. 26 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட இந்த நாட்டின் சரித்திரத்தில் மிக மோசமான நிகழ்வு இதுதான்! அதே ஆண்டில், நவம்பர் மாதம் இந்தியா சென்னை கண்ட மழையும் பெருவெள்ளமும், அது 100வருடங்களில் கண்டிராத ஒன்று. 379பேர் வரையில் மரணித்து இருப்பதோடு, 190மில்லியன் டொலர் பெறுமதியான ஒரு இலட்சம் ஏக்கர்களிலுள்ள பயிர்கள் நாசமாகின.

### ஆபிரிக்காவிலும் சோகம்

ஆபிரிக்க நாடான எதியோப்பியாவை வறட்சி பயமுறுத்தியது. பெருந்தொகையானோரின் வாழ்வாதாரமாக இருந்த கால்நடைகள் இறந்ததும், பயிர்கள் அழிந்ததும் விவசாயிகளை பலமாகத் தாக்கின. இந்த வருட ஒக்ரோபர் மாதக் கணிப்பின்படி, 8.2மில்லியன் பேர் உணவு உதவி பெற வேண்டியவர்கள் என்ற நிலை உருவாகி இருந்தது. அத்துடன் மொசாம்பிக் , மலாவி ஆகிய ஆபிரிக்க நாடுகள் பெரு மழையும் அதைத் தொடர்ந்த வெள்ளத்தாலும் பெரும் பாதிப்பைக் கண்டிருந்தன. 200க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதோடு , பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது கால்நடைகள், பயிர்களை இழந்திருக்கிறார்கள். தெருக்கள், பாலங்கள் சேதப்பட்டுள்ளன.

அழிவின் பட்டியல்கள் ஒன்றா? இரண்டா? எடுத்துச்சொல்வதற்கு என்பதுபோல, அடுக்கடுக்காக இயற்கை இடர்கள் அன்றாட நிகழ்வாகிவிட்டன. தொடர்ந்து வந்த மூன்று ஆண்டுகளின் அழிவுகளைப் பார்க்கும் போது. இது இனியும் தொடரும் என்ற அச்சம் எம்முள் தொற்றிக் கொள்கிறது. நாமே நமக்குக் குழி தோண்டிக் கொள்கிறோம் என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. காடுகளை அழிக்கிறோம், (கார்களால்) வாகனங்களால் தெருக்களை நிறைக்கி றோம். இனியாவது செயற்கையை விடுத்து இயற்கையைப் பேணி வளர்ப்போம்.

ஹொலிவூட் சினிமா

கோமளவண்ணன்

# 'மேர்டர் ஒன் தி ஒறியண்ட்'

## துப்பறிவாளர் ஹெர்குல் பொய்ரோவாக இயக்குநர் கென்னத் பிரனக்



பிரித்தானியாவைச் சேர்ந்த 'அகதா கிறிஸ்ரி' என்பவர் சிறுகதை மற்றும் துப்பறியும் நாவல்களை எழுதிப் புகழ்பெற்றவர். 14 சிறு கதைத் தொகுதிகளையும் 66 துப்பறியும் நாவல்களையும் எழுதியுள்ளார். இவருடைய விறுவிறுப்பூட்டும் மர்ம நாவலான 'மேர்டர் ஒன் தி ஒறியண்ட்' 1934ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியானது. அதற்குக் கிடைத்த பெரு வரவேற்பால் அது 1974ஆம் ஆண்டில் அதே பெயரில் ஹொலிவூட்டில் திரைப்படமாகவும் உருவெடுத்தது. அந்தத் திரைப் படமும் ரசிகர்களிடையே பெரு வரவேற்பைப் பெற்றது. அதுவே இன்னும் மெருகூட்டப்பட்டு, அதன் மீளுருவாக்கமாகப் புதிய ஹொலிவூட் தழுவலாக 'மேர்டர் ஒன் தி ஒறியண்ட்' எனும் பெயரில் எதிர்வரும் நவம்பர் மாதம் அன்று திரும்பவும் ஒரு துப்பறியும் திரைப்படமாக வெளியாகவிருக்கிறது.

### கதை

கொட்டும் பனிக்காலத்தில் ஐரோப்பாவுக்குக் குறுக்காக ஓடும் நீராவி ரயிலில் கதை நடக்கிறது. மலைச்சரிவு ஒன்றுக்கு அருகே பாலம் ஒன்றைக் கடக்கும் ரயில் திடீரென நின்றுவிடுகிறது.

வெளி மனிதர்கள் அரவமற்ற அந்த இடத்தில், ரயிலுக்குள் தாழிட்ட அறை ஒன்றுக்குள் இருக்கும் பணக்காரப் பயணி ஒருவர் கொலை செய்யப்படுகிறார். சக பயணிகளில் எவரோ ஒருவர்தான் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்ற வகையில் அதில் பயணித்த பேராசிரியர், சிப்பந்தி, உதவியாளர், மருத்துவர், ஒரு குழுவினர் எனப் பயணிகளில் பலரும் விசாரணை வலைக்குள் சிக்குகிறார்கள். அந்த நேரத்தில் 'அகதா கிறிஸ்ரி'யின் ஆஸ்தான துப்பறிவாளர் 'ஹெர்குல் பொய்ரோ' களமிறங்கி, சக பயணிகள் மீது படியும் சந்தேக நிழல், அதற்கான பின்னணி என்பவற்றை ஆராய்கிறார். தனக்குக் கிடைக்கும் தடயங்களின் அடிப்படையில் நிகழ்ந்த கொலையின் மர்ம முடிச்சுக்களை அவிழ்க்க முயல்கிறார். இறுதியில் வலுவான ஆதாரங்களுடன் கொலைக் குற்றவாளியை அடையாளம் காண்கிறார்.

### இயக்குநர் நாயகனாக..

நாவலாக மட்டுமன்றி திரைப்படம், தொலைக்காட்சித் தொடர்கள் என்று உலகம் முழுக்க அறியப்பட்ட கதையை, மெருகூட்டப்பட்ட திரைக்கதை, ஒளிப்பதிவு, பின்னணி இசை உள்ளிட்டவற்றால் மீண்டும் ரசிகர்களை ஈர்க்கும் முயற்சியில் புதிய பட உருவாக்கத்துக்காக உழைத்திருக்கிறார்கள். துப்பறிவாளர் 'ஹெர்குல் பொய்ரோ'வின் வேடத்தில் படத்தின் இயக்குநர் 'கென்னத் பிரனக்' வருகிறார். ஜானி டெப், டெய்ஸி ரிட்லி, ஜூடி டென்ச் உள்ளிட்ட நடிகர்கள் உடன் நடித்திருக்கின்றனர். 'அகதா கிறிஸ்ரி'யின் இந்த நாவல் தமிழிலும் மொழிபெயர்ப்பாக வாசிக்க கிடைக்கிறது. அகதா கிறிஸ்ரியின் நாவலைத் தழுவி, புதினமாக அதற்குள் ஆவியைப் புகுத்தி, பி.வாசுவின் இயக்கத்தில் கன்னடத்தில் (சிவராஜ்குமார்) ஓடிய மற்றும் தமிழில் (ராகவா லாரன்ஸ்) ஓடாத 'சிவலிங்கா' என்ற பெயரிலான படங்களைப் பார்த்திராவிட்டால் தமிழ் ரசிகர்களுக்கு, இந்தக் ஹொலிவூட் ஆக்கம் சுவாரசியமான அனுபவமாக இருக்கலாம்.




துப்பறிவு மிக்ஸ் நகைச்சுவை

# கிங்ஸ்மன் : கோல்டன் சேர்க்கிள்

ஜேம்ஸ் பாண்ட், மிஷன் இம்பாஸிபிள் படங்களுக்கு இருக்கும் இரசிகர் கூட்டத்தைப்போலவே வேவு பார்க்கும் நகைச்சுவைப் படங்களுக்கும் ஒரு கூட்டம் எப்போதும் இருக்கும். ஜானி இங்கிலிஷ், ஸ்பை, ஏஜென்ட் கோடி பேன்க்ஸ் எனப் பல படங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். 2014இல் வெளியான 'கிங்ஸ்மன் தி சீக்ரெட் செர்விஸ்' உம் இதே வகைப் படம் தான். இதுவே தற்போது வெளிவந்திருக்கும் 'கிங்ஸ்மன் : கோல்டன் சேர்க்கிள்' இன் முதல் பாகம். இந்த முதல் பாகம் பெரு வரவேற்புப் பெற்றதால் தான் தற்போது அதன் இரண்டாம் பாகமாக 'கிங்ஸ்மேன்: தி கோல்டன் சேர்க்கிள்' வெளிவந்து இருக்கிறது.

### கதை

போதைப் பொருள்களை உலகமெங்கும் விற்கிறார் ஜூலியான மூர். கிங்மன் குழுவை முழுவதுமாகக் கொன்றுவிடுகிறார். அதில் தப்பிப் பிழைத்தவர்கள் கென்டக்கியில் இருக்கும் ஸ்ரேட்ஸ்மன் எனும் இரகசியக் குழுவில் சேர்கிறார்கள். கிங்ஸ்மேனுக்குப் பதில் ஸ்டேட்ஸ்மேன்... உலகை எப்படி அவர்கள் மீண்டும் காக்கிறார்கள் என்பதுதான் 'கிங்ஸ்மேன்: தி கோல்டன் சேர்க்கிள்'.

ஜேம்ஸ் பாண்ட் படங்களில் வரும் கார் சேஸ் சண்டையை கிண்டலடித்தபடி ஆரம்பிக்கிறது முதல் சண்டைக் காட்சி. நாயகன் எக்ஸி எப்படி எப்படியோ, அந்தக் காரில் சார்ளியுடன் சண்டை போட, ஒருவழியாய்த் தப்பிக்கிறார். அதற்குள், சார்ளியின் இரும்புக்கை காரில் இருக்கும் கணினியை ஊடுருவி, கிங்ஸ்மேன் அணியில் இருக்கும் அனைவரது இடத்தையும் கண்டறிந்து கொள்கிறது. அவர்கள் அனைவருடைய இடங்களையும் தரைமட்டமாக்குகிறார்கள். மிச்சமிருக்கும் நபர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் விழி பிதுங்கி இருக்க, கையில் கிடைக்கிறது அடுத்த துருப்புச்சீட்டு. அதை வைத்துக்கொண்டு கென்டக்கியில் இருக்கும் 'ஸ்ரேட்ஸ்மன்' எனும் கடைக்கு செல்கிறார்கள். முதல் பாகத்தில் ரெய்லர் இறுதியாக கிங்ஸ்மேன் எனும் ரகசிய குழுவை நடத்தியதுபோல், இந்தமுறை ஸ்ரேட்ஸ்மன் எனும் மதுபானக் கிடங்கில் ஒரு ரகசியக்குழு இருக்கிறது. பிறகு முதல் பாகத்தில் வருவது போலவே, உலகைக் காத்தல், வில்லன்கள் வெடித்துச் சிதறல் என அதே கதை.

### போதைப் பாவனை பற்றிய விழிப்பு

தன்னுடைய போதைப் பொருள் கிடங்கைச் சுற்றிக் கண்ணி வெடிகளைப் புதைத்து வைப்பது. தனக்குத் துரோகம் செய்த நபரை, அங்கேயே வெட்டி பர்கராக மாற்றித் தன்னுடைய புதிய நண்பருக்குச் சாப்பிடக் கொடுப்பது. ரோபோ நாயை வைத்துக் கடிக்க விடுவது எனக் கொடூரமான நகைச்சுவை தழும்பி வழியும் வில்லியாகக் கலக்கி இருக்கிறார் ஜூலியான மூர். உலகம் முழுவதும் இருக்கும் மக்களுக்குப் போதைப் பொருளை விநியோகம் செய்துவிட்டு, இப்படியான வேலைகளைச் செய்யும் வில்லிப் பாத்திரம், 'போதைக்குள் மூழ்குதல் தவறானது இளைஞர்களே...!' என்பதைத் தெளிவுறுத்துகிறது. இதை இவ்வளவு அழுத்தமாகப் பதிவுசெய்த படம் இதைவிட வேறு எதுவும் இல்லை என்றும் கொள்ளலாம். சரி, படத்தின் போக்குப்படி, நாயகன் எல்லோரையும் காப்பாற்றிவிட்டால், மீண்டும் போதைப் பொருள் அப்படியே தான் இருக்கும். இதன் மூலம் நல்ல போதைப் பொருளை வாங்கி உபயோகியுங்கள் என்பதைப் பதிவு செய்கிறது இந்தப் பாகம். முற்று முழுதாகப் போதைப் பொருளைக் கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் இதுவும் ஒரு வகைத் தீர்வாகிவிடுகிறது.

படத்தில் இருக்கும் ஒரே ஒரு நேர்மறையான விடயம் படத்தில் வரும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பற்றிய குறியீட்டு நக்கல்கள் தான். இந்தப் படம் வெளியாவதற்கு முன்னர் படத்தில் வரும் டிரம்ப் குறித்த நக்கல் காட்சிகளை நீக்கிவிட்டதாக படத்தின் இயக்குநர் மாத்யூ வான் சொன்னாலும், படத்தில் வரும் கதாபாத்திரம் அப்படியே டிரம்ப்புக்குப் பொருந்திப்போகிறது. எதைப் பற்றியும் கவலைப்படாமல் இருக்கும் ஓர் அதிபராக வருபவர் செய்யும் கோமாளித்தனங்கள் டிரம்ப் அளவுக்கு இல்லை என்பது மட்டும் நிஜமாகிவிடுகிறது.





# வீடு வாடகைக்கு...

கவிதை

விவேகானந்தனூர் சதீஸ்

என்னை நேசித்த
உன் முகவரி தெரிந்திருக்குமென்று
புலத்தில் பல பேருடன்
பழகிப் பார்க்கிறேன்...
அவர்களும் ஆசையாய்ப் பேசுகிறார்கள்
ஆனால் உன்னைப் பற்றி அல்ல...

உன் நினைவுகளில்
உருப்பெறும் கவிதைகளை
உனக்கு அனுப்ப முடியவில்லை
உன் முகவரி தெரியவில்லை...

நீ இருந்த வாடகை வீடு
பூட்டிக் கிடக்கிறதாம் வாயிலில்
"வீடு வாடகைக்கு விடப்படும்"
விளம்பரம் போட்டுக்
கிடக்கிறதாம்...

ஊரில் உள்ள
உன் முகவரி கிடைக்கும்போது
திருமதியாய் இருப்பாயா...?
இல்லை காதல்
வெகுமதியாய் இருப்பாயா...?



கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி

# மின்னி மறைந்த தமிழ்த் தளபதி!



சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்க

கடந்த ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதியை அண்டிய காலப்பகுதியில் உள்ளூர் மற்றும் வெளியூர் ஊடகங்களில் வெளியாகியிருந்த ஒரு செய்தி பரபரப்புடன் கூடிய கவனத்தை ஈர்த்திருந்தது. அந்தச் செய்தி எதுவெனில், இலங்கைக் கடற்படையைத் தலைமைதாங்குவதற்குப் புதிய தளபதி ஒருவரை அரச தலைவர் நியமிக்கிறார் என்பதாகும். அதில் பரபரப்புக்கும் கவனவீர்ப்புக்குமுரிய பகுதி யாதெனில், அந்தப் புதிய கடற்படைத் தளபதியான ட்ரவிஸ் சின்னையா என்பவர் ஒரு சிறுபான்மை இனத் தமிழர் என்பதாகும்.

குறித்த செய்தியைத் தாங்கி வந்த ஊடகங்கள், இவ்வாறு இலங்கையின் சிறுபான்மை இனத் தமிழர் ஒருவர், முப்படைகளில் ஒன்றான கடற்படைக்குத் தெரிவு செய்யப்படுவது இது முதல் தடவை அல்ல என்பதை இளம் சந்ததிக்கு நினைவூட்டியதோடு, 47 ஆண்டுகளுக்கு முன்பு ரியர் அட்மிரல் ராஜன் கதிர்காமர் கடற்படைத் தளபதிப் பதவி வகித்ததையும் மறக்காமல்மறைக்காமல் வெளியிட்டிருந்தன. அவர் 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரையான பத்தாண்டுகள் வரை கடற்படைத் தளபதியாகப் பணியாற்றியிருந்தவர்.

**சாதனையும் புதிய நியமனமும்**

இலங்கைக் கடற்படைக்குத் தலைமைதாங்கும் பொறுப்பைப் பெற்றிருந்த இந்த ட்ரவிஸ் சின்னையா, கடந்த 26ஆம் திகதியன்று மற்றொரு சாதனையையும் தனதாக்கியிருக்கிறார். ஆமாம், இலங்கை வரலாற்றில் மிகக்குறுகிய காலம் பதவி வகித்த கடற்படைத் தளபதியாக அவர் வாகை சூடியிருக்கிறார். வெறுமனே சில வாரங்கள் அல்லது 70இக்கும் குறைவான நாள்கள் வரை நீடித்த அவருடைய பதவிக்காலம் மேலதிக நீடிப்பின்றி முடிவடைந்திருக்கிறது.

இப்போது இலங்கைக் கடற்படையின் புதிய தளபதியாக ரியர் அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க நியமிக்கப்பட்டிருக்கிறார். கடந்த 26ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. ட்ரவிஸ் சின்னையாவினுடைய பதவிக்காலம் கடந்த 25ஆம் திகதி முடிவடைந்ததை அடுத்து இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக் கடற்படையின் படைப் பிரதானியாக விளங்கிய சிறிமேவன் ரணசிங்க, வைஸ் அட்மிரல் என்னும் பதவிநிலை உயர்வுடன் இலங்கைக் கடற்படையின் 22ஆவது தளபதியாகப் பதவியேற்றிருக்கிறார். கடற்படையின் படைப்பிரதானியாகக் கடந்த 2015ஆம் ஆண்டு ஜூலையில் பதவியேற்பதற்கு முன்பு, இலங்கைக் கரையோரக் காவற்படையின் பணிப்பாளர் நாயகமாக அவர் விளங்கியிருந்தார்.

**சின்னையாவுக்கும் பதவி உயர்வு!**

கடந்த ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி நியமனம் பெற்ற சின்னையா, செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதியன்று தனது 55 வயதினை எட்டியிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருந்தும் அது வெறும் ஒரு மாத காலப்பகுதியினையே நீடிப்பாகக் கொண்டிருந்தது. வழமையாக இத்தகைய பதவி நீடிப்புகள் ஒரு வருட காலப்பகுதியையே கொண்டிருக்கும். இதை வைத்து சின்னையாவின் பதவிக்காலம் மேலும் நீளாது என எதிர்வுகூறப்பட்டிருந்தது. தற்போது 35 வருட கடற்படை சேவையிலிருந்து ஓய்வு பெறும் ட்ரவிஸ் சின்னயா, வைஸ் அட்மிரல் நிலையிலிருந்து அட்மிரல் நிலைக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார். சின்னையாவுக்கு முன்னதாகப் பதவி வகித்த 20ஆவது கடற்படைத்தளபதி ரவிந்திர விஜயகுணரட்ன, கடந்த பெப்ரவரியில் ஆறுமாதப் பதவி நீடிப்பைப் பெற்றிருந்ததுடன் பின்னர், சின்னையா கடற்படைத் தளதியாக நியமிக்கப்பட்ட காலத்தில் பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக நியமனம் பெற்றார் இவர் தற்போதும் பதவி வகித்து வருகிறார்.

> இலங்கை அரசு ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்ய முயற்சித்த 24 பில்லியன் ரூபா பெறுமதியான போர்க்கப்பல் ஒன்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாலேயே பதவி நீடிப்பின்றிய ஓய்வு சின்னையாவுக்கு வழங்கப்பட்டதாக உத்தியோகபூர்வமற்ற குற்றச்சாட்டொன்றும் உள்ளது.

**சர்ச்சையைக் கிளப்பிய சின்னையாவின் நியமனம்**

ஓகஸ்டில் கடற்படைத் தளபதியாகச் சின்னையா பதவியேற்றுக் கொண்டபோது சில சர்ச்சைகள் கிளம்பியி ருந்தன. குறிப்பாகச் சின்னையா கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பாதுகாப்பு நிபுணராகப் பணியாற்றியதைச் சாட்டாக வைத்து தேசியப் பாதுகாப்புக்கு அச்சம் உள்ளதாகத் தேசிய சுதந்திர முன்னணியின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டில் பதினொருவரைக் கடத்திய குற்றச்சாட்டில், அதிலும் திருகோணமலை கடற்படைத் தளத்தில் அமைந்திருந்த சித்திரவதைக்கூடம் தொடர்பிலான பல தகவல்களையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் தனது வாக்குமூலமாக வழங்கிய சின்னையா மீது முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட மற்றும் ரியர் அட்மிரல் யு.கே.வி. பண்டார ஆகியோர் சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாகவும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தனர்.

இலங்கை அரசு ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்ய முயற்சித்த 24 பில்லியன் ரூபா பெறுமதியான போர்க்கப்பல் ஒன்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாலேயே பதவி நீடிப்பின்றிய ஓய்வு சின்னையாவுக்கு வழங்கப்பட்டதாக உத்தியோகபூர்வமற்ற குற்றச்சாட்டொன்றும் உள்ளது.



ட்ரவிஸ் சின்னையா

**நிறைவேறாத சபதம்**

சின்னையா தனது பதவியேற்பின் பின் மகாநாயக்க தேரர்களைத் தரிசிப்பதற்காகக் கண்டிக்கு சென்றிருந்தவேளை, ஊடகவியலாளரிடம் கருத்து தெரிவிக்கையில், கடல் மார்க்கமாக இடம்பெறும் போதைப் பொருள் கடத்தலை ஒருவருட காலத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது தொடர்பில் தாம் கவன்ம் செலுத்தவுள்ளதாகத் தெரிவித்திருந்தார். எனினும் அவருடைய பதவிக்காலம் வெறும் இரண்டு மாதங்களைப் பூர்த்தி செய்திருந்த நிலையில் ஓய்வு வழங்கப்பட்டுவிட்டது.

மகிந்தவின் ஆட்சியில் அரசியல் பழிவாங்கல் காரணமாக இலங்கைக் கடற்படையை விட்டு நீங்கிய ட்ரவிஸ் சின்னையாவைக் கூட்டரசு தனது ஆட்சியில் மீள அழைத்து, முதலில் கிழக்குப் பிராந்தியத்திலும், பின்னர் கடற்படைத் தளபதியாகவும் பணிக்கமர்த்தியது. அதன் பின்னர் இப்போது வயதைக் காரணம் காட்டித்தான் அவருக்கு பிரியாவிடை தரப்படுகிறதா? அல்லது சொல்லப்படுகின்ற போர்க்கப்பல் விவகாரம் உள்ளிட்ட ஏனைய அழுத்தங்கள் காரணமாகத்தான் அவருடைய பதவி பறிக்கப்பட்டதா? என்பது கேள்விக்குறியாகவே தொக்கு நிற்கிறது.



## கேள்வியில் நியாயமுண்டு

முஸ்லிம் காங்கிரசின் முக்கியஸ்தரும் பிரதி சுகாதார அமைச்சருமான எம்.பைஸால் காசிம், முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள், ஆதரவாளர்களின் கட்சி ஆதரவு நிலையை நாடி பிடித்துப் பார்க்கவெனக் கடந்த வாரம் நிந்தவூரில் கூட்டமொன்றை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். கலந்து கொண்டோருக்குக் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பிலான சந்தேகங்களைக் கேட்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. முஸ்லிம் காங்கிரசின் மிக நீண்ட கால மூத்த போராளி ஒருவர் எழுந்து, "கிழக்கு மாகாண சபைக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஐந்து பிரதிநிதிகளை அனுப்பினோம். முதலமைச்சர் பதவி அம்பாறை மாவட்டத்துக்கு வெளியிலுள்ள ஒருவருக்கு வழங்கப்பட்டது. இந்த மாவட்டத்திலிருந்து மூன்று பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குக் கட்சி சார்பில் அனுப்பியும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரொருவரைத் தரக் கட்சி முன்வரவில்லையே" எனத் தனது ஆதங்கத்தைக் கடு கடுப்புடன் வெளிப்படுத்தினார்.

"உங்கள் கேள்வியில் நியாயமிருக்கிறது" எனக் கூறிச் சமாளித்துக் கொண்டார் பிரதி அமைச்சர் பைஸால்.

*'பொறி பறக்கும் கேள்விகள் இனியும் கிளம்பத்தான் போகின்றன'*

# தென்கிழக்கு திசையில் இருந்து...



## 60ஆவது ஆண்டு நிறைவு

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை நினைவூட்டும் பதாகைள் பலவும் அம்பாறை மாவட்டத்தில் தொங்கவிடப்பட்டுள்ளன. இலங்கை கமக்காரர்கள் சமூகத்தின் மேன்மை தகு அபிவிருத்தியின் பொருட்டு இடையறாது இந்தத் திணைக்களம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றமையைச் சுட்டிக்காட்டி 60ஆவது ஆண்டு நிறைவில் இது போற்றப்படவுள்ளது.

## வேண்டும் தனிச் சபை

அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசமான மல்வத்தையை மையமாகக் கொண்டு தனி உள்ளூராட்சி சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று வருகின்றது.

முன்னர் கிராமாட்சி மன்றம் (கிராம சபை) ஒன்றைக் கொண்டிருந்த இந்தப் பிரதேசம் தற்பொழுது சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ளது.

1990ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து அடிக்கடி இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய மக்களைக் கொண்ட இந்தப் பிரதேசத்துக்குத் தனி உள்ளூராட்சி சபை ஒன்றைப் பெற்றுத் தர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆவண செய்ய வேண்டுமெனப் பிரதேசத் தமிழ் மக்கள் கோருகின்றனர்.

*'கவனம் திரும்புமா?'*

## வாழத் தெரிந்தவர்கள்

"முஸ்லிம் மக்கள் வாழத் தெரிந்தவர்கள். அவர்களின் அரசியல் காய் நகர்த்தல்கள் விவேகமானவை. அவர்கள் தமது உரிமைகளுக்காகக் குரலெழுப்பும் அதே சமவேளையில் அவர்களின் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்து வருகின்றனர்"

இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கிறார் அம்பாறை காரைதீவு பிரதேச சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் காரைதீவு பிரதேச சபை உப தவிசாளருமான வீரகத்தி கிருஷ்ணமூர்த்தி. காரைதீவு பிரதேச சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் நியமனக் கடிதத்தைக் கடந்த வாரம் அரச தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்ட இவர் யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறமாகக் கொண்டவராவார்.




## மு.காவைச் சூழக் கருமேகங்கள்

தென்கிழக்கில் குட்டித் தேர்தலொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை நெருங்கி வரும் காலம் பார்த்து முஸ்லிம் காங்கிரசை மக்கள் பிரச்சினைகள் பலவும் கருமேகங்களாகச் சூழ்ந்திருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அட்டாளைச் சேனைக்கான தேசியப் பட்டியல் நியமனம், சாய்ந்த மருதுக்கான தனி உள்ளூராட்சி சபைக் கோரிக்கை, கல்முனையை மையமாகக் கொண்ட கரையோர மாவட்டக் கோரிக்கை, மாயக் கல்லிமலை புத்தர் சிலை விவகாரம், முஸ்லிம்களின் காணிகள் விடுவிப்பு எனப் பல பிரச்சினைகளே முஸ்லிம் காங்கிரசைக் கருமேகங்களாகச் சூழ்ந்துள்ளன என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இத்தனைக்கும் விடைகண்டு தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை முஸ்லிம் காங்கிரசுக்கு!

*'கருமேகங்கள் கலையுமா?'*

## சூடுபிடிக்கிறது சாய்ந்த மருது

கல்முனை மாநகர சபையுடன் இணைந்திருக்கும் சாய்ந்த மருது பிரதேசத்துக்கான தனி உள்ளூராட்சி சபைக்கோரிக்கை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தமது கோரிக்கையை நிறைவேற்றித் தருவதில் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைமைகள் காட்டும் அசமந்தப் போக்கு அந்தப் பிரதேச மக்களைக் கொதித்தெழச் செய்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தான் தமது தனி உள்ளூராட்சி சபைக் கோரிக்கைக்கான ஆவேசத்தை இந்த மக்கள் மத்தியில் காணமுடிகின்றது.

எதிர்வரும் ஒரு வாரகாலத்துள் தமக்கெனத் தனி உள்ளூராட்சி சபை தீர்மானம் உறுதி செய்யப்பட வேண்டுமெனச் சாய்ந்த மருதுப் பிரதேச மக்கள் கால அவகாசம் வழங்கியுள்ளார்கள். அன்றேல் எதிர்வரும் புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களும் சாய்ந்த மருதில் கடை அடைப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்குச் செவி சாய்க்காவிட்டால், சாய்ந்த மருதுக்குள் அரசியல் கட்சிகளின் செய்பாடுகளை, குறிப்பாக முஸ்லிம் கட்சிகளின் செயற்பாடுகளை அனுமதிக்கப் போவதில்லையெனவும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழு ஒன்றைத் தமது சார்பில் களமிறக்குவதெனவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

கடந்த புதன் இரவு சாய்ந்த மருது ஜீம் ஆ பள்ளி வாசலில் கூடிய தனியார் சமூக அமைப்புகள், கழகங்கள், பொது மக்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

*'இனி ஆப்பிழுத்த குரங்கின் நிலைதான் முஸ்லிம் கட்சிகளுக்கு'*

## இருக்கை வசதி

நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்துக்குப் பொழுது போக்க வரும் மக்களின் நலன்கருதி நிந்தவூர்ப் பிரதேச சபை கடற்கரையோரத்தில் அமர்ந்திருப்பதற்கான இருக்கை வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக விடுமுறை தினங்கள், சனி, ஞாயிறு தினங்களிலும் அயல் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு பெருமளவில் வருகைதருவதால் கடற்கரை அழகுபடுத்தலுட்படப் பல வசதிகளும் இங்கு ஏற்படுத்தப் படுகின்றன. பிரதேச சபைச் செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் இதுசார்ந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.



செய்திக்கோர்வை
அனார்கலி

கட்டுரை

ஜெ.காயா

# மனிதர்களற்ற மண்

## ஒக்ரோபர் - 30

காலம் கந்தசஷ்டியின் கடைசி நாள். பாரணை முடித்த கையோடு பயணம். அதுவும் அவலம் நிறைந்த பயணம். யாழ்ப்பாணம் வெறுமையாகிய நாள். மனித அரவமற்றுக்கிடந்த காலம். ஆம்! அது 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி மாலை நிகழ்ந்த அல்லோல கல்லோலம். இனப்பிரச்சினை தந்த வடுவின் சிறு பகுதி. தமிழர்களின் மிகப்பெரும் இடப்பெயர்வு.

இன்று 1995 ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி.

காலை அமைதியாக விடிந்தது. அதன் முன்னான காலங்கள் யாழ்ப்பாண மக்களைக் கவனமாகவே செயற்பட வைத்துக் கொண்டு வருகின்றன. தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் உச்சம் பெற்று, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செல்வாக்கு மேலெலத் தொடங்கிவிட்ட நிலையில் இலங்கை இராணுவம் அவர்களுக்கெதிரான அடக்குமுறைகளைக் கண்டபடியாக அதிகரிக்கத் தொடங்கியது. விமானத் தாக்குதல்கள், செல் தாக்குதல்கள் எனப் பல வடிவங்களில் இராணுவம் மேற்கொண்ட நெருக்குதல்கள் தொடர்ந்தும் குடாநாட்டைப் பதற்றத்தில் வைத்திருந்தன. புலிகளின் நிலைகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருந்தன. என்றாலும் பாதிக்கப்பட்டது மக்கள்தான்.

### ‘முன்னேறிப்பாய்தல்’

‘முன்னேறிப்பாய்தல்’ என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையும் இராணுவத்தின் பிற தாக்குதல்களும்கூட மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்திருந்தன. பொம்பர்கள் அடிக்கடி வந்து குண்டு போட்டுச் செல்வதுவும், இராணுவ நிலைகளிலிருந்து செல்கள் வருவதுவும், ஹெலி வந்து வட்டமிட்டுக் குண்டு வீசிச் செல்வதுவும் புலிகளைக் குறிவைத்தனவோ என்னவோ மக்களைக் குறிவைக்கத் தவறவில்லை. இவ்வாறான இராணுவ நடவடிக்கைகள் அதிகம் நிகழும் பகுதிகளில் இருந்த மக்கள் தமது வீடு, வாசல்களை விட்டு இடம்பெயரத் தொடங்கினர். பாடசாலைகள், சந்தைகள், தொழில் பகுதிகள் என்பன அந்தப் பதற்றமான சூழலுக்கு ஏற்ப தமது செயற்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கின. இத்தகைய தாக்குதல்கள் காரணமாக மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்வது சாதாரணமாகிவிட்டிருந்தது. கடைசியாக வட்டுக்கோட்டைப் பக்கமிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்தார்கள். ஆனால் இன்றைய இந்த இடப்பெயர்வு முழுக் குடாநாட்டு மக்களையும் தமது இருப்பிலிருந்து எழுப்பிவிட்டுள்ளது. முழுக்குடாநாட்டு மக்களுக்கும் இடம்பெயரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

### ‘பொடியள் வெளிக்கிடச் சொல்லீற்றாங்கள்’

இன்றைக்கு இரவும் புத்தூர்ப் பகுதியில் சண்டை நடந்தது என்று கதையடிபடுகிறது. ஒலி பெருக்கி கட்டிய வாகனங்கள் பலவும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிவிப்புச் செய்கின்றன. “ஆமி வறானாம் பொடியள் வெளிக்கிடச் செல்லீற்றாங்கள்” பொது மக்களைப் பாதுகாக்க அவர்கள் இடம்பெயர வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டது. அன்று மாலை பரவிய செய்தி இதுவாகத்தான் இருந்தது.

இந்த ஒற்றை வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர்களாய் குடாநாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒன்று திரண்டு புறப்படுவதற்குத் தயாரானார்கள். பலாலியிலிருந்து இராணுவம் தனது முன்னகர்வுகளை ஆரம்பித்திருக்கிறது என்றும் பேசப்பட்டது. இப்போது வீடுகளை விட்டு வீதிக்கு இறங்கிவிட்டது முழுக் குடாநாடும். கிட்டத்தட்ட 5இலட்சம் பேர். தீவுப்பகுதி, காரைநகர், சண்டிலிப்பாய், மானிப்பாய், வட்டுக்கோட்டை, நவாலி, இணுவில், சுன்னாகம், பருத்தித்துறை, புத்தூர்... பட்டியல் நீண்டது.

தமது இருப்பிடங்களை விட்டு எழுந்தவர்கள் அத்தனை பேரும் குடாநாட்டை விட்டகலவேண்டிச் செம்மணி ஏ-9 வீதியில் திரண்டு, இறுகிப்போயினர். சைக்கிள்கள், லாண்ட் மாஸ்ரர்கள், டிரக்ரர்கள், லோறிகள் என அவரவர் வைத்திருந்த அனைத்து வாகனங்களும் அந்த மக்கள்கூட்டத்தோடு நகரத்தொடங்கின. அவற்றில் மக்களும் அவர்தம் உடைமைகளும் நிரம்பி வழிந்தன. வீதி எது? நாம் செல்லவேண்டிய பாதை எங்கே? எனத் தேடும் நிலை.

### வெடிகுண்டுகள் துரத்தின

மழை வெள்ளமும் மக்கள் வெள்ளமும் ஒன்றாகக் கலந்து வயல்வெளி சன வெளியானது. அன்று இரவு அந்த ஐந்து இலட்சம் மக்கள் கூட்டமும் ஆமை வேகத்தில் நகர்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற வேண்டிய இரண்டு வீதிகளூடாகவும் அவர்கள் அனைவரும் எவ்வளவு விரைவாக வெளியேற வேண்டுமோ அவ்வளவு விரைவாக வெளியேற முயற்சித்தனர். வெடி குண்டுச் சத்தங்கள் அவர்களைத் துரத்திக் கொண்டு இருந்தன. ஆனால் மக்களில் எவருக்கும் இதை எப்படிச் சாத்தியப்படுத்துவது என்பது பற்றி யோசிப்பதற்கு நேரம் இருக்கவில்லை. யோசிக்கவும் இல்லை.

மனதில் திடத்தை வரவழைத்துக் கொண்டவர்களாகத் தத்தம் மூட்டை முடிக்சுக்க ளைக் கட்டிக் கொண்டு புறப்படுவதற்குத் தயாராகிவிட்டனர். கிளை வீதிகள் பலவற்றூடாகவும் முதன்மை வீதியை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினர். பல பகுதிகளிலுமிருந்து வந்த அனைவரும் செம்மணி வீதியில் ஒன்று திரண்டு கொண்டனர். இப்போது அவர்கள் அல்லோல கல்லோலப்படுகின்றனர். குழந்தைகள் வீரிட்டுக் கதறுகின்றன. வயோதிபர்கள் இயலாமையால் தள்ளாடுகின்றனர். இளசுகளும், இயலுமானவர்களும் அவர்களையும் தமது குடும்பத்துக்குரிய மூட்டை, முடிச்சுக்களையும் தாங்கியபடி நகர்கிறார்கள். இறுகிப்போனது செம்மணிவீதி.

### வலி சுமந்தனர் மக்கள்

செம்மணி வீதியின் இரண்டு பக்கங்களிலும் வயல்வெளிகள். அவை முதலில் வெட்டையாய்க் கிடந்தன. இப்போது சனத்திரள் நிரம்பிவிட்டது. அந்த மாதம் முழுதும் பெய்த மழை, அந்தப் பரந்த நிலத்தை வெள்ளக் காடாக ஆக்கியிருந்தது.





> மனதில் திடத்தை வரவழைத்துக் கொண்டவர்களாகத் தத்தம் மூட்டை முடிக்சுக்களைக் கட்டிக் கொண்டு புறப்படுவதற்குத் தயாராகிவிட்டனர். கிளை வீதிகள் பலவற்றூடாகவும் முதன்மை வீதியை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினர். பல பகுதிகளிலுமிருந்து வந்த அனைவரும் செம்மணி வீதியில் ஒன்று திரண்டு கொண்டனர்.

நிறைந்த மக்கள் கூட்டத்தைக் கண்டதும் செம்மணி வீதி ஒற்றையடிப் பாதை போலானது. முழங்கால் அளவில் நிறைந்திருந்த அந்த நீர் நிலைகளுக்கூடாகவும் மக்கள் நடந்தபடி இருந்தனர். ஆனாலும் அவர்களின் நகர்ச்சி வேகமாகிவிடவில்லை. அவலக் குரல்களே அதிகமாகின. அன்றைய நாள் இரவு முழுதும் அந்த அவலம் தொடர்ந்து. மறுநாள் கொடிகாமம், சாவகச்சேரிப் பகுதிகளிலுள்ள தேவாலயங்கள், இந்து ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், வாசிக சாலைகள் அனைத்திலுமாகக் குடாநாடு நிரம்பி வழிந்தது. வீடு வசல்கள், தோட்டந் துறவுகள், வளர்த்த ஆடு, மாடு, நாய், கோழி என அனைத்தையும் விட்டகன்ற அந்த மக்கள்கூட்டம் அனுபவித்த அவலங்கள் சொல்லிமாளாது. மறுநாள் யாழ்ப்பாணம் மனிதர்களற்ற நிலமாகிப் போனது. எத்தகைய துயரங்களுடன் மக்கள் நகர்ந்தாலும் தமது நீண்டகாலத் தமிழீழ விடுதலைப்போராட்டம் தங்களுக்கு ஒரு உறுதியான தீர்வைப் பெற்றுத்தரும், அது வரை இப்படியான துயரங்களையும், வலிகளையும் சுமக்கத்தான் வேண்டும் என்ற எண்ண ஓட்டம் அவர்களுக்குள் நிறைந்திருந்தது.

## விளக்கேற்றும் நேரம் புறப்பட்டோம்

கவிதை

கவிஞர் புதுவை இரத்தினதுரை

“...கல்லடித்த வேதனை காலுக்கே தெரியும்
அது கைகளுக்கு விளங்காது
பிரசவ வேதனை புருசனுக்குப் புரியாது
குத்திய வயிற்றுக்கே கொடுமை தெரியும்
ஒரு நாள்
கருத்தரித்த மேகங்கள் சூரியனை மறைக்க
மாரி மழை பொழியும் ஐப்பசி மாதம்
30.10.1995 அன்று
திங்கட்கிழமை.
வெய்யோன் படுவான் திசை வாய்க்குள்
இரையாகும் வேளை
சந்தியா நேரம்
ஐந்து மணி
‘பேய்கள்’ வருவதாகப் பேசப்பட்டது.
‘பிசாசுகள்’ எம்நிலம் புகுந்து
கோரப்பசிக்குள் குடிநிலங்களை விழுங்கியபடி
புத்தூர்,
சிறுப்பிட்டி,
நீர்வேலி,
கோப்பாய் என்று விளுங்கிவிட்டு
இருபாலைப் பக்கமாய் எழுவதாய் அறிந்தோம்.
பேய்கள் ஏவிய எறிகணைகள்
கூவி வந்து
ஊருக்குள் உயிர் குடிக்கத் தொடங்கின
நின்று நிதானிக்க நேரமிருக்கவில்லை.
அகப்பட்டதை அள்ளிக்கொண்டு
ஆண்டாண்டு காலம் பற்றிப்படர்ந்த
சொந்தத்தைப் பிரிந்தோம்.
ஊர்வெள்ளம் கூடி ஒருகுளத்தில் நிறைவதுபோல்
‘வலிகாமம்’ ஓடிவந்து செம்மணியில் திரண்டது
பொழுது கருகத் தொடங்கியதும்
‘முத்திரைச் சந்தை’க்கு மூச்சுத் திணறியது
செம்மணித் தெருவில்
எடுத்தகால் வைக்க இடமின்றி நின்றோம்
பின் ஊர்ந்தோம்
இட்டகாலுக்கும் எடுத்த காலுக்கும் இடையில்
இரண்டங்குல வெளியில்
நாங்கள் நகர்ந்தோம்
பத்து மைல் நீளத்துக்குப் பாம்பென நெளிந்தது
சனத்திரளின் வரிசை
தரவைக் கடலின்மேலே அவலக்குரலெழுப்பி
‘ஆட்காட்டிகள்’ எமக்காகக் கத்தின
முன்னிலவு நெடுமூச்செறிந்தது
சின்ன வெளிச்சம் சிந்தியது
கூதற்காற்றும் குழறியது
மழைமேகம் விழிபனித்து
சொட்டுச் சொட்டாகத் தோளில் விழுந்தது
நாங்கள் நடந்தோம்
உள்ளே சின்ன உயிர் சுமந்து
வயிறூதிய தாயாரும் வரிசையில்,
பக்கவாதத்தால் படுக்கையில் கிடந்த
பெற்றோரைக் காவிகளும் வரிசையில்,
தள்ளாத வயதில் தடுமாறிய
மூப்படைந்த குருதிப் பெருக்குடன்
புதிய குமர்கள்,
கைத்தடியுடன் காலிழந்தோர்,
வெள்ளைப் பிரம்புடன் விழியிழந்தோர்,
இன்னும் உயிர் காக்கத் துடித்தாரெல்லாம்
அதே வரிசையில் அணிவகுத்திருந்தோம்.
கையிற் சுமையுடன், தலையிற் சுமையுடன்
நெஞ்சிற் கனத்த துன்பச் சுமையுடன்
நாவற்குழிப் பாலமேறி நகர்ந்தோம்...”

(இது மேற்குறித்த தலைப்பிலமைந்த கவிதையின் ஒரு பகுதி. நன்றி – பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்)

கவிதை

சங்கு

# அன்புள்ள ஐ.நாவுக்கு...



மனித உரிமைகள்
உனது மகாபட்டயம்
அதன் மகிமை
எமக்குக் கிட்டவே இல்லை.

தீர்மானங்கள்
உனது சுட்டுவிரல் அது
எமது எதிராளிகளை
எச்சரிக்கவே இல்லை.

நீதி மன்றம்
உனது நெற்றிக்கண்
அது குற்றவாளிகளை
இனங்காணவேயில்லை.

போர்த் தவிர்ப்பு
உனது கிரீடம்
அதன் தன்னொளி
எமக்குத் தென்படவில்லை.

அகதிகள் அமையம்
உனது இரட்சிப்பின் உச்சம்
அது எம்மக்களை
இரட்சிக்கவே இல்லை.

சுதந்திரம்
உனது பரிசு
அதன் ஸ்பரிசம் எமக்கு
கிடைக்கவில்லை.

கலாசார அமையம்
உனது அடையாளச்சின்னம்
அது எமது அடையாளத்தை
உறுதிப்படுத்தவே இல்லை.

பாதுகாப்புச்சபை
உனது கவசம்
அது இன்னும் எம்மை
பாதுகாக்கவேயில்லை.

ஐ.நாவே ஒரு நிமிடம்!
"காலம் கடந்த நீதி
கிட்டதா நியாயம்-என்ன
உனக்கு தெரியாததா?"

இப்படிக்கு
உன்கடைக்கண்
பார்வைக்காய்
ஏங்கும்
ஈழத்தமிழர்.

# மனக்குதிரை



மனக்குதிரை
மனப்புதையலைத் தேடி
புறப்பட்டது விமானத்தில்.
மனவயப்படாத வானத்தில்.
கரு முகில்களின் உராய்வு....
தெருவெங்கும் நிழலோடி
தூறலான போது....
மழை.மழை.என்று
ஓடியது மனம்.
களைப்பு. பதகழிப்பு. இழைப்பு
எல்லாமே ஒன்றிய தாக்கம்.
மனம் சிலிர்த்தது! வியர்வையாக
குளிர்ந்த தென்றலின் உராய்வு


பனித் குதிரையால் மூடிய
விழிகளினுள்ளே
மீண்டும் மனக்குதிரை.!
கம்பீரமாகப் பாய்ந்தது.
தாவித்தாவிஇயல்பான கனைப்போடு.
கடிவாளத்தை இழந்து போன
கம்பீரத்தில்
இளமை எழுச்சியால் மூர்க்கமானது....
மூர்க்கம் கொடுமையானது....
மூர்க்கம் சுயமிழப்பது....
கற்பனைகளுக்கு அப்பால்
விற்பன்னர்களால்
வரையறுக்கமுடியாத
விகற்பங்களை தேர்வதும்
துய்ப்பதுவும்.
புதுமை! அற்புதம்! தெய்வீகம்!
எது? எது? எதுதான் உசிதமானதோ?
வகைப்படுத்த முடியாத சபதம்.
எதுகை. மோனை போல்.
இளமையும் வலிமையும்
விரைந்தும் தொடர்ந்தும்.....
பாய்ந்து. பாய்ந்து ஓடத்தொடங்கிய
மண்குதிரை ஆற்றில் கரைந்துவிடும்.
மனக்குதிரையும் கரைந்து விடுமா?
மோகத்தீயின் அனலில் உருகும்...

கவிதை

வளவை வளவன்

காட்டுத்தீயில் பொசுங்கும்
உயிர்கள்போல்
காமப்போதையின்
தூறலில்கரையும்
உருகி. உருகி இறுதிவரை போகும்
அற்புதமான சஞ்சீவினி அது.
அதனால் தான் மனத்திலிருந்தும்
வேறானது
மமதைத்தனத்தின் ஊற்றாயாகி
மனம் சினம் கொள்ளவும். தள்ளவும்
போதைத் தேரின் சுருவமாகி
வாதை வலி எனவதைக்கும் வலு
அறிவை மயக்கும்"மேவிய"
அதனாலே அது எண்ணமானது.
எண்ணவும் உணரவும்
காலமென ஆகி
மனிதர்க்கே ஆனது அது...
மனம்.மனிதமனம்.
மனமே மனம் ஆனது.





# பெண் பிள்ளைகளைப் பெற்ற அன்பான அப்பாக்களுக்கு....

கவிதை

வேலணையூர் சுரேஷ்.

பெண் பிள்ளைகளைப் பெற்ற
அன்பான அப்பாக்களுக்கு!

நெற்றிக்கு நேரே
எச்சரிக்கின்றது ஏதோ ஒன்று.

கண்ணறிந்து இருக்கக் கடவீர்
அப்பாக்களே....

கத்தி முனைகளில் நடப்பதுவாய்
உம் ஒவ்வொரு அடிகளையும்
கவனம் கொள்க.

யாருக்குமே பாதுகாப்பற்றது
காலம்.....
கடவை வேலி அற்றது.

அவதானம் வேண்டும்
அசண்டு இருந்தால் மிகுதி
அவமானம் தான்.

அப்பாக்களாய் மட்டும்
இருந்தால் போதும்
அது அந்தக் காலம்.

அப்படிக் காலமல்லவா இது
அப்பனே முருகா
என் பெண் குஞ்சை
காப்பாற்று என்று இருக்க.....

அப்பனும் முருகனும்
வருவதற்கு முன்பே
பிள்ளை.....
செத்தனே சிவனே என்றாகிடும்.

விருத்தெரியா வயதுக் கருத்துக்களை
விபரீத ஆசை காட்டி
கருத்தரிக்க வைக்கும்
அயோக்கியக் காளையர் எம் கூட.

அக்கா தங்கைகளுடன்
கூடப் பிறவாத
அற்பர் கூட்டம் சந்திகளில்.....

'பெண்' ஆனவளுக்கு
முட்படுக்கை விரிக்கிறது சீதனம்.

முன்னும்...பின்னும்....
முட்களையே விதைக்கிறது
சில
வன்புனர்வாளர்களின் வக்கிரம்.

படுக்கவும்..
நடக்கவும் முடியாதவளாய் இன்று பெண்.

திருக்கை வால் கொண்டு
சுழற்றத்.....
திராணியற்றுப் போனதாற்தானே
'இருக்கை' கொள்ளுதில்லை
பலருக்கும்.
திருந்தாத
ஜீவன்களா இவை.
இருந்தவன்
இருந்திருந்தால்
திருந்தாதவனும்
திருந்தியிருப்பான் என்று
நினைத்தாற்போல்
உச்சிக்கு மேலே
அடித்துச் சொல்கிறது
உச்சத்துப் பல்லி.

ஓ.....
உண்மையும்
வாழத் தான்
செய்கிறது!

# மீண்டும் சிவாவுடன் இணைகிறார் அஜித்



அஜித், சிவா கூட்டணியில் வெளியான 'வீரம்', 'வேதாளம்' படங்கள் மிகப் பெரும் வரவேற்பைப்பெற்றன. இந்தப்படத்தைத் தொடர்ந்து இவர்கள் கூட்டணியில் வெளியான 'விவேகம்' படம் சில எதிர்மறை விமர்சனத்தைச் சந்தித்தாலும், ரசிகர்களிடம் மற்றும் வணீக ரீதியாகவும் வெற்றி பெற்றது.


தற்போது அஜித், மீண்டும் சிவா இயக்கத்தில் நடிக்கவுள்ளார் என்று சில தினங்களுக்கு முன்பு செய்திகள் வெளியாகின. மேலும், அந்தப்படம் வரலாற்று சம்மந்தப்பட்ட கதை என்றும் அஜித், பொலிஸ் வேடத்தில் நடிக்கவுள்ளார் என்று செய்திகள் வந்துள்ளன.

நீ போகும் பாதையில் இருந்து நான் தள்ளி நின்று
உனக்கு வழிவிடுவதால்

நீ போகும் பாதை சரியானது என்று நான்
ஏற்றுக் கொள்வதாக அர்த்தமல்ல..

நீ நேரே போய் முட்டிக்கொண்டு எப்படியும்
திரும்பி வருவாயென்ற காத்திருத்தலில்தான்!

**உலகில் பல அன்புகள்**
**பல அக்கறைகள் இப்படித்தான்**
**உள்ளன.**




**மனிதனுக்கு படபடப்பை ஏற்படுத்தும் மூன்று பிரச்சினைகள்**



**'லோ சுகர்'... 'லோ பிரஷர்'... 'லோ பேட்டரி'**

**இந்த நுளம்பு, குருதியை உறிஞ்சுவதற்கு பதிலா கொஞ்சம் கொழுப்பை உறிஞ்சலாம்...**



**நிறைய பேருக்கு அதுதான் கூடுதலாக இருக்க.**

**டென்சனுக்கு மாத்திரை எழுதிக் கொடுத்தேனே... அதை ஏன் வாங்கிச் சாப்பிடலை...**



**மாத்திரையோட விலையைக் கேட்டாலே ஒரே டென்சனா இருக்கு டாக்டர்...**




## 'பேஸ்புக்' இல்லையென்றால் ஒரு கற்பனை

- ★ மொபைல் மற்றும் இன்டர்நெட் நிறுவனங்கள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டியிருக்கும்.
- ★ வெட்டியாக இருந்த பயபுளைங்க எல்லாம் வேலைக்குப் போயிருப்பாங்க.
- ★ தொலைந்துபோன உறவுகள் திரும்பவும் இணைந்திருக்க முடியாது..
- ★ காதலி கிடைக்கவில்லை என்று பல ஆண்கள் மதுவுடன் சுற்றியிருப்பார் கள்.
- ★ சிலர் இன்னமும் உயிரோடு இருந்திருப் பார் கள்.
- ★ பலருக்கு இன்னமும் கல்யாணம் ஆகியிருக்க வாய்ப்பில்லை.
- ★ பள்ளிக்கூடத்தில வாத்தியார் அடிச்சும் சொந்தமா யோசிக்காதவன் எல்லாம் இப்பவும் அப்படியே சோம்பேறியா இருந்திருப்பான்.
- ★ பல ரின் பொன்னான எழுத்துக்கள் வீண் போயிருக்கும்...
- ★ சிலரின் பொக்கிஷம் போன்ற படைப்புக்கள் திருடப்பட்டிருக்காது.
- ★ மொக்க பிகருங்க எல்லாம் நயன்தாரா ரேஞ்சுக்கு பில்டப் பண்ணாமல் கம்முன்னு கிடந்திருக்கும்....
- ★ 'லைக்' என்ற கறுமத்துக்காக பலர் லைப்பை தொலைத்திருக்க மாட்டார்கள்...

## முதலுக்கே மோசம்

ஒரு திருமண வரவேற்பில் மணமக்களுக்கு அன்பளிப்பும் அதனுடன் இணைந்த ஒரு கடிதமும் வந்தது.
அதில் அந்த ஊரின் சிறந்த திரை அரங்கில் புதிய படத்துக்கான இரண்டு டிக்கட்டுக்கள் இணைக்கப்பட்டிருந்தன.
மேலும் இதை அனுப்பியவர் யார் என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம் என்றொரு குறிப்பும் இருந்தது.
தம்பதிகள் இருவரும் எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும் அவர்களால் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை.
இருந்தாலும் இலவசமாக வந்த டிக்கட்டை எடுத்துக் கொண்டு இருவரும் அந்தத் திரைப்படத்தை பார்த்து விட்டு வீடு திரும்பினர். வீட்டைத் திறந்தவர்களுக்கு ஒரே அதிர்ச்சி!!
வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்கள் எல்லாம் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன.
வீட்டில் ஒரு கடிதம் இருந்தது. அதில்
"என்னா படம் சூப்பரா?"
என்று எழுதி இருந்தது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | | 3 | | | | | 7 |
| | 8 | | | 7 | 4 | | | |
| | | | | 5 | | | 1 | |
| 4 | | 6 | | | | 9 | 7 | |
| | | | | | | | | |
| | 3 | 7 | | | | 5 | | 1 |
| | 6 | | | 8 | | | | |
| | | | 7 | 9 | | | 4 | |
| 7 | | | | | 5 | | 2 | 9 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 5 | 9 | 8 | 3 | 6 | 7 | 1 |
| 9 | 6 | 7 | 5 | 1 | 4 | 8 | 2 | 3 |
| 8 | 1 | 3 | 7 | 2 | 6 | 4 | 5 | 9 |
| 2 | 5 | 4 | 1 | 6 | 9 | 7 | 3 | 8 |
| 6 | 7 | 9 | 3 | 4 | 8 | 2 | 1 | 5 |
| 1 | 3 | 8 | 2 | 7 | 5 | 9 | 4 | 6 |
| 5 | 4 | 1 | 8 | 9 | 2 | 3 | 6 | 7 |
| 7 | 9 | 2 | 6 | 3 | 1 | 5 | 8 | 4 |
| 3 | 8 | 6 | 4 | 5 | 7 | 1 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

**பென்சில் கற்றுக்கொடுப்பது ஒன்றுதான்**
**கூர்மையாக இரு இல்லை என்றால் சீவி விடுவார்கள்.**



# பட்டம் உண்டு: பதிவு இல்லை!

# வாய்ப்புக்களைத் தவறவிடும் யாழ். பல்கலைத் தாதியப் பட்டதாரிகள்!

கட்டுரை

றெமோ டினேஷ்



ஐரோப்பியஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான முனைப் புக்களை எடுத்ததையடுத்து, என். எச். எஸ். என்று அழைக்கப்படும் பிரிட்டனின் தேசிய சுகாதார சேவைக்குத் தேவையான தாதிமாருக்குப் பற்றாக்குறை நேரலாமென எதிர்வுகூறப்பட்டிருக்கிறது. இதுவரை காலமும் பிரிட்டனில் நிலவிய தாதியப்பணிக்கான வெற்றிடங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த தாதியர்களால் நிரப்பப் பட்டு வந்த நிலையில், 2019ஆம் ஆண்டுக்குப் பின் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த தாதியர்களை பிரிட்டனில் பணிக்கமர்த்த முடியாத நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், மேற்படி வெற்றிடங்களுக்கு இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளைச்சேர்ந்த தாதியர்களை ஆட்சேர்ப்பதற்கான முனைப்பு காண்பிக்கப்பட்டுள்ளது. இது ஆசிய நாடுகள் பலவற்றுக்கும் ஒரு வரப்பிரசாத நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

குறித்த கேள்வியைத் தெரிந்து கொண்ட இந்தியா, நேபாளம் மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டுத் தாதியர்கள், பிரிட்டனில் காணப்படக்கூடிய வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க ஆரம்பித்துள்ளனர். எதிர்பார்க்கப்பட்டுள்ள இந்தத் தாதிய மனிதவளத் தேவை நிலவரம், இலங்கைத் தாதியர்களுக்கான புதிய சந்தையினை பிரிட்டனில் அகலத்திறந்திருக்கிறது. ஆங்கில மொழியில் தேர்ச்சியுள்ள தாதியர்கள் குறித்த சந்தைவாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**இலங்கைத் தாதிய மனிதவளச் சந்தை**

இலங்கையில் இலவச அரச சுகாதார சேவை மற்றும் தனியார் மருத்துவ சேவைக்குத் தேவையான பயிற்றப்பட்ட தாதியர்களை அரச தாதியப் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் குறிப்பிட்ட சில பல்கலைக்கழகங்கள் மட்டுமே பிரசவித்துவருகின்றன. அதிலும் தாதிய மனித வளச் சந்தைக்குத் தேவையான தாதிய விஞ்ஞானமாணிப் பட்டதாரிகளை அதிகளவில் சொந்த நாட்டிலேயே பயிற்றுவிக்கும் திட்டம் இலங்கையில் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தான் அறிமுகமாகியிருந்தது. பட்டதாரிகளைப் புறந்தள்ளும் இலங்கையில் நடைமுறையில் உள்ள தாதியர்களுக்கான சேவை யாப்பு விதிக்கோவையானது டிப்ளோமா தரநிலையுடன் தாதிய பயிற்சிப் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் தாதியர்களையே அதிகளவில் இலங்கைத் தாதிய சேவைக்கு உள்ளீர்ப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கிறது. வருடாந்தத் தேவையில் வெறும் 25 வீதமான பட்டதாரித் தாதிகளையே பயிற்சிக்கு இணைத்துக்கொள்ள விதிக்கோவை இடமளிக்கிறது. இது மாத்திரமின்றி டிப்ளோமாதாரி களையும் பட்டதாரிகளையும் உள்ளீர்ப்பு மற்றும் கொடுப்பனவு விடயங்களில் ஒரே அளவுகோலினால் அளக்கும் பொறிமுறையுடனேயே நடைமுறையிலுள்ள விதிக்கோவை இயங்குகின்றது.

**யாழ்ப்பாணத் தாதிய பட்டதாரிகளின் பரிதாப நிலை!**

தாதியப்பட்டதாரிகளை வடக்கில் உருவாக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணைமருத்துவ விஞ்ஞான அலகு அமையப்பெற்று பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இதுவரை 50வரையான தாதியர்களே பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். இருந்தும் இதில் எந்தத் தாதியப்பட்டதாரியும் இலங்கை தாதியப் பதிவுச் சபையில் பதிவைக் கொண்டிருக்கவில்லை. தாதியப் பட்டதாரிகளைக் குறித்த சபையில் பதிவதற்கான பூர்வாங்க வேலைகளை பல்கலையின் நிர்வாகத் தரப்பினர் உரிய காலத்தில் முடிக்காமையே தாதியப் பதிவு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தாதியப் பட்டதாரிகளுக்கு இன்னும் சாத்தியமாகாதமைக்குக் காரணம் என்கிறார்கள் யாழ்ப்பாணப் பல்கலையின் தாதியப் பட்டதாரிகள். யாழை ஒத்த காலத்தில் ஆரம்பித்த ஏனைய ஜெயவர்த்தனபுர, கிழக்கு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத் தாதிய பட்டதாரிகள் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே பதிவு செய்யப்படுவதற்கான தகைமையை அடைந்துவிட்ட நிலையில், தாம் இன்னமும் பதிவு செய்யப்படாமையால் தாதியத் தொழிற்சந்தையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவும் போட்டியில் தாம் புறக்கணிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றார்கள் யாழ்ப்பாணத் தாதியப் பட்டதாரிகள்.

தாதிய சபைப்பதிவு இன்மையால், யாழ். பல்கலையில் நிலவிய தாதியத்துறைசார் வெற்றிடம் ஒன்றுக்குக்கூட யாழ். பல்கலைக்கழகத்தில் கற்று வெளியேறிய தாதிகளினால் விண்ணப்பிக்க முடியாத கையறு நிலைவரம் ஏற்பட்டுப் பின்னர் அந்த வெற்றிடம் தாதியசபைப் பதிவுள்ள வேறொரு பல்கலைக்கழகப் பட்டதாரியினால் நிரப்பப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார்கள் அவர்கள்.

தாதியத்துறையோடு நேரடித் தொடர்புடைய துறைகளில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்கு உள்நாட்டில் சந்தர்ப்பங்கள் இல்லாத நிலையில், வெளிநாடுகளில் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களுக்கும் இந்தத் தாதியச் சபைப் பதிவு இல்லாத நிலை முட்டுக்கட்டை இடுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

**நிர்வாகத்தினர் மீது அழுத்தம்!**

யாழ்ப்பாணப் பல்கலையின் இணை மருத்துவப் பிரிவிலிருந்து வெளியேறும் தாதியப் பட்டதாரிகளைப் பதிவு செய்வதற்கு ஏதுவான நடவடிக்கைகளைத் தாம் முன்னெடுத்திருந்தும் குறித்த தாதியப் பதிவுச்சபையின் அங்கத்தவர்களை நியமிப்பதில் இரண்டு தாதியத் தொழிற்சங்கங்களுக்கிடையில் நிலவும் குத்துவெட்டே பதிவு நடவடிக்கைகள் தாமதமடையக் காரணம் என்கிறார்கள் நிர்வாகத்தரப்பினர். தமது ஏற்பாடுகளின் காரணமாக கடந்த ஆண்டில் குறித்த தாதியப் பதிவுச் சபை அதிகாரிகள் இணைமருத்துவ விஞ்ஞான அலகுக்குப் பயணம்; செய்து தமது செயற்பாட்டுப் பொறிமுறைகள் மற்றும் பெறுபேறுகள் குறித்து திருப்தி வெளியிட்டதாகத் தெரிவிக்கிறார்கள் அவர்கள்.

**விலக்குப் பிடிக்க ஆள் தேவை!**

முருதெட்டுவே ஆனந்த தேரர் தலைமையிலான பொதுச்சேவைகள் ஐக்கிய தாதியர் சேவைகள் சங்கத்துக்கும் மற்றொரு தாதியத் தொழிற்சங்கத்துக்கும் தாதியப்பதிவுச்சபைக்கு அங்கத்தவர்களை நியமிப்பதில் நிலவும் பிடுங்குப்பாடு காரணமாகத் தாதிய பதிவுச் சபையின் நடவடிக்கைகளில் முடக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுவே யாழ்ப்பாணத் தாதியப் பட்டதாரிகளின் பதிவு விவகாரம் மேலும் தாமதம் அடையக் காரணம் என்றும் அறிய வருகின்றது. ஆங்கில மொழிமூலமாக நான்காண்டுகள் தாதிய விஞ்ஞானமாணி கற்கையை முடித்து வெளியேறிய தங்களின், தாதிய சபை; பதிவு விவகாரத்தைத் துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கிறார்கள் யாழ்ப்பாணப் பல்கலையின் தாதியப் பட்டதாரிகள். இதன்மூலம் பிரிட்டனில் நிலவும் தாதிய வெற்றிடத்துக்கு மாத்திரமல்லாமல் ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தாதிய வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான ஏதுநிலையை ஏற்படுத்தித்தருமாறும் பட்டதாரிகள் தரப்பால் கோரப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக மட்டத்திலோ அல்லது சுகாதார அமைச்சு மட்டத்திலோ, தொழிற்சங்கங்கள் மீது வழங்கப்படக்கூடிய அழுத்தங்கள் தமது பதிவை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னகர்த்தாதா என அங்கலாய்க்கிறார்கள் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள்.

தாதியத்துறையோடு நேரடித் தொடர்புடைய துறைகளில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்கு உள்நாட்டில் சந்தர்ப்பங்கள் இல்லாத நிலையில், வெளிநாடுகளில் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களுக்கும் இந்தத் தாதியச் சபைப் பதிவு இல்லாத நிலை முட்டுக்கட்டை இடுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.



# ஆனந்தக் கண்ணீரில்...

(31ஆம் பக்கத் தொடர்ச்சி)

"உங்கள் யாருக்காவது இப்ப மார்க்ஸ் பார்த்துச் சொல்ல வேணும் எண்டா இன்டெக்ஸ் நம்பரைத் தாங்கோ...." ஒருத்தரும் வாய்திறக்கேல்லை. ரீச்சர் தன்ர மேசைக்குப் பக்கத்தில போய் நின்றுகொண்டு, "2008 ஆம் ஆண்டு 151பேர் எக்ஸாம் எழுதி 91பேர் பாஸ். இந்தமுறை 74 பேர் தான் பாஸ்" ரீச்சரின் வார்த்தைகளால் எனது மனம் பயந்தே விட்டது.

'நான் பாஸ் பண்ணியிருப்பேனா? பெயில் எண்டா, வீட்டில அப்பா, அம்மா சரியாக் கவலைப்படுவினம்... என்ரை அம்மா இத்தினை நாளாப் பட்ட கஷ்டத்துக்கு நான் என்ன செய்யப்போறன்' எண்ணங்கள் கரைதாண்டிப் பாயும் கடலலை போல மனதில் அடுக்கடுக்காக வந்து அரவாரம் செய்தன.

■ ■ ■

ஸ்கூல் பெல் அடித்தது. எல்லோரும் வெளியே வந்தோம். பாடசாலை கேற்றின் அருகே வழமையைவிட அதிகமான பெற்றோர்கள் நின்றிருந்தார்கள். தங்கள் தங்கள் பிள்ளைகள் வந்ததும் சிலர் கட்டியணைத்தனர். சிலர் அழைத்துக் கொண்டு அதிபர் அலுவலகத்துக்குச் சென்று புள்ளிகளைத் தெரிவித்தனர். நான் வெளிய வந்து ஸ்கூல் வானில் போய் ஏறி இருந்து கொண்டேன்.

என் பக்கத்தில இருந்த டிலக்சன், "அஜந்தன் அண்ணா பின்னுக்குத் திரும்பி என்ன நடக்குதெண்டு பாருங்கோ... வானுக்குள் சுண்டிக்குளி அக்காட தங்கச்சி அழுகிறா." திரும்பிப் பார்த்தன் இரட்டைக்குடும்பி கட்டிக்கொண்டு கன்னத்தில குழி விழுகிற மாதிரிச் சிரிக்கிற அந்தப் பிள்ளை அழுகிறதைப் பார்த்ததும் எனக்கு ஒரு மாதிரிப்பேச்சு. அந்தப் பிள்ளையின்ர அக்கா, "அழாதையும்" எண்டு தோளில தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். எனக்குக் காரணம் விளங்கிற்று.

அந்தப் பிள்ளை நல்லாப்படிக்கிற பிள்ளை. பெயில் ஆக வாய்ப்பில்லை எண்டு யோசிச்சபடி... பேசாமக் கேட்டுவிட வேண்டியதுதான். எண்டு அந்தப் பிள்ளையின்ர அக்காவை "என்ன றிசல்ட்...?" எண்டு மெல்லியகுரலில் கேட்டன். பதிலைக் காணவில்லை. நான் திரும்பி இருந்திட்டன். நான் றிசேல்ட்டைக் கேட்டிருக்கக்கூடாது ஒருவேளை அவள் பெயில் என்டால் எப்படி மனம் நொந்திருக்கும். என்னை நானே ஏசிக் கொண்டேன்.

மௌனத்தைக் கடந்து வந்தது அக்காவிடமிருந்து வார்த்தை '141 மார்க்ஸ்'

"நல்ல மார்க்ஸ் தானே... பாஸ் பண்ணினதுக்குச் சந்தோஷப்படனுமே தவிர கவலைப்படக் கூடாது. வாழ்த்துக்கள்" என்று சொல்லிவிட்டு முன்னுக்குத் திரும்பி இருந்திட்டன்.

■ ■ ■

அந்தப் பிள்ளை எடுத்திருந்த மார்க்ஸ் எனக்குள் பயத்தைத் தூண்டியது. என்னுடைய ஊகிப்பு மார்க்ஸ்சைப் படிப்படியாகக் குறைக்கத் தொடங்கிற்று... 170... 160.... 150... பெயில் ஆகிடுவோனோ?

வான் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. வீட்டை நெருங்க நெருங்கப் பயம் கூடிக்கொண்டு போகத் தொடங்கிற்று. வீட்டு வாசலில் வான் நின்றது. கேற்றைத் திறந்து 'அம்மா...' எண்டு கத்தியபடி நுழைந்தேன். கதவு பூட்டிக் கிடந்தது. வீட்டிலை அம்மா இல்லை எண்டு தெரிஞ்சதும் பயம் இன்னும் கூடியது. கால் எல்லாம் உதறத் தொடங்கிற்று.

திறப்பு வைக்கிற இடத்தில திறப்புடன் ஒரு கடிதம் கிடந்தது. "நான் கோயிலில் நிக்கிறன். ரியூசனுக்குப் போக வெளிக்கிட்டுக் கொண்டு இங்க வா..."

அம்மா றிசேல்ட் பாத்திற்றாபோல. வேக வேகமாக வெளிக்கிட்டன். வீட்டில இருந்து கோயில் ஒரு 60மீற்றர்கள் இருக்கும். ஓட்டமும் நடையுமாகக் கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினன்.

"அஜந்தன் நில்லு... நானும் வாரன்" ஒஸ்கா லேன் முடக்கைக் கடக்க முற்பட ஒரு குரல் அழைத்தது. திரும்பிப் பார்த்தேன் ஆருயிர் நண்பன் துஷி வந்து கொண்டிருந்தான். 'டேய் றிசேல்ட் வந்திட்டாம்"

"ஓமடா அம்மா கோயில்ல நிக்குறாவாம் வரச்சொன்னவா. அங்கதான் போறன்" எண்டு சொல்லி அவனிடமிருந்து விடைபெற்றேன்.

கோயில் இருந்த் ஒழுங்கையில் திரும்பியதுமே என்னை அறியாமல் "அம்மா..." என்று கத்தினேன். நான் கத்தியது ஆலயத்திலிருந்த அம்மனுக்கே கேட்டிருக்கும் என் அம்மாவுக்கு கேட்டிருக்காதா என்ன? அம்மா வெளியே வந்தார். உணவுக்காய் ஏங்கும் குருவிக்குஞ்சைப்போல தாயின் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைக்காக மனம் ஏங்கியது.

"அம்மா றிசேல்ட் வந்திட்டாம்"

அம்மா அருகில் வந்தார். என் மனம் அந்தளவுக்குப் பயந்தது அதுவே முதல் தடவை. வந்தவர் என்னைக் கட்டியணைத்துக் கொண்டு உச்சந்தலையில் கொஞ்சினார். "என்ர பிள்ளை பாஸ் ஆகிட்டான்" என்றார். ஓரிரு நிமிடங்களாக நான் சந்தோஷத்தின் உச்சத்துக்கே சென்றுவிட்டேன். என் தாயின் கண்களைப் பார்த்தேன். அதில் தெரிந்த மகிழ்ச்சி எல்லையற்றதாக இருந்தது. அவள் கண்களில் இருந்து வெளிவந்த கண்ணீரைப் போல...

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 495

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | | ■ | 6 |
| 7 | | | | | ■ | 8 | |
| | ■ | 9 | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| | ■ | ■ | 13 | | | ■ | 14 |
| | ■ | 15 | | | | ■ | |
| ■ | 16 | | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................................

கையொப்பம்:.........................................................

**இடமிருந்து வலம்**

1. தலைமுதல் கால்வரை
6. பாடல்
7. மனம் சார்ந்த
9. (உணவு முதலியன) தயாரி
10. இராமனின் வனவாசத்தின் போது நட்பான ஒரு படகோட்டி
11. (சமையலின் போது) சமைக்கும் பொருளது பக்குவமான நிலை
12. முடிவு / முற்றுமுழுதான கொள்வனவு
13. உள்ளம் / ஆன்மா / இருப்பிடம்
15. இலங்கையில் பரவலாக உணவில் பயன்படுத்தப்படும் ஒரு கறி வகை
16. உழவுக்குப் பயன்படும் உபகரணம்
17. நீருக்குள் ஆழ்ந்துவிடாமல் இரு
18. கழுவு
19. உலகம்

**மேலிருந்து கீழ்**

1. ஒரு வகைப் பயறு
2. கடதாசி
3. சிரார்த்தம்
4. நட்பு
5. அழுதல் / வயிறு
6. யானையை வழி நடத்துவோன்
8. திக்கற்றவன்
10. சேஷ்டை / வேண்டுமென்றே ஒருவரைச் சீண்டுதல்
12. சிரட்டையைப் பயன்படுத்திச் செய்யப்படும் கரண்டி
13. தயிர்
14. தாமரை
15. வலு/சக்தி
16. ஒரு பொருளுடன் மற்றொரு பொருளைச் சேர்த்தல்
17. அதிகமாக

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 493 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) ஸ்தாபனம் (4)மசி (5)தூக்கு (6)கூறு (7)பிகு (8)சால்ஜாப்பு (9)தகர் (11)புள் (12)மல்லிகை (13)தா (14)காளான் (15)திருத்து (18)பா (19)மையல்

**மேலிருந்து கீழ்**
(1)ஸ்தூபி (2)தாக்குதல் (3)பகு (4)மறுப்பு (6)கூஜா (8)சார்கை (10)கலி (12) மறதி (13) தாளாண்மை (16)ருது (17)துணி (18)பால்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.495**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (08.11.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 493 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
போ.கோபிசாளினி,
இல82/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
திருமதி ச.லிங்கமூர்த்தி,
அமெரிக்க மிசன் பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு**
க.தில்லையம்பலம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**
திருமதி ஸ்ரீ கிருஷாந்தி உமாபதிசிவம்,
இல.18, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.பிரணவரூபன்,
சமாதி கோவிலடி, குப்பிளான் வடக்கு, குப்பிளான்

கே.இராஜகோபால்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

இ.கீர்த்தனன்,
சமாதி கோவிலடி,
குப்பிளான் வடக்கு, ஏழாலை.

சொற்சிலம்பம் போட்டி இல.495இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 12.11.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 493 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## மேடம்

சந்திரன், செவ்வாய், குரு நற்பலன் வழங்குவர். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். உறவினர், நண்பர்களின் உதவி கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். சொத்து விவகாரங்களில் சுமுகத் தீர்வு ஏற்படும்.வெளியூர் பயணங்களில் திடீர் மாற்றம் ஏற்படலாம். ஆரோக்கியம் மேம்படும். மனைவியிடம் விவாதம் பேச வேண்டாம். குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு மூலம் வருமானம் காண்பர். பெண்கள் அதிக பயன்தராத பொருள் வாங்க வேண்டாம்.

## இடபம்

ராகு சுக்கிரன் சூரியன் புதன் அனுகூல அமர்வில் உள்ளனர். மன உறுதியுடன் முக்கிய பணிகளை நிறைவேற்று வீர்கள். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரர்களின் எதிர்கால வாழ்வுக்கு வேண்டியதைச் செய்வீர்கள். பூர்வீக சொத்தில் தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். மனைவியின் உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரம் செழித்து இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் ஆர்வமுடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாண்வர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## மிதுனம்

குரு சுக்கிரன் சனீஸ்வரர் அளப்பரிய நன்மை தருவர். பழகுபவர்களின் மனம் உணர்ந்து பேசுவீர்கள். செயல்கள் முழு அளவில் வெற்றியைத் தரும். குடும்பத்தின் தேவை பெருமளவில் பூர்த்தியாகும். புத்திரர் மனதில் நம்பிக்கை மேலோங்கும். அவர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேறுவர். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாக இருக்கும். மனைவியின் அன்பு, பாசம் கண்டு நெகிழ்வீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தால் நன்மை அதிகரிக்கும். அர்சாங்க வழியில் நன்மை கிடைக்கப் பெறலாம். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்திபணி மேற்கொள்வீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

## கடகம்

சுக்கிரன், செவ்வாய், புதன் அனுகூல அமர்வில் உள்ளனர். இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். திட்டமிட்ட முக்கிய பணிகள் எளிதாக நிறைவேறும். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். புத்திரர் விரும்பிய பொருட்களை வாங்கித் தருவீர்கள். சிரமம் அணுகாத சுமுக வாழ்வு அமைந்திடும். மனைவியின் ஆலோசனை குடும்பத்திற்கு நன்மை தரும். சுற்றுலா செல்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி பணவரவு கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் பிள்ளைகளின் நலன் சிறக்க பாடுபடுவர். மாணவர்கள் நன்கு படித்து பாராட்டு, பரிசு பெறுவர்.

## சிங்கம்

சூரியன், சுக்கிரன், கேது சுப பலன் தருவர். பணிகளில் நேர்மை மிகுந்திருக்கும். உறவினர் மத்தியில் நற்பெயர் காண்பீர்கள். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். புத்திரரின் செயல் சிறப்பாக அமைய உதவுவீர்கள். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில் வளர்ச்சிக்காக விடாமுயற்சியுடன் பணியாற்றுவீர்கள். பணியாளர்கள் திறமையை வெளிப்படுத்தி சலுகை பெறுவர். பெண்கள் மனதில் இருந்த குழப்பம் விலகும். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம்.

## கன்னி

குரு, சுக்கிரன், சனீஸ்வரர், ராகு அளப்பரிய நற்பலன் தருவர். அனுகூலமான நிகழ்வுகள் வாழ்வில் நடந்தேறும். கடந்த கால உழைப்பின் பலனை பெறுவீர்கள். தம்பி, தங்கையர் அன்பு பாசத்துடன் பழகுவர். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். புத்திரர்கள் உங்களின் வழிகாட்டுதலை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வர். பூர்வீக சொத்து மூலம் வருமானம் அதிகரிக்கும். வழக்கில் வெற்றி கிடைக்கும். மனைவி உங்களின் இன்ப, துன்பத்தில் சமபங்கு கொள்வர். தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்துவது நல்லது.

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 29.10.2017 தொடக்கம் 04.11.2017 வரை

## துலாம்

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நன்மையுண்டாகும். மன அமைதியைப் பாதுகாப்பது நல்லது. பணிகளில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயணம் இனிதாக அமையும். புத்திரர் உங்களின் சொல் கேட்டு நல்லவிதமாக நடப்பர். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். வீட்டு உபயோகப்பொருள் வாங்க வாய்ப்புண்டு. மனைவியின் செயல், வளர்ச்சிக்கு வழி வகுக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிலைக்கும். தொழிலில் வளர்ச்சி பெற கூடுதல் அக்கறை கொள்வீர்கள். பணியாளர்களின் பொறுப்பான பணிக்குப் பாராட்டுக் கிடைக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் கடைபிடிப்பர்.

## விருச்சிகம்

செவ்வாய் சுக்கிரன் கேது அனுகூல அமர்வில் உள்ளனர். திட்டமிட்ட செயல் எளிதில் நிறைவேறும். வசீகர பேச்சால் மற்றவரை கவர்வீர்கள். உடன்பிறந்தவர் பாசமுடன் நடந்து கொள்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்குவதில் ஆர்வம் கொள்வர். ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். மனைவி குடும்பநலனுக்காக பாடுபடுவர். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது. பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை ஆர்வமுடன் கற்றுக் கொள்வர். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் தேர்ச்சி பெறுவர்.

## தனுசு

புதன் குரு சூரியன் தாராள நற்பலன் தருவர். உறவினர்களின் அன்பும் உதவியும் கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டாகும். புத்திரரின் ஆர்வம் மிகுந்த செயல் பாராட்டு பெறும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். வழக்கு விவகாரத்தில் நல்ல முடிவு கிடைக்க தாமதமாகும். மனைவியின் உடல்நலனுக்காக சிகிச்சை தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள் கலையம்சம் நிறைந்த வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள் நன்றாக படித்து பரிசு, பாராட்டு பெறுவர்.

## மகரம்

சூரியன், புதன், சுக்கிரன், சனீஸ்வரர் நற்பலன் தரக் காத்திருக்கின்றனர். அக்கம் பக்கத்தினருடன் இணக்கம் உண்டாகும். இஷ்ட தெய்வ அருளால் செயல் எளிதாக நிறைவேறும். வாகனப்பயணம் மூலம் ஓரளவு நன்மை உண்டாகும். பூர்வ சொத்தின் மூலம் வருமானம் அதிகரிக்கும். புத்திரர் தன்னம்பிக்கையுடன் செயல்படுவர். நிர்பந்த கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் அன்பைக் கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி பணவரவு கூடும். அரசு சார்ந்த உதவி கிடைக்கப் பெறுவீர்கள். பணியாளர்கள் பொறுப்பாக பணிபுரிவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## கும்பம்

ராகு, சுக்கிரன், குரு தாராள நன்மை வழங்குவர். கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கப் பெறுவீர்கள். குழப்பம் விலகி மனம் தெளிவு பெறும். நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். பணியில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். புத்திரரின் செயல்களை ஒழுங்கு செய்வது நல்லது. எதிரிகள் சொந்த சிரமங்களால் விலகிச் செல்வர். விருந்து விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். அன்றாட வாழ்வியல் நடைமுறை சிறப்பாக அமையும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழிலில் குறைகளைத் தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் அதிக நிபந்தனையுடன் பணம் கடன் பெற வேண்டாம். பெண்களுக்குத் தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் தர தேர்ச்சி காண்பர்.

## மீனம்

புதன், கேது, சந்திரன் நற்பலன் தருவர். பேசுவதில் நிதானத்தை கடைப்பிடிப்பீர்கள். நற்செயலில் ஈடுபட்டு அனைவராலும் பாராட்டப்படுவீர்கள். குடும்பத்துக்கான செலவு அதிகரிக்கும். புத்திரர் சமயோசிதமாக செயல்பட்டு முன்னேற்றம் காண்பர். வெளியூர் பயணம், பயனறிந்து மேற்கொள்வது நல்லது. நோய் தொந்தரவு குறையும். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சீரான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள் அண்டை வீட்டாருடன் நட்புடன் பழகுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளிலும் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

கட்டுரை

திருமதி சுபாந்தினி ரகுராகவன்

# பாடசாலை என்பது புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதி

பாடசாலை என்பது ஆசிரியர்களதும் மாணவர்களதும் கற்றல் செயற்பாட்டை செப்பமாய் உருவமைக்கும் ஒரு கட்டமைப்பாகும். பாடசாலை பொருத்தமான கலாசாரப் பண்பைக் கொண்டிருக்கும்போதே அங்கு உவப்பான கவிவு நிலை ஏற்படும். பாடசாலைக் கலாசாரம், கவிவு நிலை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பாடசாலைத் தலைமைத்துவம் செயற்படும்போதே அங்கு உயிர்ப்பு நிலை ஏற்படும். பாடசாலையின் நோக்கங்களும் நிறை வேற்றப்படும்.

**புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதி**

பாடசாலையின் கலாசார விருத்திக்கு அதை நிர்வகிக்கின்ற முகாமைத்துவக் கலாசாரம் முக்கியமானது. பாடசாலையினுள் முகாமைத்துவக் கலாசாரம் உயர்வாகக் காணப்படும்போது அது புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாக விளங்கும். இந்த வகையிலே பாடசாலை ஒன்றின் செயற்பாடுகள் பொருத்தமான சமூக உறவுகளைக் கொண்டு செயலூக்கமுடன் இயக்கமுள்ளதாகக் காணப்படுவதோடு அங்கு பணிபுரிகின்ற ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் கல்விகற்கும் மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோரது நலன்கள் பாதுகாக்கப்படுகின்றமை நிகழ்வதுடன் இவர்கள் தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான வழிமுறைகளையும் அணுகுமுறைகளையும் கண்டறிந்து சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் இயங்கவும் முடிகிறது. இதுவே 'புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதி எனக் குறிப்பிடப்படுகின்றது.

புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதி எனும்போது அங்கு. தெளிவான நோக்கங்கள், செயல்களுக்கு முக்கியத்துவம், பொருத்தமான ஒழுங்கமைக்கப்பட்ட கலைத்திட்டம், சிறந்த தலைமைத்துவம், திறன்கள் அடிப்படையிலான மதிப்பீடு, அர்ப்பணிப்பும் ஒத்துழைப்பும் (ஆசிரியர், மாணவர், பெற்றோர்), ஆசிரியர் குழுவின் உறுதிப்பாடு (வாண்மைத்துவம்), சிறந்த ஆளிடைத் தொடர்பு (நம்பிக்கை, பொறுமை, அவதானம்), போதிய வளங்கள் (மனித, பௌதீக, நிதி), சிறந்த சமூகத் தொடர்புகள் போன்ற பல்வேறு அம்சங்கள் அபிவிருத்தி அடைந்த நிலையில் காணப்படுமாயின் அதுவே புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாகிறது.

**பாடசாலை ஒன்று புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாவதற்கு...**

பாடசாலை என்பது அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரை இணைத்துச் செயற்படும் ஒரு நிறுவனமாகும். பாடசாலையின் செயற்பாடுகளை எவ்வாறு வெற்றி கொள்கிறோம் என்பதை வெளிப்படுத்துவதாக அமைவதே பாடசாலைக் கலாசாரமாகும். பாடசாலையின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தமது செயற்பாடுகளைப் பயனுள்ள வகையில் முழுமையாக வெளிப்படுத்தும்போது அங்கு உயர்ந்த கலாசாரம் ஒன்று தோற்றம் பெறும். இதன் மூலமே அந்தப் பாடசாலை புதுமைகாண் உயிர்ப்பு நிலையை அடைகிறது.

இந்தவகையில் பாடசாலைக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் அதைப் புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாக மாற்ற முடியும். கீழ்வரும் செயற்பாடுகள் மூலம் இந்த நிலையை எய்த முடியும்.

01. பாடசாலை தொடர்பான தெளிவான இலட்சியத்தை ஆசிரியர்கள் அனைவரும் தெளிவாக விளங்கிக் கொண்டிருப்பதைப் பாடசாலை முகாமைத்துவம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
02. பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து செயற்படுத்துவதற்கான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.
03. ஒவ்வொரு மட்டத்திலும் முன்மாதிரியான தலைமைத்துவத்தை ஏற்படுத்துதல்.
04. அறிவு பூர்வமான நம்பிக்கைகள், வரலாற்று நோக்குகள், கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளை ஆற்றுவதற்கான சுதந்திரத்தையும், ஊக்குவிப்பையும், சந்தர்ப்பத்தையும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்குதல்.
05. பாடசாலைச் செயல்பாடுகளில் பெற்றோரின் ஈடுபாடு நன்மை பயக்கும் என்ற நம்பிக்கையை ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்துதல்.
06. பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் எல்லோரையும் ஒன்றிணைத்துச் செயற்படுத்துதல்.
07. பாடசாலையின் இலட்சியத்துடன் பிணைக்கப்பட்டதாக ஆசிரியர்களின் தொலைநோக்கையும் பணி இலக்கையும் அமைத்தல்.
08. பாடசாலையினுடைய கற்றல், கற்பித்தல்செயற்பாடுகளைமிகத்தெளிவாகத் தீர்மானித்துச் செயற்படுத்துதல்.
09 பாடசாலையிலே பொருத்தமான ஆளிடைத் தொடர்புகளை ஏற்படுத்துதல்.
10. தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுத்தல்
11. பாடசாலைக்கும்சமூகத்துக்குமிடையே நல்ல தொடர்புகளை ஏற்படுத்துதல்.
12. பாட இணைக்கருமங்கள் அல்லது பாடவெளிவேலைகளை, மாணவர்களுடைய வாழ்க்கைக்கு வழி வகுக்கக் கூடிய பாடத்திட்டங்களைத் தயாரித்து வழங்குதல்.
13. பாடசாலையைக் கற்றுக் கொண்டிருக்கும் ஒரு சமூகமாக உருவாக்குதல்.
14. நவீன உலகுக்கு ஏற்றவகையில் ஆசிரியர்களை உருவாக்குதல்.
15. பொறுப்புக்களை வழங்குதல்.
16. பாடசாலைக் கவிவுநிலையை ஏற்படுத்துதல்

**புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாவதில் உள்ள சவால்கள் அல்லது தடைகள்.**

பாடசாலை ஒன்றின் நிறைவான இலக்கு மாணவர்களின் கற்றல் பேறுகளை உயர்த்துவதும் அவர்களைச் சமூகத்துக்கு உதவக்கூடிய நற்பிரஜையாக உருவாக்குவதுமே ஆகும். இந்த இலக்கை அடைதற் பொருட்டு பாடசாலையின் தொழிற்பாடுகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட முறையிலே நடைமுறைப்படுத்தினால் அந்தப் பாடசாலையை ஒரு புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாக விளங்கச் செய்ய முடியும். எனினும் பாடசாலை மட்டத்தில் காணப்படும் பல்வேறு நிலமைகள் இதற்குத்தடையாக அமைந்து விடுவதையும் நாம் காணலாம்

**01.தகவல் இடைவெளி**

சிறந்த முகாமைத்துவத்துக்குச் சிறந்த தகவல் பாய்ச்சல் அவசியமானது. பாடசாலை மட்டத்திலே தகவல் பெறவேண்டியவர்களுக்கு அவை உரிய காலத்திலே வழங்கப்படல் வேண்டும் எனினும் மேலிருந்து கீழ் மற்றும் கீழ் இருந்து மேலான தகவல் பாய்ச்சலில் தாமதங்களும் ஏனைய பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

அதிபர் - ஆசிரியர்கள், ஆசிரியர் - மாணவர்கள், ஆசிரியர் - சக ஆசிரியர்களிடையே தகவல்கள் சரியான முறையிலே பரிமாற்றப்படுவதில்லை. இது பாடசாலையின் செயற்பாடுகளுக்குத் தடையாக அமைந்து விடுகின்றது.

**02.முறையான திட்டமிடல் இன்மை**

எத்தகைய செயற்பாட்டையும் முறையாகத் திட்டமிடுவது அவசியம். திட்டமிடல் என்பது தீர்மானம் மேற்கொள்ளலாகும். சரியான தீர்மானம் என்பது திட்டமிடலின்போது மாத்திரம் இல்லாமல் செயன்முறை முழுவதுமே அவசியம். பாடசாலையின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் பல்வேறு மட்டங்களிலும் சரியான முறையிலே திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியது அவசியம். இவை சரியான முறையில் திட்டமிடப்படாதவிடத்து பாடசாலையின் செயற்பாடுகளில் பின்னடைவுகள் ஏற்படுகின்றன.

**03.அதிகார முரண்பாடு**

ஒரு பாடசாலையிலுள்ள பல்வேறு மட்டங்களிடையே காணப்படுகின்ற அதிகார முரண்பாடுகள் காரணமாகப் பாடசாலைச் செயற்பாடுகளை உரிய கால எல்லைக்குள் திருப்திகரமாகச் செய்து முடிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இந்த நிலமையானது அந்தப் பாடசாலையின் வலுவான இயங்குநிலைக்குச் சவாலாக அமைகிறது.

**04.சிவப்பு நாடாத் தன்மை**

முறைசார் அம்சங்களால் ஏற்படுகின்ற தேவையற்ற காலதாமதங்களே அந்த நிறுவனத்தின் சிவப்பு நாடாத் தன்மை எனப்படும். அதாவது பாடசாலை முன்னேற்றம் சார்ந்து மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம் போன்ற பல்வேறு மட்டங்களில் இருந்து பெறப்பட வேண்டி இருக்கின்ற அனுமதிகளும் அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள், தகவல்கள் போன்ற பல்வேறு முறைசார் அம்சங்களினால் குறித்த செயற்பாடுகளில் ஏற்படும் காலதாமதங்களும், வீண் அலைச்சல்கள் போன்றனவும் தடையாக அமைந்து விடுவதை இதன் மூலம் சுட்டிக்காட்டலாம்.

> பாடசாலையின் உயிர்ப்புள்ள இயக்கமானது அதிபரை முதன்மை வகை கூறுபவராகக் கொண்டு பல்வேறு தரப்பினருடைய முழுவதுமான செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. ஒரு பாடசாலையின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அங்கு செயலாற்றும் ஒவ்வொருவரதும் கூட்டு முயற்சியும் அர்ப் பணிப்புமே காரணமாகும்.

**05.** பாடசாலையிலே உள்ள பல்வேறு தரப்பினர்களிடையே காணப்படுகின்ற ஆரோக்கியமற்ற தனிநபர் போட்டிகள் காரணமாக ஏற்படும் முரண்பாடுகளும் மனக்கசப்புக்களும் பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகள் மீதும் ஆரோக்கியமற்ற நிலைமையினையும் தாமதங்களையும் ஏற்படுத்துகின்றன.

**06.** பாடசாலையில் முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு செயற்பாடுகளையும் சீராகப் பதிவு செய்து ஆவணப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகள் காணப்படாமை. அதாவது நடாத்தப்படும் விழாக்கள், மாணவரிடம் இருந்து அறவிடப்படுகின்ற கட்டண விவரங்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் மூலம் பெறப்படும் நிதி விவரங்களும், உதவிகளும், ஏனைய நிறுவனங்களி னூடாகப் பெற்றுக் கொள்ளப்படும் உதவிகள் போன்றன பதிவு செய்து கொள்ளாவிட்டால், அவசியம் ஏற்படும்போது அவை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ள நிலமை பல்வேறு சிக்கல் களை ஏற்படுத்துவதோடு ஆரோக்கியமற்ற நிலையையும் எடுத்துக் காட்டுவதாக அமையும்.

**07.தெரியப்படுத்தப்படாத ஒழுங்கமைப்பு சார்ந்த மாற்றங்கள்.**

பாடசாலையிலே மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள், மாற்றங்கள் தொடர்பாக அங்குள்ள அனைத்துத் தரப்பினருக்கும் தெரியப்படுத்தப்படாது ஒருசிலர் மட்டும் இணைந்து அவற்றை மேற்கொள்ளுவதால் பாடசாலை செயற்பாடுகளில் ஏனையோரது ஒத்துழைப்புக்களும் ஆதரவுகளும் இல்லாது போகின்றன.

**08.**பலவீனமான சமூக ஈடுபாடுகள் காரணமாகப் பாடசாலை முகாமைத்து வத்துக்கும் சமூகத்துக்கும் இடையில் பெரிய இடைவெளி ஏற்படுதல்.

**09.வளப்பற்றாக்குறை.**

மனித, பௌதீக, நிதி, நேரம் போன்ற வளங்கள் யாவும் கல்விமுறையில் முக்கியமானவை நிரந்தர அதிபர் இல்லாமை, தகமையுள்ள ஆசிரியர் பற்றாக்குறை, முறையான கட்டடவசதி, விளையாட்டு மைதானம், ஆய்வுகூடம், உபகரணங்கள், நீர்வசதி, மின்சார வசதி, தொலைபேசிவசதி போன்ற பல்வேறு வசதிகள்பாடசாலையின் உயிரோட்டத்தை வளப்படுத்த வழங்குகின்ற நிதி வரையறுக்கப்பட்டுள்ளமை போன்றன பாடசாலையின் உயிரோட்டத்துக்குத் தடையாகக் காணப்படுகின்றன.

**10.வளங்களை முறையாகப் பேணாமை.**

கட்டடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் முதலானவை முறையாகப் பேணப்படாமை காரணமாக அவை துரிதமாக சீரழியும் நிலை காணப்படும். பாடசாலை அலுவலகம், ஆய்வு கூடம் ஆகியவற்றில் காணப்படுகின்றஉபகரணங்கள் நேரத்திற்குப் பழுதுபார்க்கப்பட்டு கவனமாகப் பேணப்படாமை இதனால் பாடசாலை கவிவு நிலையில் ஏற்படும் மந்த நிலை போன்றன பாடசாலையின். உயிர்ப்பு நிலையைப் பாதிக்கின்றது. இப்படியான பல காரணிகள் ஒரு பாடசாலையைப் புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாக விளங்கச் செய்வதற்குத் தடையாக உள்ளன.

பாடசாலையின் உயிர்ப்புள்ள இயக்கமானது அதிபரைப் பிரதான வகை கூறுபவராகக் கொண்டு பல்வேறு தரப்பினருடைய முழுவதுமான செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. ஒரு பாடசாலையின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அங்கு செயலாற்றும் ஒவ்வொருவரதும் கூட்டு முயற்சியும் அர்ப்பணிப்புமே காரணமாகும்.

எனவே இத்தகைய தடைகளை அகற்றி பாடசாலையை ஒரு புதுமைகாண் உயிர்ப்புத் தொகுதியாக மாற்றுவதன் மூலம் ஒவ்வொரு பாடசாலையும் சமூகத்துக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவமுடியும்.

# நிறைவு தரும் வாசிப்பு

கட்டுரை

திருமதி. ஆ.செங்கதிர்ச்செல்வன்

அறிவு' எனும் மூலவளமே அனைத்து மூலவளங்களையும் இயக்கும் உந்து சக்தியாகத் தொழிற்படுகிறது. இன்றைய தகவல் தொழில் நுட்ப யுகத்திலே, மனித சமூகமானது தனது தேடல்களைப் பல முனைகளிலிருந்தும் மேற்கொள்ள வேண்டிய தேவையிலுள்ளது. சமூக முன்னேற்றம் என்பது அந்தந்தச் சூழலில் அமைந்துள்ள தேடலுக்கான வாய்ப்புக்களையும், வசதிகளையும் பயன்படுத்தும்போதே சாத்தியப்படும். இத்தகைய பயன்பாடு சுயசிந்தனையின் பாற்பட்டது. சுயசிந்தனை எழுச்சி பெறுவதற்கு அடிப்படையாக அமைவது பரந்துபட்ட வாசிப்பே ஆகும்.


### நூலகங்கள் அறிவாலயங்கள்

மனிதனை அறிவுலகத்துக்கு இழுத்துச் செல்வன புத்தகங்களே. அவை மனிதனைப்புனிதனாக்கிப்பண்படுத்துகின்றன. இவை மனிதர்களின் நல்ல நண்பர்கள் என்றுகூறப்படுகின்றன. கடவுள் குடிகொள்ளும் இடங்களைக் கோயில்கள் என்றால், நூல்கள் உறையும் இடங்களை 'அறிவாலயங்கள்' என்று எமது மூதாதையர்கள் சிறப்பித்துக் கூறுகின்றனர். வாசிப்பதன் மூலம் தனிமனிதர்கள் அறிவைப்பெற்றுக் கொள்ளும் போது கல்விச் செழுமையுள்ள சமுதாயம் தானாகவே மலரும். வாசிப்பின் மூலம் அறிவு விருத்தியடைகிறது. மேலதிக அறிவைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவும் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் முடிகிறது. வாழ்வு வளம்பெற அறிவு அவசியமாகும். அறிவைப்பெருக்க நூல்களை வாசிக்க வேண்டும். நூல்களை வாசிக்கும்போது நல்ல நூல்களைத் தெரிந்து படித்தல் வேண்டும். அப்போதுதான் மன நிறைவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### நூல்களில் பல வகை

மகிழ்வைத் தந்து அறிவைப் பெருக்க உதவுவன நூல்களே. நூல்களை வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் தனிமை உணர்வை ஒருபோதும் அனுபவிப்பதில்லை. அவர்களது வாழ்வில் சோர்வோ, சலிப்போ ஏற்படுவதில்லை "என்னை எந்தச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" என்று கூறியிருக்கிறார் ஆங்கிலக் கவிஞர் ஒருவர். புத்தகங்களைப் போன்ற நண்பர்கள் கிடைப்பது அரிது. எமது நண்பர்கள் எம்மை விட்டுப் பிரிந்து விடலாம். ஆனால் புத்த கங்கள் என்றுமே எம்மோடு கலந்து உறவாடிக் கொண்டிருப்பவை. எப்போதுமே எமக்கு இன்பம் தரத் தாயாராக இருப்பவை. எமக்கு அறிவு புகட்டும் ஆசான்கள் அவை. நூல்களில் பலவகைகள் உண்டு. வாழ்க்கை வரலாறு, தத்துவம், சமயம், அரசியல், அறிவியல், புனைகதை இலக்கியங்கள் என்பன அவற்றுள் சில.

நாம் எமது விருப்பத்துக்கு ஏற்றபடி நூல்களைப் படித்திட முடிகிறது. வெறும் பொழுது போக்குக்குரிய நூல்களை மட்டும் வாசிக்காது வாழ்க்கைக்குப் பயன்தரும் நூல்களையும் கற்க வேண்டும். அன்னப் பறவை நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகுவது போன்று மாணவர்கள் நீங்கள் தேவை யான, பொருத்தமான, பயன் தரக்கூடிய நூல்களைத் தெரிந்து வாசிக்க வேண்டும்.




### ஒக்ரோபர் முழுதும் வாசிப்போம்

மனித மேம்பாட்டுக்கும், அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் வாசிப்பு மிக முக்கியமான தொன்றாகும். எவனொருவன் வாசிக்காதவனாக இருக்கின்றானோ, அவன் மனதில் அறியாமை என்ற தூசியே அதிகம் படிந்திருக்கும்.

வாசிப்பின் தேவையையும் பெறுமதியையும் உணர்ந்து வாழ்நாள் முழுவதும் வாசித்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற சிந்தனையை இன்றைய இளம் சந்ததியினரிடையே கட்டியெழுப்புவதற்காகவே தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் ஒக்ரோபர் மாதம் வாசிப்பு மாதமாகப் அறிவிக்கப்பட்டுள்ளது. வாசிப்புப் பழக்கத்திhல் ஒவ்வொருவரினதும் அறிவு விருத்தியாகின்றது. நல்ல சிந்தனைகள் ஊற்றெடுப்பதற்கான உந்துதலை அளிக்கின்றன. அறிவு என்பது முக்கியமான தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ள 21ஆம் நூற்றாண்டுக்கு ஈடுகொடுத்து வாழ்வதற்கு 'வாசிப்பு' என்ற கருவி மிகவும் அவசியமாகின்றது. வாசிப்பின் மூலமாக உள நலம் சீரடைவதுடன் பண்பட்ட மனிதனாக மாறவும், சமூகம் பற்றிய விழிப்புணர்வு பெறவும் ஆற்றலைப் பெருக்கவும், வாழ்வின் விழுமியங்களை அறிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிட்டுகிறது. வாசிப்பு என்பது ஒரு மனிதனின் குழப்பமான மன நிலையை அகற்றி, நன்னிலைப்படுத்தவும் உதவுகின்றது. மனதில் எவ்வளவு துன்பங்கள் தாங்க முடியாத துயரங்கள் இருந்தாலும் அமைதியான சூழலிலிருந்து அறிவுசார் விடயங்களையோ வாசிக்கின்றபோது மனதை அழுத்திக்கொண்டிருந்த வலிகள் ஒதுங்கிக் கொள்ள, புதிய விடயங்கள் மனதை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. இதனால் மன அழுத்த நோயிலிருந்து விடுபட முடியும்.

### இளைஞர்கள், மாணவர்களுக்கு வாசிப்புக் கட்டாயம்

இன்று மக்கள் மத்தியிலும், குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியிலும் வாசிப்புப் பழக்கம் மிகவும் அருகி வருகின்றது. இது ஆரோக்கியமானதல்ல. மிக வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப யுகத்திலே கணினிப் பயன்பாடுகளோடு தகவல் ஊடகங்களும் மக்களிடையே எண்ணரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. இலத்திரனியல் ஊடகங்களும், நவீன ஊடகங்களும் இளைஞர்களது, மாணவர்களது கவனத்தை அதிகம் ஈர்ப்பதால் இளைய சமுதாயம் வாசிப்பில் ஈடுபாடு காட்டுவதில் மிகவும் பின் தங்கியுள்ளது. இதனால் மொழிப் பரீட்சயத்திலிருந்தும் இளைய சமுதாயத்தினர் நீண்ட தூரம் விலகிச் சென்றுள்ளனர். ஒவ்வொரு மாணவனும் தான் கல்வி கற்கும் மொழியில் சிறந்த வாசிப்புத் திறன் கொண்டவனாக இருக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் வகுப்பு மட்டப் பரீட்சையில் கூட நல்ல புள்ளிகளைப் பெற முடியாது என்பதில் வேறு கருத்துக் கிடையாது.



> வாசிப்பின் மூலமாக உள நலம் சீரடைவதுடன் பண்பட்ட மனிதனாக மாறவும், சமூகம் பற்றிய விழிப்புணர்வு பெறவும் ஆற்றலைப் பெருக்கவும், வாழ்வின் விழுமியங்களை அறிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிட்டுகிறது

### ஆரம்பப் பிரிவிலேயே வாசிப்பை ஆரம்பிப்போம்

வாசிப்பு என்ற நல் உலகத்துக்குள் ஆரம்ப வகுப்பு மாணவர்களைப் புகுத்தி விடும் கைங்கரியத்தில் ஆசிரியர்கள் முனைப்போடு செயற்படுவார்களாயின், அதன் பின் எவரும் தடுத்து நிறத்த முடியாதபடி வாசிப்பின் பின்னால் அவர்கள் ஓடிக்கொண்டிருப்பார்கள். இதனால் தான், ஆரம்ப வகுப்புகளில் வாசிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தியிருந்தால் தொடர்ச்சியாகவே மாணவர்கள் அதில் ஈடுபாடு கொண்டு விடுகிறார்கள். அவர்களது தரம், வயது, அனுபவத்துக்கேற்ப கவர்ச்சியான அட்டை, நூல்கள் அமைப்பு, எழுத்துக்கள் போன்றவை ஒழுங்கு படுத்தப்படும்போது அவர்கள் வாழ்நாள் வாசகர்களாக மாறிவிடுவது நிச்சயமாகிறது. அறிவியல் யுகம், தகவல் யுகம் என விருத்தியடைந்து செல்லும் இந்த நாளில் புத்தகங்களே அவற்றுக்கு ஏற்றபடி எம்மையும் ஓட வைக்கின்றன. உலகியல் கல்வி வளர்ச்சிக்கும் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கும் மத்தியில் தேடல், தொகுத்தல், வெளிப்படுத்துதல் என்பன மாணவர்களுக்கு இன்றியமையாதவை ஆகின்றன.

### 'கற்றபடி ஒழுகுதல்'

வாசிப்புத் திறனையும், புத்தகப் பண்பாட்டையும் பாடசாலை, வீடு, கிராமம், பிரதேசம் என்ற வகையில் பரவலாக்குவதன் மூலமாகவே பூரணத்துவம் மிகுந்ததொரு அறிவுச் சமுதாயத்தை உருவாக்க முடியும். நவீன உலகில் அறிவு பரந்து காணப்படுகின்றது. பல்துறைசார் அறிவுப் பிரவாகம் பல்லூடகமாகப் பரவி அவரவர் இருப்பிடங்களிலேயே நுகரக்கூடிய நிலையிலுள்ளது. பாட்டிலும், கல்வெட்டிலும், ஏட்டிலும், நூல்களிலும் இருந்த அறிவு மூலங்கள் இன்று பல்லூடக வடிவில் கணினித் தொழில்நுட்பத்தினூடகப் பிரவாகித்து நிற்கின்றன. 'காற்றபடி ஒழுகுதல்' என்பது மனிதன் மனிதனாக வாழ வழி சமைத்த ஆன்றோரின் கல்வி முறையா கும்.

ஆகையால் வெறுமனே புத்தகங்களைவாசிப்பதுடன்நின்றுவிடாது கற்றபடிநடக்கவும்பழகிக்கொள்ள வேண்டும். இன்று வாழ்வின் ஆதாரம் கல்வி என முற்று முழுதாகப் பொருளாதார நலம் சார்ந்து வளர்வதைத் அவதானிக்கலாம். ஒரு விடயத்தைக் கற்றல், சிந்தித்தல், தெளிதல் என்பவற்றினூடாகப் அறிவைத்தனதாக்கி, அதனூடாகத் தனது வாழ்வையும் சிந்தனையையும் மேம்படுத்திக் கொள்வதே பகுத்தறிவுள்ள மனித வாழ்வின் பயனாகும். இந்த நிலையைத் தொடர்வதற்கு நூல்களே ஏற்றவையாகும்.

### புதிய நுட்பத்தில் வசதியும் வளர்ச்சியும்

கணினி மயப்படுத்தப்பட்ட பன்னாட்டு வலைப்பின்னல் ஒவ்வொரு துறை சார்ந்தும் பல்லாயிரக்கணக்கான தகவல் வளங்களைத் தன்னகத்தே கொண்டு ஒன்றை அறிவதற்கும் அதைப் பயன்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்கிறது. ஆய்வாளருக்கு விஞ்ஞானிகளுக்கு, தொழில்துறையினருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. அதே சமயம் மனித சமூகத்தை இயந்திரமயமான வாழ்வுக்கு இட்டுச்செல்லும் ஒரு ஊடகமாகவும் மாறிவருகிறது.

நல்ல நூல்களை வாசிக்கும் ஒருவரின் அறிவும் எழுத்தாற்றலும் விரிவடை கின்றன.

நல்லதொரு எழுத்தாளனின் நேரத்தின் மிகக் கணிசமான பகுதி வாசிப்பாலேயே கழிகின்றது. வாசிப்புப் பழக்கம் பெற்றோரிடமிருந்தும் ஆசிரியரிடமிருந்தும் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தப்படல் வேண்டும். ஆசிரியர் தான் கற்பிக்கின்ற பாடத்துக்கும் பாடநூலுக்கும் அப்பால் சென்று அறிவுத் தேடலை வளர்த்துக்கொள்வதோடு மாணவர்களையும் அறிவுத்தேடலுக்கு வழிப்படுத்த வேண்டியவராகக் காணப்படுகின்றார். கல்வி பொருளாதாரப் பண்டமாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் தமிழர் கல்வி பாரம்பரியம் பற்றிய மீள் சிந்தனை அவசியமாகின்றது.

நூல்களை எப்படி வாசிப்பது என்பது பற்றிப் பாடசாலைகளில் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவை மேலெழுகின்றது. பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நிறுவனங்களாகவே பாடசாலைகளும், தனியார் கல்வி நிலையங்களும், உயர் கல்வி நிறுவனங்களும் செயற்படும் நிலையில் இவற்றில் மாற்றத்தின் தேவை உணரப்பட்டு வருகின்றது.


“ கடந்த வருடமும் சிறந்த கால்பந் தாட்ட வீரராகத் தெரிவாகியிருந்த அவர் இந்த வருடம் அந்த அந்தஸ்தைத் தக்கவைத்துள்ளார். ”

# மற்றொரு மகுடம்

பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரராகத் தெரிவாகியுள்ளார் ரொனால்டோ. கடந்த வருடமும் சிறந்த கால்பந்தாட்ட வீரராகத் தெரிவாகியிருந்த அவர் இந்த வருடம் அந்த அந்தஸ்தைத் தக்கவைத்துள்ளார்.

ரொனால்டோ, மெஸ்ஸி, நெய்மர் ஆகயோருக்கு இடையில் கடும்போட்டி நிலவியது.

ரொனால்டோ வெற்றிபெற்றார். மெஸ்ஸி இரண்டாம் இடத்தையும், நெய்மர் மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர். இந்த விருது ரொனால்டோவுக்குக் கிடைத்தமையானது தங்கப்பந்து விருதும் அவருக்குக் கிடைக்க அதிக சாத்தியமுள்ளது என்றே கருதப்படுகிறது.



# தலைமைத்துவத்துக்கு தகுதியற்றவர் தரங்க




இலங்கை அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான தலைவராக உள்ளார் தரங்க. மத்தியூஸிடம் இருந்து தரங்கவுக்கு தலைமைத்துவம் மாற்றப்பட்டதை விட மத்தியூஸே தலைவராகத் தொடர்ந்திருக்கலாம் என்று விமர்சனக் குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன.

அண்மையில் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கை அணி 0:5 என்று இழந்தது. இந்த வருடத்தில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணி வழித்துத் துடைக்கப்படுவது மூன்றாவது தடவை. முன்னதாக தென்னாபிரிக்காவுக்கு எதிராகவும், பின்னர் இந்தியாவுக்கு எதிராகவும், தற்போது பாகிஸ்தானுக்கு எதிராகவும் இலங்கை அணி படுதோல்வியடைந்துள்ளது. இந்த மூன்று தொடர்களிலும் இலங்கை அணியின் தலைவராக தரங்கவே செயற்பட்டார். குறைந்தது ஓர் ஆட்டத்தில் வெற்றிபெற்று வழித்துத் துடைப்பைத் தவிர்ப்பதற்குக்கூட இலங்கை அணியால் முடியவில்லை. அணியின் தலைவர் என்ற முறையில் தோல்விகளுக்குப் பொறுப்பேற்றுள்ளார் தரங்க. ஏனைய வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை என்று காரசாரமான கருத்துக்களையும் அவர் முன்வைத்திருந்தார். ஆனால் சிறப்பான தலைமைத்துவ வியூகங்கள் தரங்கவுக்கு இல்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. துடுப்பாட்ட வரிசையில் அவர் செய்த ஏற்கமுடியாத மாற்றங்களும், இதற்குத் தகுந்த சான்று.




# ஓரங்கட்டப்படுகிறார் எம்.எஸ்.டோனி

இந்திய அணியின் தலைவராக இருந்து அத்தனை உலகக்கிண்ணங்களையும் இந்தியாவுக்கு வாங்கிக் கொடுத்த தலைவரான டோனி, தற்போது அணியில் இருந்து படிப்படியாக ஓரங்கட்டப்படுகிறாரா என்ற சந்தேகங்கள் வலுத்துள்ளன.

டோனிக்கு என்று தற்போது நிரந்தரமான இடமில்லை. ஒவ்வொரு ஆட்டத்திலும் வெவ்வேறு இடங்களில் (துடுப்பாட்ட வரிசையில்) டோனி களமிறக்கப்படுகிறார். இதுவரை காலமும் அணியில் இருந்து ஓரங்கப்பட்டிருந்த டினேஸ் கார்திக் தற்போது அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

டினேஸ் கார்த்திக் ஓர் இலக்குக் காப்பாளர் எனவே டோனியின் இடத்துக்கு அவரைப் பிரதியீடு செய்வதற்காகவே டினேஸ் கார்த்திக் அணிக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார் என்றும் எண்ணாதவர்கள் இல்லை. இந்திய அணிக்குள் ஏதோ ஒன்று நடக்கிறது. விரைவில் வெளிச்சத்துக்கு வரும். ஆனால் ஒன்றுமட்டும் உண்மை, டோனி தானாக ஓய்வு பெறாமல் வலிந்து ஓய்வுபெற வைக்கப்படுவாராயின் இந்திய அணி தனது ரசிகர்களில் பாதிப்பேரை இழக்க வேண்டிவரும்.

# ஹமில்டன் சம்பியனாவார்



உலக கார்பந்தயத் தொடரில் சம்பியனாவதற்கு ஹமில்டனுக்கு அதிக வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

நடப்பு வருடத்துக்கான உலக கார்ப்பந்தயத் தொடர் உலகம் முழுவதும் 20 சுற்றுக்களாக நடத்தப்பட்டு வருகிறது. இதன் 17ஆவது சுற்று அமெரிக்காவில் கடந்த ஞாயிறு நடைபெற்றது. பந்தயத் தூரமான சுமார் 310 கிலோ மீற்றர்களை சுமார் ஒரு மணித்தியாலம் 33 நிமிடங்களில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார் ஹமில்டன்.

உலக கார்பந்தயத் தொடர் முடிவடைய இன்னும் 3 சுற்றுக்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. முடிவடைந்த 17 சுற்றுக்களின் அடிப்படையில் 331 புள்ளிகளுடன் ஹமில்டன் முதலிடத்தில் உள்ளார். வெட்டல் 265 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளார். ஹமில்டனுக்கும் வெட்டலுக்கும் இடையே 66 புள்ளிகள் வித்தியாசம் பேணப்படுகிறது. இன்றும் ஒரு சுற்றில் முதல் ஐந்து இடங்களுக்குள் வந்தாலே ஹமில்டன் சம்பினாவது உறுதியாகிவிடும்.















கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்திஸ்வராக் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் J/82 கிராம சேவகர் பிரிவு, வண்ணார் பண்ணை அபிவிருத்திக் குழுவினரால் முதியோர் - சிறுவர் தினவிழா நடத்தப்பட்டது. முதியோர் சங்கம், கிராம சிறுவர் அபிவிருத்திக்குழு, சிறுவர் கழகம் ஆகியன இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்தனர். ஓய்வு நிலை கிராம அலுவலரும், முதியோர் சங்கத் தலைவருமாகிய நாகலிங்கம் சுந்தரராஜா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலர் பொன்னம்பலம் தயானந்தன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினரும், யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவருமான இ. ஜெயசேகரன் மற்றும் யாழ்ப்பாண வைத்தீஸ் வராக் கல்லூரி அதிபர் வாசுகி தவபாலன், மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பிரதேச செயலக நன்னடத்தை உத்தியோகத்தர் சந்திரா நக்கீரன், யாழ்ப்பாண நிர்வாக கிராம அலுவலர் ஜோன் பிள்ளை பத்திநாதன் மற்றும் யாழ்ப்பாணச் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரஜனி புவிராஜசிங்கம் ஆகியோர் பங்குபற்றினர். இந்த நிகழ்வில் சிறுவர் முதியோர் கலை நிகழ்வுகளும் பாராட்டும், பரிசில்களும் வழங்கிக் மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சங்கானை ஜுப்பிற்றர் முன்பள்ளி பாலர் பாடசாலையின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக ஜுப்பிற்றர் கழகத் தலைவர், சூடத்து மனோன்மணி அம்மன் ஆலய தலைமைக் குரு மற்றும் தென்னிந்திய திருச்சபை வட்டுக் கோட்டை பங்கு போதகர் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஆலய முன்றிலில் வைத்து விருந்தினர்கள், ஆசிரியர்கள் மாலைகள் அணிவித்து மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் பாடசாலை வரை அழைத்து வரப்பட்டனர்.

விருந்தினர்களால் ஆசியுரை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களால் ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.







யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் கடந்த 17ஆம் திகதி சிறுவர் முதியோர் தின விழா நடைபெற்றது. இந்த நிகழ்வின் போது குருதிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த யேசுராசா அபிஷா (வயது-13) என்ற சிறுமிக்கு, J/82 கிராம சேவகர் பிரிவு, வண்ணார் பண்ணை முதியோர் சங்கத்தினால் 20 ஆயிரம் ரூபாவை ஓய்வு நிலை கிராம அலுவலரும் முதியோர் சங்கத் தலைவருமான நாகலிங்கம் சுந்தரராஜா யாழ்.பிரதேச செயலர் முன்னிலையில் சிறுமியின் தாயாரிடம் வழங்கினார்.













மூத்த நயினார் கோயிலில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சூரசங்காரத்தின் போது பாரம்பரிய சிலம்பாட்ட நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது.



# பாரம்பரிய மருத்துவம்

## சீனா வழிகாட்டுகிறது

கட்டுரை

 கு. சிவராமன்

பாரம்பரிய மருத்துவத்துக்கு எதிர்ப்பாகவும் ஆதரவாகவும் விவாதங்கள் நிகழ்ந்து கொண்டிக்கின்றன. இந்தத் தருணத்தில் சீனாவில் பாரம்பரிய மருத்துவத்துக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைப் பற்றிப் பார்ப்பது சிறந்ததாக அமையலாம்.

1965ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரையிலான காலங்கள் உலகெங்கும் இருந்த மிகக் கடுமையான தொற்று மலேரியா. குறிப்பாக, சீனா உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளிலும் கொத்துக் கொத்தாக மக்கள் செத்து மடிந்துகொண்டிருந்தனர். மலேரியாவுக்கு அப்போதிருந்த ஒரே மருந்து கொய்னைன் என்பதுதான். கொய்னா மரத்தின் வேர்ப்பட்டைதான் அது. அதைத்தான் சீன மக்கள் பயன்படுத்திவந்தார்கள். ஆனால், பிற்பாடு கொய்னைனுக்கு எதிராக மலேரியாக் கிருமி எதிர்ப்புத்தன்மையை வளர்த்துக்கொண்டதால் கொய்னைனும்கூட வேலை செய்யாமல் போய்விட்டது.

அதே காலகட்டத்தில் வியட்நாம் போரினால் ஏராளமான சிப்பாய்கள் மலேரியாக் காய்ச்சலில் இறந்து போனார்கள். அப்போது சீனாவின் இராணுவத் துறை மலேரியாவைக் கட்டுப்படுத்த தன் பாதுகாப்புத் துறையின் கீழ் ஆய்வை முடுக்கிவிட்டது. பெரும்பாலான மக்கள், மலேரியாவால் காய்ச்சல், குளிர் காய்ச்சல் வந்தாலே பாரம்பரிய சீன மருந்துக் கஷாயத்தில் பலன் பெற்றதை உன்னிப்பாகக் கவனித்த அரசு, பாரம்பரிய சீன மருத்துவத்தை ஆய்வு செய்யச் சொல்லி அறிவியலாளர்களை முடுக்கிவிட்டது. நவீன மருத்துவர்களுக்கும் நவீன ஆய்வாளர்களுக்கும் சீன மருத்துவத்தில் 2ஆண்டுகாலப் பயிற்சியைசீன அரசு கட்டாயமாக்கியது. அதேபோல், பாரம்பரிய சீன மருத்துவர்களுக்கும், அடிப்படை நவீன அறிவியல் கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்தச் சூழலில்தான், மருந்தியல் பட்டதாரியான 'யூயூ டு' என்ற பெண் 'மலேரியா கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி'க்கு அதிகாரியாக வருகிறார்.

### கூட்டு முயற்சி

மலேரியாவுக்காக மக்கள் அதிகமாக எடுத்துக்கொள்ளும் மூலிகைக் கஷாயங்களை எல்லாம்யூயூவின் குழு சேகரித்தது. கி.மு. 700களிலிருந்து கி.பி. 1000 வரையிலான பல நூறு சீன மருத்துவ நூல்களில் உள்ள தகவல்களை வைத்து அந்தக் கஷாயங்களில் எவை பயன் தரக்கூடியவை என்று சீனப் பாரம்பரிய மருத்துவர்களுடன் கலந்தாலோசித்து, சில மருந்துகளைத் தேர்ந்தெடுத்தார்கள். தேர்ந்தெடுத்த கஷாயங்களை, பாரம்பரிய சீன மருத்துவத் துறை, மருந்தியல் துறை, நவீன மருத்துவர்கள் துறை ஆகிய மூன்று துறையினரும் கூட்டாக இணைந்து 1970களிலிருந்து ஆய்வுகளை மேற்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். 1990 வரை இந்த ஆய்வுகள் நீடிக்கின் றன. இந்த ஆய் வில் 'க்யூங்ஹோ' (Qinghao) என்கிற தாவரத்துக்கு 'எண்: 190' என்று மறைமுகப் பெயர் இடுகிறார்கள். இதன் கஷாயம் பெரிய அளவில் பயன்படக்கூடியது என்று அவர்கள் கண்டறிகிறார்கள். அதன் மூலம் பலர் குணமடைவதையும் கண்கூடாகப் பார்க்கவும் செய்கிறார்கள்.

ஆனால், சாறு எடுத்து அதில் உள்ள சத்துக்களை அறிவியல் முறையில் பிரித்தெடுத்தால் வேலை செய்யவில்லை. 'கஷாயமாக வேலை செய்யும்போது ஏன் நவீன மருத்துவமாக வேலை செய்யவில்லை?' என்ற கேள்வியுடன் பாரம்பரிய சீன மருத்துவர்களிடம் திரும்பவும் செல்கிறார்கள். "இதர் கஷாயங்களைத் தண்ணீரில் கொதிக்க வைத்துத் தயாரிக்க வேண்டும். ஆனால் இதைத் தண்ணீரில் ஊற வைத்து, அலசி, அதைப் பிழிந்து எடுக்க வேண்டும்,' என்று சீன மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.


இந்தக் கஷாயத்தைச் சூடு செய்தால், அந்தத் தாவர வேதிப்பொருள் வலுவிழக்கிறது என்பதைப் புரிந்து



கொண்டு பாரம்பரிய சீன மருத்துவத்தில் எப்படித் தயாரித்தார்களோ அதே முறையில் ஊறவைத்து அந்த வேதிப் பொருளைப் பிரித்தெடுக் கிறார்கள். அந்த தாவர வேதிப் பொருள் (எண்:190) மலேரியாவுக்கு எதிராக 100சதவிகிதம் எதிர்ப்பைத் தருவதைக் கண் டறிகிறார்கள்.


அடுத்து நோயாளிகளிடம் அதைப் பரி சோதனை செய்ய வேண்டும். ஆனால், அப்படிக் கண்டறியப்பட்ட சத்து சில நச்சுத்தன்மைகளையும் தருவதை ஆய்வாளர்கள் கண்டறிகிறார்கள். 'யூயூ'வுக்கு இது பெரும் கவலையையும் பின்னடைவையும் தருகிறது.

அடுத்த மழைப் பருவத்துக்குள் (மலேரியா அப்போதுதான் வரும்) நச்சு இருக்கிறதா இல்லையா என்பதை ஆய்ந்தறிய வேண்டும். யூயூவின் குழு, 'இத்தனை ஆயிரம் ஆண்டு காலம் பயன்பட்ட பொருள் எப்படி நஞ்சைத் தரும்?




## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சத்தியசீலன்



சாவகச்சேரி, டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சத்தியசீலன் 26.10.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னம்மா(அம்மாச்சி) தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் லம்பாதேஸ்வரியின் அன்புக் கணவரும் சசிகரன், லாவண்யா, துவாரகன், சோபிகரன, டர்சிகா, ஜனந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தவமணி, குணாளன், இராயேஸ்வரி(கிளி), யோகேஸ்வரி(யோகம்), சித்திராதேவி, ஆனந்தகுமார்(ராசன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை டச்சு வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்



### திருமதி சிதம்பரம் (சோதி) யோகநாதன் (வல்லிபுரம்)

(முன்னாள் சித்த ஆயுள்வேத மருந்தாளர்)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரம் யோகநாதன் 27.10.2017 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னத்தங்கச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற யோகநாதனின் அன்பு மனைவியும், பிரகாஸ் (கனடா), பிரதீபன் (கனடா), சிவதர்சினி (கனடா), ரஜீவ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், ராஜி (கனடா), அபிமன்யு (கனடா), ரதீஷா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கோவிந்தபிள்ளை, பொன்னுத்துரை, நடராசா மற்றும் செல்லம்மா, நல்லதம்பி, யோகாம்பிகை, சிவக்கொழுந்து, வரலட்சுமி (பூலோகம் அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஸ்வலிங்கம், செல்லத்துரை, முத்துலட்சுமி (சுவிஸ்), கோபால் (சுவிஸ்), சிவசிதம்பரம் (கனடா), சண்முகம் (சுவிஸ்), கமலேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி ஜேர்மன்), காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், வாகைத்தென்றல் (கனடா), ஈகன் (கனடா), ஏகன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

**திரு. திருமதி கந்தசாமி,**
**3 ஆம் ஒழுங்கை, வளாக வீதி,**
**திருநெல்வேலி.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**பிரகாஸ் (கனடா -416 918 7343)**
**தர்சினி (கனடா -416 560 1739)**

(49 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு காலம் பயன்பட்ட பொருள் எப்படி நஞ்சைத் தரும்? நாமே இந்த மருந்தை எடுத்துக்கொண்டு சோதித்துக்கொள் ளலாம்' என முடிவு
செய்து அவரும் அவரோடு பணியாற்றிய விஞ்ஞானிகளுமே அந்த மருந்தை எடுத்துக்கொண்டார்கள்.
மருந்து எடுக்க முன்னர் அவர்கள் உடல் நிலை, குருதியின் பல்வேறு அளவுகள், உடலின் நொதிகள் போன்றவை குறிப் பெடுக்கப்படுகின்றன. 'எண் 190' மருந்தை எடுத்துக் கொண்ட பின்னர், என்ன மாற்றம் ஏற்படுகிறது என்பதைப் பதிவுசெய்தனர். தங்களையே சோதனைக் களமாக்கி, அந்த ஆய்வு முடிவில் அந்த மருந்து 100சதவிகிதம் பாதுகாப்பு என்பது திட்டவட்டமாக அறியப்படுகிறது.
பின்னர், முதல்கட்டமாக 20 மலேரியா நோயாளிகளுக்கு அந்த மருந்து கொடுக்கப்படுகிறது. 100சதவிகித பயன் இருப் பதை அறிந்துகொண்ட பின் ஆய்வறிக் கையை உலக அரங்கில் வெளியிடுகி றார்கள். அந்த மருந்துக்கு 'அர்டிமிசி னின்' எனும் பெயர் இடப்படுகிறது. அதன்பின் 2.5 கோடி ஆபிரிக்க, சீன மக்களை அந்த மருந்து உயிர் பிழைக்க வைத்தது.

**நோபல் பரிசைப் பெற்றுத்தந்த மருந்து**

இதில் நாம் தெரிந்துகொள்ள வேண்டி யது என்னவென்றால் இந்த இருபது வருட ஆராய்ச்சியில், ஒரு பக்கம் சீனப் பாரம்பரிய மருத்துவர்கள் மலேரியா வுக்கு 'க்யுங்ஹோவைக்' கஷாயமாக மக்களுக்குக் கொடுத்துக் கொண்டுவந்தார்கள். இன் னொரு பக்கம் நவீன மருத்துவர் கள், சீனப் பாரம்பரிய மருத்து வர்கள், மருந்தியல் ஆய்வாளர் களின் கூட்டு ஆய்வும் தொடர்ச்சியாக நடை பெற்றுவந்தது. இந்த ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தபோது 'இது நச்சுத்தன்மை யைக் கொடுக்கும், பலனளிக்காது என்றும் பல சர்ச்சைகள் எழுந்தன. அவற்றையெல் லாம் தாண்டி சீன அரசின் அணுகுமுறையா லும், ஆராய்ச்சியாளர்களின் கூட்டு முயற்சி யாலும் 'அர்டிமிசினின்' கண்டறியப்பட்டு உலகுக்குக் கிடைத்தது. அந்த மருந்து, 2015இல் நோபல் பரிசை யூயூவுக்குப் பெற் றுத்தந்தது.



**மா சேதுங்கும் பாரம்பரிய மருத்துவமும்**

புதிய சீனாவைப் படைத்த மா சேதுங் இப்ப டிச் சொல்கிறார். "எனக்குப் பழமைவாதத்தின் மீது நம்பிக்கை கிடையாது. புதிய சீனாவை பழமையின் பிடியிலிருந்து வெளிக்கொண்டு வர வேண்டும் என்பதுதான் எங்களின் முதல் வாதமே. ஆனால், சீனாவில் பெருவா ரியான மக்கள் இந்தப் பாரம்பரிய மருந்தால் குணமடைந்துவருவதாலும், என் மக்க ளுக்கு இந்தத்துறையில் அதீத நம்பிக்கை இருப்பதாலும் இந்தச் சீனப் பாரம்பரிய மருத் துவத்துக்கு என் அரசு முன்னுரிமை கொடுத்து அதைப் பயன்பாட்டுக்கும் ஆய்வுக்கும் எடுத் துக்கொள்ளும்.'' அன்று அவர் எடுத்த முடிவுதான் மருத்து வத் துறையில் சீனா வுக்கு நோபல் பரி சைக்கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. உலகின் முக்கியமான பாரம்பரிய மருத்துவ மாக சீன மருத்து வத்தை இன்று அறிய வைத்திருக்கிறது.
இங்கும் நிலவேம்புக் கஷாயம் உள்ளிட்ட எளிய மருந்துகள், சித்த, ஆயுர்வேத மருந்துகளில் ஏராள மாய் உள்ளன. அர்டி மிசினின் கண்டுபி டிக்கப்பட்ட காலத்தை விட மருத்துவ ஆய்வு முறைகள் தற்போது பல மடங்கு உச்சத் தில் உள்ளன. நாம் என்ன செய்யப்போ கிறோம்? இப்படியே, "பாரம்பரிய மருந்து களே பலனளிக்காது நச்சுத்தன்மை கொடுக்கக் கூடும்" என்று குறை மட்டும் சொல்லிக்கொண்டி ருக்கப் போகிறோமா அல்லது 'யூயூ' வை முன்னோடியாகக் கொண்டு அத்தனை மருத்துவத் துறையி னரும் ஆய்வறிஞர்க ளும் கூட்டாகப் பணி யாற்றப்போகி றோமா என்பதே நம் முன்னாள் தற்போது உள்ள கேள்வி.

நன்றி ஹிந்து

---

## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.05.1952 | 29.10.2012 |

## நாகலிங்கம் துரைசிங்கம்

"தெசலோனிக்கேயர் 4:" 16

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்;அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்

ஆண்டுகள் ஐந்து நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்!

இல.11, இராணி வீதி,
நாயன்மார்கட்டு.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

---

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1928.04.18 | 2006.10.30 |

## அமரர் செ.தியாகராஜா

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

திதி : 29.10.2017

அன்பின் திருவுருவே ! பாசத்தின் திருமலரே !
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறவில்லை எம் நெஞ்சம்

என்றும் நீங்கா நினைவுகளுடன்

"ஸ்ரீ அகம்"
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் இல.459/6 இராமநாதபுரத்தினை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணி யம் 26.10.2017 காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை அன்னா ரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.30 மணி யளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இரா மநாதபுரம் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

0777112874

---



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.11.1956 | 26.10.2017 |

### திருமதி இலட்சுமிதேவி தயாளன்

பளை, கச்சார் வெளியைப் பிறப்பிடமாகவும், இல.275 குட்செற் வீதி, முதலாம் ஒழுங்கை, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி தேவி தயாளன் 26.10.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தோணிக்கல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




## அமரர் இராசலிங்கம் நாகராஜா (மாஸ்ரர்)

கடந்த 29.09.2017 வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்த இராசலிங்கம் நாகராஜா அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று 29.10.2017 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் வீரபத்திரர் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி என்ற அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் வீதி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# குருத்துவத்தில் வைரவிழாக் காணும் வேதநாயகம் அடிகளார் அ.ம.தி.



யாழ். குருநகர் புதுமை மாதா ஆலய மண்ணின் மைந்தனும், முதற் குருவும், யாழ். அமல மரித்தியாகிகள் சபையை சேர்ந்தவருமான அமிர்தநாதர் கில்லறியன் வேதநாயகம் அ.ம.தி அடிகளார் தமது குருத்துவ வைரவிழாவை கடந்த செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை எம்.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளார் தலைமையில் கொண்டாடினார். அது குறித்து இந்த ஆக்கம் பேசுகிறது.

இந்த ஆக்கத்துக்கான தகவல்களையும் படங்களையும் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை எம்.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளார், தாம் வேதநாயகம் அ.ம.தி அடிகளாருக்குத் தயாரித்து வெளியிடும் மலரில் இருந்து தந்து உதவியுள்ளார்.

**குருத்துவத்தின் 60ஆம் ஆண்டு**

எளிமையான தோற்றம், மெதுவான நடை, மென்மையான பேச்சு, அமைதியான அணுகுமுறை, அன்பான சுபாவம், வரவேற்கும் புன்னகை, ஆர்ப்பாட்டம் இல்லாத ஆளுமை, பெருமையில்லாதமனம், எவரையும் புண்படுத்தாத மனிதம் என அத்தனை நற்குணங்களும் நிறைந்த ஒரு துறவியாக வேதநாயகம் அ.ம.தி அடிகளார் விளங்குகிறார்.

அவர் தமது வாழ்க்கைப் பயணத்தில் 87 ஆண்டு காலப் பகுதியை நிறைவு செய்யும் தருணத்தில் (1929-2017) தனது 60ஆவது குருத்துவப் பணி நிறைவினை (1957 -2017) கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார். இந்த சந்தர்ப்பத்திலே உதயன் பத்திரிகையின் சூரியகாந்தி சிறப்பு இணைப்பின் கிறிஸ்தவ ஞாயிறுப் பக்க வாசக அன்பு நெஞ்சங்கள் சார்பாக அவரை வாழ்த்தி இறைவரம் வேண்டி நிற்கிறோம்.

> “ எளிமையான தோற்றம், மெதுவான நடை, மென்மையான பேச்சு, அமைதியான அணுகுமுறை, அன்பான சுபாவம், வரவேற்கும் புன்னகை, ஆர்ப்பாட்டம் இல்லாத ஆளுமை, பெருமையில்லாத மனம், எவரையும் புண்படுத்தாத மனிதம் என அத்தனை நற் குணங்களும் நிறைந்த ஒரு மாமனிதத் துறவியாக வேதநாயகம் அ.ம.தி அடிகளார் விளங்குகிறார்.

**வைரவிழாக் காணும் வேதநாயகம் அ.ம.தி அடிகளார்**

1929ஆம் ஆண்டு பிறந்து, 1957ஆம் ஆண்டு குருத்துவ அருட்பொழிவு பெற்று, 1982ஆம்ஆண்டு குருத்துவ வெள்ளி விழாக்கண்டு கடந்த 2007 ஆம் ஆண்டு குருத்துவ பொன் விழாவையும் இவ்வாண்டில் குருத்துவ வைர விழாவையும் கொண்டாடி மகிழும் வேதநாயகம் அ.ம.தி அடிகளார் உண்மையிலேயே வாழ்த்தப்பட வேண்டியவர்.

எல்லோருக்கும் இலகுவில் கிடைக்காத அரிய வாய்ப்பை இறைவன் இவருக்கு வழங்கியுள்ளார். 87 ஆண்டுகளைக் கண்டு உடல் நலத்தோடு நடமாடித்திரிய இறைவன் இவருக்கு அருள் கூர்ந்துள்ளார். குருத்துவ வாழ்வில் 60 ஆண்டுகளை நிறைவு செய்யும் அரிய வாய்ப்பை இவருக்கு நல்கியுள்ளார். இது அவரின் அமைதியான மனம், எளிமையான வாழ்வு, மகிழ்வான பணி, மனம் நிறைந்த அர்ப்பணம், தெளிவான பயணப் பாதை, ஆர்ப்பாட்டம் இல்லாத கடின உழைப்பு என்பவற்றுக்கு இறைவன் உவந்தளித்த கொடை என்றே சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணம் குருநகர் மண்ணின் மைந்தரான இவர் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம், புனித பத்திரிசியார் கல்லூரி என தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இவர் யாழ்ப்பாணம் மடுத்தீனார் சிறிய குருமடத்திலும், கண்டி தேசிய குருமடத்திலும் குருத்துவப் பயிற்சி பெற்றார். இவருக்கு அகஸ்ரின் மகிமைநாதன், மேரி லூயிஸ், அருட்சகோதரி எட்விச் யேசுதாசன் என நான்கு சகோதரர்கள் உள்ளனர்.

இவர்களில் ஒரு சகோதரியும் சகோதரனும் காலமாகி விட்ட நிலையில் அருட்சகோதரி எட்விச் மற்றும் அவரின் தம்பியார் யேசுதாசனுமே இந்த வைரவிழாவில் பங்குகொள்ளும் பேற்றினைப் பெற்றனர்.

**வைரவிழா நாயகரின் பணித்தளங்கள்**

இவரின் பணித்தளங்கள் பல மறைமாவட்டங்களையும் நாடுகளையும் இணைத்ததாக இருந்திருக்கிறது. மன்னார் செபஸ்தியார் கோவில், பெரிய பண்டிவிரிச்சான் மடு, அடம்பன் வியாகுல மாதா கோவில், உருத்திரபுரம் ஆரோகணம் சிறுவர் இல்லப் பொறுப்பாளர், 1980 மாகாண பதில் முதல்வர், இந்தியாவில் அ.ம.தி பணித்தளத்தை உருவாக்க உழைப்பு, யாழ்ப்பாண தொடர்பகம் இடம் வாங்க உழைப்பு என அவரின் பணி பரந்திருந்தது.

**கட்டடப் பணிகள்**

இவர் மேற்கொண்ட அனைத்துப்பணிகளிலும் தனித்துவமான விசேட பணியாக விளங்குவது கட்டடக்கலைஞர் பணியாகும். இவரின் கைவண்ணத்தில் உருவான கட்டடப்பணிகளில் முக்கியமானவற்றை இணைத்த படத்தை இவ்வாக்கத்துடன் காணலாம். பிலிப் பைன்ஸ் நாட்டில் மனிலா நகரில் கட்டடக் கலை உயர்படிப்பைக் கற்ற பின்னர் இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பணியாற்றியுள்ளார்.




இவரின் வரைபடத்தில் கட்டப்பட்ட முதலாவது ஆலயம் பண்டிவிரிச்சான் மரிய கொறற்றி ஆலயமாகும். பின்னர் பெங்களூர் அ.ம.தி.கள் குருமடம், காஞ்சிபுரம் ஆன்மோதயா ஆச்சிரமம், யாழ்ப்பாணம் தொடர்பகம், மடு தியான இல்லம், மடு குருமனை, மடு நற்கருணை ஆலயம், குருநகர் புதுமைமாதா ஆலயம், கொழும்புத்துறை இயுஜின் டிமசனட் ஆலயம், கொழும்புத்துறை அமல உற்பவம், கொழும்புத்துறை அ.ம.தியாகிகள் குருமடம், மன்னார் ஞானதோயம், கோப்பாய் சங்கமம், மன்னார் ஆயர் இல்லம், சிற்றாலயம் என இவரின் பணி பரந்துள்ளது. சில்லாலையில் அமையவிருக்கும் யாழ் மறைமாவட்ட தூய யோசவ்வாஸ் திருத்தலத்துக்கான அழகிய வடிவமைப்பை பூர்த்தி செய்து அண்மையில் வழங்கியிருக்கிறார்.




**குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை எம்.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளாரின் வாழ்த்து**

அருட்தந்தை வேதநாயகம் அடிகளாரின் சொந்த இடமாகிய குருநகர் புதுமை மாதா ஆலயத்திலே அவரது குருத்துவ வைரவிழாவை நினைத்து நன்றித் திருப்பலி ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்ற விருப்பைத் தெரிவிக்க நானும் அருட்பணிச் சபை செயலாளரும் சென்ற போது ஆடம்பரம் எதுவும் வேண்டாம் எனக் கண்டிப்பாக தெரிவித்தார். அவரது துறவற வாழ்வில் அவர் வெளிப்படுத்த விரும்பிய எளிமையும், ஏழ்மை என்னும் வாக்குறுதியை காக்க அவர் கொண்டிருந்த அக்கறையும் மனதை நெகிழச் செய்வதாக அமைந்திருந்தது.

இத்தகைய ஒரு முன்னுதாரண கர்த்தாவாக விளங்கிய குருவின், குருத்துவ வைரவிழாவைக் கொண்டாடும் பாக்கியம் பங்குத்தந்தை என்ற மட்டில் எனக்குக் கிட்டுவது பெருமகிழ்ச்சி.

நீண்ட ஆயுளினாலும், நல்ல ஆரோக்கியத்தினாலும் இறைவன் இவரை அணி செய்துள்ளார். எண்பத்து ஏழாவது அகவையிலும் ஆலயங்களை வடிவமைக்கும் ஆற்றலை இறைவன் அவருக்குக் கொடுத்துள்ளார். அண்மையில், சில்லாலையில் அமையவிருக்கும் தூய யோசவாஸ் திருத்தலத்துக்கான அழகிய வடிவமைப்பை பூர்த்தி செய்து வழங்கியிருந்தார்.

**ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் வாழ்த்து**

ஓய்வுநிலை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது வாழ்த்தில் குருத்துவத்தில் அறுபது ஆண்டுகளை எதிர்கொள்வது என்பது ஒரு அரிதான விடயம். அருட்தந்தை வேதநாயகம் அ.ம.தி அவர்களுக்கு அது கிட்டியிருக்கிறது. அவருக்கு பின்னும், பல நூற்றாண்டு களுக்கு அவர் வடிவமைத்த ஆலயங்கள், தியான இல்லங்கள், பணிமனைகள் என்பவற்றினூடாக அவர் வாழ இருக்கிறார்.

உயர்ந்ததொரு கட்டட வடிவமைப்பாளர் என்ற போதிலும் எந்தவித பெருமையும் இல்லாதவர். இவையெல்லாம் நான் வடிவமைத்தவை என்று ஒரு போதும் பெருமை பாராட்டுவதில்லை.

**யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் வாழ்த்து**

யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது வாழ்த்தில் குறிப்பிடும் போது, "வேதநாயகம் அ.ம.தி அடிகளாரை குருத்துவப் பயிற்சிக் காலத்தில் இருந்தே நான் அறிவேன். இன்னும் குறிப்பாக உருத்திரபுரம் ஆரோபணத்தில் அவருக்குத் துணையாக சிலகாலம் பணிபுரிந்தேன். ஆலய கட்டடப்பணிகளில் குருக்களுக்கு துணையாக இருந்து அவர் ஆற்றும் பணி மகத்தானது. தனது முதிர்ந்த காலத்திலும் குருக்களின் அழைப்பை ஏற்று அவர் பங்குகளைத் தரிசித்து கட்டட வரைபடங்களை வரைந்து வருகிறார். வேதநாயகம் அடிகளாரே யாழ். மறைமாவட்டத்திற்கு தாங்கள் ஆற்றிய அனைத்துப் பணிகளுக்கும் நன்றி" எனத்தெரிவித்துள்ளார்.

**இந்தியா காஞ்சிபுரம் ஆச்சிரமத்தில் இருந்து சின்னப்பன் மரிய சூசை அ.ம.தி அடிகளார் வாழ்த்து**

இந்தியா ஏனத்தூர் காஞ்சிபுரம் ஆன்மோதயா ஆச்சிரமத்திலிருந்து சின்னப்பன் மரிய சூசை அ.ம.தி அடிகளார் வைரவிழாக் காணும் வேதநாயகம் அ.ம.தி அடிகளார் பற்றிய தன் மனப்பதிவுகளை பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

"முதலாவதாக அவரது எளிமை பற்றி நோக்கின், பல திறமைகளை கொண்டிருந்த போதிலும், இலங்கையில் பல பொறுப்புக்களை வகித்த போதிலும், பலவற்றை அறிந்தவராய் இருந்தாலும் உடையிலும் நடையிலும் உறவாடலிலும் துறவறத்தாருக்குரிய எளிமையையே அவர் எப்போதும் கடைப்பிடித்தார். பகட்டான ஒரு வாழ்வை அவர் வாழ விரும்பியதே இல்லை.

இரண்டாவது அவரது அர்ப்பணம் பற்றிக் கருதின், எந்த ஒரு வேலையாக இருப்பினும் அதை இன்முகத்துடனே ஏற்று முழுமூச்சாக செய்து முடிக்கும் குணம் அவருக்குரியதாகும். தன் வேலைகளைச் செய்து முடிப்பதிலே எப்பொழுதும் கருத்தாய் இருப்பார். பாராட்டையோ நன்றியையோ எப்பொழுதும் எதிர் பார்ப்பதில்லை.

மூன்றாவதாக அவருடைய இயற்கையோடு இணைந்த வாழ்வு பற்றி நோக்கின், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற கடவுளின் படைப்பை அதிகம் நேசித்தவர். அவைகளில் இறைவனைக் கண்டவர். அவரது நேரத்தை அழகிய தோட்டங்களை அமைப்பதிலும், புதிய பூக்கள் மற்றும் மரச்செடிகளை நடுவதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் செலவிடுவார்.

நான்காவதாக அவர் கொண்ட கடின உழைப்பை நோக்கின், தன் நேரத்தை விரயமாக்கியதை நான் பார்த்ததில்லை. தினசரி வகுப்புக்கள், செபம் போன்ற நேரங்களை தவிர்த்து மற்ற நேரங்களில் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பார். அதிகமான தன் நேரங்களை பூந்தோட்டம், காய்கறி தோட்டம் மேலும் இயேசுவின் உருவங்களைச் செய்தல், வரைதல் மற்றும் புத்தகம் வாசித்தல், எழுதுதல், குருமட மாணவர்களுக்கு ஆங்கிலம் வாசிக்க உதவுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருப்பார்.

ஐந்தாவதாக, அவர் கற்றிந்து சிறந்த கட்டட கலையின் வழி கலைஞனாக நோக்கின், சுவாமி வேதாவின் கற்பனைத்திறன் நாளுக்கு நாள் அதிகரித்ததே தவிர கொஞ்சமும் குறையவில்லை. ஒவ்வொரு கட்டட வேலைக்கும் தேவையான வரைபடங்களை நுணுக்கமாகவும் தெளிவாகவும் அழகாகவும் வரைந்து தருவார். தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் பல சிற்றால யங்களை, செப அறைகளை இந்திய கலாசார செபக்கூடங்களாக மாற்றி அமைத்த பெருமை அவருக்குண்டு.

பெங்களூரில் உள்ள எமது குருமடமும் அதன் கோவிலும் அவரது கலைநயத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. வாழ்க வளமுடன் என வாழ்த்துவோம். இனிமையான மனிதராக, எளிமையான குருவாக, கட்டடக்கலை விற்பனராக, நீண்ட ஆயுள் பெற்ற மனிதராக, குருத்துவத்தின் முழுமை பெற்றவாராக நிறையாசீர் பெற்ற இவரை வாழ்க வளமுடன் என வாழ்த்துவோம்.

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 59
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.10.28

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 66,919,285/-

வெற்றி இலக்கங்கள்
11 13 18 55 D

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2948 திகதி 28.10.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
13 37 48 73 K

போனஸ் இல. 54
திங்கட் கிழமை ஜக்பொட் 48, 427, 190/=

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

நீல நிற டிக்கட்டுக்கள் 2017.10.30ஆம் திகதி திங்கட் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் ▶ 721
சீட்டிழுப்பு திகதி ▶28.10.2017 சனிக்கிழமை

J 05 24 30 42

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 43,587,132/-

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஊதா நிற டிக்கட்டுகள் 2017.10.30ஆம் திகதி திங்கட் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## சௌபாக்ய / Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 087
சீட்டிழுப்பு திகதி ▶ 28.10.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 06 14 28 36
சுப்பர் இலக்கம் 04
அதிர்ஷ்ட மாதம் ஜூன்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 51, 41, 056/= | ரூ. 47, 69, 513/= | ரூ. 37, 59, 094/= |

2017.11.02 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## துயர் பகிர்கின்றோம்



யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியர்
*திருமதி செந்தில்நாயகி பரமலிங்கம்*
அவர்களின் மாமனார்
**சிதம்பரப்பிள்ளை பழனி**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் கழகம், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

*தோற்றம்*
*26.01.1959*
*மறைவு*
*29.09.2017*



கடந்த 29.09.2017 ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி
திருமதி
**சாந்தினிதேவி சுப்பிரமணியம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

முச்சக்கர வண்டிகள் மூன்று விற்பனைக்கு QD, HD, GD தொடர்புகளுக்கு
**- 077 844 6089**

## தேன் தேவை

கலப்படமற்ற இயற்கையான தேன் தேவை. விற்பனைக்குள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் **- 077 922 9331**

## தேவை

பிரபல முஸ்லிம் உணவகத்திற்கு சமையல்உதவியாளர், வெயிட்டர் தேவை. **தொடர்பு. 077 684 4016**

## இயந்திரங்கள் விற்பனைக்கு

**ஜெனரேட்டர் (UK) 35 kw, மரஅட்டறை உபகரணங்கள், அலுமினிய bar வகைகள், இரும்பு வேலைப்பொருள்கள்**
**தொடர்பு - 077 1336 617**

## வாடகைக்கு

மு/ புதுக்குடியிருப்பு, 2 ஆம் வட்டாரம், பிம்பிலி வீதி, கைவேலியில் 3 அறை, ஒரு குளியலறை மற்றும் 2 Hall கொண்ட சகல வசதிகளுமுடைய வீடு வாடகைக்கு விடப்படும். **தொடர்பு. 077 247 0593**

## விற்பனைக்குண்டு

எம்மிடம் 40kg நிறையுடைய கோதுமைத் தவிடு விற்பனைக்கு உண்டு. 20 மூடைகளுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு மூடை (40kg) - 1420/= இற்கும் 20 மூடைகளுக்கு குறைவாக கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு மூடை (40kg) - 1460/= இற்கும் வழங்கப்படும். **- 077 3628 944**

# உடனடி வேலைவாய்ப்புக்கள்

**உயர் கல்வியின் பின்னர் பெறுபேறுகள் நிரந்தர வேலைவாய்ப்பு வரும் வரை காலத்தினை வீணடிக்காது தனியார் துறையில் சாதிக்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.**

1) நிர்வாக உதவியாளர்
*சிறந்த ஆங்கில அறிவு (எழுத்தாற்றல், பேச்சாற்றல்)
*வேதனம் : 50 000/=

2) கணக்காளர் (பயிலுனர்)
*A/L வர்த்தகப்பிரிவில் சிறப்புத் தேர்ச்சி *வேதனம் : 30 000/=

3) வடிவமைப்பாளர்
*Photoshop இல் சிறப்புத்தேர்ச்சி
*வேதனம் : 20 000/=

4) ஆலோசகர் (பயிலுனர்)
* A/L பரீட்சைக்கு தோற்றியோர்
*சிறந்த பேச்சாற்றல் (ஆங்கிலம் தமிழ்) *வேதனம் 40 000/=

வயதெல்லை : 18 - 23, ஒப்பந்த காலம் : 2 - 6 மாதங்கள்

**விரும்புவோர் உங்கள் புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக்கோவையினை 7 நாள்களுக்குள் கிடைக்கக்கூடியவாறு மின்னஞ்சல் முகவரிக்கு பதிவுத் தபாலில் விரும்பும் பதவியினைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.**

**WIN STAR VISA CONSULTANTS**
**106, தபாற்பெட்டிச்சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.**
email - winstarvc@gmail.com

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1945 |  | 2017 |
| 07 | | 10 |
| 28 | | 28 |

# திருமதி நாகேஸ்வரி தருமர்

காரைநகர் சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தருமர் (28.10.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சரஸ்வதி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானை தம்பதியரின் அன்புமருமகளும் ஆறுமுகம் தருமரின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், பரமேஸ்வரி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சோமசுந்தரத்தின் மைத்துனியும் சற்குணராசா, விமலாதேவி, சர்வானந்தராசா, சிவானந்தராசா, தவராசா, இலங்காதேவி, யோகாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும் இரவீந்திரன், கெங்காதரன், இராஜேஸ்வரி, சாந்தினி, சந்திரரூபா, சந்திரபவானி ஆகியோரின் மாமியும் விஜஸ், விஷ்னு, தேனு, தேவ், மேனு, விமல், கிரி, நிஷா, யசி, கௌசி, விபுஷன், வினு, டிலக்ஷன், திலக்ஷன், நிஷா, லக்சினி, கர்னி, ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அஸ்வினின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்தம்புளியடி,**
**காரைநகர்.**
**தகவல்:**
**குடும்பத்தினர். 077 5756 991**

## ஜயரத்தினத்தின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஒக்.29

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜன சிற்பி மறைந்த தெ.து.ஜயரத்தினத்தின் நினைவு தினம் இன்று பி.ப 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர் வ.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக லூவர் ஹோட்டல்கள் குரூப் (பிரான்ஸ்) மத்தியகிழக்கு மற்றும் வடஆபிரிக்க பிராந்திய முன்னாள் நிதி, நிர்வாக இயக்குனர் பட்டயக்கணக்காளர் இராமையா கிருபானந்தன் (மகாஜனன்)FCA கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயற்குழு உறுப்பினர்கள் கேட்டுள்ளனர்.

(21)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.29

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் 6 மாதங்களுக்கு ஒருதடவை நடத்தும் குருதிக்கொடை முகாம்களின் வரிசையில் 9ஆவது மாபெரும் குருதிக்கொடை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இளவாலை கலைமகள் படிப்பகத்தில் இடம்பெற உள்ளது என அறிவிக்கப்பட்டது. எனவே குருதிக்கொடையளிக்க விரும்பும் அனைவரும் தவறாது கலந்து கொண்டு குருதிக்கொடையளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(21)

## கொழும்பிலிருந்து...

டம் இருந்து வழக்கு விசாரணைகள் அனைத்தையும் அது பொறுப்பெடுத்துக் கொண்டது.
கொலையை செய்திருக்கக்கூடியவர் கள் என்று சந்தேகிகப்படும் நபர்களை யாழ்ப்பாணம் பொலிஸார் நெருங்கியிருந்த தருணத்தில் கொழும்பிலிருந்து வந்திருக்கும் தனிக் குழு விசாரணைகளைப் பொறுப்பெடுத்தி ருக்கிறது.
கொலை நிகழ்ந்த இடத்துக்கு அருகில் இருந்த சிசிரிவி கமெராக்களின் உதவியுடன் கொலையுடன் தொடர்புடையவை என்று சந்தேகிக்கப்படும் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை பொலிஸார் இனங்கண்டனர். கொல்லப்பட்டவர்கள் மோட்டார் சைக்கிளில் செல்வதும் அவர்களின் பின்னால் அந்த ஓட்டோ செல்வதும் அதன் பின்னால் மற்றொரு மோட்டார் சைக்கிளில் இருவர் செல்வதுமான காட்சிகள் அதில் தெளிவாகப் பதிவாகியுள்ளன.
விசாரணைகளில் அந்த ஓட்டோ பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதியப்பட்டு படையினரின் பயன்பாட்டில் இருந்தமை கண்டறியப்பட்டது.
கடற்படைப் புலனாய்வாளர்களால் ஓட்டோ பயன்படுத்தப்படுவதான தகவல்களை அடுத்து நீதிவானின் அனுமதியுடன் மண்டைதீவு கடற்படை முகாமினுள் பொலிஸார் தேடுதல் நடத்தினர். ஆனால், ஓட்டோ அங்கு கிடைக்கவில்லை.
தொடர் விசாரணைகளில் அந்த ஓட்டோ சிறப்பு அதிரடிப் படையினராலும் பயன்படுத்தப்படுவதான தகவல்கள் கிடைத்திருந்தன.
இதையடுத்து பண்ணையில் உள்ள சிறப்பு அதிரடிப் படை முகாமினுள் தேடுதல் நடத்துவதற்கான அனுமதியைப் பொலிஸார் நீதிவானிடம் கோரியிருந்தனர். இந்தச் சமயத்தில் விசாரணைகளை இடைநிறுத்தி அவற்றைக் கொழும்பிலிருந்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தனிக் குழுவிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு மேலிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் பண்ணை சிறப்பு அதிரடிப் படை முகாமினுள் சோதனை நடத்துவது தடைப்பட்டது.
நேற்று மாலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்த தனிக் குழு விசாரணைகளைப் பொறுப்பெடுத்துக் கொண்டது. யாழ்ப்பாணப் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் விவரங்களைப் பெற்றுக்கொண்ட அவர்கள் சிறப்பு அதிரடிப் படை அதிகாரிகளுடனும் இது குறித்து நேற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டனர் என்று உதயன் அறிந்தான்.
கொலையோடு தொடர்புடையது என்று சந்தேகிக்கப்படும் ஓட்டோவை அந்தச் சமயத்தில் செலுத்திச் சென்றவர்கள் இன்றைய தினம் அனேகமாகக் கைது செய்யப்படலாம் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.
(உ-5, 26, 101)

## கள் இறக்க...

பாதிக்கப்படும் என்று பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா தெரிவித்தார்.
மதுவரித் திருத்தச் சட்ட மூலம் என்ற வகையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கித்துள், பனை, தென்னை தவிர்ந்த வேறு எந்த மரத்தில் இருந்தும் கள் சீவுவது, எடுப்பது, இறக்குவது தடைசெய்யப்பட்டுள்ளது என்று இருந்தது. இப்போது பனை மற்றும் தென்னை மரங்களின் பெயர்கள் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.
இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டால் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அது நடைமுறைக்குவரும்.
பனை, தென்னை மரங்களில் இருந்து கள்ளுச் சீவுவதற்குத் திடீரெனத் தடை விதிக்கப்பட்ட இருக்கின்றமைக்கான காரணம் என்ன என்பது அரசால் தெளிவுபடுத்தப்படவில்லை.
அரசின் இந்த நடவடிக்கை ஓர் இனவாத நடவடிக்கை என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. கித்துள் மரங்கள் வடக்கு கிழக்குக்கு வெளியே, குறிப்பாகச் சிங்கள மக்கள் வாழும் இடங்களிலேயே இருக்கின்றன. பனை, தென்னை மரங்கள் தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலேயே அதிகம் இருக்கின்றன. இதனால் இந்த நடவடிக்கை தமிழர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதற்காகத் திட்டமிட்டு அரசு மேற்கொள்ளும் ஒரு செயல் என்று விமர்சிப்பவர்கள் கூறுகின்றார்கள்.
"வடக்கில் பனை, தென்னை மரங்களில் இருந்தே காலம் காலமாக கள் உற்பத்தி செய்கிறோம். இதனை நம்பி 12 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. சட்டம் நடைமுறைக்கு வந்தால் அது இந்தக் குடும்பங்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்துவிடும். எனவே இது குறித்து பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களை அழைத்து ஆராயவுள்ளோம்" என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் எஸ்.செல்வராசா.
இந்தப் பிரச்சினை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்து, நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தத்துக்கு எதிராக அவர்களைக் குரல் கொடுக்கக் கோரப்போகிறார் எனவும் அவர் தெரிவித்தார். (உ-17)

## இராணுவ...

சேர்த்த சில நிமிடங்களில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
இணுவில் மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்றிரவு விபத்து இடம்பெற்றது. வட்டுக்கோட்டை ஞானசம்பந்தர் வீதியைச் சேர்ந்த பாலேந்திரன் விஜிகரன் (வயது - 36) என்பவரே உயிரிழந்தார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை.
மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவரை அந்த வழியே பயணித்த இராணுவ கப் ரக வாகனம் மோதித் தள்ளியது. வீதியில் உணர்வற்றுக் கிடந்த அவர், அந்தநேரம் அந்த வழியே சென்ற தெல்லிப்பழை அம்புலன்ஸில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளித்துக்கொண்டிருந்த போது சில நிமிடங்களிலேயே உயிரிழந்தார். சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் கடும் சேதமடைந்தது.
விபத்தை ஏற்படுத்திய இராணுவ வாகன சாரதி கைது செய்யப்பட்டார். அது தொடர்பில் விசாரணை தொடர்கிறது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்த குடும்பத் தலைவர் வங்கி ஒன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமைபுரிகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-4,8,26,101,ரி1)

## அறக்கட்டளையின்....

முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கை தொடர்பில் அறிக்கையொன்றைக் கையளிக்குமாறு அரச தலைவர் அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.
அந்தக் குழுவின் அறிக்கை ஒரு மாத காலத்துக்கு முன்னர் மைத்திரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் அறக்கட்டளையின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனமொன்றுக்கு சைட்டத்தை கையளிக்குமாறு முன்மொழியப்பட்ட யோசனை தொடர்பிலேயே அரசு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.
இது தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, உயர்கல்வி அமைச்சர் லக் ஷ்மன் கிரியெல்ல, பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா மற்றும் இலங்கை மருத்துவச் சபையின் தலைவர் உள்ளிட்டவர்களுடன் கடந்த 23ஆம் திகதி முதல் பேச்சு நடத்தியது.
சைட்டம் தொடர்பான அரசின் தீர்மானம் விரைவில் வெளிவரும் என்று தெரியவருகின்றது.
(உ-5)

## ஆட்சியைப்...

வரை நடைபெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூட்டத்தைப் புறக்கணித்தார். ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் இருவரும் தனிப்பட்ட காரணங்களால் பங்கேற்க முடியவில்லை என்று அறிவித்திருந்தனர்.
கூட்டத்தின் ஆரம்பத்தில் உரையாற்றிய இரா. சம்பந்தன் தெரிவித்ததாவது:
மகிந்த அணியினர் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்காகப் புதிய அரசமைப்புத் தொடர்பிலும், இடைக்கால அறிக்கை தொடர்பிலும் பொய்யான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். தங்களின் அரசியல் மீள்பிரவேசத்துக்காக நாட்டு மக்களை குழப்புகின்றனர். விசமத்தனமான கருத்துக்களை அவர்கள் முன்வைக்கின்றனர்.
அரசியல் தீர்வு வரக்கூடாது என்று கருதுகின்ற தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் மகிந்த அணிக்கு ஒத்தூதும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.
எனவே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் தமிழ் மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும். புதிய அரசமைப்பு, இடைக்கால அறிக்கை தொடர்பில் எடுத்துக்கூறவேண்டும். தற்போது வெளிவந்திருப்பது இடைக்கால அறிக்கை மாத்திரமே என்பதையும், புதிய அரசமைப்பு அல்ல என்பதையும் புரியவைக்கவேண்டும் - என்றார்.
அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டன. ஒருமித்த நாடு என்கின்ற பதத்துக்கான பொருள்கோடல் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. அதிகூடிய அதிகாரப் பகிர்வை ஒருமித்த பிளவுபடாத நாட்டுக்குள்ளேயே கோருவதாகவும் இரா.சம்பந்தன் அங்கு குறிப்பிட்டுள்ளார். (உ-5,31)

## மலேரியா...

வித்தனர்.
வடக்கின் 5 மாவட்டங்களிலும் தற்போது இனம் காணப்பட்ட மலேரியா நுளம்பை அழிக்கும் செயற்றிட்டம் தொடர்பான அவசர கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் கொழும்பு சுகாதாரத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் சரத் அமுனுகம தலைமையில் நேற்று இடம்பெற்றது. அங்கு இந்தத் தகவல் கூறப்பட்டது.
வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் 5 மாவட்டங்களின் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மலேரியாத் தடுப்பு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.
நீண்ட காலத்தின் பின்னர் மன்னாரில் காணப்பட்ட மலேரியா நுளம்பு பின்னர் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் இனங்காணப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் அது இனங்காணப்பட்டது.
யாழ்ப்பாணத்தில் நகரை அண்மித்து இனங்காணப்பட்ட நுளம்பினம் தற்போது வல்வெட்டித்துறையிலும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
தொடர்ந்து பெருகிவரும் மலேரியா நுளம்பை உடன் கட்டுப்படுத்துவது தொடர்பிலேயே நேற்று கூடுதலாக ஆராயப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
மலேரியா கட்டுப்பாட்டுப் பிரிவில் உள்ள பணியாளர்கள் இந்தப் பணிக்கு ஆளணியினர் போதுமான அளவில் இல்லை என்று சுட்டிக்காட்டினர். அதனால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள பணியாளர்களையும் உடனடியாக இதில் இணைத்து மலேரியாவைக் கட்டுப்படுத்தும் பணியை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மலேரியாவை முற்றாக அழிக்கும் பணியை முன்னெடுப்பதற்கான சகல பணிகளையும் தீவிரமாக ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டதோடு குறித்த பணிகள் நாளை திங்கட்கிழமையே ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அதில் கலந்து கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.
(உ-4-101)

## அதிகாரி...

துறை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தார்.
அவருக்கு வழங்கப்பட்டிருந்த 'பிஸ்ரல்' ரக கைத்துப்பாக்கி மற்றும் அதற்கான ரவைகளும் அதில் அடக்கம். துப்பாக்கியுடன் 5 ரவைகள் அவரால் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அவரிடம் துப்பாக்கியும் 45 ரவைகளும் ஒப்படைக்கப்பட்டன என்று ஆவணங்களில் தெளிவாகப் பதிவிடப்பட்டுள்ளது.
இதனை அடுத்து மிகுதி 40 ரவைகளுக்கும் என்ன நடந்தது என்பது தொடர்பில் பொலிஸ் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று உயர் அதிகாரி ஒருவர் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.
"பிஸ்ரலையும், 5 துப்பாக்கி ரவைகளையும் மாத்திரமே அவர் மீளக் கையளித்துள்ளார். ஆனால் அவருக்கு 50 ரவைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய ரவைகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் எந்தத் தகவலையும் அவர் வழங்கவில்லை. அவற்றுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்" என்றார் அந்த அதிகாரி. (உ-5,26)

## நிலைமாறு...

னர் கலாநிதி நுகுசி தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதியுடன் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் தெரியவருவதாவது:
பாடசாலை மாணவர்கள் ஊடாக அவர்களது குடும்பம், அவர்களிலிருந்து சமூகம் என்ற அடிப்படையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். போருக்குப் பின்னர் வெளிநாடுகளில் இவ்வாறே நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டது. மாற்றத்தை இவ்வாறே ஏற்படுத்தலாம் என்று நுகுசி சுட்டிக்காட்டியுள்ளார்.
பிரச்சினைக்கான தீர்வுப் பொதியை வழங்குதல், காணிகளை விடுவித்தல், இழப்பீடுகளை வழங்கல், ஆற்றுப்படுத்தல், காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் நிறுவுதல் மூலம் மனக்கசப்புக்களை நீக்குதல் உள்ளிட்ட விடயங்கள் ஊடாகவே நல்லிணக்கத்தை ஏனைய நாடுகள் வெற்றிகொண்டன என்றும் நுகுசி சுட்டிக்காட்டினார்.
இலங்கையின் நல்லிணக்கத்துக்கான வேலைத் திட்ட வரைவு சரியாக உள்ளது. அதனைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தவேண்டும். எதிர்தரப்புக்களிலிருந்தும், தீவிரமானவர்களிடமிருந்தும் எதிர்ப்புக்கள் சவால்கள் வரலாம். அதற்குரிய உபாயங்களை கைக்கொண்டு இதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.
நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்றும் நுகுசி தெரிவித்துள்ளார். (உ-5)

## கட்டலோனியா...

என்று ஸ்பெய்ன் அரசு கொதித்தது. எதிர்ப்பைப் புறக்கணித்த கட்டலோனியா நேற்றுமுன்தினம் தனது விடுதலையை உலகுக்குப் பறைசாற்றியது.
அந்த விடுதலை முரசை ஏற்க மறுத்துள்ள ஸ்பெய்ன், கட்டலோனிய சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு அதன் நிர்வாகத்தைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக நேற்று அறிவித்தது. இது மக்களின் விருப்பத்துக்கு மாறான நடவடிக்கை என்று தெரிவித்துள்ள கட்டலோனிய அரசியல் தலைவர்கள் ஸ்பெய்ன் அரசு இத்தகைய போக்கில் நடந்துகொண்டால் அது பெரும் மக்கள் போராட்டங்களை எதிர்கொள்ளவேண்டி வரும் என்று எச்சரித்துள்ளனர்.
இந்த நிலையில், இலங்கை அயலுறவுத்துறை அமைச்சு கட்டலோனியாவின் தனிநாட்டு விடுதலைப் பறைசாற்றல் தொடர்பாக நேற்று மாலை அவசர அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவித்துள்ளதாவது:
இலங்கைக்கும் ஸ்பெய்னுக்கும் இடையில் நீடித்த நட்புறவு உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் பங்காளி உறவுகளில் ஸ்பெய்னை ஒரு முக்கியமான உறுப்பினராக நாம் கருதுகின்றோம்.
இலங்கை அரசு, ஸ்பெய்ன் இராச்சியத்தின், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை உறுதியாக ஆதரிக்கிறது. கட்டலோனியாவை ஸ்பெய்னின் ஒருங்கிணைந்த பகுதியாகவே கருதுகிறது.
சட்டத்தின் ஆட்சி மற்றும் ஸ்பெய்னின் அரசமைப்பு வரையறைக்குள் ஒன்றுபட்ட ஸ்பெய்னுக்கான பேச்சுக்களைத் தொடர இலங்கை அரசு கேட்டுக் கொள்கிறது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
(உ-5)

## ஏ.ரி.எம். அட்டை திருடி பணம் பெற்றவர் சிசிரிவி கமராவில் வசமாகச் சிக்கினார்


யாழ்ப்பாணம், ஒக். 29
வீடு புகுந்து தன்னியக்கப் பரிமாற்று அட்டையைத் (ஏ.ரி.எம். காட்) திருடி வங்கியில் பணம் பெற்ற குற்றச்சாட்டில் கமராவின் உதவியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அச்சுவேலியைச் சேர்ந்தவரே கைது செய்யப்பட்டார். அவர் விசாரணைகளின் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவர் மீதான வழக்கு எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நல்லூரடியைச் சேர்ந்த குடும்பத்தினர் கடந்த மாதம் அச்சுவேலிக்குச் சென்றுள்ளனர். குடும்பத் தலைவி அங்குள்ள தமது உறவினர் வீட்டில் கைப்பையை வைத்துவிட்டு கோவிலுக்குச் சென்றுதிரும்பி வந்துபார்த்தபோது கைப்பைக்குள் இருந்த தன்னியக்கப் பணப் பரிமாற்ற அட்டையைக் காணவில்லை. அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
குறித்த சந்தேகநபர் தான் திருடிய தன்னியக்க அட்டையைப் பயன்படுத்தி யாழ்ப்பாண நகர வங்கி ஒன்றில் பணம் பெற்றுக் கொண்டமை குறித்த வங்கியின் கமராவில் பதிவாகியது. அது தொடர்பில் நீதிமன்ற அனுமதியுடன் காட்சிப் பதிவுகளையும் கொண்டு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மே.தீவுகள் - சிம்பாப்வே 2ஆவது ஆட்டம் இன்று

மேற்கிந்தியத் தீவுகள் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சிம்பாப்வேக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றது. இந்த நிலையில் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே குறைந்தபட்சம் தொடரைச் சமன்செய்ய முடியும் என்ற நெருக்கடி நிலைக்கு சிம்பாப்வே தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




## இந்தியா – நியூசிலாந்து கிண்ணம் வெல்வது யார்?

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

நியூசிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வெற்றிபெற்றன. இந்த நிலையில் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் கான்பூரில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. முடிவடைந்த இரண்டு ஆட்டங்களிலும் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியுடன் உள்ளமையால் இன்று நடைபெறும் மூன்றாவதும் இறுதியானதுமான




வருகின்றது. முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்தும் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவும் ஆட்டமே கிண்ணத்தைத் தீர்மானிக்கும் வகையில் அமையவுள்ளது. (ம)




# தொடரை வென்றது பாகிஸ்தான் அணி

இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது பாகிஸ்தான் அணி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்ற காரணத்தால் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க முடியும் என்ற நெருக்கடி நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக குணதிலக 51ஓட்டங்களையும், சமரவிக்கிரம 32 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் அஸ்ரப் 3 இலக்குகளையும், ஹசன் அலி 2 இலக்குகளையும், சடப் கான் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஒரு பந்து மீதமிருக்க 8 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அணித்தலைவர் சர்பிராஸ் அகமட் 28 ஓட்டங்களையும், செசாட் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் திசர பெரேரா 3 இலக்குகளையும், சஞ்சய, உதான, பதிரண மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## இறுதி இன்று

தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இரண்டாவதும், இறுதியானதுமான ஆட்டம் இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கடந்த வியாழக்கிழமை முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றதால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றாலேயே பங்களாதேஷ் அணியால் தொடரை குறைந்தபட்சம் சமநிலையில் முடிக்க இயலும். முன்னதாக நடைபெற்ற இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரையும், மூன்று ஆட்டங்களைக் கொண்டு ஒருநாள் தொடரையும் தென்னாபிரிக்க அணி முழுமையாகக் கைப்பற்றியது. இதனால் ரி-20 தொடரையும் முழுமையாகக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில்



தென்னாபிரிக்காவும், குறைந்தபட்சம் ரி-20 தொடரிலாவது வழித்துத் துடைப்பைத் தவிர்க்க வேண்டும் என்ற நெருக்கடியில் பங்களாதேஷும் களமிறங்குகின்றன. இந்தத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர், தம்மால் சிறந்த வெற்றிகளைப் பெறமுடியும் என்று பங்களாதேஷ் அணியின் தலைவர் ரகீம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை கிரிக்கெட் அணிக்கு வரலாறு காணாத பாதுகாப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ரி-20 ஆட்டத்தை எதிர்கொள்வதற்காக பாகிஸ்தானின் லாகூருக்கு சென்றுள்ளது இலங்கை அணி. அங்கு இலங்கை அணிக்கு வரலாறு காணாத உச்சக்கட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை இலங்கையும், ஒருநாள் தொடரை பாகிஸ்தானும் கைப்பற்றின. இந்த




நிலையில் ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலிரு ஆட்டங்களும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றன. இந்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது பாகிஸ்தான். இந்த நிலையில் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் லாகூரில் இன்று இரவு 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது இலங்கை வீரர்கள் பயணித்த பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த அசம்பாவிதத்துக்குப் பின்னர் எந்த அணியும் பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடியது கிடையாது.

அனைத்து நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் தத்தமது அணியை பாகிஸ்தானுக்கு அனுப்ப மறுத்து விட்டன. இதனால் இலங்கை அணி பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் வைத்து எதிர்கொள்வது பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. லாகூர் மைதானத்திலிருந்து பல கிலோமீற்றர்கள் வரை இலங்கை அணியினருக்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம)



## ஹற்றிக்!

இலங்கைக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் பகீம் அஸ்ரப் ஹற்றிக் படைத்தார். இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆட்டத்தின் 19ஆவது பந்துப்பரிமாற்றத்தை அஸ்ரப் வீசினார். குறித்த பந்துப் பரிமாற்றத்தில் 4ஆவது, 5ஆவது, 6ஆவது பந்துகளில் உதான, உடவற்ற, சானக ஆகியோரை வீழ்த்தி ஹற்றிக் படைத்தார் பகீம் அஸ்ரப். இதன் மூலம் ரி-20 ஆட்டங்களில் ஹற்றிக் படைத்த பாகிஸ்தானின் முதலாவது வீரர் என்ற பெருமையையும் அஸ்ரப் பெறுகிறார். (ம)

# காமாட்சி அம்பாளின் கரப்பந்தாட்ட இறுதி

யாழ்ப்பாணம், ஒக். 29
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் இரண்டு பிரிவாக நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன.

காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் திடலில் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இன்றைய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# மைலோ கிண்ண முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 29
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றன. அவற்றின் முடிவுகள் வருமாறு.

வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணிக்கும், குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும், இளந்தளிர் விளையாட்டுக் கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணிக்கும், பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் இருதயராஜா அணி வெற்றிபெற்றது. (ம-23)



# தெல்லிப்பழை யூனியன் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 29
இலங்கைப் பாடசாலைகள் எறிபந்தாட்டச் சங்கம் நடத்தும் தேசிய ரீதியிலான தொடரில் 20 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

வெல்லவாய குமாரதாஸ மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து வெல்லவாய குமாரதாஸ மத்திய கல்லூரி அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரண்டு செற்களையும் முறையே 25:18, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் வெற்றிபெற்றது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்கக் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் மோதவுள்ளது.

(ம-422)

# மாந்தை கிழக்கு பி.செயலகம் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக். 29
முல்லைத்தீவு மாவட்டச் செயலர் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணி சம்பியனானது.

முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணியும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணியும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரண்டு செற்களையும் முறையே 25:13, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணி. (ம-23)

# மைலோ கிண்ணத்தின் இன்றைய மோதல்கள்

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான ஆட்டங்கள் சில அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானம், பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானம் ஆகியவற்றில் இன்று இடம்பெறவுள்ளன.

இதன்படி காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)



# சென். ஹென்றிஸ் போராடி வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 29
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மாதகல் சென். ஜோசப் கல்லூரி அணி மோதியது. 1:0 என்று ஹென்றிஸின் ஆதிக்கத்துடன் முடி வுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் சென். ஹென்றிஸின் கோலைப் பதிவுசெய்தார் பிரசாந். வேறெந்த மாற்றங்களும் ஏற்படாததை அடுத்து முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (ம-23)

# கரைதுறைப்பற்று பி.செயலகம் வெற்றிபெற்றது

யாழ்., ஒக். 29
முல்லைத்தீவு மாவட்டச் செயலர் வெற்றிக்கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது.

முல்லைத்தீவு பொதுவிளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணியை எதிர்த்து கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி மோதியது. 15:09, 15:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி.

(ம-23)

# இலங்கையின் பயிற்சியாளராக போத்தாஸுக்கு பதவி நீடிப்பு

இந்தியாவுக்கு எதிரான தொடரிலும் இலங்கை அணியின் பயிற்சியாளராக போத்தாஸ் நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக இலங்கை அணி தொடர் தோல்விகளைச் சந்தித்துள்ளது. போத்தாஸின் திறனற்ற பயிற்சியே இலங்கையின் தோல்விக்குக் காரணம் என்றும் சாடப்பட்டது. இலங்கை அணி அடுத்ததாக இந்திய அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தத் தொடரில் போத்தாஸ் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலக்கப்படுவார் என்று கருத்துக்கள் வெளியாகியிருந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான தொடரி



லும் போத்தாஸே பயிற்சியாளராக நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# இறுதியாட்டத்தில் வோஸ்னியாக்கி

பன்னாட்டு ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிக்குத் தகுதி பெற்றார் கரோலினா வோஸ்னியாக்கி.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் 8 இடங்களிலும் உள்ள வீராங்கனைகள் பங்கு பற்றும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் சிங்கப்பூரில் இடம்பெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கியை எதிர்த்து செக்குடியரசின் வீராங்கனை பிளிஸ்கோவா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றில் இரண்டு வீராங்கனைகளும் மிகப்பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தினர். முதலாவது செற்றை 11:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் வோஸ்னியாக்கி. அவர் அடுத்த செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து 2:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 29

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கழகத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் துடுப்பாட்ட பயிற்றுநர் வி.கே.சண்முகலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக ஆலயக் குருக்கள் ச.இராஜேஸ்வரன், கிராம சேவகர் தவரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-422)



# ஆஷஸ் டெஸ்டை போருடன் ஒப்பிடல் மிகப்பெரும் தவறு

## வோர்ணரின் கருத்துக்கு ஜோ ரூட் பதிலடி

"ஆஷஸ் டெஸ்ட் தொடரை வோர்ணர் போருடன் ஒப்பிட்டமையானது மிகப்பெரும் தவறு" என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் தலைவர் ரூட்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடர் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ளது. தொடர் தொடர்பாக பலரும் பல்வேறுபட்ட கருத்துக்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றனர். அண்மையில் ஆஸ்திரேலிய அணியின் உபதலைவர் வோர்ணர், "ஆஷஸ் டெஸ்ட் தொடர் போர் போன்றது" என்று தெரிவித்திருந்தார். வோர்ணரின் இந்தக் கருத்தை கடுமையாகக் கண்டித்துள்ளார் ரூட்.

"கிரிக்கெட் மிகவும் போட்டிக்குரிய ஆட்டம். ஒவ்வொருவரும் மைதானத்தில் சிறப்பாக விளையாடி வெற்றிபெற வேண்டும் என்று நினைப்பார்கள். நான் அதை போர் என்று குறிப்பிடமாட்டேன். இது சற்று அதிகப்படியான வார்த்தை என்று நினைக்கிறேன்" என ரூட் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான ஸ்ரோக்ஸ் கலந்துகொள்வது தற்போது சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. இரவுநேர களியாட்ட விடுதியொன்றில் நபரொருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் அவர் மீது தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதனால் விசாரணை முடியும் வரை ஸ்ரோக்ஸ் இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் இடைநிறுத்தப்பட்டுள்ளார். ஸ்ரோக்ஸ் இல்லாத இங்கிலாந்து தடுமாற்றத்தை எதிர்கொள்ளும் என்று கருதப்படுகிறது.

(ம)

# ரியல் மட்ரிட் அணி அசத்தல் வெற்றி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது.

மட்ரிட்டை எதிர்த்து பியூன்லேபிரேட்டா அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 63ஆவது நிமிடத்தில் அசென்சியோ



வில்லியம்சன், ரியல்மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவு செய்தார். 80ஆவதுநிமிடத்தில் லூகாஸ் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவு செய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட் அணி.

(ம)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
நல்ல பாவனையில் உள்ள Scooty Pep + மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு
தொடர்பு - 076 853 1257

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
Chemistry A/L
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 01.11.2017 முதல்
2019 A/L- இரசாயனக் கணிப்புகள்
2018 A/L - தாக்க இயக்கவியல்
2018 A/L- Day Batch
J. Dinesh B.SC
தொடர்புகளுக்கு - 077 237 2543

சிறுநீரகம் தேவை
35 வயதுள்ள பெண் ஒருவருக்கு சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகின்றது. இரத்த வகை $B^+$ அல்லது $O^+$ பொருத்தமானது.
077 480 8022

வீட்டுடன் காணி விற்பனைக்கு
நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு. காணி விற்பனைக்கு உண்டு.
இடம் :- கொழும்புத்துறை வீதி. பாண்டியன்தாழ்வு. யாழ்ப்பாணம்.
076 785 1067

தேவை
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இயங்கி வரும் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை. Tata Leyland உதிரிப்பாகங்கள் பற்றிய அறிவுடையோர் விரும்பத்தக்கது சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். 021 222 2336, 076 717 3234

கார் விற்பனைக்கு
Honda Insight Hybrid Car விற்பனைக்கு. வருடம் 2011
தொடர்பு. 077 710 5205

தேவை
யாழ்ப்பாணத்தில் விருந்தினர் விடுதிக்கு. ஆங்கிலப்புலமை, தொடர்பாடல் திறன், கணினி தரவேற்றம்\முற்பதிவு கையாளும் திறன் கொண்ட ஆண்\பெண் தேவை.
பகுதிநேரம்\முழுநேரம்
சம்பளம் (15000 - 20 000 \- + ஊக்குவிப்பு)
தொடர்புகளுக்கு.
075 999 2027, 021 221 5199

யாழ் அம்மா
பெண்கள் விடுதி
கல்வி கற்கும் மாணவிகள், வேலைசெய்யும் பெண்களுக்கு பாதுகாப்பானதும் உணவு வசதியுடன்கூடியதுமான பெண்கள் விடுதி.
இல.133, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்திக்கு அருகில்)
076 992 2339, 076 992 2319

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org



021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

அமெரிக்க லொத்தர் விசா
இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)
18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்
திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்
இவ்வருடம் 55000 பேருக்கான வாய்ப்பு
யாழ்ப்பாணம் / வேலனை / கிளிநொச்சி
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.